# மயங்கொலிச் சொற்பொருள் அகரமுதலி

CPL 666412

அண்ணை அன்னை அவணி அவனி இணை இனை
ஊண் ஊன் ஏண் ஏன் ஓணம் ஓனம்
வயணம் வயனம் கண்ணி கன்னி சரண் சரன்
அறவ அரவ இரும்ப இறும்ப திணம் தினம்
உரைப்ப உறைப்ப அகல் அகழ் மலை மழை
ஒலித்தல் ஒழித்தல் ஒளித்தல் புலை புழை புளை
குலம் குளம் சலிப்ப கலிப்ப உழவ உளவ

தவ. திரவிய. ஹேமலதா

பாவை

# மயங்கொலிச் சொற்பொருள் அகரமுதலி

ஆசிரியர் : தவ. திரவிய. ஹேமலதா

பாவை பப்ளிகேஷன்ஸ்
142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014. ☎ : 28482441, 28482973
e-mail : pavai123@yahoo.com

# MAYANGOLI SORPORUL AKARAMUTHALI

*D. Hemalatha*

# மயங்கொலி சொற்பொருள் அகரமுதலி

திே. ஹேமலதா

© உரிமை : ஆசிரியருக்கு

முதல் பதிப்பு : செப்டம்பர் 2008

பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

Code No. : P 0542

ISBN : 81 - 7735 - 539 - 2

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
142, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
☎ : 28482441, 28482973
e-mail : pavai123@yahoo.com

விலை ரூ. : 95.00

# பதிப்புரை

மொழியென்பது காலந்தோறும் வளர்ச்சியடைந்து வருவது. கால சுழற்சிக்கேற்ப தன்னை நெகிழ்வுபடுத்திக் கொள்ளும் எந்தவொரு மொழியும் அழியா தன்மை பெறுகிறது. எளிமையும் செறிவும் பொருளும் உள்ளடக்கமும் கொண்டு விளங்கும் மொழி தான் கொண்டிருக்கும் சமூகத்தை மேன்மைப்படுத்துகிறது. அம்மொழியால் மக்கள் மேன்மையடைகின்றனர். வானுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட வெளியில் பிரவேசித்து மறைகின்ற உயிர்களுள் மனிதனே முதன்மையானவன். அவனை முதன்மை படுத்துவது மொழிதானென்பதில் ஐயமில்லை.

அவ்வகையில் தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது. இம்மொழிக்குப் பழம்பெருமையுண்டு. இத்தகைய மொழியில் காலத்திற்கு ஏற்றவாறு புதிய பல சொற்கள் உருப்பெற்று வரும்போது, பழமையும் புதுமையும் இணைந்து புத்துயிர்ப்பு பெற்ற சொற்கள் உருவாகின்றன. அச்சொற்களில் எழுத்துக்கள் மட்டும் மயங்கி வேற்றொலியைத் தந்து பல பொருட்களைத் தருகிறது. பழைமையைத் தேட விழையும் புதுமைக்கு வழி காட்டுதலாய் அகராதிகள் விளங்குகின்றன.

தமிழில் எண்ணற்ற அகராதிகள் வெளிவந்திருந்தபோதும் அவற்றில் குறிப்பிடத்தக்க சிலவே நிலைத்து நிற்கின்றன. உலகமே நவீனமாகிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் மொழியும் புதுமை யாகிக் கொண்டிருப்பதில் ஐயமில்லை. அதற்கேற்ப இவ்வகராதி தமிழின் சொற் சிறப்பினையும், நுட்பத்தினையும் எளிமையாக புரியும் வண்ணம் தொகுக்கப்பெற்றுள்ளது.

இந்நூலாசிரியர் ஹேமலதா அவர்களின் முயற்சி வியப் பிற்குரியது. ஆழமில்லாமல் மேலோட்டமாக ஆய்வு நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் ''மயங்கொலிச் சொற்பொருள் அகரமுதலி'' என்ற நூலை அரிதிற் தேடிக் கொணர்ந்து தமிழ்ச் சமூகத்திற்குத் தந்துள்ளார். நாம் அதை வரவேற்பதோடு மட்டுமல்லாமல், இந்நூலினைக் கற்று எதிர்காலத்திற்கு வலிமை சேர்ப்போம். தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் வாழ்த்துக்கள்.

**பாவை பப்ளிகேஷன்ஸ்**

# என்னுரை

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"*
- திருமூலர்.

தொல்காப்பியரே தமிழின் சொற்பொருள் உணர்த்தும் மரபைத் தொடங்கி வைத்த முதல்வர் ஆவார். இவர்தம் சொல்லதிகார உரியியலில் 120 உரிச்சொற்களின் பொருளை வகைப்படுத்தி உரைத்துள்ளார். இவரே சொற்பொருள் காட்டும் உரிச்சொற் பனுவல்கள் தோன்றத் தலைக்காரணியாக அமைந்தவரானார். அவருக்குப்பின் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய திவாகரர் எழுதிய திவாகர நிகண்டே முதற்பெரும் நூலாகத் தமிழ்ச் சொற்களையும் அதற்குரிய பொருளையும் வகுத்தும் தொகுத்தும் தொகைப்பெயர் விளக்கங்களைச் சேர்த்தும் பன்னிரு தொகுதிகளில் விளக்கம் தந்துள்ளது. பின்னாட்களில் பிங்கலம், உரிச்சொல் நிகண்டு, கயாதரம், பாரதிதீபம், ஆசிரிய நிகண்டு, கைலாச நிகண்டு, பல்பொருட் சூடாமணி, தமிழ் உரிச்சொற் பனுவல் முதலான நிகண்டுகள் மொழி வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. நிகண்டுகள் நூற்பாவினால் அமைந்தவையாதலால் அவை மனனம் செய்வதற்குரியனவாகவே அமைந்தன.

தமிழிலில் முதன்முதலாக உரைநடையில் சொற்பொருள் விளக்கங்களைக் கொண்டு தோன்றிய அகரமுதலி சதுரகராதி. சதுரகராதியை வீரமாமுனிவர் 1732ஆம் ஆண்டு அமைத்தார். நூற்பா வடிவிலான சொற்களை உரைநடைக்கு மாற்றிய அவரது முயற்சி அச்சு வடிவில் 1824-ஆம் ஆண்டே வெளிவந்தது. தமிழ் - தமிழ் அகரமுதலிகளுக்கெல்லாம் மூலநூலாய் விளங்குவது சதுரகராதியே ஆகும்.

பின்வந்த காலங்களில் தமிழில் அகரமுதலிகள், பேரகர முதலிகள் முதலியன தொகுக்கப்பெற்று வெளியிடப்பெற்றன. உரைநடை அகராதியைப் போலவே இருமொழி அகராதிகளின்

தோற்றத்திற்கும் வீரமாமுனிவரே வித்திட்டார். பின்வந்த காலங்களில் தமிழ்-ஆங்கில அகராதிகள் அதிகமாகத் தொகுத்து வெளியிடப்பெற்றன.

காலப்போக்கில் வேறுபட்ட நோக்கங்களுடனான அகராதிகளும் வெளிவரலாயின. அவை பழமொழி அகராதி, உவமச் சொல் அகராதி, தொகையகராதி, தற்காலத் தமிழ் மரபுத்தொடர் அகராதி என்பனவாம். அவ்வகையில் தமிழின் சொற்சிறப்பினை, நுட்பத்தினை உணர்ந்து பயிலத்தக்க வகையில் அமைந்த எனது முதல் அகராதி 'மயங்கொலிச் சொற்பொருள் அகரமுதலி' தொகுக்கப்பெற்றது. இத்தொகுப்புப் பணியில் எனது பெருமிதம் மிகுகிறது. நன்றி!

இந்நூலை அகரமுதல் முனைவர் பட்டம் வரை பயிலக் காரணமாயிருந்த என் ஆசிரியர்கள் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன். சிறப்பாக முனைவர் பா. மதிவாணன் அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன்.

அன்புடன்
**தி. ஹேமலதா**

இடம் : திருக்காட்டுப்பள்ளி
நாள் :

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ண/னகர வேறுபாட்டுச் சொற்கள் | 1 – 33 |
| 2. | ர/றகர வேறுபாட்டுச் சொற்கள் | 34 – 91 |
| 3. | ல/ழகர வேறுபாட்டுச் சொற்கள் | 92 – 103 |
| 4. | ல/ழகர/ளகர வேறுபாட்டுச் சொற்கள் | 104 – 131 |
| 5. | ல/ளகர வேறுபாட்டுச் சொற்கள் | 132 – 172 |
| 6. | ழ/ளகர வேறுபாட்டுச் சொற்கள் | 173 – 181 |

# ண/ன கர வேறுபாட்டு[redacted]

| | |
|---|---|
| **அக்காணி** - பருவுடல். | **அக்கானி** - பதநீர் |
| **அகண்** - அருகு. | **அகன்** - அகன்ற என்னும் பெயரெச்சம்; அகாசுரன்; உள்; வினை முதலில் வரும் விகுதி. (எ.கா) நாயகன். |
| **அகணம்** - கணியாதது; இலகு. | **அகனம்** - கனமில்லாதது; பெருமையின்மை. |
| **அங்கணம்** - இரண்டு தூண்களுக்கு நடுவில் உள்ள இடம்; உள்ளறை; கடுமரம்; சலதாரை; சேறு; பத்து முழத்தளவு; பரப்பு; பொரிகாரம்; முற்றம்; வெண்காரம்; மதகு | **அங்கனம்** - கடுக்காய் மரம். |
| **அங்கணி** - அழகிய கண்ணை உடையவள்; பார்வதி; கற்றாழை | **அங்கனி** - கற்றாழை; படரும் முட்செடி. |
| **அச்சணம்** - அக்கணம்; அந்தநேரம் | **அச்சனம்** - நெய்வார் கருவி வகைகளுள் ஒன்று; வெள்ளுள்ளி. |
| **அடிமணை** - ஆதாரம்; அடிமணைத்தட்டு; படகின் உட்பலகை; வண்டியினுள் பொருத்திய பலகை; கால் வைக்கும் பலகை. | **அடிமனை** - சுற்றுச்சுவர்; கட்டடத்தின் முதன்மைச் சுவர். |
| **அண்** - மேல்; வேட்டைநாயின் உருவு கயிறு; தடியில் வெட்டிய வரை. | **அன்** - ஆண்பால் வினை விகுதி; தன்மையொருமை விகுதி; ஆண்பால் பெயர் விகுதி; ஆண் பால் வினையாலணையும் பெயர் விகுதி; சாரியை; எதிர்மறை காட்டும் வடமொழி முன்னொட்டுத் திரிபுசொல். |

**அண்ணம்** - மேல்வாய்; மேல்வாய்ப் புறம்; உள்நாக்கு; கீழ்வாய்ப்புறம்

**அண்ணல்** - பெருமை; பெருமையுடையவர்; பெருமையிற் சிறந்தவர்; அடிகள்; தலைமை; தலைவன்; தமையன்; அரசன்; கடவுள்; முல்லைநிலத் தலைவன்.

**அண்ணன்** - முன் பிறந்தவன்; மூத்தோன்; தமையன்.

**அண்ணார்** - பகைவர்; தமையர்

**அண்ணை** - அறிவிலி; பேய்.

**அண்மை** - அடையுந்தன்மை; அணுமை.

**அணங்கம்** - இலெட்சணம்.

**அணங்கு** - தீண்டி வருத்தும் தெய்வப் பெண்; பத்திரகாளி; தெய்வப்பெண்; தேவர்க்காடும் கூத்து; அழகு; விருப்பம்; மயக்க நோய்; அச்சம்; வருத்தம்; கொலை; கொல்லிப்பாவை; பெண்; வடிவு.

**அணம்** - கீழ்வாய்ப்புறம்; மேல்வாய்.

**அணல்** - கீழ்வாய்; தாடி; அலைதாடி; கழுத்து; நாடி; உள்மிடறு; மேல்வாய்ப்புறம்.

**அணார்** - கழுத்து.

**அன்னம்** - சோறு; புள்வகை; கவரிமா; நீர்; உணவு அருந்திய இடம்; பூமி; ஒருவகை அணி; தங்கம்.

**அன்னல்** - தீ; வெப்பம்; புகை.

**அன்னன்** - அப்படிப்பட்டவன்.

**அன்னார்** - கல்நார்.

**அன்னை** - தாய்; தமக்கை; தோழி; பார்வதி.

**அன்மை** - அல்லாமை; தீமை.

**அனங்கம்** - அறிவு; ஆகாரம்; இருவாட்சி; உடலின்மை; மல்லிகை.

**அனங்கு** - மன்மதன்.

**அனம்** - அன்னம்.

**அனல்** - தீ; வெப்பம்; இடி; கொடிவேலி.

**அனார்** - அவர்கள்; ஒத்தவர்கள்.

**அணி** - வரிசை; ஒழுங்கு; ஒப்பனை; அழகு; அணிகலன்; முகம்; படை வகுப்பு; செய்யுளணி; இனிமை; அன்பு; கூட்டம்; அடுக்கு; அண்மை; ஓர் உவம உருபு.

**அணி(வி)** - அணி என் ஏவல்; தரி; பூண்; அலங்கரி.

**அணிகம்** - அணிகலம்; அணிகலப் பெட்டி; ஊர்தி; சிவிகை.

**அணிச்சை** - நாகமல்லிகை.

**அணிஞ்சில்** - அழிஞ்சில்; கொடிவேலி; நொச்சி; முள்ளி.

**அணியம்** - அணிற்பிள்ளை.

**அணு** - உயிர்; நுட்பம்; சிறுமை; நுண்ணியது; நுண்பொருள்; பொடி; மிகச்சிறியது; நுண்ணுடம்பு.

**அணுக்கம்** - சந்தனம்.

**அணுக்கு** - சமீபம்.

**அனி** - நெற்பொரி; பெரியபெட்டி.

**அனிகம்** - சிவிகை; படை; கூட்டம்.

**அனிச்சை** - அனிச்சப்பூ; ஒரு பூடு; ஒரு மரம்; நாகமல்லி; விருப்பின்மை.

**அனிஞ்சில்** - வில்வம்.

**அனியம்** - காற்று; வாதரோகம்; அச்சம்; பிறக்கை.

**அனு** - பிரதிச்செயல்; பிரதி; மோனையெழுத்து; தொடர்ச்சி; ஒழுங்கு; அண்மை; நோய்; தாடை; முகம்; நாகணம் எனும் மணப்பொருள் தரும் மரம்; வடமொழி முன்னொட்டுகளுள் ஒன்று; மஞ்சள்; ஆயுதம்; இறப்பு.

**அனுக்கம்** - அனுங்குதல்; செஞ்சந்தனக்கட்டை; சோம்பல்; பயம்; பாம்பு; புலம்புதல்; வருத்தம்; வாட்டம்; கம்மித இசை; பலவீனம்; பாலவியாதி; முனக்கம்.

**அனுக்கு** - அனுக்கென்னேவல்; தெரிநிலை வினைப்பகுதி; பெயரெச்சத்தொகை.

**அணுகம்** - துண்ணியது; செஞ்சந்தனம்.

**அணுகன்** - சமர்த்தன்

**அணுமை** - சமீபம்; நுட்பம்.

**அணுரூபம்** - அணுவகை; மிகச்சிற்றுரு.

**அணை** - படுக்கை; மெத்தை; கரை; வரம்பு; அணைக்கட்டு; பாலம்; முட்டு; தறி; இருக்கை; தலையணை.

**அணை(வி)** - புணர் என்னும் ஏவல்; சேர்.

**அத்தாணி** - அரசிருக்கை; சபை கூடுமிடம்.

**அந்தண்** - அந்தணர் குலம்.

**அபிசவணம்** - நீரில் முழுகுதல்; யாகாதி செய்தல். (அபிடவணம்)

**அமண்** - சமணசமயம்; சமணர்; அரையில் ஆடையின்மை; வரிக்கூத்து வகை.

**அயணம்** - செலவு; பயணம்.

**அவண்** - அவ்விடம்; அவ்விதம்.

**அவண்ணியம்** - அவர்ணியம்.

**அவணம்** - அம்மணம்; இருபதினாயிரம்; கொட்டைப்பாக்கு; நிந்தனை.

**அனுகம்** - செஞ்சந்தனம்.

**அனுகன்** - கணவன்.

**அனுமை** - அருத்தாபத்தி; கண்ணின் புறவருகு.

**அனுரூபம்** - இணக்கம்; தடை; மத்தியட்சம்.

**அனை** - அன்னை; அந்த; ஒருவகை மீன்.

**அத்தானி** - சபைகூடுமிடம்.

**அந்தன்** -கடுக்காய்; குருடன்; சனி.

**அபிசவனம்** - முழுகுதல்.

**அமன்** - பன்னிரு சூரியர்களுள் ஒருவன்; அரியமன்.

**அயனம்** - வரலாறு; ஆண்டில் பாதி சூரியன் நில நடுகோட்டுக்கு வடக்கிலாவது தெற்கிலாவது போகும் காலம்; ஆண்டுப்பிறப்பு; வழி; வீடு.

**அவன்** - ஆண்பால் சுட்டுப்பெயர்.

**அவன்னியம்** - உபமானப் பொருள்.

**அவனம்** - அலங்கரித்தல்; இருத்தல்; கொல்லல்; செய்தல்; தழுவுதல்; தற்காத்தல்; தாங்குதல்; திருத்தி; தீவிரம்; பட்சம்; பிடித்தல்; பெலன்; விருத்திப்பு; விருப்பம்.

| | |
|---|---|
| **அவணி** - நன்மை. | **அவனி** - உலகம்; பூமி. |
| **ஆண்** - ஆண்பாற்பொது; வீரியம்; தலைமை; வீரன்; உள்வயிரமுள்ள மரம். | **ஆன்** - பெற்றம்; எருமை; மரை இவற்றின் பெண்; காளை; அவ்விடம்; மூன்றனுருபு; ஆண்பாற்பெயர் வினைகளின் விகுதி; ஒரு சாரியை. |
| **ஆணகம்** - சுரைக்கொடி. | **ஆனகம்** - படகம்; துந்துபி; தேவதாரு; சுரை; கற்பகம்; மேகமுழக்கம். |
| **ஆணம்** - நேயம்; பற்றுக்கோடு; கொள்கலம்; குழம்பு; குழம்பிலுள்ள காய்; சிறுமை. | **ஆனம்** - எழுத்துச் சாரியை; கள்; தெப்பம்; மரக்கலம். |
| **ஆணன்** - ஆண்மையுடையவன். | **ஆனன்** - சிவன். |
| **ஆணி** - இரும்பாணி; அச்சாணி; எழுத்தாணி; மரவாணி; உரையாணி; புண்ணாணி; மேன்மை; ஆதாரம்; ஆசை; சயனம்; பேரழகு; எல்லை. | **ஆனி** - மூன்றாம் மாதம்; உத்திராடம்; ஆன்பொருநை; கேடு; இந்துப்பு; வேர்; அடி; கிழங்கு; ஆதி; வாயில்; காரணம்; முதன்மை. |
| **ஆணியம்** - நாட்படி. | **ஆனியம்** - நாள்; நட்சத்திரம்; பருவம்; பொழுது; நாட்படி; கருஞ்சீரகம். |
| **ஆணை** - கட்டளை; அதிகாரம்; நீதிமன்றம் முதலிய இடங்களில் கூறப்படும் உறுதிமொழி; சூளுரை; மெய்; தடுக்கை; இலாஞ்சனை; வெற்றி; ஆன்றோர் மரபு; சிவபிரானது சிற்சக்தி. | **ஆனை** - யானை; அத்திமரம்; ஆத்தி. |
| **ஆதண்** - நோய் வருத்தம். | **ஆதன்** - ஆன்மா; அறிவில்லாதவன்; குருடன்; பழைய காலத்து மக்கள் இயற்பெயர்வகை; அருகன்; ஆரியன்; வாதனை. |
| **ஆடணம்** - கடை; கடைவீதி | **ஆடனம்** - மிளகு |

**இணி** - எல்லை; ஏணி; கண்ணாறு.

**இனி** - இப்பொழுது; இனிமேல்; பின்பு; இப்பால்; இதுமுதல்.

**இணை** - இசைவு; ஒப்பு; இரட்டை; உதவி; கூந்தல்; எல்லை; இணைத் தொடை.

**இனை** - இன்ன; இத்தனை, வருத்தம்.

**இணை(வி)** - சேர்; கூட்டு.

**இணைத்தல்** - சேர்த்தல்; கட்டுதல்; தொடுத்தல்.

**இனைத்தல்** - வருத்துதல்; கெடுத்தல்.

**இணைதல்** - இசைதல்; சேர்தல்; சையோகம் செய்தல்; பொருந்தல்.

**இனைதல்** - இரங்குதல்; வருந்துதல்.

**இணைவு** - ஒன்றிப்பு; கலப்பு; புணர்ச்சி.

**இனைவு** - வருத்தம்; இரக்கம்.

**இவண்** - இவ்விடம்; இம்மை.

**இவன்** - சுட்டுப்பெயர்.

**இறவாணம்** - ஒரு வாச்சியம்.

**இறவானம்** - தாழ்வாரம்.

**ஈங்கண்** - இவ்விடம்.

**ஈங்கன்** - இங்ஙனம்; இவ்விடம்; இவ்வாறு.

**ஈணை** - அகணி.

**ஈனை** - இலை நரம்பு; சித்திரக்குறிப்பு; ஒரு நோய்.

**உண்ணம்** - உடைமரம்; வெப்பம்.

**உன்னம்** - அன்னப்பறவை வகை; சிறுவிரலும் பெருவிரலும் தம்முட்கூட மற்றை மூன்று விரல்களும் விட்டு நிமிரும் இணையாவனைக்கை; தசை கிழிக்குங் கருவி; நிமித்தம் குறிக்கும் ஒரு மரம்; தியானம்; மனம்; நினைவு; கருத்து; அபிநயக்கை வகை

**உண்ணல்** - அனுபவித்தல்; இசைவாதல்; உட்கொள்ளுதல்; உணவைக் கடியாது உட்கொள்ளுதல்; ஒத்தல்; கவர்தல்; சாப்பிடுதல்; பொருந்துதல்.

**உன்னல்** - நினைக்கை; மனம்.

| | |
|---|---|
| **உண்ணி** - விலங்குகளின் உடலில் இருப்பதொரு பூச்சி வகை; பாலுண்ணி; உண்பவன். | **உன்னி** - குதிரை; அழிஞ்சில்; செடிவகை; தியானத்திற்குரிய பொருள். |
| **உண்ணுதல்** - உணவு உட்கொள்ளுதல்; பொருந்துதல்; நுகருதல்; அனுபவித்தல்; இசைவாதல். | **உன்னுதல்** - நினைத்தல்; பேசவாயெடுத்தல்; எழும்புதல்; முன்னங்கால் விரலையூன்றி நிமிர்தல். |
| **உண்முகம்** - மனத்தால் உட்புறம் நோக்கும் நோக்கு. | **உன்முகம்** - முன்னோக்குதல்; மேல்நோக்கிய முகம்; மேல்நோக்கம்; அண்ணாந்துபார்க்கை; ஒன்றிற்கருத்தாயிருக்கை; அனுகூலமாய் இருத்க்கை |
| **உண்மை** - உள்ளது; இயல்பு; உள்ள தன்மை; மெய்ம்மை; நேர்மை; ஊழ். | **உன்மை** - தசை பிடுங்கும் குறடு. |
| **உதணம்** - மொட்டம்பு; கூரற்ற அம்பு. | **உதனம்** - சிறிது. |
| **உவண்** - உவ்விடம்; மேலிடம். | **உவன்** - உயர்திணை ஆண்பாலில் வரும் ஒரு சுட்டுப் பெயர்; அவனுக்கும் இவனுக்கும் இடையில் உள்ளவன்; முன்நிற்பவன்; பின்புறத்துள்ளவன். |
| **உவணி** - வாள். | **உவனி** - வாள். |
| **ஊண்** - உண்கை; உணவு; ஆன்மாவின் இன்ப துன்ப நுகர்வு. | **ஊன்** - தசை; இறைச்சி; கொழுப்பு; உடம்பு. |
| **ஊணம்** - ஒரு நாடு. | **ஊனம்** - குறைவு; குற்றம்; தீமை; பிணம்; அழிவு; பழி; இறைச்சி கொத்தும் குறடு. |
| **ஊணன்** - மிகவுண்போன்; ஊண நாட்டான்; மிலேச்சன். | **ஊனன்** - குறையுள்ளோன்; உடல்குறைபாடு உடையவன். |

**ஊணி** - உணவு கொள்பவன்(ள்); நட்டு வைக்கும் சிறுகோல்; மாடு முதலிய கட்டும் சிறுதறி.

**எண்** - எண்ணிக்கை; கணக்கிடுதல்; எண்ணம்; ஆலோசனை; அறிவு; மனம்; கவலை; மதிப்பு; இலக்கம்; கணக்கு; சோதிட நூல்; இலக்கியம்; வரையறை; தருக்கம்; மாற்று; மந்திரம்; அம்போதரங்கம்; எளிமை; வலி; எள்.

**எண்கு** - கரடி

**எண்ணல்** - தேர்ச்சி; கருத்து; எண்ணலளவை; ஆலோசனை; எண்ணுதல்; நினைத்தல்; குறித்தல்; மதித்தல்; இறுமாத்தல்; கணக்கிடுதல்; கவலைப்படல்.

**எண்ணர்** - மந்திரியார்; கணிதர்; தருக்கம் செய்பவர்.

**எண்ணுதல்** - கணக்கிடுதல்; எண்ணல்; நினைத்தல்; ஆலோசித்தல்; மதித்தல்; தியானித்தல்; முடிவு செய்தல்; மதிப்பிடுதல்; துய்த்தல்.

**எண்ணை** - (எண்ணெய்) எண்ணெய்ப் பொது; நல்லெண்ணெய்; மரவகைகளுள் ஒன்று.

**எண்பது** - எட்டுப்பத்து; எட்டு முறை பத்து.

**ஊனி** - மாசிச உடலிலுள்ளவன்; அமுக்கிரா.

**என்** - என்ன; வினா வினைக் குறிப்பு; ஐயக்கிளவி; இகழ்ச்சிக் குறிப்பு; 'எது' அல்லது 'எதை' எனப்பொருள் படும் இடைச்சொல்; தன்மை ஒருமைச் சொல்; யான் என்பது வேற்றுமை பொருளில் அடையும் திரிபு; ஓரசைச்சொல்.

**என்கு** - என்று சொல்லும்.

**என்னல்** - என்று சொல்லல்.

**என்னர்** - யாவர்; எத்தன்மையினர்; எத்தகையினர்; சிறிதும்.

**என்னுதல்** - என்று சொல்லுதல்.

**என்னை** - என் தந்தை; என் தாய்; என் தலைவன்; என் இறைவன்; யாது.

**என்பது** - ஓர் அசைநிலைச் சொல்.

**எண்பித்தல்** - மெய்ப்பித்தல்; சான்று காட்டி நிறுவுதல்.

**என்பித்தல்** - என்று சொல்லுவித்தல்; விளக்கமுறச் செய்தல்; சான்று காட்டி நிறுவுதல்.

**எண்மர்** - எட்டுப்பேர்; கணிதர்.

**என்மர்** - என்ப; என்று சொல்லுவர்.

**எவண்** - எவ்விடம்.

**எவன்** - என்னை; யாது; யாவன்; யாவை.

**ஏண்** - எல்லை; வலிமை; திண்மை; உயர்ச்சி; செருக்குப் பேச்சு; பெருமைப் பேச்சு; வளைவு.

**ஏன்** - எதற்கு, என்ன, என்ன காரணம், என்னை; இரக்கப் பொருளைத் தரும் இடைச்சொல்; தன்மையொருமை விகுதி; பன்றி.

**ஏணம்** - மான்; மான் தோல்; வலிமை நிலைபேறு.

**ஏனம்** - பன்றி; காட்டுப்பன்றி; கருவி; பாத்திரம்; பாவம்; குற்றம்; எழுத்தின் சாரியை; ஓலைக்குடை; அணிகலன்

**ஏணல்** - வளைவு; கோணல்.

**ஏனல்** - கதிர்; கருந்தினை; தினைப்புனம்; செந்தினை.

**ஏணை** - புடவைத் தொட்டில்; நிலை; ஆடு.

**ஏனை** - ஒழிபு; மற்றறையெனும் இடைச்சொல்; ஒழிந்த; மற்று; எத்தன்மைத்து; மலங்கு மீன்.

**ஐவணம்** - மருதோன்றி.

**ஐவனம்** - மலைநெல்.

**ஒண்ணு** - இயலென்னும் ஏவல்.

**ஒன்னு** - ஒன்று என்பதின் போலி.

**ஒண்ணுதல்** - இயலுதல்; தக்கதாதல்; கூடுதல்; ஒளியுடைய நெற்றி.

**ஒன்னுதல்** - பொருந்துதல்; பொறுத்தல்.

**ஓணம்** - ஆறு; இருபத்திரண்டாம் நட்சத்திரமான திருவோண நாள்; ஒரு விழா.

**ஓனம்** - எழுத்தின் சாரியை.

**கண்** - விழி; கண்ணோட்டம்; பீலிக்கண்; கணு, மரக்கணு, தொளை, மூங்கில்; முரசடிக்கும் இடம்; ஏழனுருபு; அறிவு; பற்றுக்கோடு; உடம்பு; அசை; உடலூக்கம்.

**கன்** - கல்; சிறுதராசு; கன்னார் தொழில்; வேலைப்பாடு; செம்பு; உறுதிப்பாடு.

**கண்ணல்** - கருதல்; கன்றல்; குறித்தல்.

**கன்னல்** - கரகம்; கரும்பு; சருக்கரை; நரம்பு; நாழிகை; நாழிகை வட்டில்.

**கண்ணன்** - கண்ணுடையவன்; கிருட்டிணன்; திருமால்; கையாந்தகரை.

**கன்னன்** - அங்கராசன்; இவன் சூரியனுக்கும் குந்திக்கும் பிறந்தவன்; இடைவள்ளல்களில் ஒருவன்.

**கண்ணா** - ஒரு மரவகை; திப்பிலி.

**கன்னா** - ஒரு வாச்சியம்.

**கண்ணார்** - பகைவர்.

**கன்னார்** - கல்நார்; பாத்திர வேலை செய்பவர்.

**கண்ணி** -பூமாலை; பூங்கொத்து; சூடும் பூமாலை; தலைமாலை; போர்ப்பூ; புட்படுக்கும் முடிப்புக் கயிறு; பூட்டாங் கயிறு; தாமணி; ஓர் இசைப்பாட்டு; கரிசலாங்கண்ணி.

**கன்னி** - குமாரி; மணமாகாத பெண்; இளமை; அழிவில்லாதவள்; புதுமை; முதனிகழ்ச்சி; அழிவின்மை; பெண்; தவப்பெண்; தெய்வப்பெண்; இளமை குன்றாப்பெண்; துர்க்கை; பார்வதி; குமரியாறு; கன்னிராசி; புரட்டாசி; அந்தநாள்; காக்கணங்கொடி; கற்றாழைச்செடி; கரந்தை.

**கண்ணிக்கால்** - கிளைவாய்க்கால்.

**கன்னிக்கால்** - கலியாண முகூர்த்தக்கால் புதுவீட்டின் மதிலில் தென் முகமாக முதலில் நடும் சீலை சுற்றிய கம்பம்.

**கண்ணிகம்** - மணித்தக்காளிச் செடி.

**கன்னிகம்** - மணித்தக்காளி.

**கண்ணிகை** - பூவரும்பு; தாமரைக் கொட்டை.

**கண்ணிமை** - கண்ணிதழ்; ஒரு மாத்திரைக்கால அளவு.

**கணகம்** - படையிலொரு தொகை; தனித்தனி இருபத்தேழு தேர்யானைகளும் எண்பத்தொரு குதிரைகளும் நூற்று முப்பத்தைந்து காலாள்களும் உள்ள படைப்பிரிவு.

**கணகன்** - கணக்கன்; சோதிடன்.

**கணப்பு** - சூடு; குளிர்காயுந்தீ; தீச்சட்டி.

**கணம்** - காலநுட்பம்; கூட்டம்; விண் மீன் கூட்டம்; ஒரு நோய்; பேய்; சிறுமை; திரட்சி; ஒருவகைப் புல்.

**கணமூலம்** - திப்பிலிவேர்.

**கணா** - திப்பிலி.

**கணி** - கணிப்போன்; நூல்வல்லோன்; சோதிடம்; கலை; வேங்கைமரம்; மருதநிலம்; சண்பகம்; ஒரு சாதி; அணிகலன்.

**கன்னிகை** - குமரி; தாமரைக்கொட்டை; பூமொட்டு.

**கன்னிமை** - கன்னிப்பருவம்.

**கனகம்** - பொன்; மீன்கொத்தி.

**கனகன்** - இரணியன்; நாணயக்குற்றவகை.

**கனப்பு** - கனமாயிருக்கை; பருமை; பாரம்; அழுத்தம்; கொழுப்பு; இறுமாப்பு; விறைப்பு.

**கனம்** - மேகம்; பாரம்; பருமன்; பெருமை; செறிவு; திரட்சி; உறுதி; மிகுதி; ஓர் எண்ணை அதனாலேயே இருமுறை பெருக்கவரும் இலக்கம்; வட்டம்; அகலம்; பொன்; கனராகம்; கூட்டம்.

**கனமூலம்** - கனத்தொகையினின்று அதன் மூலமாகிய ஒரு கோணம் அறிதல்.

**கனா** - கனவு; உறக்கத்தில் தோன்றும் தோற்றங்கள்; சொப்பனம்.

**கனி** - பழம்; கனிவு; சாரம்; இனிமை; கனிச்சீர்; மூவகைச் சீரில் இறுதியிலுள்ள நிரையசை; பொன் முதலியன எடுக்கும் சுரங்கம்.

**கணி(வி)** - கணக்கிடு; குணி; எண்ணு; அளவு குறி; மதி.

**கணிகை** - தாசி; முல்லை; வேசி.

**கணித்தல்** - எண்ணுதல்; கணக்கிடுதல்; வரையறுத்தல்; அளவு குறித்தல்; மதித்தல்; படைத்தல்; உண்டாக்கல்; மனத்துக்குளே கணக்கிடல்.

**கணிப்பு** - கணக்கிடுகை; அளவிடுகை; மதிப்பிடுகை.

**கணை** - திரட்சி; அம்பு; அம்பின் அலகு; பூரநாள்; வளைதடி; காம்பு; மூங்கில்; சிவிகையின் வளைந்த கொம்பு; கரும்பு; திப்பிலி; ஒலி; ஒருநோய்.

**கரண்** - காய்கறிகளின் முண்டு; புண் வடு; புல்லுடன் கூடிய மண்ணாங்கட்டி.

**கருணை** - அருள்; தயவு; இரக்கம்; ஒரு கிழங்கு; ஒன்பான் சுவையுள்ள ஒன்றாகிய அவலச்சுவை.

**கலணை** - குதிரைச் சேணம்.

**கவணம்** - அடிப்பட்ட காயக்கட்டு.

**கவணி** - ஒருவகைச்சீலை; சரிகை வேலை.

**கழணி** - கழுநீர்.

**கனிகை** - கனிதல்.

**கனித்தல்** - கனிவாதல்; இளகச் செய்தல்.

**கனிப்பு** - இனிமை.

**கனை** - செறிவு; நிறைவு; மிகுதி; ஒலி.

**கரன்** - நிலையுள்ளவன்; ஓர் அரக்கன்.

**கருனை** - பொரியல்; பெண்யானை.

**கலனை** - குதிரைச்சேணம்; கலப்பை; ஒன்றற்கமைந்த பல்வகை உறுப்புகள்.

**கவனம்** - போர்; படை; கலக்கம்; வெப்பம்; கவிபாடுகை; கருத்து; வேகம்; காடு.

**கவனி** - கந்தக பாடாணம்.

**கவனி(வி)** - கருத்தூன்றி யறியென்னும் ஏவல்.

**கழனி** - இடுதிரை; வயல்; மருதநிலம்; சேறு; கழுநீர்.

**காண்** - காட்சி; அழகு; காணுதல்; முன்னிலையில் வரும் ஓர் உரையசை.

**காணம்** - கொள்ளு; நிலத்தலளவையுள்ள ஒன்று; பொன்; பொற்காசு; பொருள்; பாகம்; செக்கு.

**காணல்** - காணுதல்; குறித்தல்; மனத்தால் குறித்தல்; வணங்குதல்.

**காணா** - சிறுபாம்பு.

**காணகேசுவரம்** - சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டனுள் ஒன்று.

**கிட்டிணன்** - திருமால்

**கிட்டிணி** - கிருஷ்ணாநதி.

**கிண்ணகம்** - வெள்ளம்

**கிண்ணம்** - சிறுவட்டில்; கிண்ணி; நாழிகை வட்டில்.

**கிண்ணி** - கிண்ணம்; சிறுவட்டில்; நாழிகை வட்டில்; கத்தியின் கைப்பிடியுறை; நண்டின்கால்; நாயின் கிண்ணிக்கால்; பசு முதலிய ஒரு சார் விலங்குகளின் குளம்பின் மேலுள்ள திரட்சி.

**கிணி** - கைத்தாளம்.

**கிணை** - ஒருவகை மருதப்பறை; உடுக்கை; தடாரிப்பறை.

**கிணம்** - சிதைவு; கேடு.

**கிணர்** - அற்பர்; எளியர்; கீழோர்.

**கான்** - மணம்; காடு; பூ; சலதாரை; வாய்க்கால்; மரக்கலத்தின் அறை; எழுத்தின் சாரியை; இசை; செவி; புகழ்.

**கானம்** - காடு; தேர்; நந்தவனம்; மணம்; தொகுதி; பேதை; வானம்பாடி; இசைப்பாட்டு.

**கானல்** - மணம்; கடற்கரை; கழி; உப்பளம்; உவர்நிலம்; மலை சார்ந்தசோலை; வெப்பம்; சூரியக்கதிர்; பேய்த்தேர்; பரல் நிரப்பிய நிலம்.

**கானா** - சுக்கானின் கைப்பிடி.

**கானகேசுவரம்** - சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டனுள் ஒன்று.

**கிட்டினன்** - திப்பிலி.

**கிட்டினி** - ஒரு யாறு.

**கின்னகம்** - தூக்கணாங்குருவி.

**கின்னம்** - துன்பம்; கீழ்மை.

**கின்னி** - மழைக்கிளி.

**கினி** - கிரகபீடை.

**கினை** - புடமிடுதற்குரிய கவசம்; விளாமரம்.

**கினம்** - இழிவு; குறைவு.

**கினர்** - அற்பர்.

| | |
|---|---|
| **குண்டணி** - குறளைச் சொல். | **குண்டனி** - காண்க: **குண்டணி** |
| **குணகுதல்** - வளைதல்; சோர்தல். தளருதல்; மனந்தடுமாறல். | **குனகுதல்** - கொஞ்சிப்பேசுதல். |
| **குணட்டு** - கதிரின் குலை. | **குனட்டு** - சேட்டை. |
| **குணி** - பண்பி; முடமானது; நற்குணம் உடையவன்; இழிவுபட்டவன்; சொத்தைக் கையன். | **குனி** - வளைகை; வில். |
| **குணித்தல்** - எண்பெருக்கல்; மதித்தல். | **குனித்தல்** - அசைத்தல்; ஆடல்; விகற்பம்; வளைப்பு. |
| **குணிப்பு** - மதிப்பு. | **குனிப்பு** - ஆடல்; கூத்தின் விகற்பம்; வளைப்பு. |
| **குணுக்கம்** - எண்பெருக்கல்; மதித்தல். | **குனுக்கம்** - குனுக்கம். |
| **குணுகல்** - சிணுங்குதல். | **குனுகல்** - சிணுங்கிப்பேசுதல். |
| **குத்துணி** - ஒரு புடவை; தமுக்குணி; குத்துப்பட்டவன்; இழிவுபட்டவன். | **குத்துனி** - ஒருவகைப்பட்டுச்சேலை; பட்டுக்கலந்த துணிவகை. |
| **கூணி** - கூனி. | **கூனி** - குசினி; கூனுள்ளோன்; கோணியது; சிற்றால்; மந்தரை; மாதவி; தோழி; வசவி. |
| **கேணம்** - செழிப்பு. | **கேனம்** - பைத்தியம்; பத்து உபநிடதங்களுள் ஒன்று. |
| **கோகாணம்** - ஒரு வித்தை. | **கோகானம்** - வேய்ங்குழலோசை. |
| **கோசணை** - பேரொலி. | **கோசனை** - கோரோசனை; பேரொலி. |
| **கோண்** - வளைவு; மாறுபாடு; கொடுங்கோன்மை; கோடம்; துண்ணிய பகுதி; பாத்திரத்தின் மூக்கு. | **கோன்** - அரசன்; தலைவன்; இடையர்; பட்டப்பெயர். |
| **கோபணை** - கவண். | **கோபனை** - கோபமுள்ளவன். |

**சகணம்** - சாணம்.

**சகனம்** - தொடையின் உட்பக்கமாகிய பிருட்டம்; பொறுமை; கி.பி. 78 இல் தொடங்குவதும் சாலிவாகனன் பெயரால் வழங்குவதுமான ஆண்டுக் கணக்கு.

**சகுணம்** - குணத்தோடு கூடியது.

**சகுணம்** - பறவை; பறவைகள் வலமிடமாதல் முதலிய நன்மை தீமைக்குறி; நிலாமுகிப்புள்; ஒரு காலஅளவு; கிழங்கு; பேரரத்தை.

**சண்ணம்** - ஆண்குறி.

**சன்னம்** - நுண்மை; நுண்ணிய பொடி; பொடி ரத்தினம்; நேர்மை; ரவைக்குண்டு; மறைபொருள்; குரல் இழைவு; மெல்லியதாய் அரைக்கப்பட்ட காரை.

**சணகம்** - புளியாரைக்கீரை; கடலை; சணல்.

**சனகம்** - புளியாரைக்கீரை; சாதிக்குக்காரண சூக்கும வினைவகை.

**சணம்** - சணல்; நொடிநேரம்.

**சனம்** - மக்கள்; இனத்தார்; கூட்டம்.

**சமண்** - அருகமதம்; அம்மணம்.

**சமன்** - ஏற்றத்தாழ்வின்மை; இசைநூலில் வரும் தானநிலை மூன்றனுள் ஒன்று; ஆண்மை; யமன்; நீதிமன்ற அதிகாரியின் அழைப்புக்கட்டளை.

**சமணம்** - அருகமதம்; அம்மணம்.

**சமனம்** - தணியச் செய்கை; ஆடு தின்னாப்பாளை; வசம்பு; ஐந்து செயல்களுள் ஒன்றாய் ஆன்மா தன் கன்மம் முடியும் வரையில் உலகானுபவங்களில் உழன்று மயங்கும்படி உண்மையை மறத்தலை செய்யும் சிவபெருமானது அருட்செயல்.

**சரண்** - அடைக்கலம்; பாதம்; பூண்டுவைகை.

**சரன்** - தூதன்; ஒற்றன்.

**சவணம்** - கேள்வி.

**சவனம்** - வேகம்; வேள்வி; பிருட்டபாகம்.

**சாண்** - அரைமுழம்.

**சான்** - சானகம்.

**சாணகம்** - சாணி.

**சானகம்** - வில்.

**சாணம்** - சாணி; சாணைக்கல்; சந்தனக்கல்; தழும்பு; நாராலாகிய பொருள்; சாதிலிங்கம்.

**சானம்** - பெருங்காயம்; சாதிலிங்கம்; தியானம்; அம்மி; உரைகல்.

**சாணி** - சாணாகம்; விபூதி.

**சானி** - வேசி.

**சிக்கணம்** - மழமழவென்றுள்ளது; வழுவழுப்பானது.

**சிக்கனம்** - செட்டு; இறுக்கம்.

**சிண்** - சூதாட்டத்தில் கூட்டாளி; கூட்டாளி; விளையாட்டில் பின்னும் ஒருமுறை ஆடுகை.

**சின்** - ஓர் அசைச்சொல்.

**சிணி** - கெட்ட நாற்றம்.

**சினி** - கற்கன்புத்திரன்; கார்க்கியன் தந்தை; யுதாசித்து புத்திரன்; அநமித்திரன் புத்திரன்; விரோதன் புத்திரன்.

**சிறுநணி** - விரைவாக.

**சிறுநனி** - சிறிது பொழுது; விரைவாக.

**சீணம்** - கேடு; சோர்வு; அழிவு வகை.

**சீனம்** - ஒரு நாடு; ஒரு மொழி; சீனத்துச் சரக்கு; படிக்காரம்.

**சீணி** - அழிவு.

**சீனி** - சருக்கரை; சீனிச்சருக்கரை; சீனத்துப் பொருள்; மரவகை; சாத்துக்குடி; சேணம்; மாநங்கூரம்.

**சுண்ணம்** - பொடி; நறுமணப்பொடி; பூந்தாது; மலர்; புழுதி; சதயநாள்; சுண்ணாம்பு; ஈரடி எண்சீரைப் பொருள் முறையின்றித் துணித்துச் செய்யுள் முறையின்றித் துணித்துச் செய்யுள் இயற்றும் முறை; சொல் வகை நான்கனுள் நான்கடியான் வரும் இசைப்பாட்டு; பட்டுவகை.

**சுன்னம்** - சுழி; சுண்ணாம்பு.

**சுணம்** - அழகு தேமல்; நறுமணப் பொடி.

**சுனம்** - வெள்ளுள்ளி.

**சுணை** - சுரணை; அறிவு; கூர்மை; தினவு; வைசூரியால் உடலில் தங்கும் அம்மைப்பால்; இலை காய்களின் மேலுள்ள சிறுமுட்கள்.

**சுனை** - மலையூற்று; குகையிலுள்ள நீர்நிலை; நீர்நிலையும் நிழல் மரமும் உள்ள பசும்புற்றரை; தினவு; சுரணை; சுரசுரப்பு.

**சுணைத்தல்** - தினவெடுத்தல்.

**சுனைத்தல்** - காண்க: **சுணைத்தல்**

**சுணைவு** - பேய்க்கடலை.

**சுனைவு** - சுனைநீர்; பேய்க்கடலை.

**சுவணம்** - பொன்; உலோகக்கட்டி; கருடன்; கழுகு.

**சுவனம்** - கனவு.

**செண்ணம்** - நுண்டொழில்; அழகிய வடிவு.

**சென்னம்** - நீர்ப்பறவை வகை; வடிவு.

**செணம்** - மெத்தை; தலையணை. (சணம்)

**செனம்** - பருந்து.

**செவ்வண்** - செங்குத்து.

**செவ்வன்** - செவ்வையாக.

**செவ்வணம்** - செவ்வையாக.

**செவ்வனம்** - செவ்வையாக.

**சேணம்** - மெத்தை; தலையணை.

**சேனம்** - பருந்து.

**சேணை** - அறிவு.

**சேனை** - யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நாற்படை; ஆயுதம்; கூட்டம்; நண்பரும் உறவினரும்; தெரு; கடைத்தெரு; சந்தை; பல; சேணம்; கருணைக் கிழங்கு; சேனைப்பால்.

**சொர்ணம்** - கோடாசுழி; பொன்.

**சொர்னம்** - (சொர்ணம்) பொன்.

**சோணம்** - சிவப்பு; ஓர் ஆறு; பொன்; இரத்தம்; கடல்; செங்கரும்பு; செந்தூரம்; தீ.

**சோனம்** - மேகம்; ஒரு நாடு; ஒரு மொழி.

**சோணி** - பலகறை; இரத்தம்.

**சோனி** - வளர்ச்சியற்றது; மெலிந்தவன்(ள்).

**சோணை** - காதின் அடித்தண்டு; புகையிலை முதலியவற்றின் காம்பின் அடி; சோணையாறு; திருவண்ணாமலை; திருவோண நாள்; மண் வெட்டியில் காம்பு செருகும் அடிப்பகுதி; கைப்பிடிச்சுவர்.

**சோனை** - கார்மேகம்; விடாமழைப் பாட்டம்; விடாமழை; மழைச் சாரல்; திருவோணநாள்; கைப்பிடிச்சுவர்.

**தக்கணை** - தெட்சணை.

**தக்கனை** - தக்கபடி.

**தகண்** - தடை; தழும்பு; பழக்கம்; கிழக்கு விழுந்த பனங்கொட்டையின் உள்ளீடு.

**தகன்** - வேர்விட்ட பனங்கொட்டை; நெருப்பு; கீரைவகை; பூரான்; கிழங்கு விழுந்த பனங்கொட்டையின் உள்ளீடு.

**தகணை** - உலோகக்கட்டி.

**தகனை** - காண்க: தகணை

**தண்** - குளிர்ச்சி; அருள்.

**தன்** - தான் எனும் சொல் வேற்றுமை உருபை ஏற்குமிடத்துப் பெறும் திரிபு.

**தண்ணம்** - ஒரு கட்பறை; மழுவாயுதம்; குளிர்ச்சி; காடு.

**தன்னம்** - பசுவின் கன்று; மான் கன்று; மரக்கன்று; சிறுமை.

**தண்ணவன்** - குளிர்ந்த சந்திரன்.

**தன்னவன்** - தன்னைச் சேர்ந்தவன்.

**தண்மை** - குளிர்ச்சி; சாந்தம்; இன்பம்; மென்மை; தாழ்வு; விளைவுக்குறைவு; அறிவின்மை.

**தணி** - மலை; குளிர்ச்சி; தேர்நெம்புங்கட்டை.

**தணிகி** - மேற்பார்வையிடுகை.

**தணிகை** - திருத்தணிகை.

**தணிசு** - விலைமலிவு; சதைப்பிடிக்கை; விளைவு.

**தணித்தல்** - ஆற்றுதல்; குறைத்தல்; வற்றுதல்; விளக்கு முதலியன அவிதல்; தீர்த்தல்; தண்டித்தல்; அவித்தல்; பொறுத்தல்.

**தணிப்பு** - ஆற்றி; குறைப்பு.

**தலைப்பணி** - முடி.

**தவண்** - தடை.

**தாணி** - தான்றிமரம்; பூண்டு வகை.

**தாணு** - சிவன்; குற்றி; தூண்; நிலை பேறு; மலை; பற்றுக்கோடு; செவ்வழி; யாழ்த்திறவகை; தாவரம்.

**தாணையம்** - கோட்டைக்குள்ளிருக்கம் படை; பாளையம்; மந்தை.

**தன்மை** - குணம்; இயல்பு; நிலைமை; முறை; பெருமை; ஆற்றல்; நன்மை; மெய்ம்மை; தன்னைக் குறிக்கும் இடம்; ஓரணி.

**தனி** - ஒற்றை; தனிமை; ஒப்பின்மை; உரிமை; கலப்பின்மை; உதவியின்மை; சீட்டாட்டத்தில் ஒருவனே எல்லாச் சீட்டையும் பிடிக்கை; தேர்நெம்புந் தடி.

**தனிகி** - கணக்குச் சோதனை.

**தனிகை** - இளம்பெண்; கற்புடையவள்.

**தனிசு** - கடன்.

**தனித்தல்** - ஒன்றியாகுதல்; நிகரற்றிருத்தல்; உதவியற்றிருத்தல்.

**தனிப்பு** - தனிமை.

**தலைப்பனி** - முன்பனி.

**தவன்** - எத்தன்; தவத்தி; புருடன்.

**தானி** - தானத்திலுள்ளது; இடத்திலிருப்பது; இருப்பிடம்; பண்டசாலை; கொடுப்போன்.

**தானு** - காற்று; கொடையாளன்; வெற்றியாளன்.

**தானையம்** - கால்நடைகளின் மந்தை.

**திண்மை** - வலிமை; உறுதி; கலங்கா நிலைமை; பருமன்; உண்மை.

**தின்மை** - தீமை; சாவு; தீயசெயல்.

**திணம்** - வலிமை.

**தினம்** - நட்சத்திரம்; நாள்; பகல்.

**திணை** - நிலம்; குலம்; இடம்; வீடு; ஒழுக்கம்; உயர்திணை அஃறிணை என்னும் பகுப்பு; தமிழ் நூல்களில் வரும் அகத்திணை புறத்திணை ஒழுக்கம்.

**தினை** - சிறுதானியவகை; தினைவகை; ஒருபுல் வகை; சாமை; திணையளவு.

**திருணகம்** - வாளுறை.

**திருனகம்** - காண்க: திருணகம்.

**துணி** - ஒளி; தெளிவு; துண்டம்; மரவுரி; சோதிநாள்; உறுதி; ஆடை; தொங்கல்; தேரில் கட்டிய துணி.

**துனி** - வெறுப்பு; சினம்; புலவிநீட்டம்; பிரிவு; துன்பம்; அச்சம்; நோய்; குற்றம்; இடையூறு; ஆறு; வறுமை.

**துணித்தல்** - வெட்டுதல்.

**துனித்தல்** - வெறுத்தல்; சினத்தல்; கலாய்த்தல்; நெடிது புலத்தல்.

**துணை** - அளவு; இணை; ஒப்பு; ஆதரவு; உதவி; உதவுவோன்; காப்பு; கூட்டு; இரண்டு; இரட்டை; கணவன்; மனைவி; உடன்பிறப்பு.

**துனை** - விரையென்னும் ஏவல்.

**துணைதல்** - ஒத்தல்.

**துனைதல்** - விரைதல்.

**தூணம்** - தூண்; பற்றுக்கோடு; பகை, அம்புக்கூடு; தீயநாள்வகை; பாத்திரம் தூக்க இடும் கயிற்றுச் சுருக்கு.

**தூனம்** - வருத்தம்; அசைவு.

**தெண்** - தெளிவு.

**தென்** - அழகு; இனிமை; இசை; இசைப்பாட்டு; கற்பு; தெற்கு; தென்னை மரம்; வலப்பக்கம்.

**தெண்ணர்** - அறிவில்லாதவர்.

**தென்னர்** - தெற்கு தென்னாட்டவர்; பாண்டிய அரசர்; பகைவர்.

| | |
|---|---|
| **நசனை** - தொந்தரவு பிடித்தவன். | **நசனை** - மாணிக்கத்துள் உண்டாகும் வெண்மையான நீர்; மாணிக்கக் குன்றத்துள் ஒன்று. |
| **நடுவண்** - இடையில். | **நடுவன்** - நீதிபதி; நமன்; நடுநிலைமையோன். |
| **நண்ணி** - நன்றி. | **நன்னி** - சிறியது |
| **நண்ணுதல்** - கிட்டுதல்; பொருந்துதல்; செய்தல்; இருத்தல். | **நன்னுதல்** - பல்லாற்கடித்தல், நறுக்குதல் |
| **நண்பகல்** - நடுப்பகல். | **நன்பகல்** - உச்சிக்காலம். |
| **நண்பு** - அன்பு; உறவு; நட்பு. | **நன்பு** - நன்மை; செவ்வையாய். |
| **நண்மை** - அண்மை. | **நன்மை** - நலம்; பயன்; உதவி; சிறப்பு; நன்னெறி; நற்குணம்; ஆக்கம்; நற்செயல்; நல்வினை; வாழ்த்துமொழி; மிகுதி; மேம்பாடு; புதுமை; அழகு; நல்லருள்; நன்மையாதல். |
| **நணந்தம்** - சணல்; புன்கு. | **நனந்தம்** - புன்கு. |
| **நணி** - அணிமையான இடம். | **நனி** - மிகுதியாய் |
| **நாண்** - வெட்கம்; களிர்க்குரிய கூச்சம்; வில்நாண்; கயிறு; மாங்கலியங்கோத்த சரடு; அரைஞாநாண். | **நான்** - யான். |
| **நாணம்** - வெட்கம்; அறிவு; பயபக்தி; மானம்; தணிகை; கூச்சம்; மகடூஉக் குணம் நாண்களுள் ஒன்று. | **நானம்** - மணப்பண்டம்; கத்தூரி; கத்தூரி விலங்கு; புழுகு; பூசுவன; மணப்பொடி; கவரிமான்; ஞானம்; சுத்தி செய்தற்கு நீரில் மூழ்குகை. |
| **நாறணா** - காண்க: **நாறனா.** | **நாறனா** - சடைச்சிச் செடி. |
| **நிருமாணம்** - ஏற்பாடு; நிருமிப்பு. | **நிருமானம்** - நிருமித்தல். |
| **நீண்மை** - பழமை. | **நீன்மை** - நீலநிறம். |
| **நுண்** - அணு; நுண்மை. | **நுன்** - உனது; நீ என்பது வேற்றுமை உருபு ஏற்கும்போது பெறும் வடிவம். |

**நுணி** - காண்க: நுனி.

**நுணித்தல்** - கூர்மையாக்குதல்; பொடியாக்குதல்; நுணுகி ஆராய்தல்.

**நுணை** - கோட்சொல்.

**பட்டணம்** - பெரு நகரம்; பேரூர்.

**பட்டிணி** - உணவு உட்கொள்ளாமை.

**பண்** - இசை; இசைப்பாட்டு; ஏழு சுரமுள்ள இசை; யாழ் முதலிய நரம்புக் கருவிகள்; பருவம்; குதிரைக் கலணை; அலங்காரம்; கூத்துவகை; ஓசை யானை குதிரைகளுக்குச் செய்யும் அலங்காரம்; தகுதி; அமைவு; மரக்கலத்தின் இடப்புறம்; வயல்; தொண்டு; நீர்நிலை; தோணியின் இடப்பக்கப் பாய்மரக் கயிறு; தேருக்கு செய்யும் அலங்காரம்.

**பண்ணல்** - யாழ் நரம்புகளைப் பண்ணுக் கேற்றுவாறு அமைத்தல்.

**பண்ணு** - செய்யென்னேவல்.

**பண்ணுதல்** - செய்தல்; அணியமாதல்; ஆயத்தஞ் செய்தல்; இசைக்கருவியில் வாசித்தல்; சுருதியமைத்தல்; அலங்கரித்தல்; சமைத்தல்.

**நுனி** - முனை; நுண்மை.

**நுனித்தல்** - கூராக்குதல்; கூர்ந்து நோக்குதல்; ஆராய்ந்து கூறுதல்; கருதுதல்.

**நுனை** - முனை.

**பட்டனம்** - கடற்கரையில் உள்ள நகரம்.

**பட்டினி** - உண்ணாதிருத்தல்; அரசி; பார்ப்பனத்தி.

**பன்** - நாணல் வகை; பருத்தி; அரிவாட்பல்; பத்தன் சிதைவு. பன்னென்னேவல்.

**பன்னல்** - பஞ்சு கொட்டுகை; சொல்; பருத்தி; சொல்லுகை; நெருக்கம்; ஆராய்கை.

**பன்னு** - இறுக்கப்படும் வரிப்பணம்.

**பன்னுதல்** - பஞ்சு நூற்றல்; ஆராய்ந்து செய்தல்; புகழ்தல்; பேசுதல்; படித்தல்; நின்றுநின்று பேசுதல் அல்லது படித்தல்; பாடுதல்; நரம்புக் கருவி வாசித்தல்; பின்னுதல்; அரிவாளைக் கூராக்குதல்; நெருங்குதல்.

**பண்ணை** - மருதநிலம்; வயல்; தோட்டம்; நீர்நிலை; ஓடை; சொந்த வேளாண்மை; வாரக்குடி; பனந்தோப்புக் குடிசை; மக்கள் கூட்டம்; மகளிர் கூட்டம்; தொகுதி; பெருங்குடும்பம்; மிகுதி; மகளிர் விளையாட்டு; விலங்கு துயிலிடம்; ஒரு கீரைவகை; தடவை; இசை.

**பண்மை** - தகுதி.

**பணம்** - பருமை; ஒரு நாணயம்; பொற்காசு; வாணிகச்சரக்கு; பொருள்; விலை; யானை நடத்தும் ஆயுதம்; பந்தயம்; பாம்பின் படம்; பாம்பு; இடங்கை வலங்கைப் பிரிவினர்; வேலை; வீடு; பணையப் பொருள்.

**பணர்** - மரக்கிளை; அடர்ந்த கொம்பு.

**பணவம்** - தம்பட்டம்.

**பணவன்** - வேலைக்காரன்.

**பணி** - செயல்; தொழில்; தொண்டு; பணிகை; பரக்கை; பயன்தரும் வேலை; நுகர்பொருள்; அணிகலன்; மலர்களால் அலங்கரிக்கை; பட்டாடை; தோற்கருவி; வேலைப்பாடு; வகுப்பு; சொல்; கட்டளை; விதி; வில் வித்தை முதலியவற்றைக் கற்பிக்கும் தொழில்; ஈகை; நாகம்; தாழ்ச்சி.

**பணி(வி)** - தொழு; பணியென்னும் ஏவல்.

**பன்னை** - தறி; கூடன்; ஒருசெடிவகை.

**பன்மை** - பலவாகிய நன்மை.

**பனம்** - பருமை.

**பனர்** - கிளை.

**பனவம்** - சிறுதம்பட்டம்.

**பனவன்** - பார்ப்பான்.

**பனி** - குளிர்ந்து விழும் துளி; ஆலங்கட்டி; உறைந்த நீர்; குளிர்; குளிர்ச்சி நீர்; கண்ணீர்; மழை; மஞ்சு; இனிமையானது; அச்சம்; நடுக்கம்; நோய்வகை; சுரம்; துன்பம்.

**பணித்தல்** - தாழ்த்துதல்; குறைத்தல்; மிதித்தல்; அருளிச் செய்தல்; ஆணையிடுதல்; ஏவுதல்; கொடுத்தல்.

**பணிப்பகை** - பாம்பின் பகையான கருடன்.

**பணிப்பு** - தணிவு; ஏவல்.

**பணிமொழி** - பணிவான வார்த்தை; நல்ல வார்த்தை.

**பணை** - பருமை; பெருமை; மரக்கொம்பு; மூங்கில்; அரசமரம்; மருதநிலம்; வயல்; நீர்நிலை; குதிரைகள் தங்கும் இடம்; விலங்கின் படுக்கை; முரசு; வாத்தியம்; மருதநிலப்பறை; உயரம்; பரண்; த்வறுகை; ஐந்து ஆண்டு கொண்ட கால அளவு; சாணைக்கல்; உலைக் களத்துப் பட்டடை; யானைத் தந்தம்.

**பதணம்** - மதிலுள்மேடை; மதில்.

**பந்தணம்** - பற்று.

**பரண்** - காவல்மேடை; பொருள்களை வைக்கும் மேல்தட்டு; மச்சு.

**பல்லரணை** - ஒருநோய்; பற்களிலே வரும் ஒரு நோய்.

**பவண்** - கொடி.

**பனித்தல்** - பனி கொள்ளுதல்; துளித்தல்; இடைவிடாது மழை பெய்தல்; குளிரால் நடுங்குதல்; நடுங்குதல்; அஞ்சுதல்; வருந்துதல்; அடித்தல்.

**பனிப்பகை** - பனியின் பகையான சூரியன்.

**பனிப்பு** - நடுக்கம்; அச்சம்.

**பனிமொழி** - குளிர்ந்த மொழி; பெண்.

**பனை** - ஒரு மரவகை; ஒரு பேரளவு; அனுட நாள்; ஒரு மீன்வகை.

**பதனம்** - பத்திரம்; பாதுகாப்பு; மதிலுள்மேடை; மதில்; இறக்கம்; தாழ்மை; அமைதி; கோள்களின் அட்சாம்சம்.

**பந்தனம்** - கட்டுகை; கட்டு; கயிறு; சிறைப்படுத்துகை.

**பரன்** - கடவுள்; அபலான்; சீவான்மா.

**பல்லரனை** - பற்களிலே வரும் ஒரு நோய்.

**பவன்** - சிவபிரான்; கடவுள்; புதிதாய் உண்டானது; பதினொரு உத்திரர்களுள் ஒருவர்

**பவணம்** - நாகலோகம்.

**பாடணம்** - பேச்சு; போதனை.

**பாண்** - பாட்டு; பாணாற்றுப்படை; பாணர்சாதி; புகழ்ச்சொல்; தாழ்ச்சி; பாழாக்குவது.

**பாண்மை** - பாணன் தன்மை; தாழ்ச்சி.

**பாணம்** - அம்பு; ஆகாசவாணம்; திப்பிலி; செடிவகை; ஓரங்க நாடக வகை; பட்டாடை; இராமபாணம்; ஏட்டுச் சுவடிகளைத் துளைக்கும் ஒரு பூச்சி; பாச்சை வகை; மல்லிகை வகை; ஒரு வகை மருந்து.

**பாணல்** - வெற்றிலை.

**பவனம்** - அரண்மனை; வீடு; பூமி; உலகப்பொது; இராசி; நாகலோகம்; பாம்பு; துறக்கம்; விமானம்; பூனை; வாயுதேவன்; நெல் முதலியன தூற்றுகை.

**பாடனம்** - பேசுகை; போதிக்கை; பாடுகை; பிளக்கை.

**பான்** - ஒரு வினையெச்ச விகுதி.

**பான்மை** - குணம்; தகுதி; பகுதி; முறைமை; சிறப்பு; நல்வினைப் பயன்.

**பானம்** - குடிக்கை; குடித்தற்கு நீர் அளிக்கை; கள்; பருகும் உணவு.

**பானல்** - மருதநிலம்; வயல்; நீலோற்பலம்; குவளைவகை; நெய்தல்; கடல்; கள்; குதிரை; வெற்றிலை.

**பாணி** - காலம்; தாமதம்; நீண்ட காலம்; இசைப்பாட்டு; இசை; ஒலி; இசையுறுப்பாகிய தாளம்; அழகு; அன்பு; முல்லை யாழ்த் திறத்துள் ஒன்று; பறைப்பொழுது; கூத்து; கை; பக்கம்; சொல்; சருக்கரைக் குழம்பு; கள்; பழச்சாறு; இலைச்சாறு; மிளகும் பனை வெல்லமும் கலந்த ஒரு மருந்து வகை நீர்; ஊர்; நாடு; ஊர் சூழ்சோலை; காடு; பூப்பந்தர்; பல பண்டம்; கடைத்தெரு; நடை; சரகாண்ட பாடாணம்; பாடினி.

**பானி** - பருகுவோன்; படை.

**பாணித்தல்** - தாமஞ்செய்தல்; பின் வாங்குதல்; பாவித்தல்; மதித்தல்; நிறைவேற்றுதல்; கொடுத்தல்.

**பானித்தல்** - குடித்தல்.

**பாணியம்** - வலம்புரிமரம்.

**பானியம்** - நீர்; பருகும் உணவு.

**பாணு** - பாட்டு.

**பானு** - சூரியன்; ஒளி; அழகு.

**பிணை** - இணைக்கப்படுகை; உடன்பாடு; பொருத்து; கட்டு; உத்தரவாதம்; விலங்குகளின் பெண்; பெண்மான்; பூமாலை; புறந்தருகை; விருப்பம்; தெப்பம்.

**பினை** - பிசை எனும் ஏவல்.

**பிணை(வி)** - பிணையிடு; கட்டு.

**பிணைதல்** - சேர்தல்; செறிதல்; புணர்தல்.

**பினைதல்** - பிசைதல்; பிசைவதுபோல் வயிற்றில் நோவுண்டாதல்; தொல்லைப் படுத்துதல்.

**பிணைவு** - இணைவு; புணர்ச்சி.

**பினைவு** - பினைதல்.

**பிரணாலம்** - மதகு.

**பிரனாலம்** - நீர்க்கால்.

**பீடணம்** - அச்சம்.

**பீடனம்** - வருத்தம்; துன்புறுத்தல்.

**புண்ணீர்** - இரத்தம்.

**புணரி** - கடல்; அலை; கரை; தனிமை.

**புணை** - தெப்பம்; மரக்கலம்; உதவி; மூங்கில்; விலங்கு; ஈடு; ஆள் பொறுப்பு; ஒப்பு.

**புணைதல்** - கட்டல்.

**புணையல்** - பிணைப்பு.

**பூசணம்** - மரம் முதலியவற்றின் மேல் ஈரநைப்பினால் உண்டாகும் பாசி; ஓட்டடை; அழுக்கு; நேர்த்தக் கடனாக முடித்து வைக்கும் காசு முதலியன; அணிகலன்.

**பூசணி** - கொடிவகை.

**பூணை** - முல்லை நிலம்.

**பெண்ணை** - பனைமரம்; பெண்ணையாறு; அனுடநாள்; நீரில் வளரும் முள்ளுள்ள பூண்டு; பெண் மரம்.

**பேண்** - விருப்பம்; பாதுகாப்பு; துலாத்தாங்கும் மரம்.

**பேணம்** - பேணுதல்; மதிப்பு; பதனம்.

**போணம்** - சோறு.

**புன்னீர்** - கழிவு நீர்; குருதி.

**புனரி** - ஒரு பூடு வகை.

**புனை** - அழகு; பொலிவு; அலங்காரம்; அணிகலன்; கால் விலங்கு; சீலை; புதுமை; நீர்; மோசம்.

**புனைதல்** - அணிதல்; தரித்தல்; அலங்கரித்தல்; சித்தம் செய்தல்; ஓவியம் வரைதல்; கட்டுதல்.

**புனையல்** - மாலை.

**பூசனம்** - ஆராதனை; மரம் முதலியவற்றின் மேல் ஈரநைப்பினால் உண்டாகும் பாசி.

**பூசனி** - அடைக்கலாங்குருவி; கொடி வகை; மரம் முதலியவற்றின் மேல் ஈரநைப்பினால் உண்டாகும் பாசி.

**பூனை** - ஒரு விலங்குவகை.

**பென்னை** - யானை.

**பேன்** - தலையில் உண்டாகும் சிறு பூச்சி.

**பேனம்** - நீர்க்குமிழித் தொகுதி; குமிழி; வெண்ணெய்; வெள்ளை; வயிரக்குற்றவகை.

**போனம்** - உணவு; அன்னம்; நிலக்கடம்பப் பூண்டு.

**மகண்மை** - அகட்டன்மை.

**மஞ்சணம்** - பற்பொடி.

**மண்** - நிலவுலகம்; நீராடுங்கால் பூசிக்கொள்ளும் பத்துவகை மண் பூமி; புழுதி; வைணவர் நெற்றியில் அணியும் நாமம்; நாமக்கட்டி; தரை; அணு; சுண்ணச்சாந்து; மத்தளம் முதலியவற்றில் பூசும் மார்ச்சனை; மனை; வயல்; கழுவுகை; ஒப்பனை; மாட்சிமை.

**மண்ணல்** - மண்ணுதல்.

**மண்ணவர்** - மனிதர்.

**மண்ணன்** - மந்தன்; சின்னம்மை நோய் வகை.

**மண்ணா** - ஒரு மீன்.

**மண்ணி** - மந்தன்; ஒரு மீன் வகை; சோழ நாட்டில் ஒரு நதி.

**மண்ணுதல்** - நீராடுதல்; மூழ்குதல்; கழுவுதல்; பூசுதல்; செய்தல்; அலங்கரித்தல்; செப்பமிடுதல்.

**மண்ணை** - பேய்; இளமை; மூடன்; கூர்; மழுக்கம்; காலின் கெண்டைச்சதை; கொடிவகை.

**மகன்மை** - ஆண்தன்மை.

**மஞ்சனம்** - நீராட்டம்; முழுக்கு நீர்.

**மன்** - ஓர் அசைநிலை; எதிர்காலங்காட்டும் இடைநிலை; ஒழியிசைக் குறிப்பு; பிறிதொன்றாகைக் குறிப்பு; மிகுதிக் குறிப்பு; நிலைபேற்றுக் குறிப்பு; ஒரு பெயர் விகுதி; அரசன்; வீரன்; தலைவன்; கணவன்; உத்திரட்டாதி நாள்; பெருமை; இழிவு; மந்திரம்; மணங்கு.

**மன்னல்** - மன்னுதல்.

**மன்னவர்** - அரசர்.

**மன்னன்** - அரசன்; எப்பொருட்கும் இறைவன்; தலைவன்; கணவன்; முப்பத்திரண்டு வயதுக்கு மேல் நாற்பத்தெட்டு வயதுக்கு உட்பட்ட ஆடவன்; உத்திரட்டாதிநாள்.

**மன்னா** - உணவாக உதவும் இனிய பிசின்வகை.

**மன்னி** - அண்ணன் மனைவி.

**மன்னுதல்** - நிலைபெறுதல்; தங்குதல்; பொருந்துதல்; விடாது முயல்தல்; உறுதியாய் நிற்றல்; அடுத்தல்; மிகுதல்; ஆடையைத் தூக்கிப் பிடித்துக் கொள்ளுதல்.

**மன்னை** - தொண்டை; கோபம்; கதுப்பு; இறந்தவனைப் பற்றிச் சிறப்பித்து ஏனையோர் இரங்கிக் கூறும் புறத்துறை.

**மணங்கு** - ஆட்டுக்குட்டி; இருவாட்சி; ஒருநிறை.

**மனங்கு** - இருபத்தைந்து இராத்தல் கொண்டது; கைபடை; தோட்படை; மணங்கு

**மணப்பொருத்தம்** - இராசி; இராசித் தலைவர், இரச்சு, கணம், திரி, தீர்க்கம், தினம், மாகேந்திரம், யோனி, வசியம், வேதை என்னும் பத்துக் கலியாணப் பொருத்தங்கள்; திருமண உடன்படிக்கை.

**மனப்பொருத்தம்** - மனவொன்றிப்பு; தன் மனத்துக்கு ஏற்றதாகை.

**மணம்** - கூடுதல்; நறுநாற்றம்; மணப்பொருள்; மதிப்பு; நன்னிலை; எண் வகை மணம்.

**மனம்** - நெஞ்சம்; எண்ணம்; விருப்பம்; இந்துப்பு.

**மணவினை** - விவாகச் சடங்கு.

**மனவினை** - மனவைராக்கியம்; குள்ளம்.

**மணு** - நிறை அளவில் ஒன்று.

**மனு** - ஓர் அரசன்; தருமநூல்; மனு; மந்திரம்; மனிதன்; மனுதர்ம சாத்திரம்; வார்த்தை விண்ணப்பம்.

**மணை** - அமரும் பலகை; சிறுபீடம்; மணமேடை; தேங்காய்த் துருவலகு; பரத்தியின்று பஞ்சு பிரிக்கும் கருவி; யானை மேல் தவிசு; பலகை; வெட்டுக் கருவியின் அடிக்கட்டை; பாதம் வைக்கும் படி.

**மனை** - வீடு; வீடு கட்டுதற்குரிய நிலம்; நில அளவு வகை; குடும்பம்; மனைவி; இல்வாழ்க்கை; சூதாடு பலகையின் அறை; நற்றாய்.

**மந்தணம்** - சூழ்வினை; கமுக்கம்; இரகசியம்.

**மந்தனம்** - யானை முகபடாம்; ஆலோசனை; சூழ்வினை; கமுக்கம்; இரகசியம்.

**மாண்** - மாட்சிமை; மடங்கு; மாணவன்; பிரம்மசாரி; குள்ளமானவர்.

**மான்** - ஒரு விலங்குவகை; விலங்கின் பொது; குதிரை; சிங்கம்; மகரமீன்; மகரராசி; ஒரு பெயர் விகுதி; படியாக என்னும் பொருளில் வரும் இடைச்சொல்; அறிவுத் தத்துவம்; பிரகிருதி; மானுடன்; பெரியோன்; மலை; ஒப்பு.

**மாண்(ணு)தல்** - நன்றாதல்; நிறைதல்; மிகுதல்; மாட்சிமைப்படுதல்.

**மான்(னு)தல்** - ஒத்தல்.

**மாணம்** - மாட்சிமை.

**மானம்** - மதிப்புடைமை; கற்பு; பெருமை; புலவி; வலிமை; வஞ்சினம்; கணிப்பு; அளவு கருவி; ஒப்புமை; அளவை; அன்பு; பற்று; இகழ்ச்சி; வெட்கம்; குற்றம்; வானூர்தி; கோயில் விமானம்; மண்டபம்; கத்தூரி; சவ்வாது; வானம்; ஒரு தொழிற்பெயர் விகுதி; ஓர் இடைச்சொல்.

**மாணல்** - மாட்சிமை; நன்மை.

**மானல்** - ஒப்பு; ஐயுறுதல்; நாணம்; மயக்கம்.

**மாணவன்** - பிரமசாரி; மாணாக்கன்; படிக்கும் சீடன்.

**மானவன்** - மனிதன்; பெருமையுடையோன்; அரசன்; படைத் தலைவன்; வீரன்.

**மாணார்** - மாட்சிமையற்ற பகைவர்.

**மானார்** - பெண்டிர்; பகைவர்

**மாணி** - பிரமசாரி; குறள்வடிவம்; அழகு; ஆண்குறி.

**மானி** - மதிப்புள்ளவர்; செருக்குடையவர்; மங்கையர்க்கரசியார்; மாமன்.

**மாணிகை** - எட்டுப்பலம் கொண்ட நிறை.

**மானிகை** - ஒரு முகத்தளவு சாராயம்.

**மணுமிணுத்தல்** - வாய்க்குள் பேசுதல்; இரகசியம் பேசுதல்; மந்திரம் செபித்தல்.

**மினுமினுத்தல்** - ஒளிவீசல்; ஒளிகுன்றுதல்.

| | |
|---|---|
| **மினுமினுப்பு** - ஒலிக்குறிப்பு. | **மினுமினுப்பு** - ஒளி; மிளிர்வு. |
| **முணங்கு** - அடக்கம்; சோம்பல்; முரிப்பு; சோம்பு. | **முனங்கு** - ஓரம். |
| **முணங்குதல்** - உள்ளடங்குதல்; அடங்குதல்; குரலை அடக்கிப் பேசுதல். | **முனங்குதல்** - முணுமுணுத்தல்; புலம்பல். |
| **முணை** - மிகுதி; வெறுப்பு. | **முனை** - நுனி; பகை; போர்; போர்க்களம்; பகைப்புலம்; வெறுப்பு; தவம்; துணிவு; திரள்; முன்; முகம்; தலைமை; கடலுள் செல்லும் நீண்டு கூரிய தரைப்பாகம். |
| **முணைதல்** - வெறுத்தல். | **முனைதல்** - பொருதல்; ஊக்கங் கொள்ளுதல்; மூண்டு நிற்றல்; நிறை அதிகமாதல். |
| **மோணம்** - பழத்தின் வற்றல்; பாம்புப் பெட்டி. | **மோனம்** - அமைதி; பேசாதிருத்தல். |
| **வங்கணம்** - உற்ற நேசம்; ஒரு தேயம்; சிநேகம். | **வங்கனம்** - சேம்பு. |
| **வண்கை** - கொடைக்கை. | **வன்கை** - வைராக்கியம். |
| **வண்சிறை** - மதில். | **வன்சிறை** - கடுங்காவல்; மதில்; கொடுமைக்கு உள்ளாக்கும் அடிமைத்தனம். |
| **வண்ணம்** - நிறம்; சித்திரம்; எழுதுதற்குரிய கலவை; சாந்துப்பொது; அழகு; இயற்கையழகு; ஒப்பனை; குணம்; நன்மை; சிறப்பு; கனம்; வடிவு; சாதி; இனம்; வகை; பாவின் கண் நிகழும் ஓசை விகற்பம்; சந்தப்பாட்டு. | **வன்னம்** - நிறம்; எழுத்து; தங்கம் |
| **வண்ணி** - வருணி என்பதின் திரிபு. | **வன்னி** - கிளி; குதிரை; நெருப்பு; பிரமசாரி; மரவகை; வன்னியன்; தணக்கு; சித்திரமூலம் என்னும் கொடி. |

**வண்ணிகை** - மருந்துச் சரக்கு வகை.

**வண்ணித்தல்** - புனைந்துரைத்தல்; மிகைப் படக்கூறல்; புகழ்தல்; விரித்தல்.

**வண்மை** - வளப்பம்; ஈகை; குணம்; வாய்மை; வலிமை; அழகு; புகழ்; வாகைமரம்.

**வணிதம்** - நாட்டுப்பகுதி; செப்பம்.

**வணை** - மாட்டுக்கு வயிற்றில் உண்டாகும் ஒரு நோய்.

**வணைதல்** - வளைதல்.

**வயணம்** - விதம்; நிலைமை; விவரம்; உணவு முதலியவற்றின் வளம்; நல்லமைப்பு; நேர்த்தி; காரணம்; ஏற்றது.

**வாணக்கல்** - வீடு முதலியவற்றின் அடிப்படைக்கல்

**வாணகம்** - அம்பு; தீ; தனிமை; பசுவின் மடி; வேய்ங்குழல்.

**வாணம்** - அம்பு; தீ; மத்தாப்பு முதலிய; அடிப்படைக் குழி.

**வன்னிகை** - எழுதுகோல்.

**வன்னித்தல்** - வண்ணம் வைத்தல்; வருணித்தல்.

**வன்மை** - வலிமை; கடினம்; வன்சொல்; ஆற்றல்; வலாற்காரம்; சொல் அழுத்தம்; கோபம்; கருத்து; வல்லெழுத்து.

**வனிதம்** - சிறப்பு; மேன்மை.

**வனை** - அலங்கரி என்னும் ஏவல்.

**வனைதல்** - உருவம் அமையச் செய்தல்; அலங்கரித்தல்; ஓவியம் எழுதுதல்.

**வயனம்** - உரை; வகை; வேதம்; பழிமொழி; விதம்; நிலைமை; இனிய உணவு; நல்லமைப்பு; விவரம்; நேர்த்தி; ஏற்றது; காரணம்.

**வானக்கல்** - காகச்சிலை.

**வானகம்** - விண்ணுலகம்; மரவகை; விண்; ஆகாயம்; தேவலோகம்; மஞ்சாடி.

**வானம்** - விண்; தேவருலகு; அக்கினி; மேகம்; மழை; உலர்ந்த மரம்; மரக்கனி; உலர்ந்த காய்; உலர்ச்சி; உயிரோடு இருக்கை; போகை; மணம்; நீர்த்திரை; புற்பாய்; கோபுரத்தின் ஓர் உறுப்பு.

**வாணி** - கலைமகள்; நாதம் தோன்றும் இடம்; ஒரு கூத்து; சொல்; கல்வி; சரசுவதி நதி; அம்பு; ஓமம்; நீர்; இந்துப்பு; ஆடுமாடுகளின் தலைச்சுழி.

**வானி** - மேற்கட்டி; துகிற்கொடி; கூடாரம்; ஆன்பொருநை; பவானியாறு; மரவகை; காற்றாடிப்பட்டம்; இடிக்கொடி; படை; செடிவகை.

**வாணிதம்** - கள்.

**வானிதம்** - மணல் போன்று நுண்ணியதாய் இருக்கும் சருக்கரை.

**வாணிதி** - நாடகக் கணிகை; நாணம் அற்றவள்.

**வானிதி** - மனோசிலை.

**வாணியம்** - ஊதியம்; வியாபாரம்.

**வானியம்** - மரம்.

**விசாணம்** - விலங்கின் கொம்பு.

**விசானம்** - சுடுகாடு.

**விடாணி** - கொம்புள்ளது; யானை.

**விடானி** - சதுரக்கள்ளி.

**விண்ணா** - கடுகுரோகினி.

**வின்னா** - காண்க: விண்ணா

**வெங்கண்** - அழலெழ விழிக்கும் கண்; கொடுமை; பொறாமை; பகைமை; கண்ணூறு.

**வெங்கன்** - வறிஞன்.

**வேண்** - விருப்பம்; வேணாடு (திருவிதாங்கூரைச் சேர்ந்த தமிழ்நாடு).

**வேன்** - மிகுதி.

**வேணன்** - அம்பட்டத்தியிடத்திற் பார்ப்பானுக்குப் பிறந்து புகழ்ந்து பாடுவோன்.

**வேனன்** - சுவாயம்புவ மனுவின் வமிசத்தில் அங்கண் மகன்; பிருது சக்கரவர்த்தி தந்தை; வேனன் புதல்வரின்றியிறக்க அவன் தொடையெலும்பை எடுத்துக் கடைந்தபோது இந்த பிருது சக்கரவர்த்தி பிறந்தான்.

# ர/ற வேறுபாட்டுச் சொற்கள்

**அக்கரை** - எதிர்க்கரை; நீர்நிலையின் மறுகரை.

**அசர்** - அசறு; தலைச்சுண்டு; பொடுகு.

**அயர்** - வாட்டம்.

**அர்க்கம்** - தேவருக்கு அல்லது பெரியோருக்கு வணக்கத்தோடு கொடுக்கும் பொருள்; எருக்கு; நீர்க்காக்கை; பொன்; செம்பு; பளிங்கு; விலைப்பொருள்; பூகோளத்தில் குறுக்குக்கோடு; அகலாங்கு.

**அர்ச்சனை** - ஆராதனை; வழிபாடு.

**அர்ச்சித்தல்** - பூசித்தல்; வழிபடுதல்; ஒருவருக்காகக் கடவுள் திருப்பெயர் கூறி மலர் முதலியன இடுகை.

**அர்ப்பணம்** - உரிமைப்படுத்துதல்; காணிக்கை செலுத்துகை; படைத்தல்.

**அர** - பாம்பு; நாகமல்லி.

**அரசம்** - சுவையில்லாதது; மூலநோய்.

**அக்கறை** - ஈடுபாடு; கருத்து; கவனம்.

**அசறு** - அசர்; ஒருவகைச் செடிப்பூச்சி; ஆட்டுச்சொறி; சேறு.

**அயறு** - புண்வழலை; புண்ணீர் கசிந்து பரவுதல்.

**அற்கம்** - அடக்கம்; வெண்துளசி; பொருள் விலை; பூசைவிதி.

**அற்சனை** - அருச்சனை.

**அற்சித்தல்** - அருச்சித்தல்.

**அற்பணம்** - காணிக்கை செலுத்துதல்.

**அற** - முழுவதும்; மிகவும்; தெளிவாக.

**அறசம்** - கத்தரி.

**அரம்** - இரும்பைத் தேய்க்கப் பயன்படும் கருவி; விரைவு; வண்டி; பாதலம்; தோல்.

**அறம்** - தருமம்; புண்ணியம்; அறச்சாலை; தருமதேவதை; யமன்; தகுதியானது; சமயம்; ஞானம்; நோன்பு; இதம்; இன்பம்; தீப்பயன் உண்டாக்கும் சொல்.

**அரவன்** - பாம்புகளை அணிந்துள்ள சிவன்.

**அறவன்** - தருமவான்; கடவுள்; புத்தன்; முனிவன்; அறத்தைக் கூறுவோன்; பார்ப்பனன்.

**அரவு** - பாம்பு; ஒலி; உடைப்புஅடைக்கும் வைக்கோல் பழுதை; நாகமரம்; ஆயிலியம்; தொழிற்பெயர் விகுதி.

**அறவு** - ஒழிகை.

**அரன்** - பதினோர் உத்திரர்களுள் ஒருவரின் பெயர்; எப்பொருட்கும் இறை; அழிப்போன்; அரசன்; நெருப்பு; மஞ்சள்.

**அறன்** - வேள்வி முதல்வன்; அறக்கடவுள்.

**அராமி** - கொடியன்(ள்).

**அறாமி** - கொடுமை இயல்பு உள்ளது; இடக்குப் பண்ணுகிற குதிரை.

**அராவுதல்** - அரத்தால் தேய்த்தல்; உராய்தல்; மாறுபடுதல்.

**அறாவுதல்** - அடித்தல்.

**அரி** - வண்டு; மென்மை; கண்வரி; கண்; சிலம்பினுட் பரல்; சிலம்பு; உள்துளை; மூங்கில்; சோலை; தேர்; மக்கள் துயிலிடம்; கட்டில்; கடல்; தகட்டு வடிவு; கூர்மை; வலிமை; மரவயிரம்; அரியப்பட்ட கைப்பிடிக் கதிர்; அரிசி; கள்; குற்றம்; நீர்த்திவலை; ஆயுதம்; பகை; நிறம்; அழகு; பொன்னிறம்; திருமால்; சிவன்; இந்திரன்; யமன்; காற்று; ஒளி; சூரியன்; சந்திரன்; சிங்கம்; குதிரை; குரங்கு; பாம்பு; தவளை; கிளி; திருவோணம்; துளசி; நெல்; நெற்கதிர்; பனங்கருக்கு; மரகதம்.

**அரிசா** - பெருங்குமிழமரம்.

**அரிதல்** - அறுத்தல்.

**அரிப்பு** - பிரித்தெடுக்கை; குற்றம்; சினம்; தினவு.

**அரியல்** - அரிதல்; கள்.

**அரிவை** - இருபது முதல் 25 ஆண்டுவரை உள்ள பெண்.

**அரு** - உருவமற்றது; கடவுள்; மாயை; சித்தபதவி; அட்டை; புண்

**அருக்கன்** - சூரியன்; இந்திரன்; தமையன்; எருக்கு; சுக்கு.

**அருகு** - அண்மை; பக்கம்; ஓரம்; இடம்; தீவட்டி.

**அறி** - அறிவு.

**அறிசா** - ஒருவகை மீன்.

**அறிதல்** - உணர்தல்; நினைத்தல்; மதித்தல்; பயிலுதல்; அனுபவித்தல்; உறுதிசெய்தல்; புதிதாய்க் கண்டுபிடித்தல்.

**அறிப்பு** - உணர்கை

**அறியல்** - மூங்கில்.

**அறிவை** - ஞானம்.

**அறு** - இறு; தீர்; பாழ்.

**அறுக்கன்** - தலைவன்; நெருக்கமான நண்பன்.

**அறுகு** - அறுகம்புல்; சிங்கம்; புலி; யானையாளி; யானை; வெளித்திண்ணை; தெருப்பந்தல்.

**அருகு(வி)** - அருகு என்னேவல்; குறை.

**அரும்பு** - மொட்டு; அணிகளின் அரும்பு வேலை; முகத்தில் தோன்றும் இளமயிர்; அரிசி.

**அறும்பு** - பஞ்சம்; குறும்புத்தனம்; தீம்பு.

**அருமை** - அரிய தன்மை; பெருமை; கடினம்; எளிதிற் கிட்டாமை; சிறுமை; இன்மை.

**அறுமை** - நிலையின்மை; ஆறு.

**அரை** - பாதி; இடம்; இடை; தொடையின் மேற்பாகம்; வயிறு; அல்குல்; ஒரு மரம்; மரத்தின் அடிப்பாகம்; தண்டு; அரசியல்.

**அறை** - அடி; மோதுகை; வெட்டுகை; ஓசை; சொல்; விடை; அலை; உள்வீடு; பெட்டியின் உட்பகுதி; வகுத்த இடம்; பிள்ளைபெறும் அறை; சதுரங்கம் முதலியவற்றின் கட்டம்; மலைக்குகை; சுரங்கம்; பாத்தி; வஞ்சனை; பாறை; அம்மி சல்லி; துண்டம்; பாசறை; அறுகை.

**அரைகுறை** - முற்றுப்பெறாமை.

**அறைகுறை** - அறுத்தலும் குறைத்தலுமாக உள்ள நிலை; முற்றுப்பெறாமை; தேவை; துன்பம்.

**அரைதல்** - தேய்த்தல்; அரைபடல்.

**அறைதல்** - அடித்தல்; மோதுதல்; சொல்லுதல்; கடாவுதல்; ஒலித்தல்; பறை முதலியன கொட்டுதல்; மண்ணெறிந்து கட்டுதல்.

**அல(ர்)ருதல்** - மலர்தல்; பரத்தல்; பெருத்தல்; விளங்குதல்; சுரத்தல்.

**அலறுதல்** - அலறல்; மிக்கொலித்தல்; மாடு, ஆந்தை முதலியன கதறுதல்; உரத்தழுதல்; வருந்துதல்; விரிதல்; காய்தல்.

**ஆர்பதம்** - வண்டு; உணவு; நிழல்; அரத்தை.

**ஆற்பதம்** - சாரம்.

**ஆரல்** - அக்கினி; ஒரு பூடு; ஒரு மீன்; கார்த்திகை நாள்; செவ்வாய்; நிறைதல்; நெருப்பு; பித்தம்; மதில்.

**ஆறல்** - அலைதல்; ஆறுதல்.

**ஆராட்டு** - தாலாட்டு.

**ஆறாட்டு** - தீர்த்தவாரித் திருவிழா.

**ஆரு** - குடம்; நண்டு; பன்றி.

**ஆறு** - நதி; வழி; பக்கம்; பயன்; சமயம்; அறம்; சூழ்ச்சி; விதம்; இயல்பு; ஓர் எண்ணிக்கை; தலைக்கடை; ஆறென்னேவல்; ஒழுக்கம்.

**ஆருதல்** - ஆர்தல்.

**ஆறுதல்** - ஆறியிருத்தல்; இளைப்பாறல்; ஓய்தல்; சூடுதணிதல்; குணமாதல்; தணிதல்; அடங்குதல்; மன அமைதி.

**ஆரை** - நீராரை; ஒரு பூடு; கோட்டை; மதில்; புற்பாய்; அச்சுமரம்; தோல் வெட்டும் உளி; ஆரக்கால்.

**ஆறை** - ஆற்றூர்.

**இணர்** - பூங்கொத்து; பூ; பூவிதழ்; பூந்தாது; சுடர்; குலை; ஒழுங்கு; தொடர்ச்சி; கிச்சிலி மரம்; மாமரம்.

**இணறு** - பூ.

**இந்துரு** - பெருச்சாளி.

**இந்துறு** - இலந்தை.

**இர** - இரவு; இரத்தல்.

**இற** - இறவென்னேவல்; இறால்; இறக்குபடி.

**இரக்கம்** - அருள்; மனவுருக்கம்; மனவருத்தம்; ஒலி; ஈடுபாடு.

**இறக்கம்** - இறங்குதுறை; இறங்குந்தன்மை; சவுரி; போகிறவழி; மிருகங்கள் செல்வழி; வீக்கம் முதலியன இறங்குதல்; நிலை தவறுகை; இறப்பு.

**இரக்கை** - காப்பு; காப்பாக இடுவது; திருநீறு; காவல்; மீட்டு.

**இறக்கை** - சிறகு; கிணற்றின் இருபுறங்களிலுமுள்ள துணைச்சுவர்; இறத்தல்.

**இரகு** - இராமனின் பாட்டன்.

**இரங்கல்** - அழுகை; நெய்தல் உரிப்பொருள்; ஒலி; யாழ்; நரம்போசை.

**இரங்குதல்** - வருந்துதல்; அருளல்; மனம் அழிதல்; அழுதல்; கழிவிரக்கம் கொள்ளல்; ஒலித்தல்; யாழ்ஒலித்தல்; கூறுதல்; ஈடுபடுதல்.

**இரட்டுதல்** - இரட்டித்தல்; மாறியொலித்தல்; ஒலித்தல்; அசைதல்; வீசுதல்; கொட்டுதல்; தெளித்தல்.

**இரத்தல்** - குறையிரத்தல்; பிச்சை கேட்டல்; வேண்டல்.

**இரப்பு** - வறுமை; பிச்சை; யாசிக்கை.

**இரவம்** - ஒலி; இருள்மரம்.

**இரவி** - சூரியன்; மூக்கின் வலத்தொளை; மலை; எருக்கு; வாணிகத் தொழில்.

**இரவு** - இராத்திரி; மஞ்சள்; இருள்மரம்; இரத்தல்; இரக்கம்; பன்றிவகை.

**இரவை** - நுட்பமான பொருள்; கோதுமைக் குறுநொய்; வயிரம்; துப்பாக்கியில் இடும் ஈயக்குண்டு.

**இரா** - இரவு.

**இறகு** - சிறகு; மயிற்பீலி.

**இறங்கல்** - ஒருவகை நெல்; அதோ கெதியாதல்; இறங்கட்டுவெது; இறங்குதுறை.

**இறங்குதல்** - இழிதல்; தாழ்தல்; தங்குதல்; கீழ்படுதல்; சரிதல்; தாழ்வடைதல்; நிலைகுலைதல்; நாணுதல்.

**இறட்டுதல்** - முகந்து வீசுதல்.

**இறத்தல்** - கடத்தல்; கழிதல்; நெறிகடந்து செல்லுதல்; சாதல்; மிகுதல்; வழக்கு வீழ்தல்; நீங்குதல்.

**இறப்பு** - வீடுபேறு; அதிக்கிரமம்; மிகுதி; போக்கு; இறப்பு; உலர்ந்த பொருள்; வீட்டின் இறப்பு; இறந்த காலம்.

**இறவம்** - இறால்மீன்.

**இறவி** - சாவு; இறத்தல்.

**இறவு** - சாவு; முடிவு; நீக்கம்; மிகுதி; இறால்மீன்; தேன்கூடு; வீட்டிறப்பு; எல்லை.

**இறவை** - ஏணி; இறைகூடை; விரற்புட்டில்.

**இறா** - இறால்மீன்.

**இராவுதல்** - அராவுதல்.

**இரு** - இவ்விடத்தில் தங்கு எ(ன்)னும் ஏவல்.

**இருக்கம்** - நட்சத்திரம்; கரடி; இராசி.

**இருக்கன்** - இருக்கு வேதம் உணர்ந்தவன்; பிரமன்.

**இருக்கு** - இருக்கு வேதம்; உபநிடதம் 32ல் ஒன்று.

**இருக்குதல்** - இருத்தல்.

**இருத்தல்** - உளதாதல்; நிலைபெறுதல்; உட்காருதல்; உள்ளிறங்குதல்; உயிர்வாழ்தல்; அணியமாயிருத்தல்; உத்தேசித்தல்; ஒரு துணைவினை; முல்லை உரிப்பொருள்.

**இருதி** - இரண்டெழுத்தாலாகிய அசை.

**இருப்பு** - இருக்கை; மலவாய்; இருப்பிடம்; குடியிருப்பு; நிலை; கையிருப்பு; பொருண்முதல்.

**இரும்பு** - கரும்பொன்; ஆயுதம்; பொன்; செங்காந்தள்; கிம்புரி; கடிவாளம்.

**இருமுறி** - இருப்பு முறி என்னும் செடி.

**இறாவுதல்** - வதக்கி மயிர்போகச் சீவுதல்.

**இறு** - முறி என்னும் ஏவல்.

**இறுக்கம்** - நெகிழாத்தன்மை; அழுத்தம்; நெருக்கம்; ஒழுக்கம்; கையழுத்தம்; முட்டுப்பாடு; புழுக்கம்.

**இறுக்கன்** - ஈயாதவன்; கடும்பற்றுள்ளவன்.

**இறுக்கு** - இறுக்கிய கட்டு; இறுக்கிய முடிச்சு; ஒடுக்குகை; கண்டிக்கை.

**இறுக்குதல்** - அழுந்தக் கட்டுதல்; இறுக உடுத்தல்; ஒடுக்குதல்; உள்ளழுத்துதல்; உறையச் செய்தல்.

**இறுத்தல்** - தங்குதல்; ஒடித்தல்; சொல்லுதல்; வடித்தல்; விடை கூறல்; முடித்தல்; வெட்டல்; கடன் செலுத்துதல்; அழித்தல்; வீழ்த்துதல்; எறிதல்; வினாதல்; தைத்தல்.

**இறுதி** - முடிவு; சாவு; வரையறை.

**இறுப்பு** - தங்குகை; குடியிறை; கடன் செலுத்துகை.

**இறும்பு** - குறுங்காடு; சிறுதூறு; சிறுமலை; தாமரைப்பூ; காந்தட்பூண்டு; வியப்பு.

**இறுமுறி** - கிழிந்துபோன பத்திரம்; தீர்ந்து போன பத்திரம்.

**இரை** - ஒலி; பறவை; விலங்கு முதலியவற்றின் உணவு; உண்ட உணவு; நாக்குப்பூச்சி; பூமி; நீர்; கள்; வாக்கு; இலக்குமி.

**இறை** - உபரம்; தலை; கடவுள்; தலைவன்; அரசன்; உயர்ந்தோன்; மூத்தோன்; பெருமையிற்சிறந்தோன்; கணவன்; பறவையிறகு; கடன்; வீட்டிறப்பு; மறுமொழி; மணிக்கட்டு; குடியிறை; சிறுமை; காலவிரைவு; சிவன்; பிரமன்; மாமரம்.

**இறை(வி)** - இறைத்துவிடு; தூவு; எறி; வீசு.

**இரைத்தல்** - ஒலித்தல்; சீறுதல்; மூச்சு வாங்குதல்; வீங்குதல்.

**இறைத்தல்** - சிதறுதல்; நீர்ப்பாய்ச்சுதல்; நிறைத்தல்; மிகுதியாகச் செலவிடல்.

**இரைதல்** - ஒலித்தல்; கூச்சலிடல்.

**இறைதல்** - சிதறிப்போதல்; சிந்துதல்; வணங்குதல்.

**இரைப்பு** - இரைச்சல்; மூச்சு வாங்குகை; இரைப்புநோய்; மோகம்; கரப்பான்பூச்சி.

**இறைப்பு** - நீர் இறைக்கை.

**இவர்தல்** - உயர்தல்; செல்லுதல்; உலாவுதல்; பார்த்தல்; ஏறுதல்; செறிதல்; பாய்தல்; பொருதுதல்; மேற்கொள்ளுதல்; விரும்புதல்; ஒத்தல்; எழும்புதல்; நடத்தல்; கலத்தல்.

**இவறுதல்** - ஆசையுறல்; விரும்புதல்; மறத்தல்; மிகுதல்; உலாவுதல்; கைவிடாதிருத்தல்; வேண்டும் வழிப்பொருள் கொடாமை.

**ஈரல்** - ஈருள்; மண்ணீரல்; கல்லீரல்; வருத்துகை.

**ஈறல்** - துன்பம்; நெருக்கம்.

**உயிர்** - காற்று; உயிர்வளி; சீவன்; ஆதன்; ஓரறிவுயிர் முதலிய உயிரினம்; உயிரெழுத்து; ஓசை; ஒரு நாழிகையில் 4320ல் ஒரு கூறு; சன்மலக்கினம்.

**உயிறு** - இலாமிச்சம்புல்.

**உரண்டை** - சாகசம்.

**உரத்தல்** - இறுகுதல்; பலத்தல்; வலியுறுதல்; கொந்தளித்தல்; மிகுதல்; முருடாதல்; கடுமையாதல்; எடுப்பாதல்.

**உரல்** - நெல் முதலியன குற்றும் உரல்; இடிப்பதற்குரிய கருவி; இடியாப்பம்; தேன்குழல் முதலிய பணிகாரம் பிழியும் அச்சு.

**உரவர்** - அறிவுடையோர்; சமணர்; நாகர்.

**உரவன்** - வலியோன்; அறிஞன்; அருகன்.

**உரவு** - வலிமை; மனவலிமை; மிகுகை; நஞ்சு.

**உரவோர்** - அறிஞர்; மூத்தோர்; வலியோர்.

**உராவுதல்** - பரவுதல்; இடம் விட்டுப் பெயர்தல்; செல்லுதல்; வலிபடைதல்; பரத்தல்.

**உரி** - தோல்; மரப்பட்டை; உரிச்சொல்; அரைநாழி; கொத்துமல்லி; நாயுருவி.

**உரி(வி)** - உரிதலைச் செய் என்னும் ஏவல்; களை; கழற்று.

**உரிஞ்சுதல்** - உராய்தல்; தேய்த்தல்; பூசுதல்; இழுத்தல்; வற்றச்செய்தல்.

**உறண்டை** - முருட்டுத்தனம்; தொந்தரவு செய்கை; கெட்ட நாற்றம்.

**உறத்தல்** - கிள்ளியெடுத்தல்; பிளத்தல்; அழுத்துதல்; உறிஞ்சுதல்; சிறிதாதல்; செறிதல்; ஒட்டக்கறத்தல்; முற்றுங் கவர்தல்; பிதுக்கல்.

**உறல்** - அடைகை; உறவு; பரிசம்; உறுதல்; பொருந்தல்; கிட்டல்; வருதல்; அடைதல்; அணைதல்.

**உறவர்** - உறவோர்.

**உறவன்** - உறவுடையவன்.

**உறவு** - உறுகை; பொருத்தம்; சேர்க்கை; சம்பந்தம்; சுற்றம்; நட்பு; ஒற்றுமை; விருப்பம்.

**உறவோர்** - சுற்றத்தார்; நண்பர்.

**உறாவுதல்** - சோர்தல்; வருத்தல்.

**உறி** - பண்டங்களை வைக்கத் தொங்கவிடும் கயிறு; தூக்கு.

**உறிஞ்சுதல்** - வாய்க்குள் இழுத்தல்; மூக்கால் உறிஞ்சுதல்; உள்ளிழுத்தல்; உள்ளே வாங்கல்.

**உரிதல்** - தோல் முதலியவை கழலுதல்; ஆடை களைதல்; பறித்தல்.

**உரியடி** - உரிச்சீரான் வருமடி; ஒரு வைணவத் திருவிழா.

**உரு** - வடிவழகு; தெய்வத் திருமேனி; நிறம்; அச்சம்; அட்டை; பலமுறை சொல்லுகை; பருமை; தோணி; உடல்; எலுமிச்சை; இசைப்பாடல்; நோய்; உருவமுள்ளது; உளியாற் செய்த சிற்பவேலை; தாலி முதலியவற்றில் கோர்க்கும் உரு; தன்மை; அகலம்.

**உருக்கு** - எஃகு உருக்கின பொருள்.

**உருக்கு(வி)** - உருக்கு என்னும் ஏவல்; தீயிற்கரை; வாட்டு; வருத்து; அழி.

**உருக்குதல்** - இளகி விழச்செய்தல்; மனம் நெகிழ்த்துதல்; மெலியச் செய்தல்; அழித்தல்; வருத்துதல்.

**உருத்தல்** - மிகச் சினங்கொள்ளுதல்; சினக்குறிப்புக் காட்டுதல்; வெப்பமுறச் செய்தல்; முதிர்தல்; ஒத்தல்; சுரத்தல்; தோற்றுதல்; முளைத்தல்.

**உறிதல்** - உறிஞ்சுதல்; உள்ளே வாங்குதல்.

**உறியடி** - கண்ணன் பிள்ளைப் பருவத்தில் உறிவெண்ணெய் எடுத்ததைக் கொண்டாடும் திருநாள்.

**உறு** - மிகுதி; மிக்க; பகை; போர்.

**உறுக்கு** - அதட்டுகை; அதட்டு.

**உறுக்குதல்** - அதட்டுகை; சினத்தல்; ஒறுத்தல்; தாண்டுதல்.

**உறுத்தல்** - உறுத்துதல்; மிகுக்கை; ஒற்றுகை.

**உருப்பு** - வெப்பம்; சினம்; கொடுமை; மிகுதி.

**உருபு** - வடிவம்; நிறம்; வேற்றுமை முதலியவற்றைக் காட்டும் இடைச்சொல்; நோய்.

**உரும்பு** - கொடுமை; கொதிப்பு.

**உருமு** - இடி; அச்சம்; இந்திரனது கொடி; புலி உறுமுதல்.

**உருமுதல்** - முழங்குதல்; முறுமுறுத்தல்; இரைதல்; குமுறல்.

**உருவல்** - உருவுதல்; ஒருவகைக் காதணி.

**உருவரை** - செழிப்புள்ள நிலம்; நல்ல நிலம்.

**உருவித்தல்** - உருவகப்படுத்தல்.

**உருவை** - குதிரைச்செடி; முள்ளிப்பூண்டு.

**உரை** - உரைக்கை; சொல்; பொருள் விளக்கம்; ஒலி; பேச்சு; மொழி; முழக்கம்; ஆசிரிய வசனம்; ஆகமப் பிரமாணம்; மாற்றுரை; விடை; பொன்; புகழ்; தேய்வு; எழுத்தின் ஒலி; புகழுரை; விரிவுரை.

**உறுப்பு** - சினை; அவயவம்; உடல்; நெருக்கம்; பங்கு; மிகுதி; மரக்கொம்பு; மேல்வரிச் சட்டம்; காணியாட்சிப் பத்திரம்; பாலை யாழ்த்திறம்; உடல் அழகு.

**உறுபு** - பாலையாழ்த்திறம்; செறிவு; மிகுதி.

**உறும்பு** - உலர்ந்த கரம்பை; மண்ணின் கூரிய சிறிய கட்டி.

**உறுமு** - உறுமு என்னும் ஏவல்.

**உறுமுதல்** - உறுமென்று ஒலித்தல்; முறுமுறுத்தல்; குமுறுதல்; சினத்தல்; இரைதல்; முழங்குதல்; எழும்புதல்.

**உறுவல்** - உறுவேன் என்னும் பொருள் படும் தன்மை வினைமுற்று; துன்பம்.

**உருவரை** - உடலழகற்றவன்; உருவழகற்றவன்.

**உறுவித்தல்** - பொருத்துதல்; நுகர்தல்.

**உறுவை** - ஔவை சகோதரிகள் நால்வருள் ஒருத்தி.

**உறை** - பெருமை; நீளம்; உயரம்; பொருள்; மருந்து; உணவு; வெண்கலம்; பெய்யுறை; ஆயுதவுறை; நீர்த்துளி; மழை; காரம்; போர்வை; உறுப்பு; இருப்பிடம்; பாலிடுபிரை; ஓர் இலக்கக் குறிப்பு; வாழ்நாள்; துன்பம்; கிணற்றின் அடியில் வைக்கும் மரவளையம்; பொன்; பாம்பின் நச்சுப்பை.

**உரை(வி)** - தேய்; ஒலி; சொல்; பேசு.

**உரைத்தல்** - ஒலித்தல்; சொல்லுதல்; தேய்த்தல்; மாற்றறியத் தேய்த்தல்; மெருகிடுதல்; பூசுதல்.

**உறைத்தல்** - துளித்தல்; பெய்தல்; உதிர்தல்; நீர் சொரிதல்; உறுதியடைதல்; தாக்கிப் பயன்விளைத்தல்; மோதுதல்; மிகுதல்; அதட்டுதல்; அழுக்குதல்; ஒத்தல்; காரமாய் இருத்தல்; உறுத்தல்; எரிதல்; அழுந்தல்.

**உரைதல்** - தேய்தல்; வீணாதல்.

**உறைதல்** - தோய்தல்; தங்குதல்; வாழ்தல்.

**உரைப்பு** - தேய்ப்பு; மாற்றறியத் தேய்க்கை; சொல்லுகை.

**உறைப்பு** - காரம்; எரிவு; சுவைக்கூர்மை; அழுத்தம்; வாய்ப்பு; கொடுமை; வேதனை; மழை பெய்தல்; தாக்குதல்; மிகுதி; பதிவு; உறுதி.

**உரையல்** - உரைத்தல்; தேய்த்தல்; சொல்லுகை.

**உறையல்** - பிணக்கு; மாறுபாடு.

**உரைவு** - தேய்வு.

**உறைவு** - தங்குகை; சிறுகுகை; உறைதல்; இருப்பிடம்.

**உலர்தல்** - காய்தல்; வாடுதல்; அழிதல்.

**உலறுதல்** - காய்தல்; வற்றுதல்; சிதைதல்; பொலிவழிதல்; சினத்தல்; உரை தடுமாறல்; வருந்துதல்.

**உலரல்** - உலர்தல்.

**உலறல்** - காய்தல்; சினக்குறிப்பு.

**உளர்தல்** - கிண்டுதல்; கோதுதல்; மயிர்கோதல்; அசைத்தல்; சிதறுதல்; சிந்துதல்; தடவுதல்; யாழ் முதலியன மீட்டுதல்; கலக்குதல்; பூசுதல்; காலந்தாழ்த்தல்; சுழலுதல்; பரப்புதல்; உறுதியற்றாடுதல்.

**உளறுதல்** - உளறல்; தடுமாறிப் பேசுதல்; ஆரவாரித்தல்; பிதற்றல்; குழறுபடையான மொழி; கனாக்கண்டு பிதற்றுதல்.

**ஊர்தல்** - நகருதல்; பரவுதல்; தினவுறுதல்; நெருங்குதல்; வடிதல்; ஏறிச்செல்லுதல்; சுழலுதல்; ஏறுதல்.

**ஊரணி** - ஊரினருக்கு உண்ணும் நீர் உதவும் நீர்நிலை; ஊரையடுத்த குளம்; ஊரரார் நீர்முகக்கும் குளம்.

**ஊரல்** - ஊர்வது; கிளிஞ்சில்; குளுவை என்னும் ஒரு நீர்ப்பறவை; தினவு; ஊறுதல்; தேமல் வகை; படர்தாமரை; நோய்; ஈரம்; பசுமை; காய்ந்து வருகிற புண்; உரிஞ்சல்; ஊதல்.

**ஊரு** - அச்சம்; அட்டை; தொடை.

**ஊரை** - மலைநெல்.

**எரி** - நெருப்பு; வேள்வித்தீ; தீக்கடைக்கோல்; ஒளி; அக்கினி தேவன்; நரகம்; கார்த்திகை; புனர்பூசம்; கந்தகம்; இடபராசி; வால்மீன்வகை.

**ஊறுதல்** - நீரூறுதல்; கசிதல்; செவ்வியுறுதல்; சுரத்தல்; பெருகுதல்; தேறுதல்; சாரமேறுதல்; பால் முதலியன சுரத்தல்; நீர் பெருகுதல்; மெலிந்த உடல் தேறுதல்; வாய் ஊறுதல்; பலவழியினும் பொருள் வந்தடைதல்; உள்ளிறங்கல்; நனைதல்; இடைவிடாது சுரத்தல்; ஊறுகாய்ப்பதமாதல்.

**ஊறணி** - ஊற்று; கசிவுநிலம்; சேற்று நிலம்; வருவாய்.

**ஊறல்** - ஊறுதல்; நீரூற்று; சாறு; பால் முதலியன சுரத்தல்; மருந்தில் ஊறல்; மருந்தின் சாரம்; பஞ்சலோகக் கலப்பு; களிம்பு; வருவாய்; நிர்வற்றாப்பசுமை; தோலின் மீது உண்டாகும் ஒரு நோய்.

**ஊறு** - இடையூறு; காயம்; கொலை; தழும்பு; தீண்டல்; தீமை; பரிசம்; துன்பம்; மெலிந்தவுடல்; உடம்பு; வல்லூறு; குற்றம்; நிந்தை; உறற்பாலது; வெம்மை; தண்மை; மென்மை; வன்மை; திண்மை

**ஊறை** - சவ்வரிசி.

**எறி** - குத்து; தள்ளு; அறை; அடி; வெட்டு; வீச்சு; உதை; அடிக்கை; குறிப்பாகச் சொல்லுகை.

**எரி(வி)** - எரியென்னேவல்; ஒளிர்; அழல்; பொறாமை கொள்; சினங்கொள்; வயிறெரி.

**எரிகாலி** - காட்டாமணக்கு.

**எறிகாலி** - உதைகாற் பசு; காலால் உதைக்கும் பசு.

**எரித்தல்** - தீயில் வேகச்செய்தல்; அழற்றுதல்; செரிக்கச் செய்தல்; விளக்கை எரியச் செய்தல்; மருந்து முதலியன புடமிடல்.

**எறித்தல்** - ஒளி வீசுதல்; வெயிற்காலம்; தைத்தல்; உறைத்தல்; பரத்தல்.

**எரிதல்** - சுடருண்டாதல்; ஒளிவிடுதல்; எரிச்சலுண்டாதல்; பொறாமை கொள்ளுதல்; சினத்தல்; துயரம் அடைதல்.

**எறிதல்** - வீசுதல்; உதைத்தல்; வெட்டுதல்; முறித்தல்; அறுத்தல்; பறித்தல்; அழித்தல்; ஒட்டுதல்; குத்தல்; அடித்தல்.

**எரிப்பு** - கார்ப்புச்சுவை; பொறாமை; நெஞ்செரிப்பு; எரிக்கை.

**எறிப்பு** - ஒளி செய்தல்; வெயிலெறிக்கை; சுடுவெயில்.

**எரிமணி** - ஒளியுள்ள மணி; மாணிக்கம்; நாகரத்தினம்.

**எறிமணி** - சேமக்கலம்; சேகண்டி.

**எரியல்** - எரிவு; ஒளி விடுகை; எரிந்தது.

**எறியல்** - கோடரி.

**எரிவு** - எரிகை; உடலெரிச்சல்; பொறாமை; சினம்.

**எறிவு** - எறிதல்.

**ஏக்கரவு** - ஏக்கம்.

**எக்கறவு** - ஏற்றுக் கொள்ளுதல்; வணங்குதல்.

**ஏமார்தல்** - மனங்கலங்குதல்; ஏங்கல்.

**ஏமாறுதல்** - தடுமாறல்; அலமருதல்; மோசம் போதல்.

**ஏர்** - உழுபடை; கலப்பை; உழவுமாடு; உழவுத்தொழில்; எழுச்சி; தோற்றப்பொலிவு; அழகு; நன்மை; ஒப்பு; ஓர் உவமஉருபு.

**ஏறு** - எருது; இடபராசி; எருமைக்கடா; சங்கு; அசுவினி நட்சத்திரம்; விலங்கின் ஆண்; உயர்ச்சி; ஆண்சுறா; ஆண்சங்கு; பனை முதலிய மரத்தின் ஆண்; விலங்கேற்றின்பொது; நந்திதேவர்; தழும்பு.

**ஏர்ப்ப** - ஓர் உவம உருபு.

**ஏர்பு** - எழுச்சி; வனப்பு; அழகு; கோள் நிலை.

**ஏர** - ஓர் உவம உருபு.

**ஏரல்** - கிளிஞ்சில்; நந்தை.

**ஏராளர்** - உழுநர்.

**ஏரான்** - பள்ளிக்கு முதன் முதல் வருபவன்.

**ஏருழவர்** - உழவர்.

**ஒருத்தல்** - ஆண் விலங்கு; யானை; எருமை, கவரி, புலி, புல்வாய், மரை, மான் இவற்றின் ஆண்.

**ஒருவாய்** - கொஞ்சம்; சிறிதளவு.

**ஒருவு** - ஆடு; நீங்குகை.

**ஒருவுதல்** - விடுதல்; நீங்குதல்; கடத்தல்; ஒத்தல்.

**ஒளிர்தல்** - ஒளி செய்தல்; விளங்குதல்.

**கசர்ப்பம்** - மஞ்சள்.

**கண்டரை** - ஆதார நாடி, ஒரு நரம்பு; இதயத்தின் கீழறைகள் இரண்டில் [illegible]த்திலிருந்து செல்லும் பெருநாடி என்னும் பெரிய குழல்.

**ஏறு(வி)** - இவர்; எறி; அடி; அழி; வாகனமேறு; கப்பலேறு; நஞ்சேறு; உயர்; தொகை முதலியன அதிகரி.

**ஏற்ப** - தக்கபடி; பொருந்த; ஓர்உவம உருபு.

**ஏற்பு** - பொருத்தம்; தகுதி; ஏற்றுக் கொள்ளுகை.

**ஏற** - அதிகமாக; மிகுதியாக; உயர; முழுவதும்; முற்பட.

**ஏறல்** - ஏறுதல்; கிளிஞ்சில்.

**ஏறாளர்** - படைவீரர்.

**ஏறான்** - காண்க: ஏரான்.

**ஏறுழவர்** - படைவீரர்.

**ஒறுத்தல்** - தண்டித்தல்; கடிதல்; வெறுத்தல்; இகழ்தல்; அழித்தல்; துன்புறுத்துதல்; வருந்துதல்; ஒடுக்குதல்; நீக்கல்; குறைத்தல்; அலைத்தல்; நோய் செய்தல்; உலோபம் பண்ணுதல்.

**ஒறுவாய்** - கதுவாய்; சிதைவடைந்தவாய்; கொறுவாய்; மூளிவாய்; ஒடிந்த விளிம்பு; ஓடு; சிதைவு.

**ஒறுவு** - வருத்தம்; துன்பம்.

**ஒறுவுதல்** - வருந்துதல்.

**ஒளிறுதல்** - விளங்குதல்; பிரகாசித்தல்.

**கசற்பம்** - காண்க: **கசர்ப்பம்**.

**கண்டறை** - கற்புழை; மலைக்குகை.

**கண்ணார்** - பகைவர்.

**கண்ணாறு** - பாசன வாய்க்கால்; நன்செய்ப்பிரிவு; சிறுபாலம்.

**கப்பரை** - பிச்சைக்கலம்; மட்கலம்; திருநீற்றுக்கலம்; கிடாரம்.

**கப்பறை** - தாய விளையாட்டில் ஒரு கணக்கு.

**கமருதல்** - அழுதல்.

**கமறுதல்** - மிகவொலித்தல்; மிக அழுதல்; மிகவேகுதல்; நெடியுண்டாதல்.

**கர்க்கசம்** - கடினமானது.

**கற்கசம்** - கடினம்; கடும்பற்றுள்ளம்; வேலிப்பருத்தி; கரும்பு.

**கர்க்கடகம்** - நண்டு; ஓர் இராசி.

**கற்கடகம்** - ஓரிராசி; நண்டு பிணைந்து வரும் இணைக்கை வகை.

**கர்க்கரி** - கரகம்; தயிர்கடை தாழி.

**கற்கரி** - ஒருவகை நிலக்கரி.

**கர்ச்சூரம்** - பேரீந்து; கழற்கொடி.

**கற்சூரம்** - காண்க: கர்ச்சூரம்

**கர்ப்பம்** - கரு; கருக்கொள்கை; உட்கொண்டது; நாடகச்சந்தி ஐந்தனுள் ஒன்று; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

**கற்பம்** - இருத்தற்கு அமைந்த இடம்; 432 கோடி ஆண்டு கொண்ட பிரம்மனது ஒரு நாள்; பிரம்மனது வாழ்நாள்; தேவர்க்குரிய வாழ்நாளளவு; ஆயுளை நீட்டிக்கும் மருந்து; திருநீறு; இலட்சங்கோடி; தேவருலகம்; கற்பகம்.

**கர்ப்புரை** - சாம்பிராணி.

**கற்புரை** - காண்க: **கர்ப்புரை**

**கர்ப்பூரம்** - கருப்பூரம்.

**கற்பூரம்** - கருப்பூரம்; பொன்னாங்காணி.

**கர** - அறுபதாண்டுக் கணக்கில் இருபத்தைந்தாம் ஆண்டு; கரவென்னேவல்.

**கற** - கறத்தல் என்னும் ஏவல்.

**கரகரத்தல்** - உறுத்துதல்; சீதளம் முதலியவற்றால் தொண்டையில் அரிப்புண்டாதல்; கடித்தற்குக் கரகரப்பாதல்; விடாமல் வேண்டுதல்; அலைக்கழித்தல்.

**கரகரப்பு** - தொண்டையரிப்பு; குரல் கனத்திருக்கை; ஓயாது வேண்டுகை; அலைக்கழிப்பு.

**கரடு** - முருடு; முருட்டுக்குணம்; சிறுகுன்று; காற்பரடு; மரக்கணு; புற்கரடு; வளர்ச்சியற்றது; ஒருவகை முத்து; யானையின் மதவெறி.

**கரண்டிகை** - பூக்கூடை; முடியின் ஓர் உறுப்பு.

**கரத்தல்** - மறைத்தல்; கவர்தல்; கெடாதிருத்தல்; அழித்து முதற்காரணத்தோடு ஒடுக்குதல்; கெடுதல்.

**கரப்பு** - மறைக்கை; களவு; வஞ்சகம்; மீன்பிடிக்கும் கூடை; பஞ்சரம் முதலியன; மத்து; கரப்பான் பூச்சி.

**கரம்** - கை; முழம்; துதிக்கை; ஓலைக்கொத்தின் திரள்; ஒளிக்கதிர்; ஒளி; குடிவரி; செய்வது; வெப்பம்; அழிவு; சிறுமை; திடம்; இடுமருந்து; விலையேற்றம்; கழுதை; நஞ்சு; நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

**கரவு** - மறைவு; வஞ்சனை; களவு; பொய்.

**கறகறத்தல்** - ஒலித்தல்; தொண்டையறுத்தல்; கடிதற்கு நறுமுறுவென்றுஇருத்தல்.

**கறகறப்பு** - ஓர் ஒலிக்குறிப்பு; நறுமுறுவென்றிருக்கை; தொண்டையறுத்தல்; கடித்தற்கு நறுமுறுவென்றிருத்தல்.

**கறடு** - தாழ்ந்த முத்துவகை; குள்ளமானது; பொன்.

**கறண்டிகை** - முடி உறுப்புள் ஒன்று.

**கறத்தல்** - பால் கறத்தல்; பால் கொடுத்தல்; கவருதல்.

**கறப்பு** - கறக்கை.

**கறம்** - கொடுமை; தீவினை; வன்செய்கை.

**கறவு** - கப்பம்; கறவைப்பசு.

**கரவை** - கம்மாளர் கருவியுள் ஒன்று; கூத்து.

**கரளை** - வளர்ச்சியின்மை; குள்ளன்; வளர்ச்சியற்றது; பருக்காத காய்.

**கரா** - முதலை; ஆண்முதலை.

**கராளி** - தீக்குணம்; அக்கினிபகவானின் ஏழு நாக்குகளுள் ஒன்று.

**கராளை** - வளர்ச்சியின்மை; குள்ளன்; வளர்ச்சியற்றது; பருக்காத காய்.

**கரி** - அடுப்புக்கரி; நிலக்கரி; கரிந்தது; கருமையாதல்; மிளகு; நஞ்சு; மரவயிரம்; யானை; பெட்டைக்கழுதை; சான்றுகூறுவோன்; சான்று; விருந்தினன்; பயிர் தீய்கை; வயிரக் குற்றங்களுள் ஒன்று.

**கரித்தல்** - உறுத்தல்; எரித்தல்; தாளித்தல்; உப்புக்கரித்தல்; வெறுத்தல்; குற்றம் கண்டு குறை கூறுதல்.

**கரு** - கருப்பம்; முட்டைக்கரு; முட்டை; உடம்பு; குழந்தை; குட்டி; அச்சுக்கரு; நிமித்த காரணம்; நடு; உட்பொருள்; வித்தின் கரு; அடிப்படை; கருப்பொருள்; அணு; இயற்கையறிவு; கறுப்பு; நிறம்; ஆயுதத்தின் பல்; குப்பைமேடு.

**கறவை** - பால் கறக்கும் பசு; கறக்கை.

**கறளை** - குள்ளன்; வளர்ச்சியின்மை; வளர்ச்சியற்றது; பருக்காதகாய்; ஒருவகைக் கட்டி.

**கறா** - காடைக்குரல்.

**கறாளி** - அடங்காமை.

**கறாளை** - கரளை; வளர்ச்சியற்றவன்; வளர்ச்சியற்றது.

**கறி** - மிளகு; மரக்கறி; இறைச்சி; கடித்துத்தின்னுகை; ஒரு நாழிகை.

**கறித்தல்** - கடித்துத் தின்னுதல்; உப்புச் சுவை மிகுதல்.

**கறு** - மனவைரம்.

**கருக்கட்டுதல்** - உலோகத்தால் உருவம் வார்ப்பதற்கு அச்சுக்கரு அமைத்தல்; மழைக்குணங்கொள்ளுதல்; யோசனை பண்ணுதல்.

**கருக்கல்** - இருள்; மங்கின இருட்டு; விடியற்காலை; அடர்ந்த மந்தாரம்; கருக்கல் நெல்; காய்ந்த பயிர்; சப்பட்டை; பயனற்றபொருள்.

**கருக்காய்** - பிஞ்சு; பதர்நெல்; எள்ளு கொள்ளு முதலியவற்றின் மாறு.

**கருப்பு** - பஞ்சம்; வறுமையான காலம்.

**கரும்பு** - ஒரு வகைப்பயிர்; புனர்பூசம்.

**கருவம்** - செருக்கு; அகங்காரம்; கரு.

**கருவல்** - குட்டையாள்.

**கருள்** - இருள்; கறுப்பு; நல்லாடை.

**கரை** - கடற்கரை; நீர்க்கரை; எல்லை; செய்வரம்பு; சீலையின் விளிம்பு; பக்கம்; இடம்; சொல்; ஊர்ப்பெரும்பங்கு.

**கரையான்** - கடற்கரைப் பக்கத்து வாழும் வலைஞன்.

**கலவரை** - மனக்கலக்கம்; குழப்பம்; சந்தடி.

**கறுக்கட்டுதல்** - தீராப்பகை கொள்ளுதல்.

**கறுக்கல்** - கருமையாதல்; விடிவதற்கு முன்னுள்ள இருட்டு.

**கறுக்காய்** - இளநீரின் கண்பக்கத்துள்ள பகுதி; பதர்.

**கறுப்பு** - கருமை; வெகுளி; குற்றம்; கறை; கருப்புப்புள்ளி; தழும்பு; இராகு; பேய் பிசாசுகள்; அபின்.

**கறும்பு** - துன்புறுத்து.

**கறுவம்** - வெகுளி.

**கறுவல்** - கரியன்; கருநிறம்; சினக்குறிப்பு.

**கறுள்(ழ்)** - கடிவாளம்.

**கறை** - மாசு; குற்றம்; கறுப்பு நிறம்; நிறம்; இருள்; இரத்தம்; மாத விடாய்; உரல்; கருங்காலி; குடிவரி; நஞ்சு.

**கறையான்** - செல்லு; சிதல்.

**கலவறை** - அணிகலன்கள் வைக்கும் அறை.

**கவர்** - பிரியுங்கிளை; பலவாகப் பிரிகை; நீண்ட திருமண்கட்டி; சூலத்தின் கவர்; வஞ்சகம்; வாழைமரம்; உத்திரம்; புகுத்தும் சுவர்ச்சந்து; அணையில் நீர் செல்லுவதற்கு விடும் வழி.

**கவர்ச்சி** - கவருதல்; இழுக்கை; வெள்ளைக் காக்கணம்.

**கார்ப்பாசம்** - பருத்திச்செடி.

**காரல்** - ஒரு மீன்; காறல்; தொண்டையில் உண்டாகும் கறகறப்பு.

**காரு** - வண்ணான்; கம்மாளன்; கம்மத்தொழில்.

**காரை** - காட்டுச்செடிவகை; மருக்காரை; காறல்மீன்; ஆடை; சுண்ணச்சாந்து; பல்லில் இறுகப்பற்றிய ஊத்தை.

**கிராக்கி** - அருமை; விலையேற்றம்.

**கிராம்** - கடிவாளம்.

**கிராய்** - புற்காடு; கருஞ்சேற்று நிலம்.

**கிரி** - பன்றி; மலை; பிணையாளி.

**கிரிசு** - குறுவாள்.

**கிருசன்** - ஒரு மகரிசி.

**கிருத்துவம்** - அசாத்தியம்; குரூரம்; செய்தல்; செருக்கு.

**கிருது** - செருக்கு; ஒய்யாரம்.

**கவறு** - சூதாடுங்கருவி; தாயக்கட்டை; சூது; பனம்; பட்டை.

**கவற்சி** - கவலை; மனவருத்தம்; விருப்பம்.

**காற்பாசம்** - பருத்தி.

**காறல்** - தொண்டைக் கறகறப்பு; காறும் பொருள்; ஒரு மருந்துச்செடி.

**காறு** - காலவளவு; சலாகை; கொழு.

**காறை** - மாதரும் குழந்தைகளும் அணியும் கழுத்தணி; வண்டிக்குடத்தைச் சுற்றியிடும் இரும்பு வளையம்; பூஞ்சணம்; கைக்கோல் முதலியவற்றின் தாள்; சுண்ணாம்பு.

**கிறாக்கி** - காண்க: **கிராக்கி**

**கிறாம்** - குறும்பன்.

**கிறாய்** - பச்சை நிலக் களிமண்.

**கிறி** - குழந்தைகளின முன்கையில் அணியும் சிறுபவள வடம்; பொய்; தந்திரம்; மாயம்.

**கிறிசு** - காண்க: **கிரிசு**

**கிறுசன்** - குங்குமப்பூ; மஞ்சள்.

**கிறுத்துவம்** - அகில்; மருத்துவம்

**கிறுது** - குறும்பு; செருக்கு.

**கிளருதல்** - கிளர்தல்; உயர்தல்; எழுதல்; கிண்டல்; நிறைதல்; பிரகாசித்தல்; வளர்தல்.

**கிளறுதல்** - கலத்தல்; கிண்டுதல்; கிளப்புதல்; வெளியாக்கல்.

**கீர்** - சொல்; பாட்டு; பாயசவகை.

**கீறு** - வரி; பிளப்பு; துண்டம்; எழுத்து; தென்னமட்டை அல்லது பனங்கிழங்கின் பாதி.

**குடவரை** - அத்தகிரி; மேற்குமலை.

**குடவறை** - நிலவறை; சிற்றறை.

**குதரம்** - மலை.

**குதறம்** - உதறுதல்; கிண்டுதல்.

**குதர்தல்** - கோதிபெடுத்தல்; அடியோடு பெயர்த்தல்; குதர்க்கவாதம் பண்ணுதல்.

**குதறுதல்** - சிதறுதல்; கிண்டுதல்; நெறிதவறுதல்; புண்மிகுதல்; குலைதல்.

**குதிரைமரம்** - கால்வாய் அடைக்குங்கதவு; உடற்பயிற்சிக்குரிய தாண்டுமரம்; குதிரைத்தறி; நெசவிற்பாவுதாங்குதற்குரிய மரச்சட்டம்.

**குதிரைமறம்** - போர்க்குதிரையின் திறப்பாட்டைக் கூறும் புறத்துறை.

**குரங்கு** - வளைவு; வானரம்; முசுமுசுக்கைக் கொடி; கொக்கி; விலங்கு.

**குறங்கு** - தொடை; கிளைவாய்க்கால்; கொக்கி.

**குரத்தி** - குருபத்தினி; ஆசாரிய பதவி வகிப்பவள்; தலைவி; சைனப்பெண்.

**குறத்தி** - குறிஞ்சி நிலப் பெண்; குறச்சாதிப்பெண்; குறிகூறுபவள்; நிலப்பனை.

**குரம்** - ஒலி; தருப்பை; பாகல்; குதிரை முதலியவற்றின் குளம்பு; பசு.

**குறம்** - குறச்சாதி; குறத்தி சொல்லுங்குறி; குறவர் கூற்றாக வரும் கலம்பக உறுப்புள் ஒன்று; குறத்திப்பாட்டு.

**குரவன்** - அரசன்; ஆசிரியன் அல்லது குரு, தாய், தந்தை, தமையன் என்னும் ஐங்குரவருள் ஒருவர், மந்திரி; பிரமன்.

**குறவன்** - குறிஞ்சி நில மகன்; பாலை நிலத்தவன்; ஒரு சாதியான்; பாசாங்கு பண்ணுகிறவன்; பாதரசம்.

**குரவை** - மகளிர் கைகோர்த்தாடுங்கூத்து; மகிழ்ச்சி ஒலி; கடல்.

**குறவை** - ஒரு மீன்வகை.

**குருக்கு** - பிரமத்தண்டுச்செடி; பயிரில் விழும் நோய்வகை.

**குறுக்கு** - நெடுமைக்கு மாறான அகலம்; குறுக்களவு; குறுமை; மாறு; சுருக்கம்; இடுப்பு.

**குருகு** - இடைச்சங்க நூல்களுள் ஒன்று; இளமை; உலைமூக்கு; குருக்கத்தி; கொய்யடி; நாரை; கைவளை; கோழி; தேசம் ஐம்பத்தாறினொன்று; நீர்ப்பறவை; பறவைப் பொது; மூலநாள்; யானையின் மூளை; வட்டிக்குட் குருத்து; வெண்மை; அன்றில்.

**குறுகு** - சிறிதாகு என்னும் ஏவல்.

**குருகுருத்தல்** - நமைத்தல்; நெஞ்சை உறுத்துதல்.

**குறுகுறுத்தல்** - வெறுப்புத் தோன்ற முணுமுணுத்தல்; மனம் உறுத்திக் கொண்டிருத்தல்; தினவுறுதல்.

**குருணி** - ஒரு மரக்கால் அளவுள்ளது.

**குறுணி** - எட்டுப்படி கொண்ட தானிய அளவு.

**குருத்தல்** - தோன்றுதல்; வேர்க்குரு உண்டாதல்; சினங்கொள்ளுதல்.

**குறுத்தல்** - குறுகுதல்.

**குரும்பி** - புற்றாஞ்சோறு.

**குறும்பி** - காதில் உள்ள அழுக்கு; மலம் மூத்திரம் முதலியவை.

**குருமை** - வண்ணம்; பெருமை.

**குறுமை** - குறுகிய தன்மை; குள்ளம்; குறை; அண்மை.

**குருவால்** - இத்தி மரம்.

**குறுவால்** - காண்க: **குருவால்**

**குரை** - ஒலி; பெருமை; பரப்பு; அசை நிலை; இசைநிறை; குதிரை.

**குரைத்தல்** - ஆரவாரித்தல்; குலைத்தல்.

**குரைப்பு** - ஓசை.

**குளிர்தல்** - குளிர்ச்சியடைதல்; சில்லிடுதல்; கண்ணுக்கு இனிமையாதல்; ஆறுதல் அடைதல்; அருளால் முகம் கனிதல்; பனிக்காற்று உறைத்தல்; அம்மை முதலியவற்றால் இறத்தல்; விதைத்தல்.

**கூர்** - இலைக்காம்பு; காரம்; கூரென்னேவல்; கூர்மை; நுனி; மிகுதி.

**கூர்ச்சரம்** - தேயம் ஐம்பத்தாறினொன்று; இது மேலை சமுத்திரத்தில் உள்ளது.

**கூரல்** - கூந்தல்; இறகு; ஒருபெருமீன் வகை.

**கூரை** - வீட்டிறப்பு; வீட்டுக்கூரை; சிறுகுடில்.

**கெர்வம்** - கர்வம்; அகங்காரம்.

**கைநிரை** - நிரைச்சல்.

**குறை** - குற்றம்; குறைபாடு; வறுமை; எஞ்சியது; மனக்குறை; தவறு; நேர்த்திக்கடன்; இன்றியமையாப் பொருள்; செயல்; வேண்டுகோள்; வேண்டுவது; துண்டம்; ஆற்றிடைக்குறை; சொல்லின் எழுத்துக்குறை; ஆறாம் வேற்றுமை; உண்ணுந்தசை; அரசிறை.

**குறைத்தல்** - சுருக்குதல்; தறித்தல்; வெட்டுதல்; அறுத்தல்; அராவுதல்; முகத்தல்.

**குறைப்பு** - குறைத்தல்; குறைச்சல்.

**குளிறுதல்** - ஒலித்தல்; சத்தமிடுதல்.

**கூறு** - அறிவிக்கை; எள்ளு; காரணம்; கூறென்னேவல்; தன்மை; பங்கு; பரிவு; பாதி; வகை.

**கூற்சரம்** - கூர்ச்சரம்; தன்மை.

**கூறல்** - கூறுதல்; நாகபாஷாணம்.

**கூறை** - ஆடை; கூறைப்புடவை; கலியாண ஆடை.

**கெறுவம்** - ஆங்காரம்.

**கைநிறை** - கையால் தூக்கி மிதிக்கும் எடை.

**கைபரிதல்** - ஒழுங்கு குலைதல்.

**கைபறிதல்** - கைதவறுதல்.

**கொக்கரை** - வளைவு; வைக்கோல் எடுக்கும் கருவி; வலம்புரிச்சங்கு; வாத்தியவகை; வில்; வலை; பரம்பு; தாளம்; பனை; தெங்கு முதலியவற்றின் இளமடல்.

**கொக்கறை** - பனை, தெங்கு முதலியவற்றின் வற்றியுலர்ந்த இளமடல்.

**கொரடா** - குதிரைச்சவுக்கு; இடுக்கி

**கொறடா** - குதிரைச்சவுக்கு; ஏவுநர்.

**கொரி** - கன்றின் வாய்ப்பூட்டு.

**கொறி** - ஆடு; மேடராசி; பல்; அலகு முதலியவற்றால் தானியத்தைப் பிரித்துத் தின்னுதல்; சிறிதுசிறிதாகப் பொறுக்கி உண்ணுதல்; விட்டுவிட்டு ஒலித்தல்; அலப்புதல்.

**கோரணி** - கேலிக்கூத்து; காக்காய் வலிப்பு; ஒருநோய்; முணுமுணுப்பு.

**கோறணி** - கேலிக்கூத்து; முகங்காட்டுகை; திமிர்வாதம்; முணுமுணுப்பு.

**கோரம்பு** - தீம்பு.

**கோறம்பு** - ஒரு நெற்றியணிவகை.

**கோரிக்கை** - வேண்டுகோள்; விருப்பம்.

**கோறிக்கை** - நினைவு.

**கோருதல்** - நினைத்தல்; விரும்புதல்; வேண்டுதல்.

**கோறுதல்** - கொல்லுதல்.

**கோரை** - ஒரு கிழங்கு; ஒரு புல்.

**கோறை** - குவளை; துளை; பழுது; பொந்து.

**சர்க்கம்** - சருக்கம்; நூற்பிரிவு; படைப்பு.

**சற்கம்** - சகலம்; சற்கதம்; முறிசல்.

**சர்க்கரை** - கருப்பஞ்சாற்றிலிருந்து உருவாக்கப்படும் ஓர் இனிப்புப் பொருள் வகை.

**சற்கரை** - கருப்பஞ்சாற்றிலிருந்து உருவாக்கப்படும் ஓர் இனிப்புப் பொருள் வகை.

| | |
|---|---|
| **சர்ச்சரை** - சுரசுரப்பு; சச்சரவு. | **சற்சரை** - சுரசுரப்பு. |
| **சர்ப்பம்** - பாம்பு; பகற்பொழுது பதினைந்தனுள் இரண்டாவது. | **சற்பம்** - பாம்பு. |
| **சர்ப்பனை** - வஞ்சனை. | **சற்பனை** - சதி. |
| **சரசரெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு; விரைந்து எளிதிற் செல்கைக் குறிப்பு; சுரசுரப்புக் குறிப்பு. | **சுறசுறெனல்** - ஒலிக்குறிப்பு; சீக்கிரக் குறிப்பு. |
| **சரடு** - நிறைபடவிருப்பது; நூல்; பொன் முதலியவற்றால் செய்யும் கொடி. | **சறடு** - முறுக்குநூல்; பொன், வெள்ளிக் கம்பியினாற் செய்த கழுத்தணிவகை. |
| **சருவம்** - எல்லாம்; பித்தளை முதலிய உலோகங்களால் செய்யும் பாத்திரம்; வெண்கலம். | **சறுவம்** - சமஸ்தம். |
| **சரை** - நரைமயிர்; கிழத்தன்மை; வைக்கோல் முதலியவற்றால் செய்யும் மூடி வகை. | **சறை** - தாழ்வு; சறைமணி. |
| **சவர்** - விளையாநிலம்; உவர். | **சவறு** - குப்பை; பயனற்றவன். |
| **சாரல்** - கிட்டுகை; பக்கம்; பக்கமலை; மலை; தூவானம்; மருதயாழிசை; தூற்றல். | **சாறல்** - குளிர்காற்று; சாருதல். |
| **சாரு** - அழகு; கிளி. | **சாறு** - இலை, பழம் முதலியவற்றின் சாறு; மணப்பண்டங்கள் ஊறின நீர்; இரசம்; திருவிழா; பூசை; திருமணம்; குலை. |
| **சாருதல்** - அடுத்துக் கொள்ளுதல்; சாய்தல். | **சாறுதல்** - நழுவுதல்; வழுக்குதல்; சரிதல்; பெருக்குதல்; கொத்துதல். |
| **சிதர்தல்** - சிதறுதல்; பரக்கச் சொல்லுதல்; படுத்தல்; சிதறிவீழ்தல்; நைதல்; காலால் கிளைத்தல். | **சிதறுதல்** - இறைத்தல்; சிந்துதல்; மிகுதியாகக் கொடுத்தல்; கலைதல்; அழிதல்; பயனற்றதாதல். |
| **சிரங்கை** - கொண்ட அளவு. | **சிறங்கை** - கைந்நிறையளவு. |

**சிரத்தல்** - தேய்த்தல்; அழித்தல்; எழுத்தில்லாவோசை.

**சிராய்** - மரச்சக்கை; பனஞ்செறும்பு; செதுக்கிய மரத்துண்டு; பருவின் முளை; காற்சட்டை.

**சிராய்த்தல்** - உராய்ந்து காயமேற்படுதல்.

**சிரிட்டம்** - விளாம்பட்டை.

**சிரீ** - திருமகள்.

**சிரீதரன்** - திருமால்.

**சிரு** - தோட்பொருத்து; போதல்.

**சிருக்கு** - வேள்வியில் பயன்படுத்தும் நெய்த்துடுப்பு; இலைக்கரண்டி.

**சிரை** - நரம்பு; குரங்கு; கெட்ட இரத்தம் செல்லும் குழாய்.

**சிரைத்தல்** - மயிர்கழித்தல்; செதுக்குதல்.

**சிர்க்காரம்** - எதிரொலி.

**சிறத்தல்** - மேன்மையாதல்; மேற்படுதல்; கனத்தல்; இன்றியமையாதிருத்தல்; மங்கலமாதல்; அன்பாதல்; மகிழ்தல்.

**சிறாய்** - மரத்துண்டு.

**சிறாய்த்தல்** - உராய்ந்து ஊறுபடுதல்.

**சிறிட்டம்** - காண்க: **சிரிட்டம்**

**சிறீ** - ஓரிராகம்; திரு; தெய்வத்தன்மை; பெண்.

**சிறீதரன்** - சீதரன்.

**சிறு** - அற்பமான.

**சிறுக்கு** - சிறிதாகச் செய் என்னும் ஏவல்.

**சிறை** - காவல்; காவலில் அடைக்கை; சிறைச்சாலை; அடிமைத்தனம்; அடிமையாள்; பெண்டாகச் சிறைபிடிக்கப்பட்ட இளம்பெண்; அழகுள்ளவள்; அணை; நீர்நிலை; இடம்; பக்கம்; கரை; மதில்; வரம்பு; இறவு; யாழ் நரம்புக் குற்றவகையுள் ஒன்று.

**சிறைத்தல்** - சிறையில் வைத்தல்; நீரைத் தடுத்தல்; நீரைக் கட்டுதல்.

**சிற்காரம்** - மூச்சை உள்வாங்குதலால் எழும் ஒலி; சீழ்க்கையடித்தல்.

**சுரண்டி** - சுரண்டுங்கருவி; தட்டிப்பறிப்பவன்; சிறிதுசிறிதாகப் பொருள் சேர்ப்பவன்; சுரண்டின பொருள்.

**சுறண்டி** - காண்க: **சுரண்டி**

**சுரண்டுதல்** - நகம் முதலியவற்றால் பிறாண்டுதல்; நகம் அல்லது விரல் நுனியால் உடம்பைத் தீண்டிக் குறிப்பிடுதல்; சண்டைக்கு இழுத்தல்; கவர்தல்; செலவால் கரைத்தல்; தூண்டிவிடுதல்; விபசாரஞ்செய்தல்; இரத்தல்.

**சுறண்டுதல்** - காண்க: **சுரண்டுதல்**

**சுரா** - கள்.

**சுறா** - மகரமீன்; மகரராசி; உடம்பில் பூக்கும் உப்பு; தேசு அழுக்கு.

**சுராளம்** - பெருமிதநடை.

**சுறாளம்** - வேகம்; கோபம்.

**சுரீரெனல்** - காய்ந்த இரும்பில் நீர் சுண்டும்போது உண்டாகும் ஒலிக்குறிப்பு; தேள்கொட்டுதல் முதலிவற்றால் உண்டாகும் வலிக்குறிப்பு.

**சுறீரெனல்** - கடுத்தற்குறிப்பு; அச்சக்குறிப்பு; ஓர் ஒலிக்குறிப்பு.

**சுருக்கு** - சுருங்குகை; ஆடை முதலியவற்றின் மடிப்பு; குழைச்சு; கண்ணி; கட்டு; குறைவு; சுருக்கம்; கடும் பற்றுள்ளம்; விரைவு; அக்கறை; சுரணை; ஒட்டணி; அடி; வேள்வியில் உதவும் நெய்த்துடுப்பு; பூமாலை வகை; வில்வம்.

**சுறுக்கு** - விரைவு; வேகம்; ஆத்திரம்; சுறுசுறுப்பு; கூர்மை; கடுமை; காரம்; விலையேற்றம்.

**சுருசுருத்தல்** - ஒலித்தல்; ஊக்கமாதல்.

**சுறுசுறுத்தல்** - தீவிரப்படுதல்; கடுமையாதல்.

**சுருசுருப்பு** - சுருசுருத்தல்.

**சுறுசுறுப்பு** - ஊக்கம்; தீவிரம்.

**சுருசுரெனல்** - ஒலித்தற்குறிப்பு; வேகத்தோடு தீப்பற்றுதற் குறிப்பு; உடம்பு சுடுதற்குறிப்பு.

**சுறுசுறெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு; விரைவுக் குறிப்பு; உட்செல்லுதற்குறிப்பு; சுடுத்தற்குறிப்பு.

**சுருதி** - காது; கதி; ஒலி; எழுதாமறை; இசைச்சுரத்திற்கு ஆதரமான ஒலி; இருபத்திரண்டு வகைப்பட்ட இசைச்சுரம்; புகழ்; அசரீரி வாக்கு; பொய்ச்செய்தி; வேதசுரம்.

**சுறுதி** - சுறுசுறுப்பு.

**சுரை** - சுரைக்கொடி; பசு முதலியவற்றின் மடி; கறவைப்பசு; கள்; தேன்; குழிந்த இடம்; உட்டுருளை; மூங்கிற்குழாய்; திரிக்குழாய்; திருகாணியைச் செலுத்துஞ் சிறுகுழாய்; மூட்டுவாய்; அம்புத்தலை; பூண்; கூரான தோண்டு பாரைவகை.

**சுறை** - இலையற்ற சொடிவகை.

**சுரோணிதம்** - குருதி; மகளிர் தீட்டு; சுக்கிலத்தோடு சேர்ந்து குழந்தை உண்டாகக் காரணமாகும் மகளிர் இரத்தம்; சிவப்பு.

**சுறோணிதம்** - காண்க: **சுரோணிதம்.**

**சூர்தல்** - பிரித்தல்; மயிர் முதலியன வகிர்தல்; பறித்தல்.

**சூறுதல்** - சூழ்தல்.

**சூரல்** - சுழித்தடிக்கை; பிரம்பு; சூரைப்பு; இலந்தைவகை.

**சூறல்** - தோண்டுதல்.

**சூரன்** - சூரபதுமன்; வீரன்; நாய்; சூரியன்; நெருப்பு; கரடி; சேவல்; சிங்கம்.

**சூறன்** - மூஞ்சூறு.

**சூரை** - ஒரு செடி வகை; மணிபிடியாப் பயிர்; பயிரில் விழும் நோய்வகை; ஒரு மீன்வகை; தாதுவளைக்கொடி; கருஞ்சூரை.

**சூறை** - கொள்ளை; சுழல்காற்று; பனிச்சை என்னும் மயிர் முடிவகை; சல்லடம்; கடல்மீன் வகை; சோளக் கொல்லையிற் கூட்டம் கூட்டமாகக் காணப்படும் குருவி வகை; கழுத்தின் பின் குழி; பயிரில் விழும் நோய் வகை.

**செந்திரம்** - சிவப்பு; நெய்தல் நிலம்.

**செந்திறம்** - குறிஞ்சியாழ்த்திறம்; சிவப்பு.

**செரி** - சீரணம்.

**செறி** - நெருக்கம்.

**செரித்தல்** - சீரணமாதல்; நிலையாகப் பெறுதல்.

**செறித்தல்** - சேர்த்தல்; இறுக்குதல்; அடைதல்; அடக்குதல்; வைத்தல்; திணித்தல்; பதித்தல்; அணியாக இடுதல்; அடைவித்தல்; ஏற்காத பொருளைச் செய்யுளிற் புகவிட்டு உரை கூறுதல்; கொல்லுதல்; அழித்தல்; மூழ்குதல்; திரட்டுதல்; நெரித்தல்; மூடுதல்.

**செரு** - போர்; ஊடல்; பகை.

**செறு** - வயல்; குளம்; பாத்தி; கோபம்.

**செருத்தல்** - மாட்டுமடி.

**செறுத்தல்** - அடக்குதல்; தடுத்தல்; நெருக்குதல்; உள்ளடங்கச் செய்தல்; நீர் முதலியன அடைத்தல்; தூர்த்தல்; சினத்தல்; வெறுத்தல்; வருந்துதல்; வெறுத்தல்; வெல்லுதல்; கொல்லுதல்.

**செருநர்** - படைவீரர்; பகைவர்.

**செறுநர்** - பகைவர்.

**செருப்பு** - மிதியடி; பூழிநாட்டில் உள்ளவொரு மலை.

**செறுப்பு** - கட்டுப்பாடு; நெருக்கம்; கொலை.

**செருமு** - கனைப்பு.

**செறுமு** - கனையென்னேவல்.

**செருமுதல்** - நிரம்புதல்; நெருக்கமாய் இருத்தல்; பதிதல்; விக்குதல்; அடைத்தல்; கனைத்தல்.

**செறுமுதல்** - கனைத்தல்; தேம்பியழுதல்.

**சேரடி** - நெற்கூடு நிற்குமிடம்.

**சேறடி(டை)** - வண்டிச் சக்கரத்திற்படும் சேற்றைத்தடுக்க அமைக்கும் கருவி.

**சேரல்** - சேர நாட்டரசன்.

**சேறல்** - செல்லுகை.

**சேரி** - ஊர்; முல்லை நிலத்தூர்; தெரு; பறைச்சேரி.

**சேறி** - ஒரு மீன்.

**சொக்கரை** - குறை; சிறிய அடைப்பு; மதில் முதலியவற்றின் துவாரம்.

**சொக்கறை** - சொக்கரை.

**சொர்க்கம்** - சுவர்க்கம்.

**சொற்கம்** - சுவர்க்கம்; மாணிக்கம்; முலை.

**சொரி** - தினவு.

**சொறி** - தினவு; கடுந்தினவை உண்டாக்கக்கூடிய சொறிவகை; காஞ்சொறிச் செடி; மீன்வகை.

**சொரிதல்** - உதிர்தல்; மழைபெய்தல்; மிகுதல்; பொழிதல்; கொட்டுதல்; மிகக் கொடுத்தல்; சுழலுதல்; சொறிதல்.

**சொறிதல்** - தினவு நீங்க நகத்தால் தேய்த்தல்; கெஞ்சிக்கேட்டல்; தினவுண்டாதல்.

**சொரிவு** - ஈவு; உதிர்வு; பொழிவு.

**சொறிவு** - தினவு.

**ஞிமிர்** - ஒலி; ஞிமிரென்னேவல்.

**ஞிமிறு** - வண்டு.

**ஞெரித்தல்** - நெரித்தல்.

**ஞெறித்தல்** - புறவிதழ் ஒடித்தல்; நெரித்தல்.

**தர்க்கம்** - நியாயவாதம்; மேம்பாடு; வாக்கு வாதம்; நியாயவாதநூல்.

**தற்கம்** - காண்க: **தர்க்கம்.**

**தர்ச்சனி** - சுட்டுவிரல்.

**தற்சனி** - காண்க: **தர்ச்சனி**

**தர்ப்பகன்** - மன்மதன்.

**தற்பகன்** - காண்க: **தர்ப்பகன்**

**தர்ப்பணம்** - தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிதிரருக்கும் இறுக்கும் நீர்க்கடன்; கண்ணாடி.

**தற்பணம்** - தர்ப்பணம்; முதுகெலும்பு; கண்ணாடி; யானை முதுகு

**தர்ப்பம்** - கர்வம்; கஸ்தூரி.

**தரி** - இருப்பு; நன்செய்நிலம்.

**தரித்தல்** - நிலைபெற்று நிற்றல்; இருப்புக் கொள்ளுதல்; ஊன்றி நிற்றல்; அணிதல்; தாங்குதல்; பொறுத்தல்; அடக்கிக் கொள்ளுதல்; மறவாது உள்ளத்தில் வைத்தல்; தாம்பூலம் தின்னுதல்.

**தரிப்பு** - தங்குகை; நினைவு; பொருத்திருக்கை; உறுதி; இருப்பிடம்; கையிருப்பு; நிறுத்துமிடம்; குறைந்த விலையுள்ள ஒரு வெள்ளைக்கல் வகை.

**தருசு** - இழையொத்திருக்கை.

**தருதல்** - கொடை.

**தருப்பு** - குறைந்த விலையுள்ள ஒரு வெள்ளைக்கல் வகை.

**தரை** - பூமி; நிலம்; ஆணித்தலை; நரம்பு; சூற்பை.

**தரைதல்** - சம்மட்டி சுத்தி முதலியவற்றால் அடித்தல்.

**தவர்** - வில்; துளை; சிறு கப்பலில்; சங்கிலி சுற்றும் கருவி.

**தற்பம்** - அகந்தை; பாவம்; வஞ்சனை; துயிலிடம்; மெத்தை; மனைவி; மேனிலை; கத்தூரி.

**தறி** - வெட்டுகை; நடுதறி; தூண்; முளைக்கோல்; நெசவுப்பொறி; பறைக்குறுந்தடி; கோடரி; பொத்தான் கொக்கி.

**தறித்தல்** - வெட்டுதல்; கட்டவிழ்த்தல்; கெடுத்தல்; பிரித்தல்; தானியம் புடைத்தல்.

**தறிப்பு** - தறித்தல்.

**தறுசு** - இழைக்குளிர்த்தி.

**தறுதல்** - இறுக உடுத்துதல்; கட்டுதல்.

**தறுப்பு** - காண்க: **தருப்பு.**

**தறை** - ஆணியின் சடை; தரை; தறைதல்; தறையென்னேவல்.

**தறைதல்** - ஆணி முதலியவற்றை இறுக்கல்; தைத்தல்; குற்றப்படுத்துதல்; தட்டையாதல்.

**தவறு** - பிழை; செயல் கைகூடாமை; நெறிதவறுகை; அழுக்கு; பஞ்சம்; குறைவு.

**தவருதல்** - சிந்துதல்; தப்புதல்; துளைத்தல்.

**தவறுதல்** - வழுவுதல்; பிசகுதல்; சாதல்; தப்புதல்; குற்றஞ்செய்தல்; தாண்டுதல்; வாய்க்காமற்போதல்; காணாமற்போதல்; தோல்வியுறல்.

**தனிப்புரம்** - அரண்மனை.

**தனிப்புறம்** - மறைவிடம்.

**தாரு** - மரம்; மரக்கிளை; மரத்துண்டு; தேவதாரு.

**தாறு** - வாழை முதலியவற்றின் குலை; பின்புறக் கச்சக்கட்டு; இரேகை; வரையில்; உண்டை நூல் சுற்றும் கருவி; முட்கோல்; மாடோட்டும் கோலிலுள்ள முள்; அங்குசம்; விற்குதை; கீல் எண்ணெய்.

**தாழ்வரை** - மலையடிவாரம்.

**தாழ்வறை** - நிலவறை.

**திடர்** - மேட்டுநிலம்; மலை; குப்பை மேடு; புடைப்பு; தீவு; திடமான பிரமானத்தாலே ஏற்பட்டுத் தாபிதமானவர்.

**திடறு** - மேட்டு நிலம்.

**திணர்தல்** - சோர்தல்.

**திணறுதல்** - மூச்சுத் தடுமாறுதல்.

**திமிர்தல்** - பூசுதல்; தடவுதல்; அப்புதல்; வாரியிறைத்தல்; ஒலித்தல்; வளர்தல்; கம்பித்தல்.

**திமிறுதல்** - மீறுதல்; வலிந்து தன்னைப் பிறரிடமிருந்து விடுவித்தல்; நீண்டு வளர்தல்; மாவு முதலியன சிந்துதல்.

**திரக்குதல்** - சுருங்குதல்; தேடுதல்.

**திறக்குதல்** - அதிகப்படுத்துதல்.

**திரப்படுதல்** - உறுதிப்படுதல்.

**திறப்படுதல்** - கூறுபடுதல்; சீர்ப்படுதல்.

**திரம்** - உறுதி; வலி; உரம்; நிலவரம்; வீடுபேறு; மலை; பூமி; தகரைச்செடி; நிலைநிற்க வேண்டும் செயல்களைத் தொடங்குவதற்கு ஏற்றனவாகக் கருதப்படும் இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் என்னும் இராசிகள்.

**திறம்** - கூறுபாடு; வகை; சார்பு; மிகுதிக் கூட்டம்; வலிமை; திறமை; மேன்மை; கற்பு; நேர்மை; மருத்துவத் தொழில்; வழி; வரலாறு; குலம்; ஒழுக்கம்; சுற்றம்; ஆடு 80, பசு 80, எருமை 80 கூடின கூட்டம்; கோட்பாடு; விரகு; உபாயம்; ஐந்து; சுரமுள்ள இசை; பாதி; உடம்பு; வேடம்; இயல்பு; செய்தி; காரணம்; பேறு.

**திரல்** - காட்டாமணக்கு.

**திராங்கு** - தாழ்ப்பாள்.

**திராணி** - ஆற்றல்.

**திருதியை** - மூன்று.

**திருமரம்** - அரசு.

**திரை** - அலை; ஆறு-பூமி; கடல்; ஏழு என்னும் குழூஉக்குறி; திரைச்சீலை; தோற்சுருக்கம்; வெற்றிலை; வெற்றிலைச் சுருள்; வைக்கோற்புரி; பஞ்சுச்சுருள்.

**துர்க்கதி** - கெட்ட நடத்தை; வறுமை; நரகம்.

**துர்க்கந்தம்** - கெட்ட நாற்றம்.

**துர்க்கம்** - துருக்கம்.

**துர்க்கை** - சிவபிரான் தேவியும் பாலை நிலத் தேவியுமாகிய பெண் தெய்வம்; பூரநாள்.

**துர்ச்சனம்** - செருக்கு; மோகலீலை; வன்மம்.

**துர்ப்பரிகம்** - சிறுகாஞ்சொறி.

**துர்ப்பலம்** - பலவீனம்.

**துர்ப்பிட்சம்** - பஞ்சம்.

**துர்ப்பீசம்** - நல்விதியற்ற பிள்ளை.

**துரட்டு** - முள்மரவகை; சிறுமரவகை; சிக்கல்; அபாயம்.

**திறல்** - வலிமை; ஊக்கம்; பகை; போர்; ஒளி; வெற்றி.

**திறாங்கு** - கதவடை தாழ்.

**திறாணி** - காண்க: **திராணி.**

**திறதியை** - காண்க: **திருதியை.**

**திருமறம்** - கல்லாடர் கண்ணப்ப நாயனார் மீது பாடின நூல்; நக்கீரர் செய்தது.

**திறை** - அரசிறை; கப்பம்.

**துற்கதி** - ஒடுங்கிய பாதை; வறுமை; கெட்டவிதி; துன்பக்காலம்; கெட்ட நடத்தை; தீயவாழ்க்கை; நரகம்.

**துற்கதம்** - காண்க: **துர்க்கந்தம்**

**துற்கம்** - காண்க: **துர்க்கம்**

**துற்கை** - கொற்றவை; பார்வதி.

**துற்சனம்** - துட்சனம்; துராசாரம்; பொல்லாங்கு.

**துற்பரிகம்** - காண்க: **துர்ப்பரிகம்**

**துற்பலம்** - காண்க: **துர்ப்பலம்**

**துற்பிட்சம்** - காண்க: **துர்பிட்சம்**

**துற்பீசம்** - காண்க: **துர்ப்பீசம்**

**துறட்டு** - முள்மரவகை; சிறுமரவகை; சிக்கல்; கேடு.

**துரத்தல்** - ஓட்டிச் செலுத்துதல்; எய்தல்; போக்குதல்; அடித்தல்; தூண்டுதல்; முடுக்கி உட்செலுத்துதல்; முயலுதல்; வீசுதல்; எரிதல்; போதல்.

**துர்ப்பணம்** - காண்க: **துறப்பணம்.**

**துரப்பு** - முடுக்குதல்; அகற்றுதல்; மலையிற் குடையப்பட்ட பாதை.

**துரம்** - பொறுப்பு; சுமை; ஓர் இசைக்கருவி; கோயிற்குரிய வரி வசூலிக்கும் அலுவலகம்.

**துரவு** - பாசனத்துக்கு உதவும் பெருங்கிணறு; மணற்கேணி; தூது.

**துரு** - இருப்புக்கறை; களிம்பு; குற்றம்; செம்மறியாடு; வேதம் முதலியன ஓதும் சந்தவகை; மரவகை.

**துருக்கல்** - கீக்சுக்கிட்டம்; செம்புறைக்கல்; இரும்புக்கிட்டம்.

**துருதுருவெனல்** - குழந்தை நிலையில் அமைதியின்மைக் குறிப்பு.

**துருவல்** - தேடல்; துளைத்தல்; துருவிய பொருள்; தேங்காய் முதலியன துருவும் கருவி; பிராண்டுதல்.

**துருவு** - துருவல்; தேடுகை; தொளை.

**துறத்தல்** - கைவிடுதல்; பற்றற்றுத் துறவு பூணுதல்; நீங்குதல்.

**துறப்பணம்** - துளையிடும் தச்சுக் கருவி.

**துறப்பு** - பிரிவு; துறவு; பூட்டு; திறவுகோல்; விடுதல்; துறவிகளுக்கு விதித்துள்ள அறம்.

**துறம்** - விடுதல்; இரகசியம்; வாய்ப்பான நிலை; வெளியிடம்; சன்னியாசம்; துறவியனுக்கு விதித்துள்ள அறம்.

**துறவு - துறத்தல்; நீத்தல்; விடுகை; சந்நியாசம்; வாய்ப்பான நிலை**

**துறு** - நெருக்கம்; உண்ணுகை; செம்பூரான்கல்.

**துறுக்கல்** - திணித்தல்; துருக்கல்.

**துறுதுறுவெனல்** துருதுருவெனல்.

**துறுவல்** - நெருங்குகை; நுகர்ச்சி; உண்ணல்.

**துறுவு** - உணவு; துறுவென்னேவல்; நெருக்கம்.

**துருவுதல்** - தேடுதல்; ஆராய்தல்; துளைத்தல்; கடைதல்; தேங்காய் முதலியன கடைந்து சீவுதல்; துன்புறுத்தல்.

**துறுவுதல்** - நெருங்குகை; நுகர்ச்சி; உண்ணல்.

**துரை** - தலைவன்; ஐரோப்பியன்; வேகம்; மிகுதிப்பாடு.

**துறை** - இடம்; நீர்த்துறை; நியாயவழி; பகுதி; உபாயம்; சபை கூடுமிடம்; ஆறு; வண்ணார் துறை; கடல்; கடற்றுறை; நூல்; வரலாறு; அகமும் புறமும் பற்றிய பொருட்கூறு; பாவினங்களில் ஒன்று; இலாகா; அலுவலகத்துறை.

**துரோட்டி** - துரட்டுக்கோல்; தோட்டி.

**துறோட்டி** - தோட்டி.

**தூரல்** - நிறைகை; துன்பம்.

**தூறல்** - பழிச்சொல்; சிறுமழை.

**தூரு** - வேர்; அடிப்பக்கம்; பனையின் வேர்ப்பற்றுள்ள அடிப்பகுதி; அடிமரம்; பாத்திரத்தின் அடிப்புறம்; சேறு; கிணற்றில் தேங்கிய வண்டல் முதலிய கசடுகள்; பனைவடலி முதலியன; பழிச்சொல்.

**தூறு** - புதர்; குவியல்; குறுங்காடு; சுடுகாடு; பழிச்சொல்; தீங்கு; ஒரு கீரை வகை; துலாக்கட்டை; செடிவகை; மஞ்சள் நிறம்; எலுமிச்சை.

**தூருதல்** - அடைபடுதல்; நிரம்புதல்; மலங்கழித்தல்.

**தூறுதல்** - மழை தூவுதல்; கிளைத்தல்; செய்தி பரவுதல்; சடைபற்றுதல்; நிந்தித்தல்.

**தெரி** - அறி.

**தெறி** - சிதறுகை; அணி; அங்கி முதலியவற்றின் கடைப்பூட்டு; குறும்புப்பேச்சு.

**தெரித்தல்** - வெளிப்படுதல்; காலங்கழித்தல்; சொல்லுதல்; குறிப்பிட்டு விளக்குதல்; எழுதுதல்; தெரிந்தெடுத்தல்; கொழித்தல்; பங்கிடுதல்; மாறுபடுதல்.

**தெரிப்பு** - அறிவிப்பு; சொல்லுகை; ஆராய்வு; எழுதுகை; கொழிப்பு; சீட்டு; கொழிக்கப்பட்டவை.

**தெரிபடுதல்** - தெரிந்தெடுக்கப்படுதல்; தோன்றுதல்.

**தெரு** - வீதி; வழி.

**தேரம்** - நேரம்.

**தேரல்** - தேன்.

**தேரலர்** - பகைவர்.

**தேரார்** - கல்லாதார்; கீழோர்; பகைவர்.

**தேரை** - தவளைவகை; தூண்டில் உணவு; தேங்காய் நோய்; கல்லின் குற்றம்.

**தொந்தரை** - துன்பம்; தொல்லை.

**தொம்பரை** - ஊர்சுற்றி; நெற்குதிர்.

**தெறித்தல்** - சிதறுதல்; குலைதல்; துள்ளிவிழுதல்; முரிதல்; பிளத்தல்; உடைத்தல்; அறுதல்; வேறுபடுதல்; நீக்குதல்; தவறுதல்; செருக்காய் இருத்தல்; பிதுங்குதல்; குறும்புப் பண்ணுதல்; நரம்புதுடித்து நோவுண்டாதல்; விரலாற்சுண்டுதல்; விரலால் உந்துதல்; முற்றுதல்; தாக்கப்பட்டு வெளிப்படல்.

**தெறிப்பு** - செருக்கு மேலிட்ட நடை; கடைப்பூட்டு; அதிர்கை; சிணுக்கி.

**தெறிபடுதல்** - சிதறுண்ணுதல்; அலைந்துலைதல்; தோற்றோடுதல்; திக்கறுதல்; கலங்குதல்; தவறுதல்.

**தெறு** - அச்சம்; கோபம்; சுடுகை; துன்பம்.

**தேறம்** - மிகுதியாயிருப்பது.

**தேறல்** - தெளிவு; தெளிவுகள்; தேன்; சாறு.

**தேறலர்** - அறியாதார்; பகைவர்.

**தேறார்** - அறியாதார்; பகைவர்.

**தேறை** - ஒருமீன் வகை.

**தொந்தறை** - தொந்தரவு.

**தொம்பறை** - களஞ்சியம்; பெருவயிறன்; மூங்கிலாலான நெற்குதிர்.

**நக்கிரா** - தேட்கொடுக்கிச்செடி.

**நட்டார்** - உறவோர்; சினேகிதர்.

**நரா** - கன்றுகை.

**நருக்கு** - நருக்குதல்; நருக்கென்னேவல்.

**நருக்குதல்** - நொறுக்குதல்; கொல்லுதல்; துண்டாக்குதல்; குட்டுதல்.

**நரும்பு** - பல்லாற் கடியெனுமேவல்.

**நரும்புதல்** - துண்டாக்குதல்; பல்லைக் கடித்தல்.

**நருமுதல்** - பல்லாற் கடித்தல்; பல்லைக் கடித்தல்.

**நருள்** - மக்கட்கூட்டம்.

**நரை** - வெண்மை; வெண்மயிர்; எருது; இடபராசி; சாமரம்; கவரிமா; மூப்பு; பெருமை; வெள்ளைக் குதிரை; பறவை வகை; நாரை.

**நல்லார்** - நற்குணமுடையோர்; பெரியோர்; கற்றார்; மகளிர்.

**நவிரல்** - ஒருமரவகை.

**நள்ளார்** - பகைவர்.

**நார்** - மட்டை முதலியவற்றின் நார்; கயிறு; வில்லின் நாண்; பன்னாடை; கல்நார்; அன்பு.

**நாரி** - வில்லின் நாண்; பன்னாடை; யாழ்நரம்பு; தேன்; பெண்; பார்வதி; சேனை; மணம்; கொடிவகை; இடுப்பு; கள்.

**நிர்க்குண்டி** - வெண்ணொச்சி.

**நிர்க்குணம்** - குணமின்மை.

**நக்கிறா** - காண்க: நக்கிரா

**நட்டாறு** - நடுஆறு.

**நறா** - கள்; தேன்; மணம்.

**நறுக்கு** - துண்டு; ஓலைச்சீட்டு; நாதசுரத்தின் நாக்கு.

**நறுக்குதல்** - வெட்டுதல்; துண்டித்தல்; நொறுக்குதல்.

**நறும்பு** - காண்க: **நரும்பு**

**நறும்புதல்** - காண்க: **நருமுதல்**

**நறுமுதல்** - காண்க: **நருமுதல்**

**நறுள்** - மரவகை.

**நறை** - கள்; தேன்; நறும்புகை; மணம்; மணப்பண்டம்; மணக்கொடிவகை; குற்றம்.

**நல்லாறு** - நல்வழி.

**நவிறல்** - சொல்லல்.

**நள்ளாறு** - ஒருசிவஸ்தலம்.

**நாறு** - பயிர்முளை; பிடுங்கி நடும் பயிர்.

**நாறி** - நன்னாரிக்கொடி; கற்றாழைச்செடி.

**நிற்குண்டி** - காண்க: **நிர்க்குண்டி**

**நிற்குணம்** - குணாதீதம்.

**நிர்க்குணன்** - கடவுள்; சிவபிரான்.

**நிர்ப்பாக்கியம்** - பாக்கியமின்மை.

**நிரத்தல்** - கலத்தல்; நிறைதல்; நிரம்புதல்; சமாதானப்படுதல்; ஒழுங்கு செய்தல்;நெருங்குதல்; போதியதாதல்; சமபங்கிட்டு அளித்தல்.

**நிரா** - பழம் முதலியவற்றின் கன்றின நிலை.

**நிருத்தம்** - நடனம்; பற்றின்மை; வேதங்களில் உள்ள சொற்களை ஆராயும் நூல்; ஆன்மா தன் கன்மம் முடியும் வரையில் உலக அனுபவங்களில் உழன்று மயங்கும் படி உண்மையை மறத்தலைச் செய்யும் சிவபிரானது அருட்செயல்.

**நிரை** - வரிசை; ஒழுங்கு; கொடிப்படை; படைவகுப்பு; கிரமம்; கோபுரம்; கூட்டம்; பசுக்கூட்டம்; பசு; நிரையசை; ஒரு விளையாட்டு வகை.

**நிற்குணன்** - கடவுள்; முக்குணத்தையும் பிரித்தடக்கி யுகந்தோறும் இருப்பவன்.

**நிற்பாக்கியம்** - ஏதுமின்மை.

**நிறத்தல்** - சீர்படல்; நிறங்கொள்ளுதல்; நிறம்பிடித்தல்; நிறம்முற்றுதல்; ஒளிர்தல்; பயனளித்தல்.

**நிறா** - கள்; தேன்; வாசனை.

**நிறுத்தம்** - நிறுத்துகை; செங்குத்தாக நிறுத்தல்.

**நிறை** - பூர்த்தி; எண்வகைப் பாடற் பயன்களுள் ஒன்று; அடுத்தடுத்து வரும் சுரம்; இரண்டு தாக்குடைய தாளவகை; நிறுக்கை; தராசு; துலாராசி; எடை; நூறுபலம் கொண்ட அளவு; வரையறை; நிறுத்துகை; வைத்து அமைக்கை; கற்பு வழிநிற்றல்; ஆடூஉக் குணம் நான்கனுள் காப்பன காத்துக் கடிவன கடியும் திண்மை; மனவடக்கம்; கற்பு; சூளுரை; வலி; அறிவு; மறைபிறர் அறியாமை; அழிவின்மை; மாட்சிமை; நீதி; மிகுதி; கவனம்; நீர்ச்சால்.

**நிரைச்சல்** - இரவல்; ஒரு விளையாட்டு; மறைப்பு.

**நிறைச்சல்** - நிறைவு.

**நிரைத்தல்** - ஒழுங்காய் நிறுத்தல்; நிரப்புதல்; பரப்புதல்; கோத்தல்; நிறைவேற்றுதல்; தனித்தனியாகச் சொல்லுதல்; திரளுதல்; சபை கூட்டுதல்; தொடர்ந்து வருந்துதல்.

**நிறைத்தல்** - நிரம்பச் செய்தல்; பரவச் செய்தல்; திணித்தல்.

**நிரைதல்** - நிரப்புதல்; ஒழுங்காக்குதல்; முடைதல்; ஓலை முதலிவற்றை வரிசையாக வைத்து மறைத்தல்; வரிசைபாதல்; முறைப்படுத்தல்; திரளாதல்.

**நிறைதல்** - நிரம்புதல்; மிகுதல்; பரவியிருத்தல்; மனநிறைவாதல்; அமைதியாதல்.

**நிவர்தல்** - ஓங்குதல்.

**நிவறுதல்** - பொடியாதல்; மொய்த்தல்.

**நீர்** - தண்ணீர்; கடல்; இரசம்; பனிநீர்; உடல் இரத்தம்; பித்தநீர் முதலிய நீர்மப்பொருள்; பூராட நாள்; பூரட்டாதிநாள்; ஈரம்; மணியின் ஒளி; குணம்; நிலை.

**நீறு** - திருநீறு; சாம்பல்; புழுதி; நீற்றின சுண்ணாம்பு.

**நீராடுதல்** - குளித்தல்; நீர்விளையாடல்; நானம் பண்ணல்.

**நீறாடல்** - திருநீறுபூசுதல்; புழுதி படிதல்; பொடியாக்குதல்.

**நெரி** - நெரிவு; சேலையின் கொய்சகம்; புண்புறப்பாடு முதலியவற்றால் கைகால் சந்துகளில் உண்டாகும் புடைப்பு; சுரசுரப்பு; நோய் வகை.

**நெறி** - வழி; சமயம்; வளைவு; சுருள்; விதி; ஒழுக்கம்; செய்யுள் நடை; குலம்; வழிவகை; ஆளுகை; குதிரை முதலியவற்றின் நடை; வீடுபேறு; கோயில்; தாழ்ப்பாள்; கண்மண்டைக்குழி; புறவிதழ் ஒடிக்கை; புண்கட்டிக்காக உடற்சந்துகளில் உண்டாகும் வீக்கம்.

**நெரித்தல்** - நொறுக்குதல்; நசுக்குதல்; நிமிட்டல்; துன்பம் முதலியவற்றால் மகளிர் கைவிரல்களை அழுத்திச் சேர்த்தல்; கைவிரல்களைச் சுடக்குதல்; நிலைகெடச் செய்தல்; திறமையாய் நடத்துதல்; நெருங்குதல்; குவித்தல்.

**நெரிதல்** - நொறுங்குதல்; நிலைகெடுதல்; நெருங்குதல்; வளைதல்.

**நெரிப்பு** - நெரிதல்.

**நெருக்கெனல்** - விரைவுக் குறிப்பு

**நெருநெருத்தல்** - திடீரென்று ஒடிதல்; திடீரென வயிறு முதலியன வலித்தல்.

**நெருநெரெனல்** - திடீரென்று வயிறு வலித்தற்குறிப்பு; திடீரெனக்குறிப்பு; நெரிதற்குறிப்பு.

**நொரு** - பயிரின் அடியில் முளைப்பது; காய்ப்பு மாறியபின் அரும்பும் பிஞ்சு.

**நொருக்கரிசி** - உக்கலரிசி; முட்டரிசி.

**நொருக்கு** - அடி; நெரிவு; நொருக்கென்னேவல்; முரிவு.

**நொருக்குதல்** - நொறுக்குதல்.

**நெறித்தல்** - புறவிதழ் ஒடித்தல்; சினத்தால் புருவத்தை வளைத்தல்; நிமிர்த்தல்; கையாற் பிடித்து விடுதல்; முறுக்காய் இருத்தல்; மயிர்சுழலுதல்; நோக்குதல்.

**நெறிதல்** - மயிர் சுழற்சியாதல்.

**நெறிப்பு** - புருவத்தை வளைத்தல்; நிமிர்ந்திருத்தல்; அகங்கரித்தல்.

**நெறுக்கெனல்** - ஒடிதல்; முரிதல் முதலியவற்றால் உண்டாகும் ஒலிக்குறிப்பு.

**நெறுநெறுத்தல்** - பல்லைக் கடித்தல்; ஒலிபடப்பிளவுறுதல்; உறுமுதல்; நெரிந்தொலித்தல்.

**நெறுநெறெனல்** - ஓர் ஒலிக்குறிப்புள முரிதற்குறிப்பு; பல்லைக்கடிக்கும் ஒலிக்குறிப்பு.

**நொறு** - தின்பண்டம்.

**நொறுக்கரிசி** - நொருங்கிய அரிசி; பாதிவெந்த அரிசி.

**நொறுக்கு** - பொடியாக்குகை; மெல்லுகை;நன்றாயடிக்கை.

**நொறுக்குதல்** - பொடியாக்கல்; நையப்புடைத்தல்; இரத்த காயம் பண்ணுதல்; மிகுதியாய் உண்ணுதல்

**நொருங்குதல்** - நொறுங்குதல்.

**நொறுங்குதல்** - பொடியாதல்; பின்னிரங்குதல்.

**பக்கரை** - அங்கவடி; சேணம்; துணிப்பை.

**பக்கறை** - துணியுறை; குழப்பம்; பல்லில் கறுப்புக்கறை ஏற்றுகை; பை.

**பசர்** - சமைத்தல்.

**பசறு** - பச்சிலைச்சாறு.

**பணர்** - மரக்கிளை; அடர்ந்த கொம்பு.

**பணறு** - காண்க: **பணர்.**

**பர்க்கம்** - ஒளி; வீரியம்.

**பற்கம்** - பிரவை.

**பர்க்கன்** - சிவபெருமான்; சூரியன்; பிரமன்; விஷ்ணு.

**பற்கன்** - காண்க: **பர்க்கன்.**

**பரங்கி** - இலவுங்கம்.

**பறங்கி** - பூசணிக்காய் வகை; ஒரு மேகநோய்; ஐரோப்பியன்; சட்டைக்காரன்.

**பரண்** - காவல்மேடை; பொருட்களை வைக்கும் மேல்தட்டு; மச்சு.

**பறண்** - புரண்.

**பரண்டை** - கணைக்கால்; பறவை வகை.

**பறண்டை** - ஒரு வாத்தியவகை; கைம்முட்டியின் மொழி

**பரத்தல்** - பரவுதல்; தட்டையாதல்; அலமருதல்

**பறத்தல்** - பறவை; பஞ்சு முதலியன வானத்தில் பறத்தல்; வேகமாக ஓடுதல்; விரைவுபடுத்தல்; அமைதியற்று வருந்துதல்; சிதறியொழிதல்.

**பரதி** - நாடகி; கூத்தாடுபவள்.

**பறதி** - பறத்தல்; பதற்றம்.

**பரப்பு** - இடவிரிவு; உலகம்; மிகுதி; தொகுதி; அளவு; ஒருநிலவளவு; கடல்; முகடு; நிவேதனப்பொருள்; கதவு நிலையின் மேலுள்ள மண்தாங்கிப் பலகை; படுக்கை; வரிக்கணக்கு.

**பறப்பு** - பறக்கை; விரைவு; கவலை.

**பரபரத்தல்** - தீவிரப்படல்; மிகவிரைதல்; தன்வயமழிதல்; சுறுசுறுப்பாதல்; தினவெடுத்தல்.

**பறபறத்தல்** - மிகவிரைதல்; பறபறவென்று ஒலித்தல்.

**பரபரெனல்** - விரைவுக்குறிப்பு.

**பறபறெனல்** - விரைவுக்குறிப்பு துணி கிழித்தல் முதலியன நிகழும்போது உண்டாகும் ஒலிக்குறிப்பு.

**பரம்பர்** - ஒரு சாதியார்.

**பறம்பர்** - தோல்வேலை செய்பவர்.

**பரம்பு** - உழுத கழனியைச் சமப்படுத்தும் பலகை; பரவிய நிலம்; மூங்கிற்பாய்; வரப்பு; இடவிரிவு; வரிக்கணக்கு.

**பறம்பு** - மலை; பாரியின் மலை; பாரியின் நாடு, மலை.

**பரம்புதல்** - பரவுதல்; தட்டையாக விரிதல்; நிறைதல்.

**பறம்புதல்** - அடித்தல்.

**பரல்** - பருக்கைக்கல்; விதை.

**பறல்** - பறவை.

**பரவாதி** - வேற்றுச் சமயத்தவன்; இழிஞன்.

**பறவாதி** - பேராசைக்காரன்; விரைவுடையோன்; விரைவு.

**பரவை** - பரப்பு; கடல்; உப்பு; ஆடல்; பரவல்; மதில்; பரவிநிற்கும் நீர்; திடல்; சுந்தரர் மனைவி.

**பறவை** - புள்; இறகு; பறக்கை; வண்டு; அவிட்டநாள்; அம்மை வகை.

**பரி** - செலவு; வேகம்; குதிரைநடை; குதிரை; அசுவினிநாள்; குதிரைமரம்; உயர்ச்சி; பெருமை; கறுப்பு; மாயம்; பருத்திச்செடி; பாதுகாக்கை; சுமை; துலை; ஊற்றுணர்வு; அன்பு; வருத்தம்; மிகுதிப் பொருள் குறிக்கும் ஓரிடைச்சொல்.

**பறி** - பிடுங்குகை; கொள்ளை; இறக்கினபாரம்; மீன்பிடிக்குங் கருவி; பனையோலைப் பாய்; உடம்பு; பொன்.

**பரித்தல்** - அறுத்தல்; சூழ்தல்; ஓடுதல்; சுமத்தல்; ஆளுதல்; பொறுக்கியெடுத்தல்; பாதுகாத்தல்; தரித்தல்.

**பறித்தல்** - செடியிலிருந்து இலை முதலியவற்றை வலிய நீக்குதல்; பிடுங்குதல்; வலிய கவர்தல்; தோண்டுதல்; பாரம் இறக்குதல்; அழித்தல்; நீக்குதல்.

**பரிதல்** - பற்றுவைத்தல்; காதல் கொள்ளுதல்; இரங்குதல்; சார்பாகப் பேசுதல்; வருந்துதல்; பிரிதல்; ஆறுதல்; முறிதல்; அழிதல்; ஓடுதல்; வெளிப்படுதல்; அஞ்சுதல்; வருந்திக்காத்தல்; பகுத்தறிதல்; அறிதல்; அறுத்தல்; அழித்தல்; நீங்குதல்; கடத்தல்; உதிர்தல்; வாங்கிக் கொள்ளுதல்.

**பறிதல்** - ஓடிப்போதல்; நிலைபெயர்தல்; வெளிப்படுதல்; எய்யப்படுதல்; ஒலியுடன் வெளிப்படுதல்; கட்டவிழ்த்தல்; இல்லாமற்போதல்; சேப்மை நிலையாதல்; ஓட்டிப்போதல்; திரட்டப்படுதல்; அறுதல்; உண்டாதல்; தணிதல்; தீர்மானப்படாதிருத்தல்; தப்பிப்போதல்; முன்செல்லுதல்; ஊடுருவுதல்.

**பரிவு** - அன்பு; பக்தி; இன்பம்; இரக்கம்; பக்குவம்; வருத்தம்; குற்றம்.

**பறிவு** - கழிவு; அதிர்கை; நிலை பெயர்கை; ஓட்டிப்போகை.

**பருகு** - குடிக்கை.

**பறுகு** - சிறுதூறு; குள்ளம்.

**பருவதம்** - ஒரு மரம்; மீன்; மலை.

**பறுவதம்** - மலை; ஸ்ரீ சைலம்.

**பரை** - பார்வதி; சிவசக்தி; சிவான்மா இறைபருளைப் பெற்றுநிற்கும் நிலை; ஐந்து மரக்கால் கொண்ட அளவு.

**பறை** - தோற்கருவி; தப்பு; பறையடிக்கும் சாதி; வட்டம்; சொல்; விரும்பிய பொருள்; ஒரு முகத்தலளவை; மரக்கால்; நூல்வகை; வரிக்கூத்து வகை; குகை; பரத்தல்; பறவை; இறகு; பறவை.

**பரைச்சி** - பார்வதி.

**பறைச்சி** - பறைக்குடிப்பெண்.

**பார்க்கடம்** - சாம்பர்.

**பாற்கடம்** - பாற்குடம்.

**பாரு** - மருந்து.

**பாறு** - கேடு; பருந்து; கழுகு; மரக்கலம்.

**பாரை** - கடப்பாரை; புற்செதுக்குங்கருவி; எறிபடை வகை; செடிவகை; ஒரு மீன் வகை.

**பாறை** - பூமியிலுள்ள கருங்கல்திரள்; சிறுதிட்டை; மீன்வகை.

**பிர** - தோற்றம்; மிகுதி; மேன்மை; விரைவு இவைகளைக் காட்டும் உபசருக்கம்.

**பிற** - அசைச்சொல் (உ.ம்) யாஞ்சிலவரிசி வேண்டினேமாகத்தான் பிறவரிசையறிதலிற் றன்னுந்தூக்கி; பிறவென்னேவல்; வேறு.

**பிரகரம்** - உதவி; ஒரு வாசனை; மரம்; குவியல்; சங்கை; பூஞ்செண்டு; வளமை.

**பிறகரம்** - காவல்; சாமம்.

**பிரகரித்தல்** - சங்கரித்தல்

**பிறகரித்தல்** - காத்தல்; சாமங்காத்தல்.

**பிரசாதனம்** - வெள்ளி.

**பிறசாதனம்** - தேக்கு.

**பிரத்தியுத்தாரம்** - கைம்மாறு; மறுமொழி.

**பிறத்தியுத்தாரம்** - மறுமொழி.

**பிரதாரம்** - கடத்தல்.

**பிறதாரம்** - பிறர்மனை.

**பிரதிக்கினை** - அத்தாட்சி; அறிக்கையிடுதல்; சம்மதி; நேர்த்திகடன்; பொருத்தனை; வேண்டியது; துணிந்த பொருள்; சூளுரை; அனுமான உருப்புகளில் சாதிக்க வேண்டிய பொருள்; பாவம் நீங்க அவற்றைக் குருவிடம் தெரிவிக்கை.

**பிறதிக்கினை** - காண்க: பிரதிக்கினை.

**பிரந்தை** - சமூகம்.

**பிறந்தை** - பிறப்பு; உடன் பிறந்தவர்; இயல்பு; மறுபிறப்பு; பாவம்; துன்பம்; பிறந்தகம்; இயல்பு.

**பிரப்பு** - ஒரு கலத்திற் பல்லுணாப் பரப்புவது; பேருண்டி; குருணிவீதம்; கொள்கலங்களில் பரப்பி வைக்கும் படையற்பொருள்.

**பிறப்பு** - தோற்றம்; உற்பத்தி; சாதி தொடக்கம்; உடன்பிறந்தவர்; மகளிர் அணியும் தாலிவகை; ஒரு வாய்பாடு; அச்சம்; நெருக்கம்; மயக்கம்.

**பிரலாபம்** - அசைத்திசைத்தல்; ஒரு சன்னி; சம்பாஷணை; துக்கம்; நாக்குளறுதல்; பயனில் சொல்; புலம்புகை.

**பிறலாபம்** - காண்க: பிரலாபம்.

**பிரி** - பிரியென்னேவல்; பிரிவு; வெருகு.

**பிறி** - பங்கிடு என்னும் ஏவல்.

**பிரித்தல்** - குலைத்தல்; கூறு செய்தல்; நீக்கல்.

**பிறித்தல்** - பங்குபடுத்தல்; வேறுபடுத்தல்.

**பிரிதி** - பிரீதி.

**பிறிதி** - அற்பம்; எதிர்; எழுதிச்சேர்த்தல்; தடை; பகுதி; பதில்; மூலம்.

**பிரிப்பு** - குலைப்பு; பகுப்பு; பிரித்தல்.

**பிறிப்பு** - பிரிப்பு.

**பிரியம்** - அன்பு; உவகை; விருப்பம்.

**பிறியம்** - பிரியம்.

**பிரியாவிடை** - உள்ளம் பிரியா அன்புடன் விட்டு நீங்கல்.

**பிறியாவிடை** - பிரியாவிடை.

**பிரிவினை** - ஒவ்வாமை; சமயபேதம்; வேறுபாடு.

**பிறிவினை** - பிரிவினை.

**பிரிவு** - பகுதி; பிரிதல்; வெறுப்பு; வேற்றுமை.

**பிறிவு** - பிரிவு

**பிரீதி** - இரதி; உருக்கம்; உவப்பு; நித்தியயோகத்தொன்று; அதுபிரியம்; புலஸ்திபன் மனைவியாகிய ஹவிர்புக்குனன் பெயர்.

**பிறீதி** - காண்க: பிரீதி.

**பிரை** - அரைப்பங்கு; உறை.

**பிறை** - கரலட்சணத்தொன்று; அதுபெருவிரலைப் பின்வாங்கி நீட்டி மற்றைய விரல்களை முன்னாக நீட்டுதலாம்; சந்திரபிரலை; வாலச்சந்திரன்; இளஞ்சந்திரன்; மகளிர் தலையணிவகை.

**பீரு** - புருவம்; அச்சமுள்ளோன்.

**பீறு** - கிழிவு; மலவாய்.

**புரணி** - ஊன்; தோல்; சாரமற்றது.

**புரம்** - ஊர்; நகரம்; தலைநகரம்; முப்புரம்; கோயில்; மேன்மாடம்; வீடு; உடல்; தோல்; முன்.

**புரவாயில்** - கோபுரவாயில்.

**புரவு** - பாதுகாப்பு; அரசு; கொடை; ஆட்சியிடம்; அரசிறை; இறையிலிநிலம்; ஆற்றுநீர் பாயும் வயல்; செழுமை.

**பூநீர்** - பனிநீர்; அரக்குநீர்; உவர் மண்ணில் எடுக்கும் நீர்.

**பெருக்கல்** - துடைப்பத்தால் குப்பை கூட்டுதல்; எண்களைப் பெருக்குதல்; விருத்தி செய்தல்.

**பெருக்கு** - கடல் நீரேற்றம்; பெருக்கல் கணக்கு; மிகுதி; வெள்ளம்.

**பெருக்குதல்** - ஓர் எண்ணை மற்றொரு எண்ணால் பெருக்குதல்; குப்பை முதலியன கூட்டுதல்; நீர்நிரப்புதல்; விரியச்செய்தல்.

**புறணி** - புறங்கூறல்; மரப்பட்டை; மட்டை முதலியவற்றின் புறத்துள்ள நார்; தோல்; ஊன்; புறம்பானது; குறிஞ்சிநிலம்; முல்லை நிலம்; மண்கட்டி.

**புறம்** - வெளியிடம்; அன்னியம்; புறத்திணை; புறக்கொடை; புறநானூறு; வீரம்; பக்கம்; முதுகு; பின்புறம்; புறங்கூற்று; அலர்மொழி; ஒருசார்பு; இடம்; இறையிலி நிலம்; எழுனுருபுள் ஒன்று; திசை; காலம்; உடம்பு; மருதநிலத்தூர்; மதில்.

**புறவாயில்** - வெளிவாயில்.

**புறவு** - புறா; காடு; சிறுகாடு; முல்லைநிலம்; குறிஞ்சி நிலம்; பயிரிடும் நிலம்; முல்லைக்கொடி.

**பூநீறு** - ஒரு வெள்ளை உவர் மண் வகை; ஒரு மருந்துப்பொடிவகை.

**பெறுக்கல்** - அரிசி.

**பெறுக்கு** - பொறுக்கென்னேவல்.

**பெறுக்குதல்** - பொறுக்குதல்.

**பெருத்தல்** - அதிகப்படல்; பருமையாதல்; மிகுதி.

**பேரு** - கடல்; கதிரவன்; பொன்மலை.

**பொரி** - நெல் முதலியவற்றின் பொரி பொரிக்கப்பட்டது; பொரிக்கறி; கரிந்தகாடு; எருமைக்கன்று; நன்றாகச் சமைக்காத சோறு.

**பொரித்தல்** - பொரியச் செய்தல்; வறுத்தல்; கிழங்கு சுடுதல்; அடைகாத்து குஞ்சுண்டாக்குதல்; போக்குதல்; தீய்த்தல்; புளியில்லாமல் சமைத்தல்; குறைந்த விலைக்கு விற்றல்.

**பெறுத்தல்** - பெறுவித்தல்.

**பேறு** - பெறுகை; அடையத்தக்கது; இலாபம்; நன்கொடை; பயன்; தகுதி; பதினாறு வகைப்பட்ட செல்வம்; செல்வம்; நல்லூழ்; நிலத்தின் அனுபோகவகை; இரை; படைப்பு; முடிவு.

**பொறி** - வரி; கோடு; புள்ளி; தழும்பு; அடையாளம்; எழுத்து; இலாஞ்சனை; விருது; உயர்ந்த உடல் இலக்கணம்; வண்டு; பீலி; தேமல்; பதுமை; விதி; கன்னப்பொருத்து; மூட்டுவாய்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி; ஆண்குறி; மனம்; அறிவு; அனற்றுகள்; ஒளி; எந்திரம்; மதிலுறுப்பு; மரக்கலம்; விரகு; நெற்றிப்பட்டம்; திருமகள்; செல்வம்; பொலிவு; முன்வினைப்பயன்; திரட்சி; ஊழ்.

**பொறித்தல்** - இலாஞ்சனையிடல்; எழுதுதல்; ஓவியம் வரைதல்; தெறித்தல்; பறிதல்; கலைத்தல்; தீச்சுடர் சிதறுதல்; அழுந்துதல்.

**பொரிதல்** - பொரியாதல்; வறுபடுதல்; தீய்தல்; விரைவாகப் பேசுதல்; அலப்புதல்; உப்பு முதலியன தரையில் படிதல்; பூத்தல்; மெல்ல ஒலித்தல் வாணப்பொறி மிகுந்து சொரிதல்; பொருக்கு வெடித்தல்.

**பொறிதல்** - பறிதல்; தீச்சுடர்; சிதறுதல்; அழுந்துதல்; சறுக்குதல்; சரிதல்; விழப்புகுதல்; கலைதல்.

**பொரிவு** - மாணிக்கக் குற்றவகை; மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்று.

**பொறிவு** - பறிகை; சறுக்கல்.

**பொரு** - ஒப்பு; உவமை; எதிர்த்தடை.

**பொறு** - இரு; இங்கேயே இரு; பொறு வென்னேவல்.

**பொருக்கு** - பருக்கை; காய்ந்த சோற்றேடு; மரப்பட்டை; பொருக்குமண்.

**பொறுக்கு** - பொறுக்கி; பொறுக்கென்னேவல்.

**பொருத்தல்** - பொருந்துதல்.

**பொறுத்தல்** - தாங்குதல்; சகித்தல்; சுமத்தல்; அணிதல்; இளக்காரம் கொடுத்தல்; மன்னித்தல்; உத்திரவாதமாதல்; தாமதித்தல்; உவமையாகப்பெறுதல்; சாந்தமாயிருத்தல்.

**பொருப்பு** - பக்கமலை.

**பொறுப்பு** - பதவி; கடமை; பாரம்; முட்டு; உத்திரவாதம்; முக்கியம்; தகுதி; பொறுமை; வரி.

**மர்க்டப்பிடி** - குரங்குப்பிடி.

**மற்கடப்பிடி** - காண்க: **மர்க்கடப்பிடி**

**மர்க்கடம்** - குரங்கு.

**மற்கடம்** - காண்க: **மர்க்கடம்**

**மரக்கரி** - அடுப்புக்குப் பயன்படும் கரி.

**மரக்கறி** - காய்கறி; சமைத்த காய்கறி உணவு.

**மரச்செவி** - மரப்பாவையின் காது; சற்றுங்கேளாத காது.

**மறச்செவி** - பாவம் பயக்கும் மொழிகளைக் கேட்குங்காது.

**மரத்தல்** - மரத்துப்போதல்.

**மரம்** - உள்வயிரமுள்ள தாவரம்; அறுக்கப்பட்ட மரம்; மூலிகை; தொழுமரம்; மரக்கலம்; இயமரம்; உழுதவயலைச் சமப்படுத்தும் பலகை.

**மரல்** - சிறுசெடிவகை.

**மரவை** - மரத்தாலானபண்டம்.

**மராட்டம்** - இடம்; புறமயிர்; பெண்மயிர்.

**மராட்டியம்** - ஒரு பாஷை.

**மராடம்** - தேயம் ஐம்பத்தாறினொன்று; பதினெண்பாடையினொன்று; மருக்காரை.

**மரி** - புளியமரம்.

**மரித்தல்** - சாதல்; நினைத்தல்.

**மறத்தல்** - அயர்தல்; அசட்டைப்பண்ணல்; ஒழிதல்; நினைவின்றிப்போதல்; பொச்சாப்பு.

**மறம்** - வீரம்; கோபம்; பகை; வலிமை; வெற்றி; போர்; கொலைத்தொழில்; யமன்; கெடுதி; பாவம்; கலம்பகத்தின் ஓர் உறுப்பு; மறவர்குலம்; மயக்கம்.

**மறல்** - பகை; பிணக்கு; போர்; யமன்; மரணம்; எழுச்சி; ஒருகூத்துவகை; மறதி; மயக்கம்; மறுத்தல்; வறுமை; குற்றம்.

**மறவை** - வன்கண்மையுடைத்து.

**மறாட்டம்** - மகாராட்டிரம்.

**மறாட்டியம்** - மகாராட்டிரர்.

**மறாடம்** - மகாராட்டிரம்.

**மறி** - ஆடு; குதிரை; மான் இவற்றின் குட்டி; ஆடு, குதிரை இவற்றின் பெண்; ஆடு; மேடராசி; அழுங்கு; அழுங்கின்குட்டி; மான்; நிறுத்துகை.

**மறித்தல்** - தடுத்தல்; திருப்புதல்; மேல்கீழாக்குதல்; அழித்தல்; தடுத்தற்குறியாக கையசைத்தல்; திரும்பச் செய்தல்.

**மரிதல்** - சாதல்.

**மரிப்பு** - சாவு.

**மரு** - மணம்; மருக்கொழுந்து; ஒரு மணச்செடி; மணமகனுக்குப் பெண்வீட்டார் இடும் முதல் விருந்து; இடம்; நீரும்; நிழலுமற்ற இடம்; மலை.

**மருக்கம்** - காற்று; குரங்கு; உடம்பு; மிளகு; மருக்கொழுந்து.

**மருக்காரை** - ஒரு காரை.

**மருகல்** - ஒரு சிவக்ஷேத்திரம்.

**மருகு** - ஒரு மணச்செடி வகை; பூண்டுவகை; காட்டு மல்லிகை; மகரவாழை.

**மருகை** - பஞ்சுமூட்டை.

**மருத்து** - காற்று; வாயுதேவன்.

**மருப்பு** - விலங்கின் கொம்பு; யானைத்தந்தம்; யாழின் உறுப்பு வகை; மரக்கொம்பு; பிறைச்சந்திரனின் இருகோடு; இஞ்சி.

**மறிதல்** - கீழ்மேலாதல்; மீளுதல்; முதுகிடுதல்; விழுதல்; சாய்தல்; கிளர்தல்; முறுக்குண்ணுதல்; பலகாலுந்திரிதல்; தடைப்படுதல்; நிலைகுலைதல்; அழுபடுதல்; சாதல்; துள்ளுதல்.

**மறிப்பு** - நிறுத்துகை.

**மறு** - குற்றம்; களங்கம்; தீமை; அடையாளம்; அச்சம்; பாலுண்ணி; மற்ற.

**மறுக்கம்** - சுழற்சி; துன்பம்; மனக்கலக்கம்.

**மறுக்காரை** - காண்க: **மருக்காரை.**

**மறுகல்** - மறுகுதல்; வியாதி திரும்புதல்.

**மறுகு** - தெரு; குறுந்தெரு; அறுத்த தாளினின்று உண்டாகும் இரண்டாம் விளைச்சல்.

**மறுகை** - தெரு; மாட்டின் பொதிப்பாரத்தில் பாதியளவு; நுங்கு.

**மறுத்து** - மறுபடியும்; மேலும்.

**மறுப்பு** - மறுத்தல்; எதிர்த்தல்; கண்டனம்; மறுஉழவு; முன்னுழுதசாலுக்குக் குறுக்காக உழுகை.

**மரை** - ஒரு மான்வகை; காட்டுப்பசு; தவளை; இரத்தினக் குற்றம்; திருகு வகை; விளக்கின் திரியை ஏற்றவும் இறக்கவும் உதவும் திருகுள்ள காய்; தாமரை.

**மறை** - மறைக்கை; இரகசியம்; மந்திராலோசனை; வேதம்; உபநிடதம்; ஆகமம்; மந்திரம்; உபதேசப் பொருள்; சிவப்புப் புள்ளிகளை உடைய மாடு முதலியன; களவுப்புணர்ச்சி; பெண்குறி; உருக்கரந்த வேடம்; திருகுவகை; விளக்கின் திரியை ஏற்றவும் இறக்கவுமுள்ள திருகுகாய்; புகலிடம்; சிறைக்கூடம்; மறைவிடம்; வஞ்சனை; இரண்டாம் உழவு; கேடகம்; எதிர்மறை; விலக்குகை; புள்ளி; சங்கின் முறுக்கு.

**மரையான்** - காட்டுப்பசு.

**மறையான்** - பிரமன்; கள்ளக்கணவன்.

**மாதரி** - களி; மதுரையைச் சார்ந்த ஆயர் பாடியிலிருக்கும் இடைச்சியர் தலைவி, இவள் கோவலன் கொலையுண்டதையும் கண்ணகி துன்புற்றதையும் கேட்டு வருத்தம் உற்றுத் தீயில் விழுந்திறந்தவள்.

**மாதறி** - விட்டம்.

**மாரன்** - காமன்.

**மாறன்** - பாண்டியன்; சடகோபர் என்னும் நம்மாழ்வார்; பகைவன்.

**மாராட்டம்** - ஓரூர்; நகரம்.

**மாறாட்டம்** - மாற்றுகை; புரட்டு; தடுமாற்றம்; பைத்தியம்; தவறு.

**மாராப்பு** - பெண்கள் தம் மார்பின் மேலிடும் சீலைப்பகுதி; முதுகுடன் இணைத்து மூட்டை கட்டும் கச்சை.

**மாறாப்பு** - உத்தரியத்தைத் தோள்களில் மாற்றியிடுகை.

**மாரி** - மழை; நீர்; மேகம்; மழைக்காலம்; பூராடநாள்; புள்வகை; சாவு; அம்மைநோய்; ஒரு தேவதை; துர்க்கை.

**மாறி** - இரண்டகஞ்செய்வோன்; பண்ட மாற்றுவோன்; பொன் மாற்று.

**மிருது** - மென்மை; சாந்தம்; மந்தம்; மழுங்கல்; நொய்ம்மை; சமுத்திரப்பாலை; வெள்ளரி; சாவு.

**மிறுது** - சமுத்திரப்பச்சை.

**மிளிர்** - பெருமை; ஒளி

**மிளிறு** - கரடி.

**மீக்கூர்தல்** - மிகுதல்.

**மீக்கூறுதல்** - உயர்த்திக் கூறுதல்.

**முரண்டு** - பிடிவாதம்; மாறுபாடு; வளையாமை; அமையாமை.

**முறண்டு** - முரண்டு.

**முரம்** - கருங்கல்பொடி.

**முறம்** - தானியம் முதலியவற்றைப் புடைக்கும் கருவி; விசாக நாள்.

**முரி** - துண்டு; நொய்யரிசி; முழுதிற்குறைவானது; சிதைவு; வளைவு; இசைப்பாவில் இறுதிப்பகுதி; நாடகத்தமிழின் இறுதியில் வரும் சுரிதகம்; பத்திரம்.

**முறி** - துண்டு; பாதி; பத்திரம்; ஓலையில் எழுதிய பற்றுச்சீட்டு; துணி; முருட்டுத்துணி; தளிர்; கொழுந்திலை; இலை; சேரி; அறை; மூலையிடம்; சூலைநோய் வகை; உயர்ந்த வெண்கலம்.

**முரித்தல்** - ஒடித்தல்; அழித்தல்; தோல்வியுறச் செய்தல்; நடத்துதல்.

**முறித்தல்** - ஒடித்தல்; கீறுதல்; நிறத்தி விடுதல்; தன்மை மாற்றுதல்; நெசவுத்தறியில் உருண்டை மறித்தல்.

**முரிதல்** - ஒடிதல்; கெடுதல்; சிதறுதல்; தவறுதல்; தோல்வியுறுதல்; நீங்குதல்; நிலைகெடுதல்; குணங்கெடுதல்; வளைதல்; தளர்தல்.

**முறிதல்** - ஒடிதல்; தோல்வியுறல்; குலைதல்; நிலைகெடுதல்; அழிதல்; தன்மை மாறுதல்; தப்புதல்; துளிர்த்தல்; பயனிலதாதல்; அருள் மாறுதல்.

**முரிப்பு** - முரித்தல்; எருத்துத்திமில்; திமிர்.

**முறிப்பு** - கடுமை; மாற்றுமருந்து; செருக்கு; முரிப்பு; நட்பு மாறுகை.

**முரியல்** - துண்டு; எளிதில் முறிவது.

**முரிவு** - ஒடிகை; சுருக்குகை; நீங்குககை; வருத்தம்; ஊழ்; பெருமை; மடிப்பு; சோம்பு.

**முருக்கு** - எலுமிச்சை மரம்; முள்முருங்க மரம்; குருகு; கொலை; பலாசமரம்.

**முருக்குதல்** - அழித்தல்; கொல்லுதல்; முரித்தல்; உருக்குதல்; கரைத்தல்.

**முருகு** - இளமை; முருகன்; மணம்; அழகு; தெய்வத்தன்மை; வெறியாட்டு; வேள்வி; திருவிழா; பூத்தட்டு; தேன்; கள்; எலுமிச்சை; எழுச்சி; அகில்; திருமுருகாற்றுப்படை; விறகு; காதணியுள் ஒன்று.

**முருகுதல்** - காய்ச்சுதலில் பக்குவம் அதிகமாதல்; முதிர்தல்.

**முறியல்** - முறிகை; பிளப்பு; பிணக்கம்.

**முறிவு** - முறிகை; பிளப்பு; பிணக்கம்; மாற்றுமருந்து; எலும்பு ஒடிகை; வைரக் குற்றவகை.

**முறுக்கு** - திரிக்கை; திருகாணியின் சுற்று; மாறுபாடு; செருக்கு; மிடுக்கு; அரும்புத்தன்மை; மாவினாற்செய்த பலகார வகை; வலிப்பு; கடுமை; நெறிப்பு; நூலுருண்டை.

**முறுக்குதல்** - கயிறு முதலியன திரித்தல்; திருக்குதல்; ஒடித்தல்; வெற்றிலை உண்ணுதல்; சுழற்றுதல்; மாறுபடுதல்; செருக்குதல்; சினத்தல்; கைகால்களைப் பிசைந்து தேய்த்தல்.

**முறுகு** - திண்மை.

**முறுகுதல்** - கடுமையாதல்; காந்திப்போதல்; செருக்குதல்; திருகுதல்; மிகுதல்; மீறுதல்; முதிர்தல்; விரைதல்.

**முரை** - ஒன்பதாம் நந்தன் மனைவி, இவள் சந்திரகுப்தன்தாய்; இவள் சூத்திரகுலத்தினள்.

**முறை** - நீதி; அடைவு; நியமம்; ஆள்மாறிமாறி வேலை செய்யும் நியமம்; தடவை; பிறப்பு; ஒழுக்கம்; உறவு; உறவுமுறைப்பெயர்; அரசநீதி; பழைமை; ஊழ்; கூட்டு; நூல்; தன்மை; கற்பு; முறையீடு.

**மெய்யுரை** - உண்மைமொழி; நூற்குப் பொருத்தமான உரை.

**மெய்யுறை** - உடலிலிடும் காப்புச் சட்டை.

**மேற்புரம்** - துரக்கம்.

**மேற்புறம்** - வெளிப்புறம்; கப்பலிற்காற்றுத் தாக்கும் பக்கம்; மேலண்டைப்பக்கம்.

**மொரமொரப்பு** - முறுக்காயொலிக்கை; தூய்மை; முறுமுறுப்பு.

**மொறமொறப்பு** - தூய்மை; சருக்கரை; உலர்ச்சி.

**மொருமொருத்தல்** - முணுமுணுத்தல்; முறுக்காயொலிக்கை; தூய்மை; முறுமுறுப்பு.

**மொறுமொறுத்தல்** - வெறுப்புக் குறிப்புக் காட்டுதல்.

**மொருமொரெனல்** - முணுமுணுத்தற்குறிப்பு; முறுக்காயொலிக்கை; தூய்மை; முறுமுறுப்பு.

**மொறுமொரெனல்** - காண்க: மொரமொரெனல்.

**மோரை** - முகம்; முகவாய்க்கட்டை

**மோறை** - மோவாய்; முகம்; முருட்டுத்தனம்.

**வங்கநீர்** - கடல்.

**வங்கநீறு** - ஈயமணல்.

**வட்டரவு** - வட்ட வடிவு; விருத்தம்.

**வட்டறவு** - முற்றாக அறவு பண்ணுதல்.

**வயிர்** - கூர்மை; ஊதுகொம்பு; மூங்கில்.

**வயிறு** - உதரம்; கருப்பப்பை; நடுவிடம்; உள்ளிடம்; மனம்.

**வர்க்கம்** - ஒத்த பொருள்களின் கூட்டம்; வகுப்பு; அத்தியாயம்; இனம்; வமிசம்; எருக்கம்பால்; தீ; பிசாசு; வருக்கம்.

**வற்கம்** - குதிரையின் கடிவாளம்; குதிரைக்குரிய கலணை முதலியன; இனம்; ஒத்த பொருள்களின் கூட்டம்; பிசாசு; அத்தியாயம்; ஒழுங்கு; மரப்பட்டை; குறிப்பிட்ட எண்ணை அதே எண்ணால் பெருக்கி வரும் தொகை; மரபு.

**வர்ணம்** - நிறம்; சாதி; குலம்; அழகு; ஒளி; புகழ்; பொன்னுரை; பொன்; மணம்; துதி; குங்குமம்; பூச்சுப்பொருள்; எழுத்து ஓசை; சரத்தின் எழுத்து; மஞ்சள்; வேடம்; குணம்; மாற்று.

**வற்ணம்** - வண்ணம்.

**வர்த்தனை** - பெருகுகை; வளர்ச்சி; செல்வம்; மானிய சுதந்திரம்; ஏற்ற இறக்க முறையில் சுரம்பாடுதல்.

**வற்தனை** - பார்ப்பாருக்குங் கிராமத்து ஊழியகாரருக்குங் கொடுக்குங்கூலி.

**வர்மம்** - உட்பகை; விதைப்பை; சமுக்கம்; இரகசியம்; உடம்பு; உயிர்நிலை; மார்பு.

**வற்மம்** - வன்மம்.

**வரதாரு** - தேக்குமரம்.

**வரதாறு** - சுறிமுள்ளி.

**வரப்பு** - எல்லை; வரம்பு.

**வறப்பு** - குறைவு; வற்று.

**வரம்** - தெய்வம் முதலியவற்றால் பெரும்பேறு; அருள்; வாழ்த்து; வேண்டுகோள்; விருப்பம்; மேன்மை; ஒரு நிதி; சூழல்; அடைக்கலாங்குருவி; எறும்பு; மஞ்சள்.

**வறம்** - வற்றுகை; நீரில்லாமை; கோடைக்காலம்; பஞ்சம்; வறுமை; வறண்ட பூமி.

**வரவு** - வருவாய்; வருகை; வரலாறு;விளைவு; வழி; வணங்குகை.

**வறவு** - கஞ்சி.

**வரள்தல்** - காய்தல்.

**வறள்தல்** - காண்க: **வரள்தல்.**

**வரன்** - சிறந்தவன்; கடவுள்; பிரமன்; தலையன்; மணமகன்; கணவன்; சீவன் முத்தருள் பிரமவரர் எனப்படும் வகையினன்

**வறன்** - வற்றுகை; நீரில்லாமை; கோடைக்காலம்; பஞ்சம்; வறுமை; வறண்ட பூமி.

**வருத்தல்** - துன்புறுத்தல்.

**வறுத்தல்** - வறட்டல்.

**வருதல்** - நடத்தல்; வருகை.

**வறுதல்** - தீயால்உலர்தல்.

**வருமம்** - வர்மம்.

**வறுமம்** - வன்மம்.

**வருமை** - மறுபிறப்பு.

**வறுமை** - துன்பம்; வெறுமை; திக்கற்ற தனிமை.

**வாரு** - அள்ளென்னேவல்.

**வாறு** - பெலன்; வாய்ப்பு; வலிமை; விதம்.

**விதர்ப்பம்** - அத்தினாபுரத்துக்குத் தெற்கே உள்ள தேசம்.

**விதற்பம்** - காண்க: விதர்ப்பம்.

**விரகு** - வழிவகை; திறமை; தந்திரம்; சூழ்ச்சி; விவேகம்; ஊக்கம்; தின்பண்டம்.

**விறகு** - எரிக்கும் கட்டை,

**விரல்** - கைகால்களின் இறுதியிலுள்ள ஐந்தாகப் பிரியும் உறுப்பு; விரல் அகலமுள்ள அளவு.

**விறல்** - வெற்றி; பெருமை; வலிமை; வீரம்; சிறப்பு; உடல்வேறுபாடு.

**விரலி** - மஞ்சள்; வெள்ளரி.

**விறலி** - உள்ளக்குறிப்புப் புறத்து வெளிப்பட ஆடுபவள்; பாணர் குலப்பெண்; பதினாறு அகவைப்பெண்.

**விராய்** - விறகு; பூச்செடிவகை; தளவாட வகை.

**விறாய்** - செருக்கு.

**விருவிருத்தல்** - கடுத்தல்; உறைப்பாய் இருத்தல்; சினத்தாற் பரபரத்தல்; காமம் முதலியவற்றால் உடல் விரைத்தல்.

**விறுவிறுத்தல்** - மேற்பூச்சு உலர்ந்ததனால் விறுவிறென்று இழுத்தல்; காரம் உறைத்தல்; சினம் பொங்குதல்; விரைதல்; புண்குத்தெடுத்தல்.

**விருவிருப்பு** - நஞ்சு முதலியன ஏறுங்குறிப்பு; கடுப்பு; காமம் முதலியவற்றால் உடல் ஊருதற்குறிப்பு; உறைப்பாய் இருத்தற்குறிப்பு; சினத்தால் உண்டாகும் பரபரப்புக் குறிப்பு; விரைவுக்குறிப்பு.

**விறுவிறுப்பு** - மேற்பூச்சு உலர்ந்ததனால் விறுவிறென்று இழுக்கை; மிகுசினம்; சுறுசுறுப்பு; உறைப்பு; புண் குத்தெடுக்கை.

**விருவிரெனல்** - மேற்சொன்னபடி.

**விறுவிறெனல்** - காண்க: விருவிரெனல்

**விரை** - நறுமணம்; கோட்டம்; துருக்கம்; தகரம்; அகில், சந்தனம் என்னும் ஐவகை மணப்பண்டம்; நறும்புகை; கலவைச்சாந்து; பூந்தேன்; மலர்; விதை; அண்டபீசம்.

**விறை** - நடுங்கு என்னும் ஏவல்.

**விரைத்தல்** - விதைத்தல்; மணங்கமழ்தல்; பரவச்செய்தல்; திகைத்தல்; மரத்துப்போதல்; குளிர் முதலியவற்றால் நடுங்குதல்; செருக்குக் காட்டுதல்.

**விறைத்தல்** - மரத்துப்போதல்; குளிர் முதலியவற்றால் நடுங்குதல்; திகைத்தல்; திமிர் கொள்ளல்.

**விரைதல்** - வேகமாதல்; அவசரப்படுதல்; ஆத்திரம் காட்டுதல்; மனங்கலங்குதல்.

**விறைதல்** - குளிரால் நடுங்குதல்.

**விரைப்பு** - விதைப்பு; விறைப்பு.

**விறைப்பு** - விறைத்துப்போகை; நடுக்கம்; திகைப்பு; செருக்குக் காட்டுதல்.

**வீராப்பு** - கருவம்.

**வீறாப்பு** - இறுமாப்பு.

**வெரு** - அச்சம்.

**வெறு** - வெறுமை; வெறுவெண்ணேல்.

**வேர்** - மரஞ்செடி கொடிகளை மண்ணின் மேல் நிறைநிற்கச் செய்வதும் அவை உணவேற்க உதவுவதுமான அடிப்பகுதி; மரவேல்; மூங்கில்; திப்பிலி வேர்; வேர் போன்றது; அடிப்படை; காரணம்; வியர்வை; சினம்.

**வேரல்** - சிறுமூங்கில்; மரவகை; மூங்கிலரிசி; வேர்க்கை.

**வேராதல்** - உயிர்நாடியாக இருத்தல்.

**வேறு** - பிறிது; பிரிந்தது; கூறுபாடு; பகைமை; எதிரிடையானது; புதிது; தீங்கு; சிறப்புடையது; தனி; செய்யுள் வேறுபாட்டினைக் குறிப்பதற்கு இடும் தலைப்புச் சொல்.

**வேறல்** - வெல்லுதல்; வெற்றி கொள்ளுதல்.

**வேறாதல்** - பிரிதல்; மாறுபடுதல்; மனம் மாறுபடுதல்; முன்னையதன்மை குலைதல்; சிறப்புடையதாதல்; ஒதுக்காதல்; தனியாதல்.

# ல/ழகர வேறுபாட்டுச் சொற்கள்

| | |
|---|---|
| **அகல்** - விளக்குத் தகழி; சட்டி; விரிவு; ஓரளவு; வெள்வேல் மரம். | **அகழ்** - அகழி; மதில்சூழ் கிடங்கு; கிடங்கு; குளம் |
| **அகல் (வி)** - விலகு; நீங்கு | **அகழ் (வி)** - தோண்டு |
| **அகலுதல்** - நீங்குதல்; பிரிதல்; கடத்தல்; விரிதல். | **அகழ்தல்** - தோண்டுதல்; கல்லுதல்; உழுதல். |
| **அலக்கு** - வரிச்சு; துறட்டுக்கோல்; தனிமை; எலும்பு; கிளை; கோட்டை | **அழக்கு** - ஆழாக்கு |
| **அலல்** - அல்லல் | **அழல்** - நெருப்பு; தீக்கொழுந்து; எரிவு; வெப்பம்; கோபம்; நஞ்சு; உறைப்பு; கார்த்திகைமீன்; கேட்டை; செவ்வாய்; கள்ளி; எருக்கஞ்செடி; கொடிவேலிச் செடி; நரகம். |
| **அலவல்** - இழை விளக்கமாய் நெய்யப்பட்டது; அலமரல்; கந்தைச் சீலை; விபச்சாரம். | **அழவல்** - அழலுதல் |
| **அலற்றுதல்** - இடைவிடாமல் முறையில்லாமல் பேசுதல் | **அழற்றுதல்** - வெம்மை செய்தல் |
| **அலன்** - கலப்பைப் படையையுடைய பலராமன். | **அழன்** - பிணம்; பேய் |
| **அலாக்கு** - கிளை | **அழாக்கு** - ஆழாக்கு |
| **அலால்** - அல்லால். | **அழால்** - அழுதல் |
| **அலு** - அலுவென்னேவலும் தெரிநிலை வினைப்பகுதியும்; பெயரெச்சத் தொகையும்; நீர்விட்டு வைக்கும் சிறு குடம் | **அழு** - அழுவென்னேவல்; தெரிநிலை வினைப் பகுதி; பெயரெச்சத் தொகை; அழுகண்ணி; ஒரு பூடு |
| **அலுத்தம்** - ஆசையின்மை; மனத்திருப்தி. | **அழுத்தம்** - இறுக்கம்; கடினம்; உறுதி; பிடிவாதம்; உலோபம்; ஆழ்ந்தறியும் குணம். |

**அலுத்தல்** - சோர்தல்; தளர்தல்; களைத்தல்..

**அழுத்தல்** - அழுந்தச் செய்தல்; பதித்தல்; அமிழ்த்தல்; எய்தல்; வற்புறுத்தல்; உறுதியாக்கல்.

**அலுப்பு** - தளர்வு; சோர்வு; களைப்பு.

**அழுப்பு** - சோறு

**அலைத்தல்** - அசைத்தல்; அலையச் செய்தல்; நீரைக் கலக்குதல்; வருந்துதல்; அடித்தல்; நிலைகெடுத்தல்; உருட்டுதல்; அலைமோதுதல்.

**அழைத்தல்** - கூப்பிடுதல்; பெயரிட்டுக் கூப்பிடுதல்; வரச் செய்தல்; கதறுதல்

**அலைப்பு** - அசைக்கை; வருத்தம்.

**அழைப்பு** - கூப்பிடுகை; பொருள் புணராவோசை

**அவில்** - அவற்றுள்.

**அவிழ்** - பருக்கை; சோறு

**ஆல்வு** - அகன்றது

**ஆழ்வு** - ஆழம்

**ஆலித்தல்** - ஒலித்தல்

**ஆழித்தல்** - ஆழமாய்த் தோண்டுதல்

**இகல்** - பகை; போர்; வலிமை; சிக்கு; அளவு; புலவி.

**இகழ்** - இகழ்ச்சி

**இகல்வு** - எதிரிடை; இகலுதல்

**இகழ்வு** - நிந்தை

**இகலுதல்** - அகலல்

**இகழ்தல்** - நிந்தித்தல்

**இமில்** - எருத்தின் திமில்; கொண்டை

**இமிழ்** - ஒலி; பந்தம்; கயிறு; இனிமை; இசை

**இரத்தப்பலி** - இரத்தப் பிச்சை; இரத்தவுணவு

**இரத்தப்பழி** - கொலைப்பழி

**இலவு** - இலவ மரம்; தேற்றாமரம்

**இழவு** - இழப்பு; கேடு; சாவு; எச்சில்; வறுமை

**இலிங்கு** - மாவிலங்கை மரம்

**இழிங்கு** - ஈனம்; வடு

**இலுதை** - அணில்

**இழுதை** - பேய்; அறிவின்மை; அறிவிலி; பொய்

**இலைபோடல்** - உணவுக்கு இலைக்கலம் இடுதல்

**இழைபோடல்** - புடவை பொத்துதல்; இழையிட்டு தைத்தல்

**உலத்தல்** - அழிதல்; காயவைத்தல்; கழிதல்; நீங்குதல்; குறைதல்; சாதல்; முடிவு பெறுதல்.

**உலப்பல்** - உலப்புதல்

**உலப்புதல்** - அலப்புதல்; ஆர்த்தல்

**உலம்பல்** - ஒட்சித்தல்; ஒலித்தல்

**உலவல்** - உலவுதல்

**உலுவம்** - வெந்தயம்

**உலைக்களம்** - கொல்லன் உலைக்கூடம்; உலோகங்கள் உருக்கும் இடம்

**உறல்** - அடைகை; உறவு; பரிசம்; உறுதல்; பொருந்துதல்; கிட்டல்; வருதல்; அடைதல்; அணைதல்

**எலு** - கரடி; பிஞ்சு; தோழமை

**எலும்பு** - உடலுக்கு உரம் தரும் உள்ளுறுப்பு; அஸ்தி

**ஏந்திலை** - வேல்

**ஏல்** - உணர்ச்சி; கிளிஞ்சில்; பொருத்தம்.

**ஏலை** - ஏலம்.

**ஓலுகு** - சாய்வு; திண்டு

**உழத்தல்** - செய்தல்; பயிலுதல்; பழகுதல்; முயலுதல்; வெல்லுதல்; வருந்துதல்; பட்டனுபவித்தல்; துவைத்தல்

**உழப்பல்** - குழப்பிப் பேசல்; பழகல்

**உழப்புதல்** - மழுப்புதல்; குழப்பிப் பேசுதல்; போலிவாதஞ் செய்தல்; காலங்கடத்துதல்

**உழம்பல்** - ஒலித்தல்; குழம்பல்; பிதற்றல்

**உழவல்** - அசைதல்; ஆடுதல்; அலைந்து திரிதல்; சுழலல்; மனஞ் சுழலல்

**உழுவம்** - எறும்பு

**உழைக்கலம்** - பொன், வெள்ளி முதலியவற்றால் செய்த ஆளும் பாண்டங்கள்.

**உறழ்** - இடையீடு; ஒப்பு; காலம்; பெருக்கம்; வாது.

**எழு** - தூண்; படைக்கல வகை; கதவை உள் வாயிற்படியில் தடுக்கும் மரம்.

**எழும்பு** - துயிலெழும்பு; தூக்கு; உயிரோடெழு; உயரென்னேவல்.

**ஏந்திழை** - அழகிய அணிகலன்

**ஏழ்** - ஏழு

**ஏழை** - வறியவன்; அறியாமை; அறிவிலான்(ள்); பேதை; பெண்

**ஓழுகு** - உயரம்; ஒழுங்கு; நீளம்; நில வரலாறு கூறும் கணக்கு; கோயில் நடைமுறை வரலாறுகளை விளக்கும் நூல்; வண்டி; வரிசை.

| | |
|---|---|
| **ஒலுங்கு** - கொசு; பெருங்கொசு | **ஒழுங்கு** - வரிசை; நிரை; நேர்மை; முறை; நன்னடை; விதி; கட்டளை; திரள்; அளவு காட்டும் நில விவரக் கணக்கு |
| **கடுமலை** - காரீய மலை | **கடுமழை** - பெருமழை; கனத்த மழை; |
| **கருவிலி** - ஒரு வகைப் பாம்பு | **கருவிழி** - கண்மணி |
| **கலப்பு** - கலத்தல்; உறவாகுகை; புணர்ச்சி; கலந்து கட்டியாதல் | **கழப்பு** - சோம்பல்; கள்ளத்தனம் |
| **கலால்** - கள் | **கழால்** - கழுவுதல்; களைதல்; கழலுதல் |
| **கலிகாலம்** - கலியுகம் | **கழிகாலம்** - இறந்தகாலம் |
| **கலினி** - திப்பிலி; கைம்பெண் | **கழினி** - இடுதிரை |
| **கலுகுலுத்தல்** - பல சிற்றொலியில் உண்டான ஒலி | **கழுகுழுத்தல்** - நொதுநொதுத்தல் |
| **கன்மலை** - பெரும் பாறையாலான மலை; படிக்காரம் | **கன்மழை** - ஆலங்கட்டி மழை |
| **கன்முலை** - இறுகிய பசுமடி | **கன்முழை** - மலைக்குகை |
| **கால்** - நாலில் ஒன்று; தமிழில் நாலில் ஒன்றைக் குறிக்கும் 'வ' என்னும் பின்ன எண் குறி; பாதம்; பூவின்தாள்; அடிப்பாகம்; எழுத்தின் கால்; தேருருள்; வண்டி; கோல்; குறுந்தறி; நெசவுத் தறியின் மிதி; கைப்பிடி; தூண்; பற்றுக்கோடு; முளை; மரக்கன்று; மகன்; இனமுறை; பிறப்பிடம்; வாய்க்கால்; பிரிவு; வழி; நடை; இடம்; வனம்; முனை; மரக்கால்; அளவு; கதிர்; மழைக்கால்; காற்று; வாதரோகம்; ஐம்பூதம்; பொழுது; செவ்வி; தடவை; காலன்; கருநிறம்; ஏழனுருபுள் ஒன்று; ஒருவினையெச்ச விகுதி; ஒரு முன்னொட்டு. | **காழ்** - மரவயிரம்; மனவுறுதி; கட்டுத்தறி; தூண்; ஓடந்தண்டு; இரும்புக்கம்பி; யானைப் பரிக்கோல்; கதவின்தாழ்; விறகு; காம்பு; கழி; இரத்தினம்; முத்து; பளிங்கு; பூமாலை; மணிவடம்; நூற்சரடு; விதை; கொட்டை; கருமை; குற்றம். |

**கிலம்** - சிதைந்தது; சிறுமை; புன்மை

**குலவு** - வளைவு

**குலாம்** - அடிமை

**குலிசி** - இந்திரன்

**குலை** - கொத்து; காய்க்குலை; ஈரற்குலை முதலியன; செய்கரை; பாலம்; வில்லின்குதை; நாண்.

**குலைகுலைதல்** - அச்சத்தால் நடுங்குதல்

**குலைதல்** - அவிழ்த்தல்; கலைதல்; நிலைகெடுதல்; மனங்குழைதல்; நடுங்குதல்; அழிதல்; சினக்குறிப்புக் காட்டுதல்.

**குலைப்பு** - குலைத்தல்; நடுக்கம்

**குலையல்** - அச்சக்குறிப்பு; நடுக்கம்

**குலைவு** - குலைதல்

**கெலி** - அச்சம்; ஆசை; பெருவயிறு

**கோகலி** - கடம்பரமரம்

**சலக்கு** - நவச்சாரம்

**சலங்கு** - கட்டுப்படகு; முத்துச்சலாபம்.

**சேல்** - கெண்டைமீன்

**சேலம்** - ஆடை; ஓரூர்

**தலையணி** - தலையில் அணியும் அணிவகை

**தவல்** - குறைவு; கேடு; குற்றம்; இறப்பு; வறுமையால் வருந்துகை.

**கிழம்** - முதுமை; முதுமை அடைந்தவர்

**குழவு** - இளமை

**குழாம்** - கூட்டம்; சபை

**குழிசி** - பானை; மிடா; வண்டியின் குடம்

**குழை** - குண்டலம்; தளிர்; சேறு; துளை; காது; குழல்; காடு; வானம்; நெய்தல்; சங்கு

**குழைகுழைதல்** - குழம்பிக் கிடத்தல்

**குழைதல்** - குழையச் செய்தல்; ஒன்றாய்க் கலத்தல்; தழையச் செய்தல்; திரட்டுதல்; இளகுவித்தல்; வளைத்தல்; அசைத்தல்.

**குழைப்பு** - குழைத்தல்

**குழையல்** - இளகி ஒன்றுபட்டிருப்பது

**குழைவு** - அணைதல்; இளக்கம்; உருக்கம்; கலப்பு; சேர்மானம்; வளைவு; வாடல்

**கெழி** - நட்பு

**கோகழி** - திருவாவடுதுறை என்னும் சிவத்தலம்

**சழக்கு** - குற்றம்; தீமை; பயனின்மை; தளர்ச்சி பொய்.

**சழங்கு** - முதுமைத் தளர்ச்சி

**சேழ்** - மேலிடம்

**சேழம்** - மீதி

**தழையணி** - தலையாலான உடை

**தவழ்** - ஊர்ந்து செல்

| | |
|---|---|
| **தாலுகை** - மேனாப்பல்லக்கு | **தாழுகை** - தாழ்தல் |
| **திருவாலி** - புரட்டன் | **திருவாழி** - திருமாலின் சக்கரம்; மோதிரம் |
| **துலா** - நிறைகோல்; ஏற்றமரம்; திராவி; தூண் மேல் உள்ள போதிலின் கீழ் வாழைப்பூ வடிவில் அமைந்த அலங்கார உறுப்பு; துலா ராசி; வண்டி ஓர்க்கால். | **துழா** - துழாவுதல்; துழாவென்னேவல் |
| **தொலித்தல்** - உமி அல்லது தோடு போக இடித்தல்; உரித்தல்; புடைத்தல். | **தொழித்தல்** - கோபித்தல்; ஒலித்தல் |
| **தோலம்** - அசைவு; ஒரு நிறை | **தோழம்** - மாட்டுக்கொட்டில்; கடல்; பேரெண் |
| **தோலன்** - தழுக்குணி. | **தோழன்** - நண்பன் |
| **நாலல்** - நுணாமரம்; நுணாக் கொடி; தணக்கமரம்; முட்டைக் கோங்கிலவு மரம்; வால் முட்டைக்கோங்கு என்னும் மரம். | **நாழல்** - புலிநகக்கொன்றை மரம்; மயிர்க்கொன்றை மரம்; பொன்னாவிரை; குங்கும மரம்; கோங்கு மரம்; மர வயிரம்; ஆண் மரம்; மல்லிகை வகை |
| **நாலிகை** - மூங்கில் | **நாழிகை** - கால அளவு; அறுபது விநாடி கொண்ட கால அளவு; நாடா; உத்திரட்டாதி நாள்; கோயிற்பகுதி |
| **நீர்க்கோலி** - தண்ணீர்ப் பாம்பு | **நீர்க்கோழி** - நீர்வாழ் பறவை |
| **பலம்** - வலி; வேகம்; படை; உறுதி; பருமன்; நெற்றி; இலை; நிறைவகை; இறைச்சி; நிமிடம்; கனி; காய்; கிழங்கு; பயன்; பொன்; வெட்பாலை; சாதிக்காய்; கேடகம்; மகளிர் சூதகம்; வட்டத்தின் பரப்பு; ஆயுதநுனி; செல்வாக்கு; கலப்பையின் கொழு; கணித உறுப்புகளுள் ஒன்று | **பழம்** - கனி; வயது முதிர்ந்தோன்; கைகூடுகை; ஆட்டக்கெலிப்பு; முக்கால். |

**பலனம்** - கனி கொடுத்தல்

**பலி** - வேள்வி முதலியவற்றில் தேவர், தென்புலத்தார் முதலியோரை முன்னிட்டு இடும் உணவுப் பொருள்; பலியிடுதற்குரிய உயிரினம் முதலியன; காக்கை முதலிய உயிரினங்கள் உண்ண இடும் சோறு, பூசையில் அருச்சிக்கும் பூ முதலியன; சாம்பல்; திருநீறு; கப்பம்; மாவலிச் சக்கரவர்த்தி; பலிப்பது; காய்கனிகளுள்ள மரம்; காக்கை; மரவகை; கந்தகம்; பலீன் சடுகுடு என்னும் விளையாட்டு வகை.

**பலிசை** - ஊதியம்; இலாபம்; வட்டி.

**பலித்தல்** - நேர்தல்; பயன்விளைத்தல்; செழித்தல்; மிகுதல்; கொடுத்தல்.

**பலியிடுதல்** - பலி செலுத்துதல்

**பழனம்** - வயல்; மருதநிலம்; பொய்கை

**பழி** - குற்றம்; நிந்தை; அலர்; குறை; பழிக்குப் பழி; பொய்; பகைமை; ஒன்றுக்கும் உதவாதவன்

**பழிசை** - இகழ்ச்சி

**பழித்தல்** - நிந்தித்தல்; புறங்கூறல்

**பழியிடுதல்** - பழியேற்றுதல்

**பால்** - குழவி, குட்டி முதலியவற்றை ஊட்டத் தாய் முலையின்று சுரக்கும் வெண்மையான நீர்மப்பொருள்; பிணத்தை அடக்கம் பண்ணின மறுநாள் அவ்விடத்தில் பாலும் நவதானியமும் சேர்த்துத் தெளிக்கும் சடங்கு; மரம் முதலியவற்றில் இருந்து வடியும் நீர்மப் பொருள்; வெண்மை; சாறு பகுதி; அம்மை முதலியவற்றில் இருந்து கசியும் சீழ்; பிரித்துக் கொடுக்கை; பாதி; பக்கம்; வரிசை; குலம்; திக்கு; குடம்; குணம்; உரிமை; இயல்பு; ஊழ்; தகுதி; ஐம்பாற்பிரிவு; ஒருமை பன்மை என்ற இருவகைப் பாகுபாடு; அகத்திணை புறத்திணை என்ற பாகுபாடு; இடையர் குறும்பர்களின் வகை.

**பாழ்** - அழிவு; இழப்பு; கெடுதி; இழிவு; அந்தக் கேடு; வீண்; வெறுமை; இன்மை; ஒன்றுமில்லாத இடம்; தரிசுநிலம்; குற்றம்; வானம்; மூலப்பகுதி; புருடன்.

**பாலாக்குதல்** - சாதுவாக்குதல்; பங்கிடுதல்

**பாழாக்குதல்** - அழித்தல்; கெடுத்தல்; பாழாக்குதல்

**பிலா** - பலாமரம்

**பிழா** - ஓலைக்கலம்; கொள்கலம்

**புகல்வு** - மனச் செருக்கு; விருப்பம்; புகலுதல்.

**புகழ்வு** - புகழ்ச்சி

**புகலுதல்** - சொல்லுதல்; விரும்புதல்; தெரிதல்; ஒலித்தல்; மகிழ்தல்

**புகழ்தல்** - உயர்த்திக் கூறுதல்; துதித்தல்; பாராட்டுதல்

**புலக்கம்** - வழக்கம்

**புழக்கம்** - அறிமுகம்; பழக்கம்; தோற்றம்; இடைவெளிவிட்ட தன்மை

**புலு** - பத்தைக் குறிக்கும் குழூஉக் குறி.

**புழு** - கிருமி; கரு

**புலை** - இழிவு; அழுக்கு; தீட்டு; தீயநெறி; பொய்; ஊன்; கீழ்மகன்; தீநாற்றம்.

**புழை** - துளை; குழாய்; சிறுவாயில்; வாயில்; காட்டுவழி; ஒடுக்க வழி; சாளரம்; ஏவறை; நரகம்; அளறு.

**புறக்கால்** - புறவடி

**புறக்காழ்** - பனை முதலியவற்றில் உள்ள வெளி வயிரம்; பெண் மரம்.

**பூல்** - செடிவகை; மரவகை

**பூழ்** - காடைவகை; கானாங்கோழி; துளை

**பெருவலி** - மிகு வலிமையுடையது; பெருநோவு

**பெருவழி** - நெடுஞ்சாலை; வீட்டுநெறி

**பொன்மலை** - பொன்வரை; மாமேரு மலை; அத்தகிரி; இமயமலை; முப்புரங்களுள் ஒன்று; ஓர் ஊர்.

**பொன்மழை** - புட்கலாவர்த்தம் என்னும் முகில் பொழியும் சொன்னமழை

**போல்வு** - போலுதல்

**போழ்வு** - பிளவு

**மரக்கால்** - முகத்தலளவைக் கருவி; ஓர் அளவு வகை; ஒரு மரக்கால் விதைப்பாடு; ஒரு குறுணி; ஆண்டு மழையின் அளவு; மரத்தால் செய்த பாதம்; திருமால் கூத்துவகை; கொற்றவை மரத்தால் செய்த காலைக் கொண்டு ஆடிய கூத்து; உப்பளம்; ஆயிலிய நாள்; சோதி நாள்.

**மரக்காழ்** - மரவயிரம்

**மலம்** - அழுக்கு; பவ்வீ; அக்கிலம்; தீட்டு; மூத்திரம் முதலிய உடல் மாசு; வண்டல்; துரு; மும்மலம்; பாவம்; கருப்பூரம்.

**மழம்** - இளமை

**மலை** - ஈட்டம்; உவமை; பருப்பதம்; மலையென்னேவல்

**மழை** - மேகத்தினின்று பொழியும் நீர்; நீருண்ட மேகம்; பெய்யும் நிலையில் கருநிறத்தோடு மேகத்தில் இருந்து இறங்கும் நீர்க்கால்; நீர்; கருமை; குளிர்ச்சி; மிகுதி.

**மலைத்தல்** - மாறுபடுதல்; பொருதல்; மயங்குதல்; வருந்துதல்; திகைத்தல்; வியத்தல்

**மழைத்தல்** - மழை நிறைந்திருத்தல்; கருநிறமாதல்; குளிர்தல்; மழை பெய்தல்

**மலைதாங்கி** - அரிவாள்மனைப் பூண்டு; செடிவகை; வட்டத் திருப்பி.

**மழைதாங்கி** - கொங்காணி; குடை

**முக்கால்** - மூன்றாம் முறை; மூன்று முறை; நான்கில் மூன்று பங்குடைய பின்னவெண்; ஒரு சந்த வகை; இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்கள். காலை, உச்சி, மாலை என்னும் ஒரு நாளின் மூன்று வேளை.

**முக்காழ்** - மூன்று கோவையான முத்துவடம்

**முக்காலி** - மூன்று கால் பீடம்

**முக்காழி** மூன்று கொட்டையுள்ள பனம்பழம் முதலியன

**முப்பால்** - அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகள்; முப்பாலை விரித்துக் கூறும் திருக்குறள்; ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்பன; காய்ச்சுப் பால், திரட்டுப்பால், குழம்புப்பால் என்னும் மூவகைப் பால்; தாய்ப்பால், ஆவின்பால், ஆட்டுப்பால் என்னும் மூவகைப் பால்.

**முப்பாழ்** - குலத்திற்கு உண்டாகும் வெயிற்பாழ்; வெள்ளப்பாழ்; குடிப்பாழ் என்னும் மூவகைக்கேடுகள் உடம்புக்குள் சூனியமான மூன்று வகைக் கேடுகள்.

**மெலுக்கு** - வெளியலங்காரம்; மென்மை; விழிப்பு.

**மெழுக்கு** - சாணம்; மெழுகுதல்; மெழுகும் பொருள்; மருந்துவகை; தேனடையின் சக்கை

**மேலகம்** - மாடி.

**மேலை** - மேலிடமான; வருங்காலம்; மேற்கு; முந்தின; அடுத்த; முன்பு; அஞ்சனக்கல்; மை.

**மேழகம்** - கவசம்; ஆடு

**மேழை** - கஞ்சி; காடி; கொம்பில்லாத விலங்கு

**மொலுமொலெனல்** - விடாது பேசற் குறிப்பு; முணுமுணுத்தற் குறிப்பு; இரைச்சற்குறிப்பு; தினவெடுத்தற் குறிப்பு; சொறிதற் குறிப்பு

**மொழுமொழெனல்**- கொழு கொழுப்பாய் இருத்தல்

**மோலி** - மயிர்முடி; சடைமுடி; மணிமுடி

**மோழி** - குழம்புவகை; மேழி

**வலித்தல்** - கட்டாயப்படுத்துதல்; பற்றிக் கொள்ளுதல்; இடர்ப்பட்டுப் பொருள் கொள்ளுதல்; அழுத்தி உச்சரித்தல்; மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்குதல்; துணிதல்; வற்றச் செய்தல்; திண்ணியதாதல்; வற்றுதல்; நோவுண்டாதல்; முயலுதல்; கொழுத்தல்; சொல்லுதல்; ஆலோசித்தல்; சுருத்தோடு செய்தல்; உடன்படுதல்; இழுத்தல்; வளைத்தல்; அழகுகாட்டுதல்; துடுப்பால் படகு தள்ளுதல்; கப்பற்பாய் தூக்குதல்; புகை குடித்தல்; இசிவு காணுதல்; ஏங்குதல்; மெல்லொற்றை வல்லொற்றாக மாற்றுதல்.

**வழித்தல்** - வடித்தல்; அரைத்த சந்தனம் முதலியவற்றைத் திரட்டி எடுத்தல்; பூசுதல்; துடைத்தெடுத்தல்; வலிக்குதல்; சவரம் பண்ணுதல்; ஆடையைத் திரைத்தல்

**வலிதல்** - திண்ணியதாதல்; உச்சரிப்பில் அழுத்தமாதல்; மெல்லெழுத்து வல்லெழுத்தாதல்; முயலுதல்; உய்தல்; தங்குதல்; கட்டாயப்படுத்தல்; துணிதல்; மீறுதல்; இழுத்தல்.

**வழிதல்** - நிரம்பி வடிதல்; தோல் வழலுதல்

**வலிபடுதல்** - பற்றியிழுக்கப்படுதல்; மாறுபடுதல்; வலிமையறுதல்

**வழிபடுதல்** - பின்பற்றுதல்; பயணமாதல்

**வலுத்தல்** - வன்மையாதல்; திடப்படுதல்.

**வழுத்தல்** - வாழ்த்தல்; துதித்தல்; சொல்லல்.

**வெண்கால்** - யானைத் தந்தத்தால் செய்த கட்டில் முதலியவற்றின் கால்.

**வெண்மலை** - கைலைமலை.

**வெண்காழ்** - மரத்தின் உள்ளீடு; முயலெறியுந்தடிவகை

**வெண்மழை** - மழை பெய்யுந் நிலையை அடையாத வெற்று மேகம்.

# ல/ழகர/ளகர வேறுபாட்டுச் சொற்கள்

**அகலி** - அகலியை

**அலகம்** - ஆனைத்திப்பிலி; வேப்பலகு.

**அகழி** - கோட்டையைச் சுற்றியுள்ள ஆழமான நீர்நிலை ; மதில் சூழ் கிடங்கு; ஓடை; கயம்; கேணி; கிடங்கு; வாயகன்ற பாத்திரம்.

**அழகம்** - பெண்டிர் கூந்தல்;

**அகளி** - தாழி; மிடா; பாண்டம்.

**அளகம்** - பெண்மயிர்; மயிர்க்குழற்சி; பன்றிமுள்; மழைநீர்; வெள்ளெருக்கு; நீர்.

| | | |
|---|---|---|
| **அலகு** - எண்; அளவுகருவி; பலகறை; மகிழம்விதை; நென்மணி; பயிர்க்கதிர்; ஆயுதம்; ஆயுதத்தின் அலகு; கூர்மை; பறவை மூக்கு; தாடை; உயிர்களின் கொடிறு; கைம்மரம்; நூற்பாவின் அலகு; துடைப்பம்; பொன்னாங்காணி; அறுகு; நுளம்பு; இலட்சம் பாக்கு; ஆண்பனை; அகலம்; குற்றம். | **அழகு** - வனப்பு; நூல் வனப்புள் ஒன்று; சுகம்; சிறப்பு; நற்குணம்; கண்டசருக்கரை | **அளகு** - கோட்டான்; கோழி; மயில் இவற்றின் பெண்; சேவல்; கார்த்திகைநாள். |
| **அலம்** - துன்பம்; தேள்; விருச்சிகராசி; அமைவு; போதும்; திருப்தி; கலப்பை; நீர். | **அழம்** - பிணம். | **அளம்** - உப்பளம்; நெய்தல் நிலம்; கடல்; களர்நிலம்; செறிவு. |
| **அலவல்** - இழை விலக்கமாய் நெய்யப்பட்டது; அலமரல்; கந்தைச்சீலை; விபச்சாரம். | **அழவல்** - அழலுதல். | **அளவல்** - எட்டுதல்; கலத்தல். |
| **அலறு** - அலறென்னேவலும் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும். | **அழறு** - சேறு. | **அளறு** - குழைசேறு; குழம்பு; காவிக்கல்; நீர்; நரகம். |

**அலி** - ஆண் பெண் அல்லாதது; பலராமன்; யமன்; உழவன்; காகம்;குயில்; தேன்; விருச்சிகராசி; நறுவிலிமரம்; வயிரம் இல்லாதமரம்; தீ; சோறு.

**அலை** - நீர்த்திரை; கடல்; திரையடித்து ஒதுக்கிய கருமணல்; நிலம்; மது; கண்டனம்; வருத்துகை; மிகுதி; கொலை.

**ஆல்** - அகற்சட்டி; மரவகை; நீர்: வெள்ளம்; கார்த்திகை; நஞ்சு; ஆமெனல்; வியப்பு; இரக்கம்; தேற்றம்; இவற்றைக் குறிக்கும் இடைச்சொல்; ஓர் அசைநிலை; மூன்றாம் வேற்றுமையுருபு; தொழிற்பெயர்விகுதி; எதிர்மறை வியங்கோள் விகுதி; எதிர்கால வினையெச்ச விகுதி.

**அழி** - கேடு; வைக்கோல்; வைக்கோல் இடும் கிராதி; கிராதி; வண்டு; மிகுதி; வருத்தம்; கழிமுகம்; இரக்கம்.

**அழை** - பெயரிட்டுக் கூப்பிடு; வரச்செய்; ஏவலுமாம்.

**ஆழ்** - மூழ்கு என்னும் ஏவல்.

**அளி** - அன்பு; அருள்; ஆசை; வரவேற்பு; எளிமை; குளிர்ச்சி; கொடை; காய்; வண்டு; தேன் வண்டுகொல்லி; கருந்தேனி; மாட்டுக்காடி; தேள்; கிராதி: மர்வுரி மரம்.

**அளை** - தயிர்; மோர்; வெண்ணெய்; புற்று; பொந்து; குகை; ஏழாம் வேற்றுமைஉருபு.

**ஆள்** - ஆண்மகன்; திறமையுடையவன்; வீரன்; காலாள்; கணவன்; தொண்டன்; ஆட்செய்கை; வளர்ந்த ஆள்: ஆள்மட்டம்; அரசு; தொட்டால் வாடி; பெண்பாற்பெயர் விகுதி; பெண்பால் வினைமுற்று விகுதி.

| | | |
|---|---|---|
| **ஆலம்** - நீர்; கடல்; மழை; மரவகை; அகலம்; ஆகாயம்; மலர்; கலப்பை; நஞ்சு; உலகம்; கருமை; புன்கு; மாவிலிங்கம்; ஈயம்; துரிசு. | **ஆழம்** - ஆழ்ந்திருக்கை; ஆழ்ந்த கருத்து. | **ஆளம்** - ஆலாபனம்; இசைவிரித்துப் பாடுகை. |
| **ஆலல்** - ஒலி; மயிற்குரல். | **ஆழல்** - கறையான். | **ஆளல்** - ஆளுதல்; மீன்வகை. |
| **ஆலி** - மழைத்துளி; ஆலங்கட்டி; தலைப்பெயல்மழை; காற்று; பூதம்; கள். | **ஆழி** - சக்கரப்படை; ஆணைச்சக்கரம்; கட்டளை; வட்டம்; மோதிரம்; சக்கரம்; குயவன் திகிரி; யானைக் கைந்துனி; கடல்; கடற்கரை; ஆளி; குன்றி; கணவனைப் பிரிந்து மகளிர் இழைக்கும் கூடற்சுழி. | **ஆளி** - ஆள்வோன்; செடிவகை; கிளிஞ்சல் வகை; யானையாளி; சிங்கம்; கீரைவகை; சிறுமுட்டை; வழுக்கல்; வைப்பகம்; தூய்மையான கருத்து; பாங்கி; பாலம்; பயனின்மை; ஒழுங்கு. |
| **ஆலுதல்**- ஆலல்; தொங்குதல். | **ஆழுதல்** - அழுந்தல்; தாழ்தல். | **ஆளுதல்** - அடிமை கொள்ளுதல்; ஆட்சி பண்ணுதல்; காவற்கூடு |
| **இதல்** - கவுதாரி; காடை; சிவன். | **இதழ்** - பூவின்தோடு; உதடு; கண்ணிமை; பனையேடு; மாலை; பாளை; சாதி பத்திரி; கதவின் இலை; புத்தகத்தின் தாள். | **இதள்** - பாதரசம் |

**இலி** - இல்லாதவன்(ள்); இல்லாதது.

**இழி** - இறங்கு

**இளி** - இகழ்ச்சி; குற்றம்; சிரிப்பு; இகழ்ச்சிக் குறிப்பு; நகை; யாழின்; நரம்புகளுள் ஒன்று; ஒருவகைச் சுரம்; இழிவு.

**இலை** - மரம் செடிகளின் இலை; பூவிதழ் வெற்றிலை; சுதவின் இலை; படலை மாலை; அணிகளின் இலைத்தொழில்; பச்சிலை சக்கரத்தின் ஆரம்; ஆயுத வலகு.

**இழை** - நூல்; நூலிழை; அணிகலன்; கையிற்கட்டுங் காப்பு.

**இளை** - தலைக்காவல்; காவற்காடு; கட்டுவேலி; பூமி; இளமை; இளையான்; தம்பி; தங்கை; மேகம்; பசு; திருமகள்; காவல்.

**இலைத்தல்** - சோர்தல்; சுவை குறைதல்; சாரமின்மை; தன்மை குன்றுதல்; பச்சை நிறமாதல்.

**இழைத்தல்** - செய்தல்; குழைத்தல்; தூற்றல்; செதுக்குதல்; மூச்சிரைத்தல்; கூறுதல்; நுண்ணியதாக ஆராய்தல்; பூசுதல்; வஞ்சினங் கூறுதல்; கலப்பித்தல்; அமைத்தல்; இழையாக்கல்; மாத்திரை முதலியன உரைத்தல்; பதித்தல்.

**இளைத்தல்** - சோர்தல்; தளர்தல்; மெலிதல்; பின்னிடுதல்; இரங்கல்; தோற்றுப் போதல்; விளங்குன்றுதல்.

**உலப்பு** - அழிவு; முடிவு; சாவு; குறைவு; அளவு; உதவுகை.

**உழப்பு** - முயற்சி; ஊக்கம்; வருத்தம்; பழக்கம்; வலிமை.

**உளப்பு** - நடுக்கம்

**உலம்புதல்** - ஒலித்தல்; பேரொலி செய்தல்; ஆரவாரம்; அலப்புதல்.

**உலறுதல்** - காய்தல்; வாடுதல்; அழிதல்; சிதைதல்; பொலிவழிதல்; சினத்தல்; உரைதடுமாறல்; வருந்துதல்.

**உலு** - தினை முதலியவற்றின் பதர்.

**உலுத்தல்** - உதிர்தல்

**உலை** - உலைக்களம்; கொல்லன் உலை; நெருப்பு உள்ள அடுப்பு; பாகஞ்செய்ய வைக்கும் நீர்உலை; கம்மியர் உலை; உலைப்பாண்டம்; உலைதல்; உலைச்சாலை; அரிசியிடுவதற்கு அடுப்பில் வைக்கும் நீர்; மனநடுக்கம்.

**உலை(வி)** - உலை என் ஏவல்; அழி; கெடு; கலை; வருத்து.

**உழம்புதல்-** பல ஒலிகள் கலந்தொலித்தல்; குழம்புதல்.

**உழறுதல்** - கலங்குதல்; அளைதல்; கலக்குதல்; உலாவல்; மோதும்படி தள்ளுதல்; உருக்காட்டுதல்.

**உழு** - பிள்ளைப்பூச்சி; உழவு

**உழுத்தல்** - பதனழிதல்.

**உழை** இடம்; பக்கம்; யாழின் ஒரு நரம்பு; மான்; பசு; பூவிதழ்; ஏழனுருபு; உவர்மண்; விடியற்காலம்; கதிரவன்; மனைவியருள் ஒருத்தி; வாணாசுரன் மகள்; இடைச்சுரம்.

**உழை(வி)** - உழை என்னும் ஏவல்; பாடுபடு.

**உளம்புதல்** - அலைத்தல்; ஓலமிடுதல்.

**உளறுதல்** - உளறுதல்; தடுமாறிப் பேசுதல்; ஆராவரித்தல்; பிதற்றுதல்; குழறுபடையான மொழி; சுனாக்கண்டு பிதற்றுதல்.

**உளு** - மரத்தை அரிக்கும் புழுவகை; உளுத்தது.

**உளுத்தல்** - மரம் முதலியன புழுவால் அரிக்கப்பட்டுக் கெடுதல்; சிதைந்து போதல்.

**உளை** - குதிரை, சிங்கம் முதலியவற்றின் பிடரிமயிர்; குதிரைத் தலையாட்டம் என்னும் அணி; தலை; ஆண்மயிர்; சேறு; பேசலால் எழும் ஒலி; அழுகை; எடுத்தவோசை.

**உளை(வி)** - உளையென்னும்ஏவல்; அழுகை.

| | | |
|---|---|---|
| **உலைத்தல்** - அலைத்தல்; அழித்தல்; கெடுத்தல்; கலைத்தல்; முறியடித்தல்; மனத்தைக் கலக்கல். | **உழைத்தல்** - பாடுபடுதல்; வருந்தல்; ஈட்டுதல்; பேசலால் எழும் ஒலி. | **உளைத்தல்** - வருந்துதல்; வெறுத்தல்; அழைத்தல்; ஊளையிடுதல். |
| **உலைதல்** - அலைதல்; நிலைகுலைதல்; அழிதல்; கெடுதல்; பலங்குறைதல்; மனங்கலங்கல்; வருந்துதல்; அஞ்சுதல்; கலைந்து போதல். | **உழைதல்** - துன்பமுறுதல்; இரைதல். | **உளைதல்** - மனம் வருந்துதல்; வயிறு உளைதல்; குடைச்சல்; நோவடைதல்; பிரசவ வேதனைப்படுதல்; சிதறிப்போதல்; அழிதல்; தோற்றல்; ஊளையிடுதல். |
| **உலைப்பு** - அலைப்பு; முறியடிக்கை; வருத்துகை; அழிவு. | **உழைப்பு** - முயற்சி; வருத்திப்பாடுபடுகை; வருந்தியீட்டுகை; சம்பாத்தியம். | **உளைப்பு** - வயிற்றுவலி; உடம்புக் குடைச்சல்; வருத்தம்; அழைப்பு; ஒலிப்பு. |
| **உலைவு** - அழிவு; நடுக்கம்; வறுமை; கலக்கம்; தோல்வி; அலைவு; ஊக்கக்குறைவு. | **உழைவு** - யாழின் உள்ளோசை. | **உளைவு** - வருத்தம்; வலிப்பு; வயிற்றுளைவு; குடைவு; குடைச்சல்நோவு. |
| **ஒலி** - ஓசை; ஆரவாரம்; இடி; காற்று; எழுத்தொலி; சொல். | **ஒழி** - அழி என்னும் ஏவல். | **ஒளி** - சோதி; விளக்கம்; சூரியன்; சந்திரன்; விண்மீன்; மின்னல்; வெயில்; கண்மணி; பார்வை; அறிவு; மதிப்பு; தோற்றம்; அழகு; நன்மதிப்பு; கடவுள்; புகழ். |

| | | |
|---|---|---|
| **ஒலித்தல்** - ஓசையுண்டாக்கல்; ஆரவாரித்தல்; ஆடை வெளுத்தல்; விளக்குதல்; தழைத்தல்; சந்தித்தல். | **ஒழித்தல்** - நீக்குதல்; முடித்தல்; அழித்தல்; ஒதுக்குதல்; குறைத்தல்; தவிர்த்தல்; தீர்த்தல்; சொல்லுதல்; காலிசெய்தல். | **ஒளித்தல்** - மறைத்தல்; மனத்திலடக்குதல்; பதுக்குதல். |
| **ஒலிதல்** - தழைத்தல். | **ஒழிதல்** - அழிதல்; சாதல்; நீங்கல்; தவிர்த்தல்; விடுதல்; வெறுமையாதல்; எஞ்சுதல்; தங்குதல்; ஓய்தல். | **ஒளிதல்** - மறைதல்; தவிர்த்தல். |
| **ஒலிப்பு** - பேரொலி; பெருஞ்சத்தம். | **ஒழிப்பு** - விலக்கு; தவிர்ப்பு | **ஒளிப்பு** - மறைவு; பதுக்கி மறைகை; ஒளிக்கை; மனத்துள் அடக்குகை. |
| **ஒலிவு** - ஒரு மரவகை. | **ஒழிவு** - மிச்சம்; நீக்கம்; முடிவு; பற்றின்மை; மறைவு; குறைவு; ஒழிகை. | **ஒளிவு** - ஒளிர்வு; மறைவிடம். |
| **கலகம்** - குழப்பம்; சச்சரவு; ஒருவன் மேல் பிறர்க்குப் பகை உண்டாகும்படி தூண்டிவிடுகை; பேரொலி; நாட்டுக்குழப்பம்; போர்; ஒரு மீன்; கலகக்குருவி. | **கழகம்** - கல்வி பயிலும் இடம்; கல்விச் சங்கம்; படை; மல் முதலியன பயிலும் இடம்; சூது; சூதாடும் இடம்; ஓலக்கம்; புலவர் கூடிய சபை. | **களகம்** - பெருச்சாளி; நெற்கதிர்; சுண்ணாம்புச் சாந்து; அன்னம். |
| **கலங்கு** - மயங்கு என்னும் ஏவல். | **கழங்கு** - கழற்சிக்காய்; கழங்குப்பருவம்; கழற்சி விளையாட்டு. | **களங்கு** - களங்கம்; பாதரசம் முதலிய உலோகங்களால் உண்டாக்கிய குகை. |

| | | |
|---|---|---|
| **கலப்பு** - கலத்தல்; உறவாகுகை; புணர்ச்சி; கலந்து கட்டியாதல். | **கழப்பு** - சோம்பல்; கள்ளத் தனம். | **களப்பு** - கடலில் ஆழமில்லாத இடம். |
| **கலி** - ஒலி; கடல்; வலிமை; செருக்கு; தழைக்கை; துளக்கம்; மனவெழுச்சி; கலிப்பா; இடைச்சங்கநூல்; கலித்தொகை; கலிபுருடன்; கலியுகம்; துன்பம்; வறுமை; வஞ்சகம்; போர். | **கழி** - கோல்; மரக்கொம்பு; கடலடுத்த உவர் நீர்ப்பரப்பு; நுகத்துளையில் இடுங்கழி; ஆயுதக்காம்பு; யாழின் இசையெழுப்புங் கருவி; வரிச்சல்; நூற்சுருள்; மிகுதி; ஊன்; கயிறு. | **களி** - மகிழ்ச்சி; கள் முதலியன அருந்திக் களிக்கை; தேன்; கள்; கட்குடியன்; உள்ளச் செருக்கு; யானை மதம்; குழைவு; குழம்பு; மாவாற்கிண்டிய களி; கஞ்சி; வண்டல்; உலோகநீர்; களிமண். |
| **கலித்தல்** - ஒலித்தல்; யாழொலித்தல்; செழித்தல்; உண்டாதல்; எழுதல்; பெருகுதல்; மகிழ்தல்; செருக்குதல்; விரைவாதல்; நெருங்கியிருத்தல்; நழுவுதல்; நீக்குதல். | **கழித்தல்** - நீக்குதல்; ஒதுக்குதல்; பெரிய எண்ணினின்று சிறிய எண்ணைக் குறைத்தல்; வெட்டுதல்; போக்குதல்; உருவுதல். | **களித்தல்** - மகிழ்தல்; கள்ளுண்டு வெறி கொள்ளுதல்; மதங்கொள்ளுதல்; செருக்கடைதல்; நுகர்தல். |
| **கலிப்பு** - ஒலிக்கை; பொலிவு; தரா என்னும் உலோகம். | **கழிப்பு** - ஒழிக்கை; சாந்தி கழிக்கை; குற்றந்தீர்க்கும் ஒரு சடங்கு; குற்றம்; தள்ளுண்ட பொருள்; கழித்தல். | **களிப்பு** - மகிழ்ச்சி; செருக்கு; மயக்கம்; மதவெறி; மண்ணின்பசை; சிற்றின்பம். |

| | | |
|---|---|---|
| **கலியன்** - படைவீரன்; திருமங்கையாழ்வார்; இரட்டைப் பிள்ளைகளுள் ஆண்; கலிபுருடன்; பசித்தவன்; வறிஞன்; ஆண். | **கழியன்** - நெய்தல் நில மாக்கள் | **களியன்** - குடியன். |
| **கலை** - கூறு; சந்திரனது பதினாறு கூறுகளுள் ஒன்று; ஒளி; எட்டு விநாடி அல்லது முப்பது காட்டை கொண்ட ஒரு கால நுட்பம்; அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று; கல்வி; சாத்திரம்; மொழி; சுத்தா சுத்த தத்துவம் ஏழனுள் ஒன்று; உடல்; புணர்ச்சிக்குரிய காரணங்கள்; ஆண் மான்; ஆண்குரங்கு; அரைப்பட்டிகை; மேகலை என்னும் அணி; ஆடை; நூல்; மரவைரம்; மகரமீன்; மகரராசி. | **கழை** - கரும்பு; மூங்கில்; மூங்கிற்குழாய்; வேய்ங்குழல்; ஓடக்கோல்; குத்துக்கோல்; தண்டு; புனர்பூசநாள். | **களை** - பயிருடன் வளரும் புல், பூண்டுகள்; குற்றம்; அயர்வு; சந்திரகலை; அழகு. |

| | | |
|---|---|---|
| **கவலம்** - துயரம் | **கவழம்** - கவளம்; வாயளவு கொண்ட உணவு; யானைக்கு அளிக்கும் உணவு. | **கவளம்** - வாயளவு கொண்ட உணவு; யானைக்கு அளிக்கும் உணவு; கபோலம்; யானைமதம். |
| **காலகம்** - சேங்கொட்டை | **காழகம்** - கடாரம்; ஆடை; கைக்கவசம்; கருமை. | **காளகம்** - சேங்கொட்டை; மருக்காரைச் செடி; எக்காளம்; கருமை. |
| **காலம்** - பொழுது; தக்கசமயம்; பருவம்; பருவப்பயிர்; விடியற்காலம்; முடிவுகாலம்; தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கும் முக்காலம்; இசைக்குரிய மூன்று காலம்; தாளப்பிரமாணம். | **காழம்** - **உடை; விசேடம்** | **காளம்** - கருமை; நஞ்சு; பாம்பு; எட்டி மரம்; மேகம்; நல்வினைக்குக் காரணமான பெருமழை; கழு; ஊது கொம்பு; அவுரிப்பூண்டு; சூலம்; சக்கரப்படை. |
| **காலி** - பசு; பசுக்கூட்டம்; தீயவழி; பயன் அற்றவன்; பூனைக்காலி; வெறுமை. | **காழி** - உறுதி; சீகாழி. | **காளி** - துர்க்கை; பார்வதி; சிங்கம்; கரியவள்; வாயு மூர்த்தியான காளரின் சக்தி; பதினெட்டு உபபுராணத்துள் ஒன்று; பாம்பின் நச்சுப்பற்களுள் ஒன்று; மணித்தக்காளி; எட்டிக் காட்டு முருக்கு; கக்கரி. |

| | | |
|---|---|---|
| **கிலி** - அச்சம்; பயம். | **கிழி** - கிழிபட்ட துகில்; சீலையில் எழுதிய ஓவியம்; பொற்கிழி; நிதிப்பொதி; கதிர்க்கிழி; கோவணம். | **கிளி** - கிள்ளை; பறவை வகை; கிளிவகை; கிளிமீன்; வெட்டுக்கிளி. |
| **கீல்** - உடற்பொருத்து; கதவின்கீழ்; பூசுந்தார். | **கீழ்** - கீழிடம்; கிழக்கு; பள்ளம்; முற்காலம்; குற்றம்; கயமை; இழிந்தவன்; கீழே; ஏழனுருபு; மறதி; கடிவாளம். | **கீள்** - கூறு; இடுப்பில் கட்டும் துணியாலாகிய அரைஞாண். |
| **கீல்(லு)தல்** - கிழித்தல். | **கீழ்(ழு)தல்** - கிழித்தல்; பிளத்தல்; சிதைத்தல்; தோண்டுதல்; மீறுதல்; கோடு கிழித்தல்; பறியுண்ணுதல். | **கீள்(ளு)தல்** - கிழித்தல்; உடைதல். |
| **குமிலி** - துளசி. | **குமிழி** - நீர்க்குமிழி; பாதக்குறட்டின் குமிழ்; ஊற்றுவாய்; சீழ்க்குமிழி. | **குமிளி** - காண்க: குமிழி |
| **குலகம்** - கருந்தும்பை; பேய்ப்புடல். | **குழகம்** - அழகு | **குளகம்** - மரக்கால்; ஆழாக்கு பலபாட்டுகள் ஒருவினை கொள்ளுஞ் செய்யுள்; குற்றெழுத்துத் தொடர்ந்த செய்யுள்; சருக்கரை. |

| | | |
|---|---|---|
| **குலகன்** - சிற்பவித்தையில் தேறியவன். | **குழகன்** - இளைஞன்; அழகன்; முருகன்; பிறர்க்கு இணங்குபவன். | **குளகன்** - இளைஞன் |
| **குலி** - மனைவியின் மூத்த தமக்கை; யாக்கை. | **குழி** - பள்ளம்; நீர்நிலை; கிணறு; வயிறு; பாத்தி; ஓர் எண்ணின் வருக்கம்; 33 அங்குலங்கொண்ட கோலின் சதுர நிலவளவை; கனவடி; பன்னீர்ச்சதுரம். | **குளி** - குளித்தல்; முத்துக்குளித்தல். |
| **கூலம்** - பலதானியம்; காராமணி; பண்ணிகாரம்; பாகல்; நீர்க்கரை; வரம்பு; முறை; விலங்கின் வால்; பசு; மரை; குரங்கு; குவியல்; நெல்; துவரை; முதலியவற்றிற்கு விதிக்கும் வரி. | **கூழம்** - எள்ளு | **கூளம்** - குப்பை; சண்டு; திப்பிலி. |
| **கைவலம்** - வீடுபேறு. | **கைவழம்** - வழங்குங் கைப்பழக்கம். | **கைவளம்** - கைராசி; கைப்பொருள்; செழுமை; கைத்தொழிலின் திறம். |
| **கொலு** - அரசசபை; அரசமுன்னிலை; திருவோலக்கம்; உல்லாச வீற்றிருப்பு; நவராத்திரிப் பண்டிகையில் பொம்மை முதலியவற்றை அலங்காரமாக அமைக்கை. | **கொழு** - கொழுப்பு; உலோகக்கோல்; ஏர்க்காறு; கலப்பையில் பதிக்கும் இரும்பு; துளையிடும் பெரிய ஊசி. | **கொளு** - செய்யுள் முதலியவற்றின் கருத்தை விளக்கும் சொற்றொடர்; பழுவெலும்பு; உருவுதிரையைமாட்டுங்கருவி. |

**கோல்** - கம்பு; மரக்கொம்பு; ஊன்றுகோல்; செங்கோல்; அளவுகோல்; எழுதுகோல்; ஓவியந்தீட்டுங்கோல்; முத்திரைக்கோல்; தீக்கடைக்கோல்; பிரம்பு; குதிரைச்சம்மட்டி; கொழு; அம்பு, ஈட்டி, குடை முதலியவற்றின் காம்பு; யாழ்நரம்பு; துலாக்கோல்; துலாராசி; அரசாட்சி; ஐப்பசி மாதம்; அணியின் சித்திரவேலை; தூண்டில்; இலந்தைமரம்; தெப்பம்; திரட்சி.

**கோழ்** - வழுவழுப்பு; செழிப்பு; கொழுமை.

**கோள்** - கொள்ளுகை; துணிவு; மதிப்பு; வலிமை; அனுபவம்; புறங்கூறல்; பொய்; இடையூறு; தீமை; கொலை; பாம்பு; நஞ்சு; இராகு; மேகம்; ஒளி; பரிவேடம்; குலை; இயற்கை; காவட்டம்புல்; கொழு; முன்னிலைப் பன்மை விகுதி.

**கோலம்** - அலகு; நிறம்; உருவம்; தன்மை; வேடம்; ஆபரணம்; அலங்காரம்; மா, கற்பொடி முதலியவற்றால் இடும் கோலம்; விளையாட்டு; பெருந்துன்ப்நிலை; முயற்சி; சிறு நீரோட்டம்; பன்றி; முள்ளம்பன்றி; இலந்தைமரம்; தெப்பம்; குரங்கு; பாக்கு; பீர்க்கங்கொடி; கருக்கொண்ட மகளிர்க்குச் செய்யும் வளைகாப்புச் சடங்கு; தக்கோலம்.

**கோழம்** - சங்கபாஷாணம்

**கோளம்** - உருண்டை; உயிரிகளின் உடலுக்குள் நீர் ஊறும் தசைப்பற்று.

**கோலி** - மயிர்; இலந்தைமரம்; திப்பிலி; சிறுகுண்டு போன்ற விளையாட்டுக் கருவி; சிற்றழிஞ்சில்; புன்குவகை.

**கோழி** - குக்குடம்; ஒரு பறவை; உறையூர்; விட்டில்; கோழியவரை; பன்றிமோந்தான் கிழங்கு; இடலை.

**கோளி** - கொள்வோன்; ஆலமரம்; அத்திமரம்; பூவாது காய்க்கும் மரம்; கொழிஞ்சிமரம்; நான்காம் வேற்றுமை; கைம்பெண் பெற்ற மகன்; குதிரை, கழுதைகளின் பெட்டை.

**கோலை** - மிளகு

**கோழை** - கபம்; உமிழ்நீர்; மனத்திட்பம் இன்மை; இரக்கம்; சிறு பிள்ளை.

**கோளை** - எலி; குவளை; தோழி; கோதாவரி; மனோசிலை; நீர்ச்சால்.

**சாலை** - உணவளிக்கும் அறச்சாலை; பள்ளிக்கூடம்; குதிரை, யானை முதலியவற்றின் கூடம்; பசுக்கொட்டில்; பொதுமண்டபம்; வீடு; வேள்விக்கூடம்; இருபக்கமும் மரம் செறிந்த பாதை.

**சூல்** - கருப்பம்; முட்டை; மூன்று முனையையுடை ஆயுதவகை; மேகம் நீர்நிரம்பியிருக்கை; பயிர்க்கரு; யானை, குதிரை முதலியவற்றிற்கு இடும் அலங்காரப் போர்வை.

**சூல்தல்** - அறுத்தல்; கருப்பங்கொள்ளுதல்; தோண்டுதல்.

**சாழை** - குடிசை; மகளிர் கைகொட்டி ஆடும் விளையாட்டு

**சூழ்** - ஆலோசனை; ஆராய்ச்சி; சுற்று; தலைமாலை; கடலைப்பருப்ப.

**சூழ்தல்** - சுற்றியிருத்தல்; சுற்றிவருதல்; ஆராய்தல்; கருதுதல்; சதியாலோசனை செய்தல்; தேர்ந்தெடுத்தல்; அறிதல்; பண்ணுதல்; எழுதுதல்; தாக்குதல்.

**சாளை** - ஒரு மீன்வகை; குடிசை; வழிந்துவிழும் வாய்நீர்.

**சூள்** - ஆணை; சபதம்; சத்தியம்; சாபம்; தீவட்டி

**சூள்தல்** - ஆணையிடுதல்; வஞ்சினங்கூறல்.

| | | |
|---|---|---|
| **சூலி** - கருவுற்றவள்; சூலப்படையை உடைய சிவபிரான்; சூலப்படை தரித்த துர்க்கை; சதுரக்கள்ளி. | **சூழி** - உச்சி; உச்சிக் கொண்டை; சேணம்; யானையின் முகபடாம்; நீர்நிலை; கடல்; மேலிடம். | **சூளி** - உச்சிக்கொண்டை |
| **சூலிகை** - இடிதாங்கி | **சூழிகை** - கள். | **சூளிகை** - நீர்க்கரை; செய்குன்று; யானைச்செவியடி; நிலாமுற்றம்; தலையணிவகை. |
| **சூலுதல்** - தோண்டுதல்; கருவுறுதல்; அறுத்தல். | **சூழுதல்** - சூழ்ந்திடல். | **சூளுதல்** - குடைதல்; சத்தியஞ்செய்தல். |
| **சேலம்** - ஆடை; ஓர் ஊர். | **சேழம்** - மீதி | **சேளம்** - மீதி |
| **சோலி** - செயல்; தொந்தரவு; முலைக்கச்சு; தோணியில் ஒதுக்கிடம்; இரவிக்கை வகை. | **சோழி** - பலகறை; பாம்புப் பிடாரன். | **சோளி** - இரப்போர் பை. |
| **தலம்** - இடம்; பூமி; உலகம்; தெய்வத்தலம்; ஆழம்; காடு; கீழ்; வீடு; செய்; தலை; நகரம்; இலை; உடலுறுப்பு; இதழ். | **தழம்** - தயிலம். | **தளம்** - கனம்; வெண்சாந்து; செஞ்சாந்து; தளவரிசை; உப்பரிகை; தட்டு; மேடை; பூவிதழ்; படை; கூட்டம்; சாணை பிடியாத கெம்பு; சாடி; அடிப்படை; சுண்ணாம்பு. |

**தலை** - சிரம்; முதல்; சிறந்தது; வானம்; இடம்; உயர்ந்தோன்; தலைவன்; உச்சி; நுனி; முடிவு; ஒப்பு; ஆள்; தலைமயிர்; ஏழாம் வேற்றுமை உருபு; ஓர் இடைச்சொல்; மேலே; தபால் கடிதத்தில் ஒட்டும் முத்திரைத் தலை.

**தலைதல்** - மேன்மையாதல்; கூடுதல்; மழைபெய்தல்; மிகக் கொடுத்தல்; பரத்தல்.

**தலைவலி** - தலைநோவு; தொந்தரவு.

**தால்** - நாக்கு; தாலாட்டு; பிள்ளைத்தமிழ் உறுப்புகளுள் ஒன்று.

**தழை** - இலை; தளிர்; மயிற்றோகை; மீலிக்குடை; தழையாலான மகளிர் உடை; ஒரு மாலை வகை; பச்சிலை; தழைகை; சீட்டாட்டத்தில் எண்ணிக்கையில் சேர்க்கப்படாத சீட்டு.

**தழைதல்** - தளிர்த்தல்; செழித்தல்; தாழ்தல்.

**தலைவழி** - நிரம்ப.

**தாழ்** - தாழ்ப்பாள்; சீப்பு; சுவர்ப்புறத்து நீண்ட உத்திரம்; தாழக்கோல்; திறவு கோல்; முலைக்கச்சு; நீளம்; வணக்கம்.

**தளை** - கட்டு; கயிறு; விலங்கு; பாசம்; மலர் முறுக்கு; சிறை; தொடர்பு; காற்சிலம்பு; ஆண்கள் மயிர்; வயல்; வரம்பு; யாப்புறுப்பு எட்டனுள் ஒன்று.

**தளைதல்** - பிணித்தல்.

**தலைவளி** - முதல் அழைப்பு

**தாள்** - கால், மரம் முதலியவற்றின் அடிப்பகுதி; பூ முதலியவற்றின் காம்பு; வைக்கோல்; முயற்சி; தாழ்ப்பாள்; படி; திறவுகோல்; ஒற்றைக் காகிதம்; சட்டையின் கயிறு; விளக்குத் தண்டு; விற்குதை; ஆதி; கடையாணி; வால் மீன்; சிறப்பு; கொய்யாக்கட்டை; தாடை; கண்டம்.

**தாலம்** - பனைமரம்; கூந்தற்பனைமரம்; மடல்மா; கூந்தற்கமுகு; அனுடநாள்; பூமி; நா; தட்டம்; உண்கலம்; தால வடிவிலுள்ள யானைக்காது; தேன்; உலகம்; மூன்று பிடிகொண்ட நீட்டலளவு.

**தாழம்** - ஓசை முதலியவற்றின் தாழ்வு; அமைதி; தாமதம்.

**தாளம்** - பாட்டின் காலத்தை அறுதியிட்டு அளக்கும் அளவு; கைத் தாளக் கருவி; பனைமரம்; கூந்தற்பனைவகை; அரிதாரம்; தாளத்திற்கு இசையக்கூறும் அசைகள்; தாளிசபத்திரி.

**தாலி** - திருமணத்தில் கணவன் மனைவிக்குக் கழுத்தில் கட்டும் அடையாள உரு; ஐம்படைத்தாலி; ஆமைத்தாலி; சிறுவர் கழுத்திலணியும் ஐம்படைத்தாலி; கீழ்க்காய்நெல்லி; மட்பாத்திரம்; பனை; பலகறை.

**தாழி** - வாயகன்ற சால்; இறந்தோரைப் புதைக்கவுதவும் பாண்டம்; வைகுண்டம்; சாடி; பரணி நாள்; அரிதாரம்; சிவதை; கடல்.

**தாளி** - பனைமரம்; கூந்தற்பனைவகை; மருந்து செடிவகை; ஒருகொடிவகை; அனுடநாள்; மரவகை; மண்ணால் செய்த விளக்கின் அகல்.

**துலை** - நிறைகோல்; துலாதானம்; துலாராசி; கிணற்றிலிருந்து இறைக்கும் நீர்; தங்குமிடம்; ஏற்றமரம்; மடைமுகம்; நூறு பலம் கொண்ட நிறை; ஒப்பு; வெகுதூரம்; தூரப்பிரதேசம்; தோட்டம்.

**துழை** - துழாவு எனும் ஏவல்.

**துளை** - தொளை; உட்டுளை; மூங்கில்; வாயில்; சுருட்சி; வயிரக்குற்றங்களுள் ஒன்று.

| | | |
|---|---|---|
| **துலைதல்** - அழிதல். | **துழைதல்** - துடுப்பால் துலாவிச் செல்லுதல். | **துளைதல்** - நீரில் விளையாடுதல்; அழுந்திக் கிடத்தல். |
| **தோல்** - சருமம்; உடம்பின் மேலுள்ள தோல்; புறணி; விதையின் மேல் தோல்; கேடகம்; துருத்தி; மெல்லென்ற சொல்லால் விழுமிய பொருள் பயப்பச் செய்யும் நூல்; புகழ்; அழகு; சொல்; யானை; தோல்வி; நற்பேறின்மை; உடம்பு; பக்கரை; மூங்கில். | **தோழ்** - மாட்டுத் தொழுவம். | **தோள்** - புயல்; கை; தொளை. |
| **தோலி** - ஒரு மீன்வகை; அரக்கு; பழத்தோல். | **தோழி** - பாங்கி; பணி செய்பவள்; செவிலித்தாயின் மகள்; தேவி; அரக்கு. | **தோளி** - அவுரிப்பூண்டு; அரக்கு; நன்னீர் மீன்வகை. |
| **நலுங்கு** - மணமக்களுக்கு திருமணத்தின்போது நடத்தும் நலுங்குச் சடங்கு. | **நழுங்கு** - வழுவென்னேவல். | **நளுங்கு** - அழுங்கு; கிளிஞ்சில். |
| **நால்** - நான்கு; நாலடியார் என்னும் தமிழ்நூல். | **நாழ்** - குற்றம்; செருக்கு; இல்லாதது சொல்லுகை; திறமை; நாள். | **நாள்** - தினம்; காலம்; வாழ்நாள்; நல்லநாள்; காலை; முற்பகல்; நட்சத்திரம்; திதி; புதுமை; அன்றலர்ந்த பூ; வெண்பா ஈற்றடியில் வரும் ஓரசைச்சீர் வாய்ப்பாடு. |

**நாலி** - முத்து; கார்த்திகைப்பூ; கந்தைத்துணி.

**நாழி** - உட்டுடைப்பொருள்; அளக்கும் ஒருபடி; காற்படி; நாழிகை; நூல்நாழி; அம்பறாத்தூணி; பூரட்டாதிநாள்.

**நாளி** - கள்; நாய்; அறுபது விநாடி கொண்ட நேரம்; ஒரு கால அளவு; நாடா.

**பலு** - பலகறை.

**பழு** - பொன்னிறம்; விலா வெழும்பு; விலா ஏணியின் படிச்சட்டம்; சட்டம்; பேய்.

**பளு** - பாரம்; கனம்; கடுமை.

**பலை** - திரிபலை; பசி; தாகம்; முதலியவற்றை அழிக்கும் மந்திரம்; சிற்றா முட்டிச்செடி.

**பழை** - கள்

**பளை** - வளை; விலங்கு முதலியவற்றின் வளை.

**பாலி** - ஒரு பழைய மொழி; ஆலமரம்; செம்பருத்தி; பாலாறு; கள்.

**பாழி** - அகலம்; உரை; குகை; இடம்; கோயில்; நகரம்; மருதநிலத்தூர்; பகைவரூர்; முனிவர்வாழிடம்; மக்கள் துயிலிடம்; விலங்கு துயிலிடம்; சிறுகுளம்; இறங்குதுறை; இயல்பு; எலிவளை; சொல்; வேதம் ஓதும் முறைகளுள் ஒன்று; வெறுமை; கடல்; பாசறை; பெருமை; வலிமை; போர்.

**பாளி** - அடையாளம்; பணித்தூசு; விதானச்சீலை.

**பிலா** - பலாமரம்.

**பிழா** - கொள்கலம்; இறைகூடை; தட்டுப்பிழா

**பிளா** - **காண்க: பிழா**

**புகல்** - புகுகை; இருப்பிடம்; துணை; பற்றுக்கோடு; தஞ்சம்; உடம்பு; தானியக்குதிர்; வழிவகை; போக்கு; சொல்; விருப்பம்; கொண்டாடுகை; பாடும் முறை; வெற்றி; புகழ்; புரையுள்ளது.

**புகழ்** - துதி; கீர்த்தி; அருஞ்செயல்; அகத்தி; வாகை.

**புகள்** - அகத்தி

**புலை** - இழிவு; அழுக்கு; தீட்டு; தீயநெறி; பொய்; ஊன்; கீழ்மகன்; தீநாற்றம்.

**புழை** - துளை; குழாய்; சிறுவாயில்; வாயில்; காட்டுவழி; ஒடுக்கவழி; சாளரம்; ஏவறை; நரகம்; அளறு.

**புளை** - அலங்கரி என்னும் ஏவல்.

**பூல்** - செடிவகை; மரவகை.

**பூழ்** - காடைவகை; கானாங்கோழி; துளை

**பூள்** - ஆண்குறி.

**பொலி** - தூற்றா நெற்குவியல்; தூற்றிய நெல்; விளைவின் அளவு; தானியமாகக் கொடுக்கும் வட்டி; களத்தில் நெல் அளக்கும்போது முதல் மரக்காலுக்கு மங்கலமாக வழங்கும் பெயர்; புணர்ச்சி.

**பொழி** - வயல் வரம்பு; கனு; உரிக்கப்பட்டது; கடலுக்கும் கழிநீர்நிலைக்கும் இடையிலுள்ள சிறுகரை; எல்லை.

**பொளி** - உளியாலிட்ட துளை; மண் வெட்டியின் வெட்டு; பாய்முடைதற்கு வகிர்ந்து வைக்கும் ஓலை; பொளிமண்.

பொலிதல் / பொழிதல் / பொளிதல்

| | | |
|---|---|---|
| **பொலிதல்** - செழித்தல்; பெருகுதல்; மிகுதல்; விலங்குதல்; சிறத்தல்; மங்கலமாதல்; நீடுவாழ்தல்; நிகழ்தல்; புணர்தல். | **பொழிதல்** - மழை பெய்தல்; மிகச் செலுத்துதல்; வரையின்றிக் கொடுத்தல்; தட்டுத்தடங்களின்றிப் பேசுதல்; நிறைந்தொழுகுதல்; நிறைதல்; தங்குதல். | **பொளிதல்** - உளியாற் கொத்துதல்; பிளத்தல்; துளை செய்தல்; ஓட்டையாதல்; பள்ளமாதல். |
| **பொலிவு** - அழகு; முகமலர்ச்சி; தோற்றப் பொலிவு; செழிப்பு; பருமை; மிகுதி; எழுச்சி; பொன்; வெறுந்தோற்றம்; புணர்ச்சி. | **பொழிவு** - பொழிகை; ஆதாயம்; நிறைவு; விருத்தி. | **பொளிவு** - துளைதல்; கன் முதலிய கோதல். |
| **மகிலம்** - மயிலம் | **மகிழம்** - மகிழமரம் | **மகிளம்** - பூவிதழ் |
| **மலமலத்தல்** - ஓர் ஒலிக்குறிப்பு. | **மழமழத்தல்** - வழவழப்பாதல். | **மளமளத்தல்** - மரக்கொம்பு முதலியன முறியும்போது ஒலியெழும்புதல். |
| **மலமலப்பு** - ஒலிக்குறிப்பு. | **மழமழப்பு** - மெதுத்தன்மை; உரை செயல்களில் உறுதியின்மை. | **மளமளப்பு** - முறிதற்குறிப்புள்ள ஒலி. |
| **மலமலெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு; கண்ணீர் பெருகுதற்குறிப்பு. | **மழமழெனல்** - மெத்தெனக் குறிப்பு | **மளமளெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு; விரைவுக் குறிப்பு. |

**மாலை** - அந்திப்பொழுது; இரவு; இருள்; சமயம்; குற்றம்; மரகதக்குற்றவகை; இயல்பு; குணம்; தொடுக்கப்பட்டது; தொடுத்த பூந்தொடை; மாதரணிவடம்; நூல்வகை; பாசம்; விறலி; பெண்.

**மாழை** - இளமை; அழகு; பேதைமை; மாமரம்; மாவடு; மாதர்கூட்டம்; ஓலை; உலோகக்கட்டி; பொன்; திரட்சி.

**மாளை** - புளியம்பட்டை.

**முகில்** - மேகம்; திரள்.

**முகிழ்** - அரும்பு; காய்; பூ முதலியவற்றின் காம்படி; தேங்காய் முதலியவற்றின் மடல்; ஐந்து விரலும் தம்மில் தலை குனிந்து உயர்ந்து நிற்கும் இணையா வினைக்கைவகை; தயில் முதலியவற்றின் கட்டி.

**முகிள்** - அரும்பு.

**முலை** - கொங்கை; தனம்; பாலூட்டு இனங்களின் உடலில் பாலுண்டாகும் இடம்.

**முழை** - மலைக்குகை; துடுப்பு.

**முளை** - வித்தினின்று வெளிவருவது; இளமை; மரக்கன்று; முளையான்; மூங்கில்; மகன்; புண்முளை; தண்டாயுதம்; மூல முளை; குறுந்தறி; திரிகையின் கைப்பிடி; பிளப்பில் அடிக்கவுதவும் கூருடைய சிறு மரத்துண்டு; கதவு முதலியவற்றின் குடுமி; முனை

| | | |
|---|---|---|
| **மூலி** - செடிகொடி; மூலிகை; காரணபூதன். | **மூழி** - அகப்பை; மத்து; கமண்டலம்; நீர்நிலை; சோறு; வேள்விப்பாண்டம். | **மூளி** - உறுப்புக்குறை; உறுப்பறை; தலைப்பகுதி பழுது பட்டிருப்பது; குறைவுற்றது; வழக்கமாய் உள்ள அணிகலன் இல்லாதவர்; வழக்கமாய் உள்ள அணிகலன் இல்லாதது; அழகற்றவள். |
| **மூலை** - கோணம்; வீடு; மூலைத்திசை. | **மூழை** - அகப்பை; சோறு; மத்து; குழிந்த இடம். | **மூளை** - மண்டையின் உள்ளீடு; மச்சை; அறிவு. |
| **மேலகம்** - மாடி. | **மேழகம்** - கவசம்; ஆடு. | **மேளகம்** - கஞ்சி |
| **வலப்பம்** - சிலேட்டுக்குச்சி. | **வழப்பம்** - பழக்கம்; தொன்று தொட்டு நடைபெறுதல்; ஈகை; பொதுவானது; பயன்படுத்துகை. | **வளப்பம்** - செழுமை; நன்மை; மாட்சிமை; வழக்கம். |
| **வலி** - வன்மை; கட்டாயப்படுத்தல்; நறுவிலி; அகங்காரம்; வல்லெழுத்து; தொகைநிலைத் தொடர் மிக்குவரும் செய்யுட்குணம்; பற்றுக்கோடு; பற்றிரும்பு; தொல்லை; நோவு; ஒலி; சூள்; வஞ்சம்; இழுக்கை; இசிவுநோய்வகை; வலிமைமிக்கவன்; கோடு; குரங்கு. | **வழி** - நெறி; காரணம்; கழுவாய்; வழிபாடு; ஒழுக்கம்; முறைமை; பின் சந்ததி; மரபு; மகன்; சுற்றம்; உடன்பிறந்தான்; பரம்பரை; நூல் வந்தநெறி; சுவடு; பின்னானது; வழக்கு; பழைமை;; மலைப்பக்கம்; இடம்; திரட்சி; வரம்; பின்பு; வினையெச்சவிகுதி ஏழனுருபு. | **வளி** - காற்று; சுழல்காற்று; உடல்வாதம்; அண்டவாதநோய்; சிறிய காலவளவு வகை. |

| | | |
|---|---|---|
| **வலி(வி)**- உடன்படுத்து; இழு. | | |
| **வலியன்** - வலிமையுடையான்; திறமையானவன்; உடல்நலமுடையவன்; கரிக்குருவி; இறுகிய நிலையுடையது. | **வழியன்** - குஷ்டரோகி. | **வளியன்** - பருத்த பீஜமுள்ளவன். |
| **வலு** - வலிமை; திறமை; கனம்; கொசு; ஒருபசை மருந்து; பற்று; எட்டு; பலமான; மிகுதியான. | **வழு** - தவறு; கேடு; பாவம்; பழிப்புரை; குற்றம்; கன்று முதலியன பிறக்கும் போது காணப்படும் சவ்வு முதலியன. | **வளு** - இளமை; இளையது. |
| **வலை** - உயிர்களை அகப்படுத்துதற்குரிய கருவி; சூழ்ச்சி; யாகபத்தினி நெற்றியில் அணிந்து கொள்ளும் அணிவகை. | **வழை** - புன்னைமரம்; புதுமை. | **வளை** - சுற்றிடம்; சங்கு; கைவளை; சக்கரப்படை; துளை; எலி முதலியவற்றின் பொந்து; நீண்ட மரத்துண்டு; தூதுவளை என்னும் கொடிவகை.<br>**வளை(வி)** - தடைசெய்; கட்டு; வாரு; முற்றுகையிடு. |
| **வாட்டாலை** - மெலிந்தவன். | **வாட்டாழை** - கற்றாழை | **வாட்டாளை** - காண்க: வாட்டாலை. |

| | | |
|---|---|---|
| **வால்** - இளமை; தூய்மை; வெண்மை; நன்மை; மிகுதி; பெருமை; விலங்குகளின் பின் புறத்தில் நீண்டு தொங்கும் உறுப்பு; நீளமானது; குறும்பு செய்பவர்; குறும்பு; வாலுளுவை | **வாழ்** - முறைமை | **வாள்** - ஒளி; கத்தி; கத்திரிகை; கூர்மை; ஈர்வாள்; விளக்கம்; புகழ்; கொல்லுகை; கலப்பை; உழுபடையின் கொழு; கயிறு; நீர்; கச்சு. |
| **வாலகம்** - விலங்கின் வால். | **வாழகம்** - வெள்ளைக்குங்கிலியம் | **வாளகம்** - வெட்டிவேர். |
| **வாலி** - வெண்ணிறமுள்ள பலராமன்; கிட்கிந்தை மன்னன்; வாலுடையது; கரிக்குருவி; மழைத்தூறல்; குதிரைவாலி; திருவாலியமுதனார்; சீனிவாலி. | **வாழி** - வாழ்க என்னும் பொருளில் வரும் வியங்கோள் சொல்; ஓர் அசைச்சொல். | **வாளி** - வாள்வீரன்; வாட்டமாயோடல்; மாதர் காதணியுள் ஒன்று; நீர்ச்சால் வகை. |
| **வாலை** - இளம்பருவத்திலுள்ள பூப்படையாத பெண்; சத்திபேதங்களுள் ஒன்று; செய்நீர் வடிக்கும் பாண்டம்; தூய்மை; பாதரசம்; சித்திராநதி. | **வாழை** - ஒரு மரவகை | **வாளை** - ஒரு மீன்வகை. |
| **விலவு** - மார்பின் பக்கம்; விலாவெலும்பு. | **விழவு** - விழா; விளையாட்டு; அவா; மிதுனராசி. | **விளவு** - அகில்; விளாமரம்; நிலப்பிளவு; இளமை. |

**விலா** - மார்பின் பக்கம்; விலாவெலும்பு.

**விலை** - விற்பனைத் தொகை; விற்கை; மதிப்பு.

**விழா** - திருவிழா; திருமணக் கொண்டாட்டம் மங்கலச் சடங்கு.

**விழை** - விரும்பு என்னும் ஏவல்.

**விளா** - விளாமரம்; உழவில் வருஞ்சுற்று.

**விளை** - விளைகை; விளைபொருள்; புன்செய்க்காடு; நுகர்வு; நீர் ஏறாத மேட்டுநிலம்; நகர் சூழ் காவற்காடு; காக்கட்டான்; நரம்பு; மீன்வகை.

**வேலம்** - தோட்டம்.

**வேழம்** - கரும்பு; வேழக்கரும்பு; கொறுக்கைப் புல்; மூங்கில்; பீர்க்கு; நாணம்; இசை; யானை; மேடராசி; பணிநாள்; விளம்பழத்துக்கு வருவதொரு நோய்; ஒரு பூச்சி.

**வேளம்** - சோழரால் சிறைபிடிக்கப்பட்ட உயர்குல மகளிர் வாழுதற்கமைந்த அரணிடம்; வாழிடம்.

# ல / ளகர வேறுபாட்டுச் சொற்கள்

**அகலம்** - விரிவு; பரப்பு; இடம்; பூமி; மார்பு; விருத்தியுரை; வித்தாரகவி; பெருமை.

**அகளம்** - தாழி; மிடா; சாடி; யாழின் பத்தர்; நீர்ச்சால்; களங்கமின்மை.

**அஞ்சலித்தல்** - கைகூப்பித்தொழுதல்.

**அஞ்சளித்தல்** - ஆதரவு தருதல்; அடைக்கலங்கொடுத்தல்.

**அட்டாலை** - கோட்டை மதில்மேலுள்ள காவற்கூடம்; மேல்மாடி; மேல்வீடு.

**அட்டாளை** - ஒரு மரம்.

**அடித்தலம்** - கீழிடம்; கால்; அடிப்படை.

**அடித்தளம்** - அடிமட்டம்; அடிவரிசை; கீழ்ப்படை; பின்னணி.

**அடுகலம்** - சமையற் பாண்டம்.

**அடுகளம்** - போர்க்களம்; சண்டை செய்யுமிடம்.

**அம்பால்** - தோட்டம்.

**அம்பாள்** - தாய்; பார்வதி.

**அம்புலி** - சந்திரன்; அம்புலிப் பருவம்; சோளக்கூழ்.

**அம்புளி** - இனிய புளிப்பு; இனிப்புப் புளி.

**அமலை** - ஆரவாரம்; சோற்றுத்திரளை; கடுக்காய்; நெல்லிமரம்; பூவந்தி மரம்; கட்டி; கொப்பூழ்க்கொடி; போரில் பட்ட அரசனை நெருங்கி வீரர் திரண்ட பாடும் பாட்டு; மாசற்றவள்; பெண் தெய்வம்.

**அமளை** - ஒருவகைப் பூண்டு; கடுகு; ரோகிணி; மரவகை.

**அரிதாலம்** - பொன்னரிதாரம்; மஞ்சள் நிறமான ஒருவகைப் புறா.

**அரிதாளம்** - நவதாளத்துள் ஒன்று; பொன்னரிதாளம்.

**அரில்** - பிணக்கம்; பின்னல்; குற்றம்; குரல்; கூந்தல்; சிறுகாடு; மூங்கில்; பாயல்; பலா; பரல்.

**அரிள்** - பயம்.

**அல்** - இரவு; இருள்; மாலை; சூரியன்; வெயில்; மதில்; கூக்கு; மெய்யெழுத்து; மயக்கம்; எதிர்காலத் தன்மை ஒருமை விகுதி; தொழிற்பெயர் விகுதி; ஒரு சாரியை; ஆண்பாற் பெயர் விகுதி; எதிர்மறைக் குறிப்பு வினைப்பகுதி; எதிர்மறை ஏவல் ஒருமை விகுதி; எதிர் மறை வினை இடைநிலை.

**அல்லல்** - துன்பம்.

**அல்லாடுதல்** - அலைதல்; தொல்லைப்படுதல்.

**அல்லி** - ஆம்பல்; வெள்ளாம்பல்; தாமரை; காயாம்பூ; அகவிதழ்; பூந்தாது; அல்லியரிசி; இளவேர்; இரவு; அலி.

**அல்லிருள்** - இரவில் இருளின் செறிவு; இரவின் செறிந்த இருள்.

**அல்லுதல்** - முடைதல்; பின்னிக் கொள்ளுதல்.

**அல்லை** - அல்லிக்கொடி; தாய்.

**அல** - அலவென்னும் ஏவலும் தெரி நிலை வினைப்பகுதியும்; அல்லவென்னும் குறிப்பு வினை 'லகரம்' கெட்டு நின்றதொரு விகாரமொழி.

**அள்** - அள்ளப்படுவது; செறிவு; வன்மை; வண்டி வில்லைத் தாங்கும் கட்டை; பற்றிரும்பு; கூர்மை; பூட்டு; நீர்முள்ளி; அள்ளுமாந்தம்; காது; பெண்பால் விகுதி.

**அள்(வி)** - அள்ளு; நெருங்கு

**அள்ளல்** - நெருக்கம்; சேறு; இசைக்கரணங்கள் எட்டனுள் ஒன்று; ஏழுநரகத்துள் ஒன்று; அள்ளுதல்; கொய்தல்; சேர்த்தெடுத்தல்.

**அள்ளாடுதல்** - செறிதல்; தளர்தல்.

**அள்ளி** - வெண்ணெய்

**அள்ளிருள்** - கும்மிருட்டு; செறிந்த இருட்டு.

**அள்ளுதல்** - செறிதல்; கையால் முகத்தல்; திரளாய் எடுத்தல்; வாரிக்கொண்டு போதல்; ஏற்றுதல்; நுகர்தல்.

**அள்ளை** - பேய்; விலாப்புறம்.

**அள** - அளவென்னேவல்; தெரிநிலை வினைப்பகுதி.

**அலகை** - பேய்; பேய்க்கொம்மட்டிக் கொடி; காட்டுக்கற்றாழை; அளவு.

**அலத்தல்** - அலைதல்; ஆசைப்படுதல்; துன்பப்படுதல்.

**அலத்தி** - மின்மினி; நுளம்பு.

**அலப்பன்** - வீண்பேச்சுக்காரன்.

**அலப்புதல்** - வீண்பேச்சுப்பேசுதல்; உளறுதல்; அலைத்தல்.

**அலம்** - துன்பம்; தேள்; விருச்சிகராசி; அமைவு; போதும்; திருப்தி; கலப்பை; நீர்.

**அலம்பல்** - ஆரவாரம்; எதிர்பாரா விளம்பரம்.

**அலமரல்** - சுழற்சி; மனச்சுழற்சி; வருத்தம்; அச்சம்.

**அலர்** - பழிச்சொல்; மலர்ந்த பூ; மகிழ்ச்சி; மஞ்சள்; மிளகுகொடி.

**அலர்க்கம்** - ஒருவகைக்கிருமி; விசர்நாய்; வெள்ளெருக்கு.

**அலவர்** - உழுதொழிலாளி; உழவர்

**அலவன்** - நண்டு; ஆண்நண்டு; பூனை; கற்கடகராசி; நிலா.

**அளகை** - அளகாபுரி; தஞ்சை; எட்டிற்கு மேலும் பத்திற்குக் கீழுமான வயதுடைய பெண்.

**அளத்தல்** - அளவிடுதல்; வரையறுத்தல்; பிரமாணங்கொண்டு அறிதல்; கொடுத்தல்; கலத்தல்; எட்டுதல்; கருதுதல்; அளவளாவுதல்; வீண்பேச்சுப் பேசுதல்.

**அளத்தி** - நெய்தல்; நிலப்பெண்; உப்பு அமைப்போனின் பெண்.

**அளப்பன்** - காண்க; **அலப்பன்**

**அளப்புதல்** - அலப்புதல்; குழப்புதல்.

**அளம்** - உப்பளம்; நெய்தல் நிலம்; கடல்; களர்நிலம்; செறிவு.

**அளம்பல்** - வெடங்குறுணிமரம்.

**அளமரல்** - காண்க; **அலமரல்.**

**அளர்** - நீர்; மஞ்சள்; உவர்.

**அளர்க்கம்** - தூதுவளை.

**அளவர்** - உப்பமைப்போர்; உழுது பயிரிடுவோர் வகையினர்; மதிப்பிடுவோர்.

**அளவன்** - தானியம் அளப்போன்; உப்பமைப்போன்; சோரபாடாணம்.

**அலவு** - மனத்தடுமாற்றம்.

**அலவுதல்** - வருந்துதல்; சிந்துதல்.

**அலறல்** - புலம்புதல்; கதறுதல்.

**அலறுதல்** - அலறல்; மிக்கொலித்தல்; மாடு ஆந்தை முதலியன கதறுதல்; உரத்தழுதல்; வருந்துதல்; வரிதல்; காய்தல்.

**அலி** - ஆண் பெண் அல்லாதது; பலராமன்; யமன்; உழவன்; காகம்; குயில்; தேள்; விருச்சிகராசி; நறுவிலிமரம்; வயிரம் இல்லாதமரம்; தீ; சோறு.

**அலிகம்** - நெற்றி.

**அலிந்தம்** - அணிந்தம்; முற்றம்.

**அலியன்** - கடுக்காய் மரம்.

**அலுக்குதல்** - சிறிது அசைத்தல்; பிலுக்குப் பண்ணல்; பகட்டித்திரிதல்; ஆடம்பரங்காட்டி மயக்குதல்.

**அலை** - நீர்த்திரை; கடல்; திரையடித்தொதுக்கிய மணல்; நிலம்; மது; கண்டனம்; மிகுதி; வருந்துகை; கொலை.

**அளவு** - பரிமாணம்; தருக்க அளவை; தாளத்தில் மூன்று மாத்திரைக்காலம்; மாத்திரை நிலஅளவு; சமயம்; தன்மை; ஞானம்; மட்டும்; தொடங்கி.

**அளவுதல்** - கலப்புறுதல்; கலத்தல்; உசாவுதல்.

**அளறல்** - அளறுதல்.

**அளறுதல்** - சிதறி வெடித்தல்; நெரிதல்; பிளத்தல்.

**அளி** - அன்பு; அருள்; ஆசை; வரவேற்பு; எளிமை; குளிர்ச்சி; கொடை; காய்; வண்டு; தேன்; வண்டுகொல்லி; கருந்தேனீ; மாட்டுக்காடி; தேள்; கிராதி; மரவுரிமரம்.

**அளி(வி)** - கொடு; காப்பாற்று.

**அளிகம்** - கட்டழகு; நெற்றி; பொய்.

**அளிந்தம்** - கோபுரவாயில்; திண்ணை; முற்றம்.

**அளியன்** - அன்பு மிக்கவன்; காக்கப்படத்தக்கவன்.

**அளுக்குதல்** - குலைதல்; அஞ்சுவித்தல்.

**அளை** - தயிர்; மோர்; வெண்ணெய்; புற்று; பொந்து; குகை; ஏழாம் வேற்றுமை உருபு.

**அளை(வி)** - துழாவு; கல; தழுவு.

**அலைகுதல்** - அலைதல்.

**அலைச்சல்** - திரிகை; தொந்தரவு

**அலைதல்** - திரிதல்; வருந்துதல்; சோம்புதல்; ஆடுதல்.

**அலைவு** - அல்லவை; விடாது பிதற்றுபவள்; விபச்சாரம்.

**அவல்** - நெல் இடியல்; விளை நிலம்; பள்ளம்; குளம்.

**அவலம்** - துன்பம்; வறுமை; பலவீனம்; கவலை; கேடு; குற்றம்; நோய்; அழுகை; அவலச்சுவை; மாயை; பயன்படாதது; இடப்பக்கம்.

**ஆகுலி** - சிற்றரத்தை; ஆவிரைவகை.

**ஆதலை** - உதவி; தாபரிப்பு.

**ஆல்** - அகற்சட்டி; மரவகை; நீர்; வெள்ளம்; கார்த்திகை; நஞ்சு; ஆமெனல்; வியப்பு இரக்கம், தேற்றம் இவற்றைக் குறிக்கும் இசைச்சொல்; ஓர் அசை நிலை; மூன்றாம் வேற்றுமை உருபு; தொழிற்பெயர் விகுதி; எதிர்மறை வியங்கோள் விகுதி; எதிர்கால வினையெச்ச விகுதி.

**ஆலகம்** - ஆமலகம்.

**ஆலத்தி** - ஆரத்தி; தீபாராதனை.

**ஆலாபம்** - உரையாடல்.

**ஆலாலம்** - துரிஞ்சில்; கடலிற் பிறந்த நஞ்சு.

**அளைகுதல்** - கலக்குதல்.

**அளைச்சல்** - வயிற்றுளைச்சல்; சீதபேதி.

**அளைதல்** - துழாவுதல்; கலத்தல்; சூடுதல்; தழுவுதல்; கூடியிருத்தல்; அனுபவித்தல்; வயிறு வலித்தல்.

**அளைவு** - சோறு முதலியன குழைகை; கலப்பு.

**அவள்** - பெண்பாற் சுட்டுப்பெயர்.

**அவளம்** - தீமை.

**ஆகுளி** - ஒருவகைச் சிறுபறை.

**ஆதளை** - ஆமணக்கு; காட்டாமணக்கு.

**ஆள்** - ஆண்மகன்; திறமையுடையோன்; வீரன்; காலாள்; கணவன்; தொண்டன்; ஆட்சிசெய்கை; வளர்ந்த ஆள்; ஆள்மட்டம்; அரசு; தொட்டால் வாடி; பெண்பால் வினைமுற்று விகுதி.

**ஆளகம்** - சுரைக்கொடி.

**ஆளத்தி** - ஆலாபனம்; இசைவிரித்துப்பாடுகை.

**ஆளாபம்** - ஆலாபனம்.

**ஆளாழம்** - ஒரு முழு மனிதனின் அளவுள்ள ஆழம்.

**ஆலை** - கரும்பாலை; கள்; கரும்பு; கூடம்; யானைக்கூடம்; நீராரை; கருப்பஞ்சாறு; ஒருவகைக் கிட்டித் தண்டனை.

**ஆளை** - அறுகம்புல்.

**ஆவலி** - காண்க: **ஆவளி.**

**ஆவளி** - வரிசை; மரபுவழி; உறுதியின்மை; இரேகை; வளி என்னும் சிறுகாலவளவு.

**ஆவலித்தல்** - அழுதல்; கொட்டாவி விடுதல்; செருக்குதல்.

**ஆவளித்தல்** - ஒழுங்குபடுத்துதல்.

**ஆவலிப்பு** - செருக்கு.

**ஆவளிப்பு** - ஆசை; வளைவு.

**இதலை** - கொப்பூழ்.

**இதளை** - காண்க: இதலை

**இரும்புலி** - ஒருவகைச் செடி; துவரை

**இரும்புளி** - மரவகை.

**இலக்கம்** - விளக்கம்; குறிப்பொருள்; நூறாயிரம்; எண்; எண்குறி; இலக்கு; காணுதல்.

**இளக்கம்** - இளகிய தன்மை; நெகிழ்ச்சி; தளர்ச்சி; மென்மை; தணிவு.

**இலக்காரம்** - சீலை; ஆடை.

**இளக்காரம்** - இளக்கம்; மனநெகிழ்ச்சி; தாழ்நிலை; குறைவு.

**இலக்குதல்** - அடையாளம்.

**இளக்குதல்** - நெகிழச்செய்தல்; அசைத்தல்.

**இலகம்** - ஊமத்தைப் பூண்டு.

**இளகம்** - இலேகியம்; மருந்துவகை.

**இலகுதல்** - விளங்குதல்; மிகுதல்; ஒளி செய்தல்.

**இளகுதல்** - நெகிழ்தல்; குழைதல்; அசைதல்; தழைத்தல்; மென்மையாதல்; உருகுதல்; தணிதல்.

**இலஞ்சி** - வாவி; ஏரி; கொப்பூழ்; குணம்; சாரைப்பாம்பு; மகிழமரம்; மதில்; புன்கு; மாமரம்; சவுக்கம் என்னும் ஆடைவகை.

**இளஞ்சி** - ஈனாக்கத்திரி.

**இலந்தை** - முள் மரவகை; ஒரு பழமர வகை; நீர்நிலை.

**இலம்பாடு** - வறுமை; தரித்திரம்.

**இலவன்** - இராமன் மக்களில் ஒருவன்.

**இலாவிருதம்** - நவகண்டத்துள் ஒன்று.

**இலையான்** - ஈ என்னும் பறவை.

**உகலுதல்** - தாவுதல்; உதறுதல்.

**உல்** - தேங்காய் உரிக்குங் கருவி; கழு.

**உல்லம்** - ஒரு மீன்.

**உல்லி** - ஒல்லி; மெலிந்தஆள்; மெல்லியது; வெங்காயப்பூ; மதில்.

**உல்லியர்** - கூவநூலோர்.

**உல்லு** - ஒருதலைக் கூறுள்ள கட்டை.

**இளந்தை** - இளவயதுடையது; இளமை; குழந்தை.

**இளம்பாடு** - இளமையிற்படும்பாடு; இளம்பதம்; முற்றாமை.

**இளவன்** - சோரபாஷாணம்.

**இளாவிருதம்** - நன்னீர்க் கடலாற் சூழப்பட்ட நிலப்பகுதி; ஒன்பது கண்டத்துள் ஒன்று.

**இளையான்** - இளையவன்; தம்பி.

**உகளுதல்** - தாவுதல்; ஓடித்திரிதல்; துள்ளுதல்; பிறழுதல்; நழுவி விழுதல்.

**உள்** - உள்ளிடம்; உள்ளம்; மனம்; இடம்; மனவெழுச்சி; ஒரு குறிப்பு வினைப்பகுதி; தொழிற்பெயர் விகுதி; ஏழாம் வேற்றுமை உருபு; உள்ளான் என்னும் பறவை.

**உள்ளம்** - மனம்; உள்ளக்கருத்து; சொற்றொடரின் கருத்து; எண்ணம்; ஞானம்; அகச்சான்று; ஆன்மா; ஊக்கம்; முயற்சி; உல்லம்; உல்ல மீன்வகை.

**உள்ளி** - வெள்ளைப்பூண்டு; வெங்காயம்.

**உள்ளியர்** - அறிவுடையோர்.

**உள்ளு** - ஒரு பறவை (உள்ளான்).

**உலகு** - உலகம்; பூமி; நாடு; உலகத்தார்; உயர்ந்தோர்; சான்றோர்; திசை; மங்கலச் சொற்களுள் ஒன்று.

**உலங்கு** - உலம்; திரண்டகல்; கொசு; புழு.

**உலம்** - திரண்டகல்; திரட்சி; வலிமை; துன்பம்; பிணம்; பட்டாடை; வாசல்; நீர்; காற்று; அகற்சி.

**உலர்தல்** - காய்தல்; வாடுதல்; அழிதல்.

**உலர்வு** - உலர்ச்சி.

**உலறல்** - காய்தல்; சினக்குறிப்பு.

**உலுக்கல்** - குலுக்கல்.

**உலுக்குதல்** - குலுக்குதல்; அசைத்தல்; நடுங்குதல்.

**உலுத்தல்** - உதிர்த்தல்.

**உவல்** - தழை; சருகு.

**உள்ளால்** - உட்பக்கம்.

**உளகு** - யாழின் ஓர் உறுப்பு; யாழின் தண்டு; ஊர் ஒழுகு; ஊர்நிலத்தின் கணக்கு வழக்கு.

**உளங்கு** - உளகு; ஊர்நிலத்தின் கணக்கு வழக்கு.

**உளம்** - மனம்; மார்பு; உட்பக்கம்; ஆதன்; ஆன்மா.

**உளர்தல்** - கிண்டுதல்; கோதுதல்; மயிர்க்கோதல்; அசைத்தல்; சிதறுதல்; சிந்துதல்; தடவுதல்; பூசுதல்; காலந்தாழ்த்தல்; சுழலுதல்; பரப்புதல்; உறுதியற்றாடுதல்.

**உளர்வு** - அசைகை; யாழ் மீட்கை; சுழல்கை.

**உளறல்** - பேச்சு; குழறுபடியான பேச்சு; தடுமாறிப்பேசுதல்; பேரொலி.

**உளுக்கல்** - உளுக்குதல்.

**உளுக்குதல்** - சுளுக்குதல்; நெருங்கிடுதல்; நெளிதல்.

**உளுத்தல்** - மரம் முதலியன புழுவால் அரிக்கப்படுதல்; சிதைந்துபோதல்.

**உவள்** - உயர்திணைப் பெண்பாலில் வரும் ஒரு சுட்டுப்பெயர்; அவளுக்கும் இவளுக்கும் இடையில் உள்ளவள்; முன் நிற்பவள்.

**உள்ளாள்** - உள்ளாகப் பயிலும் ஆள்; உளவறிவோர்.

**ஊர்ப்புல்** - கோரைவகை.

**எல்** - ஒளி; சூரியன்; வெயில்; பகல்; இரவு; நாள்; பெருமை; இகழ்ச்சி; இகழ்மொழி.

**எல்ல** - எல்லா; ஏல; ஏடி; தோழி முன்னிலைப்பெயர்.

**எல்லுதல்** - ஒளி மங்குதல்.

**எலியன்** - பொடியன்; சிறுடையன்.

**ஒல்லி** - மெலிவு; மெலிந்த தோற்றம்; மெலிவுற்றவன்; ஒல்லியானவன்; மென்மை; உள்ளீடு குறைந்த தேங்காய்.

**ஓமவல்லி** - கருப்பூரவல்லிப்பூண்டு.

**ஓல்** - முடிவிடம்; ஒலிக்குறிப்பு.

**கண்டாலம்** - ஒட்டகம்; கடப்பாரை; போர்.

**கத்தலை** - ஒரு மீன்வகை.

**கந்தலம்** - கிரணம்; முளை.

**கம்பலம்** - கம்பளி; இரத்தினக் கம்பளம்; செவ்வாடை; மேற்கட்டி; கம்பலை; ஆரவாரம்.

**கரதாலம்** - ஒரு வாத்தியம்.

**ஊர்ப்புள்** - ஊர்க்குருவி.

**எள்** - ஒருவகைச் செடி; ஒரு தவசம்; ஒரு சிறிய அளவு; நிந்தை.

**எள்ள** - ஓர் உவம உருபு.

**எள்ளுதல்** - இகழ்தல்; இழிவாகப் பேசுதல்; தள்ளுதல், ஒப்புதல்

**எளியன்** - வறியவன்; இலகுவாய் அடையப்படுபவன்; வலியில்லாதவன்

**ஒள்ளி** - செம்பொன்; சுக்கிரன்.

**ஓமவள்ளி** - காண்க: ஓமவல்லி

**ஓள்** - அழகு; ஒளி; நல்ல; மேன்மை.

**கண்டாளம்** - எருதின் மேலிடும் பொறி.

**கத்தளை** - காண்க: கத்தலை

**கந்தளம்** - கதுப்பு; கவசம்; தளிர்; பொன்; யுத்தம்.

**கம்பளம்** - ஆட்டு மயிரினால் செய்யப்பட்ட போர்வை முதலியன; கம்பளிப்போர்வை; செவ்வாடை; செம்மறிக்கடா; மயிர்ப்படாத்தாலாகிய இருக்கை; தொட்டியச் சாதி; சருக்கரைப்பூசணி.

**கரதாளம்** - பணை; கைக்கொட்டு.

**கரவாலம்** - நகம்.

**கரும்புல்** - பனைமரம்.

**கருவாலி** - ஒரு குருவி; ஒரு மரவகை.

**கல்** - வெட்டியெடுத்த கல்; சிறுகல்; பாறை; மலை; இரத்தினம்; காவிக்கல்; முத்து;வீரக்கல்; சாவுச்சடங்கில் இறந்தார் பொருட்டுப் பத்துநாளைக்கு நாட்டப் படுங்கல்; மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்று; செங்கல்; கருங்கல்; மைல் அளவுக்கு நாட்டப்பட்ட கல்; கிலோ மீட்டர் அளவுக்கு நாட்டப்படுங்கல்; கல்வி; மைல்தூரம்.

**கல்(வி)** - தோண்டு; பயில்; கல்விகல்; படைக்கலம் முதலியன பயில்

**கல்லம்** - செவிடு; மஞ்சள்.

**கல்லல்** - குழப்பம்; பலர் பேசலால் எழும் ஒலி; ஓர் ஊர்.

**கல்லறை** - கல்வீடு; குகை; பிரேதக்குழி.

**கல்லன்** - தீயோன்; பொல்லாதவன்.

**கல்லாமை** - கல்வி கல்லாதிருத்தல்; கற்றுக்கொள்ளாமை; படியாதிருத்தல்.

**கரவாளம்** - வாள்; கைவாள்.

**கரும்புள்** - கரிக்குருவி; காகம்; வண்டுவகை; பொன் வண்டு.

**கருவாளி** - கருத்துடையோன்; அறிவாளி; இரசம்.

**கள்** - மது; தேன்; வண்டு; களவு; பன்மை விகுதி; அசைநிலை.

**கள்ளம்** - வஞ்சகம்; பொய்; களவு; குற்றம்; அவிச்சை; புண்ணிலுள்ள அசறு.

**கள்ளல்** - களவுசெய்தல்.

**கள்ளறை** - பொட்டகத்து உள்ளறை.

**கள்ளன்** - களவு செய்பவன்; திருடன்; வஞ்சகன்; கள்ளச்சாதியான்.

**கள்ளாமை** - களவு செய்யாமை.

**கல்லி** - பருவதிற்கு மேற்பட்ட நுண்ணறிவு; கல்வி மிக்க குழந்தை; ஆமை; ஊர்க்குருவி; கேலி; வேடிக்கை; மேலங்கி உறுப்பு; சுற்று வரி என்னும் கட்டட உறுப்பு; சகடம்.

**கல்லு** - கல்; மலை.

**கல்லுதல்** - தோண்டுதல்; துருவுதல்; நீர் அரித்தல்; தின்னுதல்; எழுத்தாணிக்கூர் கிழித்தல்; ஒலித்தல்.

**கலகல** - ஈரடுக்கு ஒலிக்குறிப்பு.

**கலகலத்தல்** - அறக்காய்தல் ஒலிக்குறிப்பு; மிகப்பேசுதல்.

**கலகலெனல்** - ஈரடுக்கு ஒலிக்குறிப்பு.

**கலகலம்** - இரைச்சல்; பறவைக்குரல்; கலகலத்தல்; கலகலவெனல்

**கலம்** - பேரணிகலம்; ஆபரணம்; ஆயுதப்பொது; ரேவித உண்கலம்; ஓரளவு மட்கலம்; மரக்கலம்; யாழ்.

**கலமர்** - பாணர்.

**கலர்** - தீயோர்; கீழ்மக்கள்.

**கலவம்** - மயில்தோகை; மயில்; கலாபம் என்னும் ஓர் இடையணி; குழியம்மி; கல்வம்.

**கள்ளி** - செடிவகை; திருடி; கள்ளச்சாதிப்பெண்; வேலை செய்யாது கழப்புபவள்.

**கள்ளு** - நீரிடாத பனை நீர் மது.

**கள்ளுதல்** - களவு செய்தல்.

**களகள** - ஈரடுக்கு ஒலிக்குறிப்பு.

**களகளத்தல்** - ஈரடுக்காய் ஒலித்தல்.

**களகளெனல்** - ஈரடுக்கு ஒலிக்குறிப்பு.

**களகளம்** - பேரொலி.

**களம்** - காட்டுப் புறா; புறா; இடம்; இருள்; உள்ளம்; ஓரூர்; கடலுண் மிகப்புத்தரை; கழுத்து; களா; களர்; நிலம்; கறுப்பு; நெற்களம்; போர்க்களம்; மனைவி; மிடறு

**களமர்** - மருதநிலமாக்கள்; உழவர்; வீரர்; அடிமைகள்.

**களர்** - உவர்நிலம்; களர்நிலம்; சேற்றுநிலம்; கூட்டம்; கறுப்பு; கழுத்து.

**களவம்** - கலவை; சுண்ணச்சாந்து; யானைக்கன்று; யானை; கண்ணாடி

**கலவர்** - படைவீரர்; மரக்கலம்ஓட்டிகள்.

**கலவு** - உடலின் மூட்டுவாய்.

**கலன்** - ஆபரணம்; ஓமஉபகரணம்; பன்னிரண்டு மரக்கால் கொண்ட அளவு; பாத்திரம்; மரக்கலம்; யாழ்; வழக்கு.

**கலாபதி** - சந்திரன்.

**கலாவதி** - ஒரு நூல்; சந்திரன்.

**கலாவம்** - பதினாறு கலைகளையுடைய சந்திரன்; இடையணி; மேகலை; அரைப்பட்டிகை; மயில்தோகை; பீலிக்குடை; தொகுதி; அம்புக்கூடு; கலகம்.

**கலிகம்** - கண்ணிலிடும் மருந்து; வன்னி மரம்.

**கலிகை** - பூவரும்பு; மல்லிகைச்செடி.

**கலிதம்** - விந்து நழுவுகை.

**களவர்** - கள்வர்.

**களவு** - திருட்டு; திருடிய பொருள்; வஞ்சனை; கள்ள வொழுக்கம்; களாச்செடி.

**களன்** - இடம்; உக்கிரம்; உன்மத்தம்; ஒலி; கழுத்து; கூட்டம்; சபை; சிநேகம்; போர்க்களம்; மருதநிலம்.

**களாபதி** - காண்க: கலாபதி

**களாவதி** - பாரனென்னும் இருடிக்கும் புஞ்சிகஸ்தலையென்னும் அப்சரசிடத்துப் பிறந்த புத்திரி; இவள் அழகைக் கண்ட பார்வதி அதியசித்து இவளுக்குப் பதுமினி வித்தையை அருளிச் செய்ய இவள் அதுகொண்டு சுவரோசியை வசியஞ்செய்து மணம் புரிந்தாள்; பதுமினிவித்தை; விரும்பியதைக் கொடுக்கும் ஒரு மந்திரம்.

**களாவம்** - இடையணி.

**களிகம்** - வாலுளவை என்னும் மருந்து.

**களிகை** - மொட்டு; ஒருவகைக் கழுத்தணி

**களிதம்** - வழுக்கல்; பெருக்கல்.

**கலியம்** - கூடிவாளம்.

**கலியன்** - படைவீரர்; திருமங்கையாழ்வார்; இரட்டைப் பிள்ளைகளுள் ஆண்; திருமங்கையாழ்வார்; கலிபுருடன்; பசித்தவன்; வறிஞன்; சனி.

**கலைஞன்** - கலைகளில் வல்லவன்; கல்விமான்.

**கலைத்தல்** - குலைத்தல்; நீக்கல்; பிரித்தல்; பிரித்து நீக்குதல்; மனத்தைக் கலைத்தல்; ஓட்டுதல்; கூட்டம் முதலியவற்றைக் கலைத்தல்.

**கலைதல்** - குலைதல்; அழிதல்; நிலைகெடுதல்; சுருதி குலைதல்; பண்மயங்கல்.

**கலைப்பு** - கலைத்தல்.

**கலையேறுதல்** - தெய்வ ஆற்றல் மிகுதல்; செருக்கடைதல்.

**கலைவு** - குலைவு; குழப்பம்; பிரிவு.

**கவலி** - கவலை.

**கவுல்** - தீ நாற்றம்; நிலக்குத்தகை; உடன்படிக்கை; வஞ்சனை.

**கள்ளவேலை** - மாரீசமான வேலை.

**களியம்** - தேசிக்கூத்துக்குரிய கால்வகை.

**களியன்** - குடியன்.

**களைஞன்** - சண்டாளன்; களைபறிப்போன்.

**களைத்தல்** - இளைப்புறுதல்; சோர்வடைதல்.

**களைதல்** - பிடுங்கியெறிதல்; நீக்குதல்; ஆடையணி கழற்றல்; அழித்தல்; குழைதல்; அரிசி கழுவுதல்; கூட்டி முடித்தல்.

**களைப்பு** - சோர்வு.

**களையேறுதல்** - களை கொள்ளுதல்; ஒளி மிகுதல்; விக்கிரகத்தில் தெய்வ ஆற்றல் மிகுதல்; சந்திரகலை மிகுதல்.

**களைவு** - களைதல்; நீக்குதல்.

**கவளி** - கட்டு; புத்தகக்கட்டு; வெற்றிலைக்கட்டு.

**கவுள்** - கன்னம்; யானையின் கன்னம்; யானையின் உள்வாய்; பக்கம்.

**கள்ளவேளை** - நியமிக்கப்படாத நேரம்.

**கறல்** - விறகு.

**காந்தல்** - காந்துகை; உமி; ஓலை முதலியவற்றின் எரிந்த கருகல்; காய்ந்த பயிர்; தீய்ந்தபோதல்; சினம்.

**காலகண்டம்** - வயிற்றில் வலப்பக்கம் இருக்கும் தசை.

**காலகண்டன்** - சிவன்.

**காலகூடம்** - பாற்கடலில் தோன்றிய நஞ்சு.

**காலன்** - யமன்; யமதூதர்கள்; காலதானம்; சனி; கரந்துறைகோள்களுள் ஒன்று.

**காலிகம்** - கரி.

**காலை** - பொழுது; வாணான்; தருணம்; முறை; விடியற்காலம்; சூரியன்; பகல்; பள்ளியெழுச்சி; முரசம்; அடைப்பு; மீன்வகை.

**காவாலி** - சிவன்; மனம் போனபடி நடப்பவன்.

**கிலுகிலுத்தல்** - கிலுகிலுவென்று ஒலித்தல்; ஆரவாரித்தல்.

**கிலுகிலெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு.

**கீலி** - விரகன்; தந்திரமுள்ளவன்.

**கறள்** - கறை; துரு.

**காந்தள்** - கார்த்திகைப்பூ; காந்தள் மலரணிந்து வேலன் வெறியடுவதைக் கூறும் புறத்துறை; முருகக் கடவுளுக்குரிய காந்தளைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை; சவர்க்காரம்.

**காளகண்டம்** - குயில்; மயில்; கரிக்குருவி; ஊர்க்குருவி; வேங்கைமரம்.

**காளகண்டன்** - கறுத்த கழுத்துடைய சிவன்.

**காளகூடம்** - ஆலகாலம்; நஞ்சு; ஒரு நரகம்.

**காளன்** - மகாகாளன்.

**காளிகம்** - மணித்தக்காளிச்செடி; உபபுராணம் பதினெட்டனுள் ஒன்று.

**காளை** - இளவெருது; எருது; கட்டிளமைப்பருவத்தினன்; ஆண்மகன்; பாலை நிலத்தலைவன்; வீரன்.

**காவாளி** - காட்டுமல்லிகை; காய் வேளைப்பூடு.

**கிளுகிளுத்தல்** - மகிழ்தல்.

**கிளுகிளெனல்** - சிரித்தல் முதலிய ஒலிக்குறிப்பு; செழித்தற்குறிப்பு; ஒளிர்தல் குறிப்பு.

**கீளி** - கடல்மீன் வகை.

**குசலை** - தடை; கட்டு.

**குந்தலம்** - பல்லாரிப் பிராந்திய தேசத்துக்குப் புராதனப்பெயர்.

**குந்தாலம்** - ஒரு புள்.

**குப்பலை** - ஒரு செடி.

**குல்லம்** - முறம்.

**குல்லி** - ஒரு பூண்டு.

**குலம்** - அரண்மனை; ரேவதி; இனம்; கற்கண்டு; கூட்டம்; சாதி; மனை; விலங்கின் கூட்டம்.

**குலிசம்** - வச்சிரப்படை; வயிரம்; இலுப்பை மரம்; வன்னிமரம்; கற்பரிபாடாணம்; நரக விசேடம்.

**குலுகுலுத்தல்** - குறுகுறுவென்று சொல்லுதல்; குடுகுடென்றொலித்தல்.

**குவலை** - பூங்கஞ்சாச் செடி; துளசி.

**கூலி** - வேலைக்குப் பெறும் ஊதியம்; வாடகை; கூலிக்காரன்.

**குசளை** - காண்க: **குசலை**

**குந்தளம்** - தேயம் ஐம்பத்தாறினில் ஒன்று; பெண்மயிர்; மயிர்க்குழற்சி; மயிர்ப்பொது.

**குந்தாளம்** - மண்வாருங் கருவி.

**குப்பளை**- ஒரு செடி.

**குள்ளம்** - குறள்; குறுமை; கொடுமை; தந்திரம்.

**குள்ளி** - குள்ளமானவள்.

**குளம்** - தடாகம்; ஏரி; மார்கழி; நெற்றி; சருக்கரை; வெல்லம்.

**குளிசம்** - இரட்டையாகக் கட்டிக்கொள்ளும் ஒருவகைத் தகடு; நஞ்சு போக்குவோர் காப்பாகக் கட்டிக் கொள்ளும் வேர்; சக்கரம் வரைந்த தகடு.

**குளுகுளுத்தல்** - செழித்து வளருதல்; . சோகை பற்றுதல்; அழுகிப்போதல்.

**குவளை** - கருங்குவளை; செங்கழு நீர்ப்பூ; ஒரு பேரெண்; அணிகளில் மணி ப்திக்குங்குழி; கடுக்கன்குவளை; மகளிர் கழுத்தணிவகை; கண்குழி; ஒருவகைப் பாண்டம்; கண்ணின் மேலிமை; பாண்டத்தின் விளிம்பு.

**கூளி** - கூட்டம்; குடும்பம்; உறவு; படைத்தலைவன்; சாத்தான்; பேய்; சிவகணங்களாகிய பூதம்; பெருங்கழுகு; குற்றம்; குள்ளம்; கற்பில்லாதவள்; எருது; பொலிகாளை

**கெக்கலித்தல்** - குலுங்கச் சிரித்தல்; மகிழ்தல்.

**கெக்களித்தல்** - நெளித்தல்; துருத்துதல்; தோல்விகாட்டடல்.

**கெலிசு** - முகம் வயிறுகளில் காணும் வீக்கம்.

**கெளிசு** - காண்க: **கெலிசு.**

**கெலித்தல்** - வெல்லுதல்; ஆசைப்படுதல்; அஞ்சுதல்.

**கெளித்தல்** - நெளிந்துபோதல்.

**கெலிப்பு** - வெற்றி; மகிழ்ச்சி.

**கெளிப்பு** - நெளிவு.

**கேரலம்** - கேரளம்.

**கேரளம்** - ஒரு பாஷை; சோதிடசாத்திரத்தின் ஒன்று; தேசம் ஐம்பத்தாறின் ஒன்று; இது தஷிணமலையாளம்; வாய்விளங்கம்.

**கேலி** - இகழ்ச்சி; பரிகாசம்; விகடம்.

**கேளி** - மகளிர் விளையாட்டு; தென்னை மரம்.

**கைத்தலம்** - கை; உள்ளங்கை.

**கைத்தளம்** - ஒருவகைக் கேடயம்.

**கைவலம்** - வீடுபேறு.

**கைவளம்** - கைராசி; கைப்பொருள்; செழுமை; கைத்தொழிலின் திறம்.

**கைவலை** - சிறுவலை.

**கைவளை** - கைத்தொடி; கடகம்; சிறுவளை; மேற்கூரையைத் தாங்குமாறு சுவர் முதலியவற்றில் அமைக்கும் சட்டம்.

**கொல்** - இரும்பு; உலோகம்; கொலைத் தொழில்; வருத்தம்; கொல்லன்; கொல்லன் தொழில்; சுதவில் தைக்கும் இரும்பு; குறுக்குத்தாழ்; ஐயப்பொருள் தரும் ஓர் இடைச்சொல்; ஓர் அசைநிலை.

**கொள்** - காணம்; குடைவேல்; சிறுநிறையளவு.

**கொல்லம்** - தேயம் ஐம்பத்தாறினொன்று.

**கொள்ளம்** - குழைசேறு.

**கொல்லல்** - கொல்லுதல்.

**கொல்லாமை** - இயத்துறை ஐந்தின் ஒன்று; அது கொலை செய்யாமை.

**கொல்லி** - ஒரு பண்; ஒரு மலை; கொல்வோன்; நெருப்பு; வில்.

**கொல்லிடம்** - காண்க: **கொள்ளிடம்**

**கொல்லுதல்** - அலட்டல்; சங்கரித்தல்; வதைத்தல்; அழித்தல்; வெட்டுதல்; கதிரறுத்தல்; துன்பப்படுத்துதல்; கெடுத்தல்.

**கொல்லெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு; ஒலியடங்குதற்குறிப்பு.

**கொள்ளல்** - பாத்திர முதலியவற்றினுள்ளே அடங்குதல்; மனத்திலே பிடித்தல்; வாருதல்.

**கொள்ளாமை** - அடங்காமை; மனத்திலே பிடியாமை.

**கொள்ளி** - எருமை நாக்கி; நெருப்புறு விறகு; கொள்ளிக்கட்டை; நெருப்பு; பொறாமையும் முன்கோபமும் உள்ளவன் மகன்.

**கொள்ளிடம்** - கொள்ளடம்; ஒருயாறு.

**கொள்ளுதல்** - உள்ளே கொள்ளுதல்; எடுத்துக் கொள்ளுதல்; பெறுதல்; விலைக்கு வாங்கல்; உரிமையாகக் கொள்ளுதல்; மணம் செய்து கொள்ளுதல்; கருதுதல்; நன்கு மதித்தல்; கொண்டாடுதல்; அங்கீகரித்தல்; மேற்கொள்ளுதல்; மனம் பொறுத்தல்; ஒத்தல்; கவர்தல்; முகத்தல்; கற்றுக் கொள்ளுதல்; பொருந்துதல்; உடலிற் காயம்படுதல்; எதிர்மறை ஏவலொருமை வினையொடு சேர்க்கப்படும் ஓர் அசை.

**கொள்ளெனல்** - பறை முதலியவற்றின் ஒலிக்குறிப்பு; மிகுதிக்குறிப்பு.

**கொல்லை** - முல்லை நிலம்; புன்செய் நிலம்; தரிசு; தினைப்புனம்; தோட்டம்; புழைக்கடை; மலங்கழிக்கும் இடம்; மலம்; வரம்பு கடந்து ஒழுகுவோர்.

**கொள்ளை** - சூறையாடுதல்; மிகுதி; கூட்டம்; பெருவாரிநோய்; தடை; விலை; பயன்.

**கொல்லைக்காரன்** - தோட்டம், வயல் முதலியவற்றில் வேலை செய்பவன்; குப்பையெடுப்பவன்.

**கொள்ளைக்காரன்** கொள்ளையடிப்பவன்; மிகுதியான பொருட்களை மொத்தமாகத் திருடிக்கொண்டு செல்பவன்.

**கொலுகொலுத்தல்** - அசைதல்; ஈடாடுதல்.

**கொளுகொளுத்தல்** கொளகொளத்தல்.

**கொலுசு** - காலணியினொன்று.

**கொளுசு** - குளைச்சு.

**கொலை** - கொல்லுதல்; அது காயத் தீக்குணம் மூன்றினொன்று; தாமத குணத்தொன்று; பஞ்ச பாதகத்தும் ஒன்று.

**கொளை** - இசைப்பாட்டு.

**கோமலம்** - அழகு; சிவன் கையில் உள்ள மான்; நீர்; பேய்த்தேர்; மிருது; வசந்தகாலம்.

**கோமளம்** - இளமை; இளமைச்செவ்வி; குருகு; பசு; மாணிக்கவகை; மகிழ்ச்சி; மென்மை.

**சகலம்** - எல்லாம்; துண்டு; தோல்; மீன்முள்.

**சகளம்** - உருவகம்; மாயரூபம்.

**சகலன்** - மூன்றாவது ஆன்மா; மனைவி; சகோதரி கணவன்.

**சகளன்** - சகளபாடி.

**சம்பலம்** - எலுமிச்சை.

**சம்பளம்** - வழியுணவு; வழிப்பொருள்; மாத உழைப்பிற்குக் கிடைக்கும் ஊதியம்; கரை; எலுமிச்சை மரம்; பள்ளிக்கூடச் சம்பளம்.

**சம்பாலம்** - ஆட்டுக்கடா.

**சம்பாளம்** - சேறு.

**சமாலம்** - மயில்தோகை விசிறி.

**சமாலித்தல்** - காண்க: **சமாளித்தல்.**

**சரலம்** - அருகு; ஒருவகைத் தேவதாருமரம்; பதினெட்டு வயதுள்ள யானை.

**சலகன்** - விதைபடித்த பன்றி.

**சலசலத்தல்** - ஓர் ஒலிக்குறிப்பு; ஓயாமல் பேசுதல்.

**சலசலெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு.

**சலம்** - அசைவு; நீர்; சீழ்நீர்; மூத்திரம்; நடுக்கம்; அசையும் அம்புக்குறி; இயங்குதிணை; சுழற்சி; தனியாக்கோபம்; கோபம்; பொய்ம்மை; வஞ்சனை; பட்சபாதம்; தீச்செயல்; மாறுபாடு; போட்டி; முள்ளம்பன்றியின் முள்; இலாமிச்சை; பிடிவாதம்.

**சலித்தல்** - ஒலித்தல்; அசைத்தல்; மனஞ்சலித்தல்; சோர்தல்; வெறுத்தல்; சல்லடையினால் சலித்தல்; கோபம் கொள்ளுதல்; அருவருப்புக் காட்டல்.

**சலிப்பு** - அசைவு; வெறுப்பு; சோர்வு; மனச்சலனம்; கோபம்.

**சமாளம்** - களிப்பு.

**சமாளித்தல்** - சரிக்கட்டி நடத்துதல்; பெரும் முயற்சியோடு ஒன்றை நிறைவேற்றுதல்.

**சரளம்** - ஒழுங்கு; சிவதை; தகுதி; தடையின்மை; நேர்மை.

**சளகன்** - நிலையற்ற மனமுடையவன்.

**சளசளத்தல்** - சேறாயிருத்தல்; அலப்புதல்; மழை முதலியவற்றின் வீழ்ச்சியால் அருவியில் உண்டாகும் ஒலி; ஓர் ஒலிக்குறிப்பு; தர்க்கம் முதலியவற்றில் தளர்ச்சியடைதல்.

**சளசளெனல்** - நீர்பாயும் ஒலி; அலப்புதற் குறிப்பு.

**சளம்** - மூர்க்கம்; துன்பம்; வஞ்சனை.

**சளித்தல்** - சளிநோய் கொள்ளுதல்; புளித்தல்; தளர்தல்; பதனழிதல்.

**சளிப்பு** - பதனழிதல்; ஊழற்சதை பிடித்தல்; சளி கொள்ளுதல்.

**சவலம்** - பயனுடையது; அரைக்கால் வராகன்.

**சவளம்** - குந்தாயுதம்; ஒரு மீன்வகை; புளியின் முற்றிய பழச்சுளை.

**சவலை** - மனக்குழப்பம்; வருத்தம்; சவலைக்குழந்தை; இளமை; மின்னல்; அடிகுறைந்தும் மிக்கும் வரும் பாட்டு; இசைப்பாவகை.

**சவளை** - வங்கமணல்; ஈயமணல்.

**சாலகம்** - வலை; சிலந்திவலை; யாக பத்தினியின் நெற்றியில் அணியும் அணி; பறவைக்கூடு; பலகணி; அரும்பு; சாக்கடை; சிறுகுறிஞ்சா; மாயவித்தை.

**சாளகம்** - இசைப்பாவுக்குரிய சாதியோசை மூன்றனுள் ஒன்று.

**சாலம்** - கூட்டம்; மதில்; ஆச்சா; பலகணி; வலை; பூவரும்பு; கல்வி; தாழ்வாரம்; பெருமை; வஞ்சகம்; மாயவித்தை; நடிப்பு; சடை; அகலம்; குறளை; மருத்துவநூல்; கொடிமர வகை.

**சாளம்** - குங்கிலியம்; மணல்.

**சாலி** - செந்நெல்; நெற்பயிர்ப்பொது; கள்; புழுகுசட்டம்; அருந்ததி; கவசம்; மராமரம்; வேலமரம்.

**சாளி** - ஒரு வகை மரம்; வண்டு.

**சாலிகை** - கவசம்; சுங்கவரி.

**சாளிகை** - வண்டு; பணப்பை; சாடி.

**சிகாவலம்** - மயில்; பாசி.

**சிகாவளம்** - மயில்.

**சிதல்** - கறையான்; ஈசல்.

**சிதள்** - மீன்செதில்; புண்ணின் அசடு; எலும்பு முதலியவற்றின் துண்டு.

**சிமிலி** - குடுமி; உறி; தோணி; சிள்வீடு; பூளைச்செடி; வெல்லங்கலந்த எள்ளின் பொடி.

**சிமிளி** - வெல்லங் கலந்த எள்ளின் பொடி.

**சில்லெனல்** - குளிர்ந்து இருத்தல்; புலன்களுக்கு இன்பமூட்டுங் குறிப்பு; முகமலர்ச்சிக் குறிப்பு; ஒலிக்குறிப்பு.

**சிள்ளெனல்** - விரைவுக்குறிப்பு; ஆரவாரக் குறிப்பு.

**சில்வண்டு** - காண்க: **சிள்வண்டு.**

**சிள்வண்டு** - சுவர்க்கோழி.

**சிலுசிலுத்தல்** - ஒலித்தல்; படபடவென்று பேசுதல்; கோபித்தல்; குளிர்வருதல்; குளிரால் நடுங்குதல்; தூறுதல்.

**சிளுசிளுத்தல்** - இரைச்சற்குறிப்பு; பதனழிவு.

**சிலுசிலுப்பு** - குளிர்ச்சி; சிறுகோபம்; சிறுகுறும்பு.

**சிளுசிளுப்பு** - ஒலிக்குறிப்பு; பதனழிதல்.

**சிலுசிலெனல்** - ஓர் ஒலிக்குறிப்பு; குளிரால் நடுங்குதற் குறிப்பு.

**சிளுசிளெனல்** - ஒலிக்குறிப்பு; பதனழிதல்.

**சிலைத்தல்** - ஒலித்தல்; முழங்குதல்; யாழொலித்தல்; கொட்டுதல்; சினங்கொள்ளுதல்; பின்னிடுதல்.

**சிளைத்தல்** - சோர்தல்.

**சுல்** - வெள்ளி.

**சுள்** - அற்பம்; உறைப்பு; கருவாடு

**சுல்லம்** - கயிறு, தாமிரம்.

**சுள்ளம்** - சினம்.

**சுல்லி** - அடுப்பு; மடைப்பள்ளி.

**சுள்ளி** - சிறு விறகு; அனிச்சமரம்; உலர்ந்த சிறு கொம்பு; சிறுகோல்; மரக்கிளை; சிறுமை; மாமரம்; ஆச்சாமரம்; ஞாழல்; மயிற்கொன்றை மரம்; நாகமல்லி; மல்லிகை; குங்குமம்; எலும்பு.

**சுல்லு** - வெள்ளி.

**சுள்ளு** - கடுவாடு.

**சுலாவுதல்** - சுழலுதல்; சுழற்றுதல்; சூழ்தல்; சுற்றுதல்.

**சுளாவுதல்** - காண்க: **சுலாவுதல்.**

**சூரியகலை** - பிங்கலை; மூக்கின் வலப் பக்கத்துளை.

**சூரியகளை** - சூரியப்பிரபை.

**சூலிகம்** - கோழி.

**சூளிகம்** - அப்பவருக்கம்.

**சூலை** - காலந்தவறி நிகழும் மாதவிடாயால் ஏற்படும் நோய்; வயிற்று வலிநோய்; சிவபிரானது சூலம் நிற்பதால் இன்ன இன்ன திக்கு இன்ன இன்ன கிழமையில் பயணத்துக்கு ஆகாதென்று விலக்கப்பட்ட கிழமைக் குற்றம்.

**சூளை** - செங்கல் முதலியன சுடும் காலவாய்; ஈமவிறகு; விலைமகள்.

**செகில்** - தோளின் மேற்புறம்; சிவப்பு.

**செகிள்** - கனித்தோல்; கேழ்வரகின் சுப்பி; மீன்செதிள்.

**செங்கலம்** - செந்தாமரை.

**செங்களம்** - இரத்தத்தால் சிவந்த இடம்; போர்க்களம்.

**செங்கொல்** - செம்பொன்.

**செங்கொள்** - ஒரு கொள்ளுவகை.

**செதில்** - மீனின் மேலுள்ள பிராலுறுப்பு; தோல்; தூளி; மரப்பட்டை.

**செதிள்** - காண்க: செதில்.

**செந்தலித்தல்** - செழிப்பாதல்.

**செந்தளித்தல்** - செழிப்பாதல்; செவ்வியுறுதல்.

**செம்பசலை** - காண்க: **செம்பசளை**

**செம்பசளை** - சிவப்புப் பசளைக்கீரை.

**செம்பாலை** - பாலைப் பண் வகை.

**செம்பாளை** - சம்பா நெல்வகை; சிவப்பு நெல்வகை.

**செல்லு** - செல்.

**செள்ளு** - தெள்ளுப்பூச்சி; உண்ணிவகை.

**செவ்வல்லி** - செவ்வள்ளிக்கொடி; செந்நிறமான அல்லிவகை; மஞ்சிட்டி.

**செவ்வள்ளி** - ஒரு வள்ளிக்கொடி வகை.

**ஞாலம்** - உலகம்; பூமி; நிலம்; உயர்ந்தோர்; மாயவித்தை.

**ஞாளம்** - தண்டு.

**நெலிதல்** - குடைதல்; தீக்கடைதல்.

**நெளிதல்** - நெளிதல்.

**தங்கல்** - தங்குதல்; தாமதித்தல்; தங்குமிடம்; நிலைபெறுதல்; அடியில் படிந்திருப்பது; கெடு.

**தல்லு** - புணர்ச்சி.

**தல்லுதல்** - இடித்து நசுக்குதல்.

**தல்லை** - தெப்பம்; இளம்பெண்.

**தலைதட்டுதல்** - அளவுப்படியின் தலை மீதாகவுள்ள தானியத்தை வழித்தல்; அடக்குதல்.

**தலைப்படுதல்** - ஒன்று கூடுதல்; எதிர்ப்படுதல்; மேற்காள்ளுதல்; பெறுதல்; முன்னேற்றம்; தலைமையாதல்; புகுதல்; வழிப்படுதல்; தொடங்குதல்.

**தலைபோடுதல்** - மேற்கொள்ளுதல்.

**தலையல்** - சொரிகை; தலைப்பெய்மழை; மழைபெய்து விடுதல்; புதுநீர் வரவு.

**தங்கள்** - உங்களுடைய; படர்க்கைப் பன்மையுடன் சேர்ந்து வரும் சாரியை; கடிதத்தில் கையெழுத்து இடுவதற்கு முன் எழுதப்பெறும் ஒரு வழக்குமொழி.

**தள்ளு** - அகற்றுகை; கழிவு; நீக்குகை; கைவிடல்.

**தள்ளுதல்** - விலக்குதல்; குன்றுதல்; மறதியால் சோர்தல்; தடுமாறுதல்; கழித்தல்; புறம்போக்குதல்; ஏற்றுக்கொள்ள மறுத்தல்; அழுக்குதல்; வெட்டுதல்; கொல்லுதல்; மறத்தல்; தூண்டுதல்; தவறுதல்; வலியுடைத்தாதல்; வெளியேறுதல்; முன்செல்லுமாறு தாக்குதல்.

**தள்ளை** - தாய்.

**தளைதட்டுதல்** - வேற்றுத்தளை விரவியதனால் எடுத்துக்கொண்ட செய்யுளின் தளை மாறுபடுதல்.

**தளைப்படுதல்** - சிறையாதல்; கட்டுப்படுதல்.

**தளைப்போடுதல்** - குறுக்காக வரப்பிடுதல்.

**தளையல்** - கட்டுகை; மறியற்படுத்துகை.

**தவலம்** - அவுபலபாஷாணம்

**தவலை** - அகன்ற வாயுடைய பாத்திர வகை

**தாங்கல்** - தாங்குகை; உட்கிடைக்கிராமம்; மனக்குறை; துன்பம்; சகிப்பு; பூமி; நீர்நிலை; பாசனத்துக்குப் பயன்படும் இயற்கை ஏரி; தயக்கம்; தூக்குகை.

**திரல்** - காட்டாமணக்கு.

**திவலுதல்** - சாதல்.

**தீபாவலி** - காண்க: **தீபாவளி**

**துல்லம்** - பேரொலி.

**துலக்கம்** - விளக்கம்; ஒளி; பளபளப்பு; மெருகு; தெளிவு.

**துலக்குதல்** - தேய்த்துக் கழுவுதல்; வெளிப்படுத்தல்; மெருகிடுதல்; ஒளிரப் பண்ணுதல்; தூய்மை செய்தல்; தீட்டுதல்.

**துலங்குதல்** - ஒளிர்தல்; விளங்குதல்; தெளிவாதல்; சிறத்தல்; கலங்குதல்; தொங்கியசைதல்; ஒப்பமிடப்படுதல்.

**துலம்** - கனம்; துலாநிறை; நீர்முள்ளிச் செடி; கோரைப்புல்; பருத்தி; நிறைகோல்.

**தவளம்** - கருப்பூரம்; சங்கபாஷாணம்; வெண்மிளகு; வெண்மை.

**தவளை** - ஒரு நீர்வாழ் சாதிவகை

**தாங்கள்**- மரியாதையுடன் கூடிய முன்னிலைப் பன்மைச் சொல்.

**திரள்** - உருண்டை; கூட்டம்; படை; மிகுதி; குலை; மிகமுடுகிய நடையையுடைய பாடல்.

**திவளுதல்** - துவளல்; மெலிதல்.

**தீபாவளி** - ஒரு பண்டிகை; தீபவரிசை; தீவாளி.

**துள்ளம்** - சிறுதுளி.

**துளக்கம்** - அசைவு; நடுக்கம்; மனக்கலக்கம்; குறைதல்; சோதிநாள்; ஒளி.

**துளக்குதல்** - அசைத்தல்; விளக்குதல்; வணங்குதல்.

**துளங்குதல்** - அசைதல்; நிலைகலங்குதல்; தளர்தல்; வருந்துதல்; ஒலித்தல்; ஒளிசெய்தல்.

**துளம்** - மாதுளை; மயிலிறகின் அடி.

**துலவம்** - பருத்து.

**துலி** - பெண்ணாமை.

**துலை** - ஒப்பு; கனம்; துலா; துலாராசி; துலைபெண்ஙேவல்; தூரம்; நிரை; நீரிறைக்குந் துலை; நூறுபலம்; மடைமுகம்.

**துலைத்தல்** - தொலைத்தல்.

**துலைதல்** - தொலைதல்.

**துவல்** - அருச்சிக்கும் பூ; விரைவு.

**துவலல்** - தீவிரித்தல்; துளிவிடுதல்

**துவலுதல்** - துளித்தல்; நிறைதல்; விரைதல்; சாதல்.

**தூலம்** - பருத்தி; இலவமரம்; பஞ்சு; கோரைப்புள்; நீர்முள்ளிச்செடி; பருமை; வானம்; கண்ணுக்குப்புலனாவது; வீட்டினுத்திரம்; நெற்போரடிக்கும்கோல்; நஞ்சு; பொதுமை.

**தூலி** - எழுதுகோல்; அன்னத்தின் இறகு; தூரிகை; மெத்தை; விளக்குத்திரி.

**தூலித்தல்** - பருத்தல்; பெருகுதல்.

**துளவம்** - துளசி.

**துளி** - திவலை; மழை; ஒரு சொட்டு அளவு; சிறிதளவு; நஞ்சு; பெண்ணாமை; துளித்தல்.

**துளை** - தொளை உட்டுடை; மூங்கில்; வாயில்; சுருட்சி; வயிரக் குற்றங்களுள் ஒன்று.

**துளைத்தல்** - தொளை செய்தல்; ஊடுருவுதல்; வருத்துதல்; நுட்பமாய்க் கேட்டல்.

**துளைதல்** - நீரில் விளையாடுதல்; அழுந்திக் கிடத்தல்.

**துவள்** - துவட்சி; குற்றம்.

**துவளல்** - துவளுதல்.

**துவளுதல்** - ஒசிதல்; நெளிதல்; வாடுதல்; கசங்குதல்; துடித்தல்; வருந்துதல்; ஒழிதல்; அடர்தல்; இறுகுதல்; ஒட்டுதல்; புணர்தல்; மெல்லியதாய் இருத்தல்; தொடுதல்.

**தூளம்** - தூள்; திருநீற்றை நீரில் குழையாது பூசுதல்.

**தூளி** - புழுதி; பூந்தாது; குதிரை; குதிரையின் ஆர்ப்பு; ஏணை; குழந்தைத் தொட்டில்.

**தூளித்தல்** - பருத்தல்; திருநீற்றால் உத்தூளனஞ் செய்தல்.

**தூலிப்பு** - காண்க: தூளிப்பு.

**தெல்** - தெல்லுக்காய்.

**தெல்லு** - தெல்லுக்காய்; ஒருவிளையாட்டு வகை; பல்லக்குப் போகிகள் தோள் மாற்றும் அஞ்சலிடம்; நீண்டபாத்தி; நெடுங்கிடங்கு.

**தொல்லை** - பழமை; துன்பம்; செயல்.

**தொலி** - தோல்; உமி.

**தொலை** - ஒப்பு; அழிவு; தூரம்; அக்கரைச்சீமை.

**தொலைத்தல்** - அழித்தல்; கழித்தல்; நீக்குதல்; கெட்டுப்போக்குதல்; சிதைத்தல்; தோல்வியடையச் செய்தல்; முற்றுப் பெறச் செய்தல்; முடித்தல்.

**நல்** - நல்ல; வறுமை.

**நல்லல்** - நல்லவள்.

**நல்லார்** - நற்குணமுடையோர்; பெரியோர்; கற்றார்; மகளிர்.

**நல்லாறு** - நல்வழி.

**நல்லி** - நல்லாள்; பெண்; முதுகெலும்பு; விலங்குக் காலின் எலும்பு.

**நலகூபரன்** - குபேரன் மகன்.

**தூளிப்பு** - பருப்பம்.

**தெள்** - தெள்ளுப்பூச்சி.

**தெள்ளு** - இரிக்கி; பூச்சிவகை.

**தொள்ளை** - துளை; துளையுடைய பொருள்; குழி; மரக்கலம்; குற்றம்; அறியாமை; மரக்கால் என்னும் அளவுக்கருவி; பழமை.

**தொளி** - சேறு; வீதி.

**தொளை** - துளை; மூங்கில்.

**தொளைத்தல்** - துளையிடுதல்; தொந்தரவு செய்தல்; செய்தி அறியும் பொருட்டு ஆழம் பார்த்தல்.

**நள்** - நடு; இரவு; உச்சிப்பொழுது; திருவோணநாள்; செறிவு.

**நள்ளல்** - நட்டல்.

**நள்ளார்** - பகைவர்.

**நள்ளாறு** - ஒரு சிவஸ்தலம்

**நள்ளி** - நண்டு; கற்கடகராசி; உறவு; கடையெழு வள்ளலுள் ஒருவன்.

**நளகூபரன்** - குபேரன் மகன்

**நலம்** - நன்மை; இன்பம்; உதவி; கண்ணோட்டம்; அழகு; அன்பு; ஆசை; குணம்; பயன்; புகழ்; உயர்வு; நல்வாழ்வு; நிறம்; செம்மைநிறம்; விருச்சிகராசி; எருதின் விதை; சுக்கு; அறம்.

**நலன்** - நலம்.

**நலி** - நோய்.

**நலிதல்** - சரிதல்; மெலிதல்; வருந்தல்; அழிதல்; நெருக்கல்.

**நலிவு** - துன்பம்; கேடு.

**நாகவல்லி** - வெற்றிலைக் கொடி; திருமண நிறைவுச் சடங்கில் ஒன்று.

**நால்** - நான்கு; நாலடியார் என்னும் தமிழ்நூல்.

**நாலிகம்** - எருமை; காகம்; தாமரை.

**நளம்** - அகலம்; தாமரை; சிற்பநூல்களுள் ஒன்று; நளவசாதி.

**நளன்** - யதுவினுடைய மூன்றாம் புத்திரன்; யயாதி பௌத்திரனாகிய அணுவின் இரண்டாம் புத்திரன்; நிஷாத தேசத்தவனாகிய வீரநேசன் மகன், இவன் மனைவி தமயந்தி.

**நளி** - அகலம்; பெருமை; செறிவு; குளிர்ச்சி; கூட்டம்; செருக்கு; நிந்தை; எள்ளல்; தேள் வெண்சாரணை.

**நளிதல்** - செறிதல்; பரத்தல்; ஒத்தல்.

**நளிவு** - செறிவு

**நாகவள்ளி** - வள்ளிக்கிழங்கு; வெற்றிலைக்கொடி

**நாள்** - தினம்; காலம்; வாழ்நாள்; நல்லநாள்; காலை; முற்பகல்; நட்சத்திரம்; திதி; புதுமை; அன்றலர்ந்தபூ; வெண்பாவின் ஈற்றடியிறுதியில் வரும் ஓரசைச்சீர்வாய்பாடு.

**நாளிகம்** - நாளகம்; வெள்ளைக்கொடி; கோட்டை மதிற்சுவரில் அமைக்கப்படும் எறிபடை வகை; தீபவரிசை; தா.மரை.

**நிகலம்** - பிடரி.

**நிகளம்** - நீளம்; யானைக்காற்சங்கிலி; விலங்கு; தளை; கடப்பமரவகை.

**நீங்கல்** - விலகுகை; பிளப்பு; புறம்பு.

**நீங்கள்** - முன்னிலைப் பன்மைப்பெயர்.

**நீர்வல்லி** - வெற்றிலை; தண்ணீர் விட்டான் கிழங்கு.

**நீர்வள்ளி** - சாற்றாவாரி; வெற்றிலைக்கொடி.

**நீல்** - நீலம்; கறுப்பு; அவுரி; கருங்குவளை; காற்று; வாதநோய்.

**நீள்** - நீளம்; நெடுங்காலம்; உயரம்; ஆலம்; ஒளி; ஒழுங்கு.

**நீலம்** - நீலநிறம்; நீலச்சாயம்; மாணிக்கவகை; ஒன்பான் மணியினுள் ஒன்று; நீலக்கட்டி; குபேரனது நிதியில் ஒன்று; கறுப்பு; இருள்; கருங்குவளை; நீலஆடை; நஞ்சு; துரிசு; கண்ணிலிடும் மை; ஒரு மலைத் தொடர்; பனைமரம்.

**நீளம்** - நெடுமை; தொலைவு; தாமதம்; பறவைக்கூடு.

**நீலி** - கருநிறம்; துர்க்கை; பார்வதி; ஒருபெண்பேய்; கொடியவள்; நீலினி; மேகவண்ணப்பூவுள்ள மருதோன்றிமரம்; பாம்புப்பல்லில் ஒன்று; துருசு; கருநொச்சிச்செடி.

**நீளி** - நெடியன்; நெடியது.

**நோலை** - எள்ளுருண்டை; எட்கசிவு.

**நோளை** - பிணியுண்ட நிலை.

**பங்காலி** - வெளவால்.

**பங்காளி** - கூட்டாளி; தாயாதி; வங்காள நாட்டான்.

**பசலை** - அழகுதேமல்; பொன்னிறம்; காமநிறவேறுபாடு; தலைவன் பிரிவால் வேறுபட்ட நிறம்; வருத்தம்; மனவருத்தம்; இளமை; கவலையின்மை; கீரைவகை.

**பசளை** - ஒரு கீரைவகை; கோழிக்கீரை; பட்பாளி; உரம்; குழந்தை.

**பல்** - எயிறு; ஒன்றுக்கு மேற்பட்டவை; யானை, பன்றி முதலியவற்றின் கொம்பு; நங்கூர நாக்கு; சக்கரம், வாள் முதலியவற்றின் பல்போன்ற கூர்; சீப்புப்பல்; வெள்ளைப் பூண்டு முதலியவற்றின் தனித்தனி உள்ளீடு; தேங்காய் உள்ளீட்டின் சிறு துண்டு.

**பல்குதல்** - பலவாதல்; மிகுதல்.

**பல்லம்** - அம்பு; குதிரைக்கலணை; கரடி; ஒருபேரெண்; செங்கோட்டை மரம்; ஆயுதவகை.

**பல்லயம்** - ஒரு கைவாள் வகை.

**பல்வலம்** - சிறுகுளம்; வாவி.

**பல்லி** - ஒரு சிற்றுயிரி வகை; பூடுவகை; வெற்றிலைக் கூறுவில் அரும்பும் குருத்து; பெரிய பல்லுடையவள்; பலுகுக்கட்டை; கற்சிலைப்புள்; ஊரின் அரைக்கூறு.

**பல்லு** - பல்.

**பள்** - பள்ளச்சாதி; நாடகநூல்வகை; காளி முதலிய தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் காலத்துப் பாடப்படும் பண்வகை.

**பள்குதல்** - பதுங்குதல்.

**பள்ளம்** - தாழ்வு; தாழ்ந்த நிலம்; ஆழம்; குழி; மகம்; கால் இவற்றில் உள்ள குழிவு.

**பள்ளயம்** - உண்கலம்; சிறுதெய்வங்களுக்குப் படைக்கும் பொருள்.

**பல்வளம்** - நிலநீர் முதலிய அனைத்தும் வளம் பெற்றிருத்தல்.

**பள்ளி** - கல்வி கற்குமிடம்; அறை; அறச்சாலை; இடம்; சிற்றூர்; இடைச்சேரி; நகரம்; முனிவர் இருப்பிடம்; சமண பௌத்தக்கோயில்; அரசருக்குரிய அரண்மனை முதலியன; பணிக்களம்; மக்கட்படுக்கை; கிறித்தவக்கோயில்; பள்ளிவாசல்; தூக்கம்; விலங்கு துயிலிடம்; சாலை; வன்னியச்சாதி; குள்ளமானவள்; குறும்பர்.

**பள்ளு** - உழத்திப்பாட்டு; ஒரு சிற்றிலக்கிய வகை; பள்.

**பலகம்** - அடுக்கு; கேடகம்; நாற்காலி.

**பலபலவெனல்** - ஒலிக்குறிப்பு; பொழுது; விடியற்குறிப்பு; கண்ணீர் விரைந்து வடிதற்குறிப்பு.

**பலிதம்** - பலிக்கை; இலாபமாகை; பயன்; கனிமரம்; நரைமயிர்.

**பாந்தல்** - பதுக்கல்; துன்பம்.

**பாலம்** - வாராவதி; நீரின் அணைச்சுவர்; நெற்றி; பூமி; மரக்கொம்பு; வெட்டி வேர்.

**பாலிதம்** - பெருந்தேக்கு.

**பாலை** - முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நிலம்; பாலைத்தன்மை; புறங்காடு; பாலை நிலத்து உரிப் பொருளாகிய பிரிவு; இருள் மரம்; முள்மகிழ்; மரவகை; பெரும்பண் வகை; ஒரு யாழ்வகை; பாலை யாழிற்பிறக்கும் ஏழுவகைப்பண் வகை; புனர்பூசம்; மிருக சீரிட நாள்; கவறாட்டத்து வழங்கும் ஒரு குழூஉக் குறி; பெண்; குழந்தை; பதினாறு அகவைக்குட்பட்ட பெண்; சிவசக்தி; மீன்வகை.

**பளகம்** - பவளம்; மலை.

**பளபளவெனல்** - ஒளிக்குறிப்பு; ஒலிக்குறிப்பு.

**பளிதம்** - கருப்பூரம்; பச்சைக்கருப்பூரம்; பச்சடி; ஒருபேரெண்.

**பாந்தள்** - பாம்பு; மலைப்பாம்பு.

**பாளம்** - உலோகக் கட்டி; தகட்டு வடிவம்; வெடித்த தகட்டுத்துண்டு; தோலுரிவு; வெடியுப்பு; சீலையின் கிழிவு; பளபளப்பு.

**பாளிதம்** - சோறு; பாற்சோறு; குழம்பு; பட்டுப்புடவை; விதானச்சீலை; பணித்தூக; கண்ட சருக்கரை; பச்சைக்கருப்பூரம்; சந்தனம்.

**பாளை** - பாக்கு தெங்கு பனை முதலியவற்றின் பூவை மூடிய மடல்; செம்பாளை நெல்; பதர்; சுறாவின் ஈரல்; கருப்பருவம்; ஐந்து ஆண்டுக்கு உட்பட்ட பருவம்.

**பிங்கலம்** - பொன்; பொன்மை நிறம்; வடக்கு; அரிதாரநிறம்; பிங்கல நிகண்டு; எச்சில் உமிழும் பழக்கம்.

**பிங்களம்** - பொன்னிறம்; அரிதார நிறம்; வஞ்சகம்; களிம்பு; வேறுபாடு.

**பிங்கலை** - பத்து நாடியுள் ஒன்று; வலமூக்கு வழியாக வரும் மூச்சு; ஆந்தை வகை; எண்திசை யானைகளுள் வாமனத்துக்குரிய பெண்யானை; பார்வதி.

**பிங்களை** - எண்திசை யானைகளுள் வாமனத்துக்குரிய பெண்யானை; வாழ்நாளுள் மூன்று பகுதியுள் இரண்டாவது.

**பில்லை** - மங்கிய மஞ்சள் நிறம்; வில்லை; திரண்டு உருண்டது; தலையில் அணியும் அணிவகை; சதுர ஓடு; ஆணியின் திருகுவரை; சேவகர் முதலியோர் தரிக்கும் வில்லை.

**பிள்ளை** - குழந்தை; மகன்; மகள்; இளைஞன்; இளமை; சிறுமை; சாதி; கோட்டில் வாழ் விலங்கின் இளமை; கரிக்குருவி; காகம்; நெல்லும் புல்லும் ஒழிந்த ஓரறிவு உயிரின் இளமைபெயர்; பிள்ளைப்பூச்சி; இளமைப்பெயர்; வைரவன்; வேளாளர் பட்டப்பேறு; சங்கின் ஏறு; மரப்பாவை; பறப்பன தவழ்வன இவற்றின் இளமை.

**புல்** - தாவரவகை; ஒருசார் விலங்குகளின் உணவு வகை; புதர்; கம்பு; புன்செய்த் தவசம்; புல்லரிசி; மருந்துச்செடிவகை; பனை; தென்னை; அனுடநாள்; புல்லியது; இழிவு; கபிலநிறம்; புணர்ச்சி; புலி.

**புள்** - பறவைப்பொது; வண்டு; கணந்துட் பறவை; பறவை நிமித்தம்; அவிட்ட நாள்; கைவளை; மதுபானம்; கிட்டிப்புள்.

**புல்லகம்** - மகளிர் நெற்றியணி.

**புல்லம்** - எருது; இடபராசி; வசைமொழி; மலர்.

**புள்ளகம்** - மகிழ்ச்சி

**புள்ளம்** - அரிவாள்; கொடுவாள்; அரிவாள்மணை.

**புல்லி** - புறவிதழ்; பூவிதழ்.

**புல்லு** - புல்; கிட்டிப்புள்; கொடியின் தாங்குகட்டை

**புல்லுவர்** - வேடர்.

**பூலம்** - புற்கட்டு.

**பேரொலி** - மிகுஒலி.

**பொல்** - பதர்.

**பொல்லாமணி** - காண்க: **பொள்ளாமணி.**

**பொல்லுதல்** - காண்க: **பொள்ளுதல்.**

**பொலிதல்** - செழித்தல்; பெருகுதல்; மிகுதல்; விளங்குதல்; சிறத்தல்; மங்கலமாதல்; நீடுவாழ்தல்; நிகழ்தல்; புணர்தல்.

**போர்க்கலம்** - போரணிதரிப்பு.

**புள்ளி** - அடையாளம்; பொட்டுக்குறி; எழுத்தின் மேலிடும் குத்து அல்லது சுழிக்குறி; மெய்யெழுத்து; ஆய்தம்; குற்றியலிகர உகரங்கள்; சரக்கின் மேலிடும் விலைமதிப்புக்குறி; கவற்றின் கட்டம்; மதிப்பு; ஆள்; பேரேடு; பெருந்தொகை; இமயமலை; பல்லி; நண்டு.

**புள்ளு** - பறவை; சிறுபுள்ளடிப்பூண்டு.

**புள்ளுவர்** - கீழ்மக்கள்; வஞ்சகர்; வேடர்.

**பூளம்** - பூவரசு.

**பேரொளி** - மிக்க ஒளி; சூரியன்; சந்திரன்; பரஞ்சுடர்.

**பொள்** - துளை; விரைவுக்குறிப்பு.

**பொள்ளாமணி** - துளையிடாமணி; குற்றமற்றமணி; மாசற்ற பரம் பொருள்.

**பொள்ளுதல்** - துளைத்தல்; கிழிதல்; பொளிதல்; மாசற்ற பரம்பொருள்.

**பொளிதல்** - உளியால் கொத்துதல்; பிளத்தல்; இழத்தல்; துளைசெய்தல்; ஓட்டையாதல்; பள்ளமாதல்.

**போர்க்களம்** - சண்டை செய்யுமிடம்.

**போலி** - ஒன்றுபோல் ஒன்றிருத்தல்; ஒப்புடையவர்; ஒப்புடையது; ஒப்பு; சாயல்; கள்ளப்பொருள்; படி; பிரதி; பொய்; வஞ்சகம்; கேலி; போலியெழுத்து; இலக்கணப்போலி; நியாயபாசம்.

**மக்கல்** - கெட்டுப்போன பொருள்; கூளம்.

**மங்கலகௌசிகம்** - ஓர் இராகம்.

**மங்கலநாயகியம்மை** - திருக்குடமூக்கிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர்.

**மங்கலப்பாடகர்** - கடிகைமாக்கள்; சோபனம் பாடுவோர்.

**மங்கலம்** - திருமணம்; ஆக்கம்; பொலிவு; நற்செயல்; நன்மை; தாலி; தருமம்; சிறப்பு; வாழ்த்து; மங்கலவழக்கு; எண்வகை மங்கலம்; சேகரிப்பு; தகனபலி; சில ஊர்ப்பெயர்களின் பின் இணைக்கப்படும் துணைச்சொல்.

**மங்கலை** - சுமங்கலி; கணவனோடு வாழ்பவள்; திருமகள்; பார்வதி; துர்க்கை; அம்பட்டத்தி.

**மங்குலம்** - காண்க: **மங்குளம்.**

**போளி** - ஓர் இனிப்புப் பலகாரவகை; மூடன்.

**மக்கள்** - மானுடவினம்; ஐம்பொறி உணர்வோடு மனவறிவுடைய உயிர்கள்; பிள்ளைகள்.

**மங்களகௌசிகம்** - ஒரு பண்

**மங்களநாயகியம்மை** - திருவாரூரிலே கோவில் கொண்டிருக்கம் நாயகியாரின் பெயர்.

**மங்களப்பாடகர்** - காண்க: **மங்கலப்பாடகர்.**

**மங்களம்** - சுபகாரியம் காரியம்; வாழ்த்து; மங்கலம்.

**மங்களை** - பார்வதி; மக்களின் பருவ நிலைகளுள் ஒன்று; யோகினி திசையினொன்று

**மங்குளம்** - மழுக்கம்; கலக்கம்; முகவாட்டம்; பார்வை மந்தம்; ஐயம்; நிறக்குறைவு.

**மஞ்சுலம்** - நீர்ப்பாய்ச்சல்.

**மதலை** - மகன்; குழந்தை; மழலை மொழி; பாவை; பற்றுக்கோடு; தூண்; வேள்வித்தூண்; வீட்டின் கொடுங்கை; பற்று; மரக்கலம்; கொன்றை மரம்; சரக்கொன்றை.

**மராலம்** - கண்ணிடுமை; குதிரை; தாரா; மாதளை.

**மல்லம்** - மற்போர்; மல்லகதி; வலிமை; கிண்ணம்; தட்டம்; கதுப்பு; வேள்வியில் எஞ்சியது; பள்ளியறை.

**மல்லர்** - மற்போர் செய்வோர்; வலியர்; திருக்குறள் உரையாசிரியர்களுள் ஒருவர்.

**மல்லன்** - மற்போர் செய்வோன்; பெருமையிற்சிறந்தோன்.

**மல்லு** - ஒரு கூத்து; ஒரு போர்.

**மாக்கல்** - பலப்பம் முதலியவை செய்தற்குரியகல்; சவர்க்காரக்கல்.

**மாலம்** - குங்குமமரம்; பேய்.

**மாலயம்** - சந்தனமரம்; மாளயம்.

**மஞ்சுளம்** - அழகு.

**மதளை** - சரக்கொன்றை.

**மராளம்** - அன்னம்; பூநாரை; பாம்பு; மாதுளை

**மள்ளம்** - வலிமை.

**மள்ளர்** - உழவர்; குறவர்; குறிஞ்சி நில மாக்கள்; திண்ணியர்; படைவீரர்; மறவீர்.

**மள்ளன்** - உழவன்; திண்ணியோன்; வலிமையுடையவன்; படைத்தலைவன்; படைவீரன்; இளைஞன்; மருதநிலத்தோன்; குறிஞ்சிநிலத்து வாழ்வோன்.

**மள்ளு** - கைம்மரம்.

**மாக்கள்** - மனிதர்கள்; பகுத்தறிவிலார்; குழந்தைகள்; விலங்குகள்.

**மாளம்** - கத்தூரி.

**மாளயம்** - புரட்டாசி மாதத்தில் இறந்தவரை நினைத்து அன்னார்க்குச் செய்யும் சிராத்தம்; சாந்திரமான மாதத்துத் தேய்பிறை.

**மாலவம்** - ஒரு தேசம்.

**மாளவம்** - தேயம் ஐம்பத்தாறினொன்று; முன்னர் உச்சயினிபுரமும் பின்னர்த் தாராபுரமும் இராஜதானியாகப்பெற்ற தேசம், இது விதர்ப்ப தேசத்துக்கு வடதிசையிலுள்ளது; இது மாளுவம் எனப்படும்.

**மாலிகை** - மாலை; வரிசை; சீமைச்சணல்.

**மாளிகை** - அரண்மனை; கோயில்; மாடிவீட்டின் மேல்நிலம்; மாடமுள்ள பெருவீடு; வீடு.

**மாலுதல்** - மயங்குதல்; மாட்சிமைப்படுதல்; எழுதகம் அமைத்தல்.

**மாளுதல்** - சாதல்; அழிதல்; கழிதல்; இயலுதல்.

**மாலை** - அந்திப்பொழுது; இரவு; இருள்; சமயம்; குற்றம்; மரகதக் குற்றவகை; இயல்பு; குணம்; தொடுக்கப்பட்டது; தொடுத்த பூந்தொடை; மாதரணிவடம்; நூல்வகை; வரிசை; பாசம்; விறலி; பெண்.

**மாளை** - புளியம்பட்டை.

**மீன்செதில்** - மீனின் மேற்புறத்தேயுள்ள பிரால்.

**மீன்செதிள்** - காண்க: **மீன்செதில்.**

**முகுலம்** - ஆத்துமா; சரீரம்; மலரிதழ்.

**முகுளம்** - அரும்பு; தாமரைத்தண்டு; ஐந்துவிரலும் தம்மில் தலைகுவிந்து நிற்கும் இணையாவினைக்கை வகை; யோகாசனவகை; ஆசனவகை; மூளையின் பின்பகுதி.

**முதல்** - ஆதி; இடம் முதலியவற்றில் முதலாயிருப்பது; காரணம்; மூலகாரணனான கடவுள்; முதலானவன் ஏற்றம்; மூலதனம்; வேர்; கிழங்கு; அடிப்பாகம்; மரம் முதலியவற்றின் அடி; இடம்; அகப்பொருட்குரிய நிலம்; பொழுதுகளின் இயல்பு; பிண்டப்பொருள் செலவுக்காகச் சேமிக்கும் பொருள்; இசைப்பாட்டுள் ஒன்று; சொத்தின் கொள்முதல் விலை; பன்னிரு உயிரெழுத்தும் பதினெட்டு மெய்யெழுத்தும் தொடக்கமாகவுடைய; ஏழாம் வேற்றுமையுருபு; ஐந்தாம் வேற்றுமையுருபு; பத்திரம்.

**முதள்** - மொக்கு.

**முதலை** - செங்கிடை; நீர்வாழ் உயிரி, இறகின் அடிக்குருத்து

**முதளை** - ஒரு நீர்ப்பூண்டு; முதலை.

**முரல்** - ஒரு மீன்வகை.

**முரள்** - சிப்பி வகை.

**முரலி** - காண்க: **முரளி.**

**முரளி** - வேய்ங்குழல்; மூக்கால் ஊதுங்குழல்.

**மெல்ல** - மெதுவாக.

**மெல்லென** - மெல்ல.

**மெள்ள** - காண்க: **மெல்ல.**

**மெள்ளென** - காண்க: மெல்லென.

**மேலனம்** - கலக்கை; கூட்டம்; பழக்கம்.

**மேளனம்** - கூட்டம்; கலக்கை; இசைக்கருவிகளின் சுருதியிணைபு.

**வகுலி** - மீன்.

**வகுளி** - ஒளி.

**வசலை** - பசளைக்கொடி.

**வசளை** - பசளை.

**வயலை** - பசளைக்கொடி; வெளி.

**வயளை** - பசளை.

**வராலம்** - இலவங்கம்.

**வராளம்** - பாம்பு.

**வராலி** - செடிவகை.

**வராளி** - சந்திரன்; ஒரு பண் வகை; யாழ்வகை; மண்ணீரல்.

**வல்** - வலிமை; திறமை; மேடு; சூதாடுகருவி; முலைக்கச்சு; விரைவு.

**வல்லடி** - வலிமை; திறமை; வலாற்காரம்; கொடுமை; கொடுஞ்செயல்; அருஞ்செயல்; காலமல்லாக் காலத்து எற்படும் சாவு.

**வல்லம்** - ஆற்றல்; மனைவி; ஓரூர்; ஒரு சிவஸ்தலம்; வாழை; ஓலையால் முடைந்தகூடை; இரண்டு மஞ்சாடி நிறை; பளிங்குக் கல்வகை.

**வல்லியம்** - புலி; கொல்லிமலை; கொடி செவ்வள்ளி; மஞ்சள்; இடைச்சேரி.

**வல்லுரம்** - காடு; புற்றரை; வயல்; மணல்; பூங்கொத்து; காட்டுப்பன்றியிறைச்சி; தனிமை.

**வல்லூரம்** - வனம்; பாழ் நிலம்; இறைச்சி;.

**வல்லை** - வலிமை; பெருங்காடு; மேடு; கோட்டை; வயிற்றுக்கட்டி வகை; வருத்தம்; மரவகை; புனமுருங்கை; வட்டம்; விரைவு.

**வலம்** - வெற்றி; வலிமை; படை; ஆணை; வலப்பக்கம்; வலமாகச் சுற்றிவருதல்; கனம்; மேலிடம்; ஏழனுருபு; பவ்வீ; உயர்வு.

**வள்** - வளம்; பெருமை; நெருக்கம்; கூர்மை; வாள்; வார்; வாளுறை; கடிவாளம்; காது; படுக்கை; வலிமை; வலிப்பற்றிரும்பு.

**வள்ளடி** - காதினடி.

**வள்ளம்** - உண்ணும் வட்டில்; நாழிகை; அளவுவகை; சிறுதோணி.

**வள்ளியம்** - ஊதுகுழல்; மரக்கலம்; மெழுகு; மிளகு.

**வள்ளுரம்** - பசுந்தசை; பசுவின் இறைச்சி.

**வள்ளூரம்** - சூட்டிறைச்சி; பசுந்தசை.

**வள்ளை** - மகளிர் நெல்குற்றும்போது ஒரு தலைவனைப் புகழ்ந்துபாடும் பாட்டு; ஒரு கொடிவகை.

**வளம்** - செல்வம்; செழுமை; மிகுதி; பயன்; வருவாய்; நன்மை; மாட்சிமை; தகுதி; அழகு; பதவி; புனல்; உணவு; வாணிகப்பண்டம்; வெற்றி; வழி; பக்கம்.

**வலையம்** - வட்டம்; சக்கரப்படை; கடல்; குளம்; கை வளையம்; தாமரையின் சுருள்; சுற்றிடம்; நீர்நிலை; பாத்தி; தோட்டம்; எல்லை.

**வறல்** - உலர்தல்; வறண்ட நிலம்; சுள்ளி; நீரில்லாமை; வறுத்தல்; உலரவைத்த காய்; இறைச்சி முதலிய உணவு.

**வாதுலம்** - சுழற்காற்று.

**வாய்விலங்கம்** - ஒரு மருந்து.

**வால்மீன்-** வால் நட்சத்திரம்.

**வாலம்** - வால்; தலைமயிர், நீண்டு அகலம் குறுகிய துண்டு; கந்தைத் துணி; இளமை; எறிபடை வகை; தனியாகக் கட்டடம் செய்த புத்தகம்.

**வாலாமை** - தூய்மையின்மை; அழுக்கு; மகளிர் தீட்டு.

**வாலிகை** - மணல்.

**விரலம்** - காண்க: **விரளம்.**

**விராலி** - ஒரு மலை; ஒரு சுப்பிரமணிய ஷேத்திரம்; ஒரு செடி.

**வளையம்** - தாமரைச்சுருள்; சுற்று; முடியில் வளைத்துச் சூடும் மாலை; குளம்; கைவளை; சங்கு; எல்லை; மண்டலம்; ஒரு கோள் வான மண்டலத்தை ஒருமுறை சுற்றி வரும் காலம்.

**வறள்** - உலர்கை; வறட்சியான நிலம்; மணற்பாங்கு.

**வாதுளம்** - சிவாகமம் இருபத்தெட்டில் ஒன்று.

**வாய் விளங்கம்** - ஒரு கொடிவகை.

**வாள்மீன்** - ஒரு மீன்.

**வாளம்** - ஒளி; கத்தி; கத்தரிகை; கூர்மை; ஈர்வாள்; விளக்கம்; புகழ்; கொல்லுகை; கலப்பை; உழுபடையின் கொழு; கயிறு; நீர்; கச்சு; யாளி; வட்டம்; சக்கரவாளமலை; சக்கரவாகப்புள்; நேர் வாளம்.

**வாளாமை** - மௌனம்; பொருட்படுத்தாமை; பயனின்மை; உள்ளீடின்மை.

**வாளிகை** - ஒரு காதணிவகை.

**விரளம்** - செறிவின்மை; இடைவெளி; அவகாசம்; அருமை.

**விராளி** - விரகல்.

**விலக்கம்** - விலகியிருக்கை; மாதவிடாய்; ஊரைவிட்டு நீங்குகை; வழங்காமல் விலக்குகை; புறம்பாக்குகை.

**விலக்கணம்** - சிறப்பியல்பு; மேன்மை; இலட்சணத்தோடு கூடாமை.

**விலக்கு** - வேண்டாத ஒன்றை ஒதுக்குகை; தனி; சிறப்பு விதி; தடை; வீரன் தன் மேல் வரும் அம்புகளைத் தடுக்கை; மாதவிடாய்; வழு; அணிவகை.

**விலங்கல்** - கலங்கனீர்; மலை; விலகுதல்.

**விலங்கு** - குறுக்கானது; மாவும்புள்ளும் மான்; கைகால்களில் மாட்டப்படும் தளை; வேறுபாடு; தடை; உயிர்மெய்யெபத்துக்களில் இ, ஈ, உ, ஊ முதலிய உயிர்களைக் குறிக்கும் அடையாளமாக மேலும் கீழும் உள்ள வளைவு; குன்று; உடல்.

**விலங்குதல்** - குறுக்கிடுதல்; மாறுபடுதல்; நீங்குதல்; பின்னிடுதல்; ஒதுங்குதல்; இடம் விட்டுப் பெயர்தல்; பிரிதல்; ஒழுங்கு தவறுதல்; ஒளிவிடுதல்; தடுத்தல்; களைதல்; கொல்லுதல்; அழித்தல்; எறிதல்; செலவிடுதல்.

**விலத்தல்** - நீக்குதல்; நீங்குதல்.

**விலத்துதல்** - நீக்குதல்; நீங்குதல்.

**விளக்கம்** - தெளிவான பொருள்; தெளிவு.

**விளக்கணம்** - பொடிவைத்துப் பொருந்துகை; பற்றுப்பொடி.

**விளக்கு** - ஒளிதரும் கருவி; ஒளிப்பிழம்பு; ஒளிபெறச் செய்கை; சோதிநாள்.

**விளங்கல்** - ஒளிசெய்தல்; தெளிதல்.

**விளங்கு** - அரத்தை வகை.

**விளங்குதல்** - ஒளிர்தல்; தெளிவாதல்; விளக்கமாதல்; பளபளப்பாதல்; பெருகுதல்; மிகுதல்; அறிதல்.

**விளத்தல்** - விவரித்தல்; விலக்குதல்.

**விளத்துதல்** - விலத்துதல்.

**விலம்** - அகில்; குகை; பள்ளம்; துளை; பொந்து.

**விலம்பம்** - தாமதம்; இலயவகை.

**விலம்பனம்** - தாமதம்; இலயவகை.

**விலம்பிதம்** - தாமதம்.

**விலாசம்** - முகவரி; கடிதம் பெற்றுக் கொள்பவரின் பெயர்; இருப்பிடம் முதலிய குறிப்பு; அழகு; காமக்குறிப்போடு கூடிய செய்கை; கூச்சம்; நாடக நூல்; வணிகர்களால் பண்டங்களில் குறிக்கப்படும் விலைக்குறியீடு; அகலம்; வாழை; ஒரு நூல்வகை; மரவகை.

**விலாசுதல்** - அழகுற அணிதல்; முற்றுந்தோல்வியுறச் செய்தல்; வலுவாக அடித்தல்.

**வெங்கலம்** - சுடுகையுள்ள பாத்திரம்.

**வெண்டலை** - தசை நீங்கி எலும்புமட்டுமான தலை; தலையோடு; வெண்ணிலை.

**வெல்லம்** - கருப்பஞ்சாற்றுக் கட்டி.

**விளம்** - அடம்; அகங்காரம்; விளாமரம்; இயற்சீரின் இறுதிநிரை வாய்பாடு.

**விளம்பம்** - தாமதம்; இலயவகை.

**விளம்பனம்** - பழங்கால மக்களின் பழக்கத்தைப் பாடியும் ஆடியும் காட்டுதல்.

**விளம்பிதம்** - விளம்பம்.

**விளாசம்** - காண்க: விலாசம்.

**விளாசுதல்** - அடித்தல்; மனத்தில் உறுத்திப்பேசுதல்.

**வெங்களம்** - போர்க்களம்.

**வெண்டளை** - வெண்பாவிற்குரிய தளையான இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை.

**வெள்ளம்** - நீர்ப்பெருக்கு; பெருக்கம்; கடல்; கடலலை; நீர்; ஈரம்; மிகுதி; ஒரு பேரெண்; உண்மை.

**வெல்லி** - சிற்றேலம்; வல்லவர்.

**வெல்லை** - வெள்ளை நிறம்.

**வேல்** - நுனிக்கூர்மையுடைய ஆயுதவகை; திரிசூலம்; ஆயுதப்பொது; ஆயுத வகை; முருகன்வேல்; வெல்லுகை; பகை; மரவகை; வெள்வேல்; உடை; மூங்கில்.

**வேலன்** - முருகன்; முருகபூசை செய்பவன்; வேல்காரன்.

**வேலை** - தொழில்; செயல்; வேலைப்பாடு; வேலைத்திறன்; உத்தியோகம்; காலம்; கடற்கரை; கடல்; அலை; கானல்; கரும்பு; வெண்காரம்.

**வெள்ளி** - வெண்மை; வெண்ணிறம் உள்ள உலோகவகை; நாணய வகை; சுக்கிரன்; வெள்ளிக்கிழமை; விண்மீன்; அறிவுக்குறைவு; விந்து; ஒருபுலவர்; அசுரகுருவாகிய சுக்கிரன்.

**வெள்ளை** - வெண்மை; பலராமன்; சுண்ணாம்பு; வெள்ளி நாணயவகை; வயிரம்; மரகதக்குற்றம் எட்டனுள் ஒன்று; சங்கு; கள்; வேங்கைமரம்; வெள்ளைத்துணி; வெளுப்பு; வெள்ளை மாடு; வெள்ளாடு; கபடமற்றவர்; கபடமற்றது; கருத்தாழமில்லாதது; பொருள் வெளிப்படையானது; வெண்பா; இசையில் உண்டாகும் வெளிற்றோசை; புல்லிது.

**வேள்** - கலியாணம்; விருப்பம்; மன்மதன்; முருகன்; வேளிக்குலத்தான்; சளுக்க வேந்தன்; சிற்றரசன்; சிறந்த ஆண்மகன்; மண்.

**வேளான்** - வேளாளரில் ஒரு பகுதியான்; குயவர் குலப்பட்டப்பெயர்.

**வேளை** - காலம்; கருமவினை; நாய் வேளைப்பூடு; தைவேளைப்பூடு.

# ழ/ள கர வேறுபாட்டுச் சொற்கள்

**அகத்தாழம்** - மாலைப் பொழுது

**அதழ்** - பூவிதழ்

**அழகாரம்** - பேச்சுத் திறம்; அழகான பேச்சு; வீண்புகழ்ச்சிப் பேச்சு; மதுரம்.

**அழித்தல்** - செலவழித்தல்; கெடுத்தல்; கலைத்தல்; குலைத்தல்; உள்ளதை மாற்றுதல்; மறப்பித்தல்; தடவுதல்; நீக்குதல்; நிந்தித்தல்

**அழிதல்** - நாசமாதல்; சிதைவுறுதல்; தவறுதல்; நிலைகெடுதல்; தோற்றல்; மனம் உருகுதல்; வருந்துதல்; மனம் உடைதல்; பெருகுதல்; பரிவு கூர்தல்; செலவாகுதல்.

**அழித்து** - மீட்டும்; மாறுபாடாய்.

**அழிப்பு** - சங்காரம்; குற்றம்

**அழுக்கு** - மாசு; மனமாசு; பொறாமை; ஆணவமாகிய பாசம்; வெளுத்தற்குரிய மாசு படிந்த ஆடை; மலசாதிகள்; பிள்ளைப்பேற்றின் பின்வடியும் ஊனீர்; ஆமைவகை

**அழுங்கு** - விலங்குவகை; கற்றாழை; பாலை யாழ்த்திறவகை.

**ஆயிழை** - அரிவாணுனி; பெண்; விசேஷ ஆபரணம்; கன்னிராசி

**அகத்தாளம்** - இரவு உணவு

**அதள்** - தோல்; மரப்பட்டை

**அளகாரம்** - ஆத்திரமாய்ப் பேசுகை; வீண்புகழ்ச்சியாய்ப் பேசுகை

**அளித்தல்** - காத்தல்; கொடுத்தல்; படைத்தல்; ஈனுதல்; அருள் செய்தல்; விருப்பம் உண்டாக்குதல்

**அளிதல்** - உருகுதல்; கனிதல்; வார்தல்

**அளித்து** - அளி செய்யத்தக்கது

**அளிப்பு** - உருவாக்குதல்; படைத்தல்

**அளுக்கு** - ஆளுக்கென்னேவல்; தெரிநிலை வினைப்பகுதி; பெயரெச்சத்தொகை

**அளுங்கு** - காண்க: அழுங்கு

**ஆயிளை** - கொடுவாட்டாலை

**ஆழ்வார்** - பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர்; திருமாலடியார் பன்னிருவர்; சமண பொத்தப் பெரியோர்; சுவாமி.

**ஆள்வார்** - சுவாமி

**இந்துழி** - பெருங்காயம்

**இந்துளி** - நெல்லி; பெருங்காயம்

**இழிகண்** - எப்பொழுதும் பீளைநீர் ஒழுகும் கண்ணீர்.

**இளிகண்** - பீளைக்கண்

**இழித்தல்** - இறக்குதல்; இகழுதல்.

**இளித்தல்** - பல்லைக்காட்டுதல்; பல்லைக் காட்டிச் சிரித்தல்; கேலி செய்தல்

**இழிப்பு** - நிந்திக்கை; இகழ்வு; இழிப்புச் சுவை.

**இளிப்பு** - பல்லிளிக்கை; பல் காட்டுதல்; இழிவு; நிந்தை

**இழிவரவு** - இளிவரவு

**இளிவரவு** - இகழ்ச்சி; சிறுமை; இழிதொழில்

**இழிவு** - தாழ்வு ; இகழ்ச்சி; நிந்தை; குறைவு; குற்றம்; கேடு; பள்ளம்; தீட்டு

**இளிவு** - இழிவு; இகழ்ச்சி; இழிதகவு; அருவருப்பு; அவலச் சுவை நான்கனுள் ஒன்று; நிந்தை

**இழைப்பு** - இழைத்தல்

**இளைப்பு** - களைப்பு; சோர்வு; வருத்தம்; மெலிவு; தொய்வு

**ஈழை** - காசநோய்; கோழை; தொய்வு.

**ஈளை** - கோழை

**உயிரொழித்தல்** - கொல்லல்

**உயிரொளித்தல்** - உயிர் போனதுபோல் காட்டல்

**உழவன்** - உழுபவன்; மருத நிலத்தவன்; உழவுமாடு; வீரன்

**உளவன்** - உளவு அறிபவன்; துப்பான்

**உழவு** - நிலத்தை உழும் தொழில்; வேளாண்மை; உடம்பினால் உழைக்கை.

**உளவு** - கமுக்கம்; இரகசியச் செய்தி; உட்செயல்; வேவு; ஒற்றன்; உபாயம்; உள்ள தன்மை

**உழி** - இடம்; பக்கம்; ஏழனுருபு; பொழுது; அளவு

**உளி** - தச்சுக் கருவிபீளுள் ஒன்று; நகஞ்சீவி; பீணிச்சி; சித்தரிக்குங்கருவி; இடம்; ஓரிடைச்சொல்; ஏழாம் வேற்றுமை உருபு; ஒரு பகுதிப் பொருள் விகுதி

**உழிஞை** - சிறுபூளை; கொள்ளான்; பகைவரது அரணை வளைப்போர் சூடும் மாலை; உழிஞைத் திணை.

**உழுந்து** - காண்க: **உளுந்து**

**உழுவை** - புலி; ஒரு மீன்வகை; நன்னீர்; உளுவை மீன்; குண்டலவுழுவை; தும்பிலி

**ஊழி** - முடிவுகாலம்; யுகமுடிவு; கடல்பெருகி உலகம் அழியும் காலம்; நெடுங்காலம்; பூமி; விதி; முறைமை; வாழ்நாள்

**கடுவழி** - கடத்தற்கு அரிய வழி.

**கழங்கம்** - சூதாடுகருவி

**கழப்புதல்** - சோம்பலாயிருத்தல்; வேலை செய்யாது காலம் போக்குதல்

**கழாநிலம்** - கழிநிலம்

**கற்பாழி** - மலைக்குகை.

**கறுழ்** - கடிவாளம்

**கிழவி** - தலைவி; முதியவள்; முருங்கை மரம்

**குமிழ்** - உள்ளங்காற்கட்டி; எருத்துத் திமில்; ஒரு மரம்; குமிழ்; குமிழ்ப்பு; நாணல்

**குழகு** - இளமைச்செவ்வி; அழகு; குழந்தை

**குழகுழத்தல்** - நெகிழ்ந்திருத்தல்; மன உறுதியறுதல்

**குழகுழவெனல்** - இளகியிருக்கும் குறிப்பு

**உளிஞை** - கோபுரவாயில்; படை

**உளுந்து** - தானிய வகை

**உளுவை** - ஒரு மீன் வகை; ஆற்று மீன் வகை; கடல் மீன் வகை

**ஊளி** - நெடுவாய் மீன்; சத்தம்; நாய்நரி முதலியன கத்தும் ஒலி; பசி

**கடுவளி** - சூறாவளி; பெருங்காற்று

**களங்கம்** - குற்றம்; மறு; துரு; களிம்பு; கறுப்பு; கறுப்புப் புள்ளியாகிய ஒருவகை வயிரக்குற்றம்; நீலம்; அடையாளம்; சீதாங்க பாடானம்

**களப்புதல்** - வேலைக் கள்ளம் பண்ணுதல்

**களாநிலம்** - உப்பு நிலம்

**கற்பாளி** - கல்லளை

**கறுள்** - கடிவாளம்

**கிளவி** - மொழி; பேச்சு; சொல்; அகப்பொருள் துறை

**குமிள்** - ஒரு மரம்; குமிழ்

**குளகு** - தழையுணவு; தழை; இலைக்கறி

**குளகுளத்தல்** - நெகிழ்ந்திருத்தல்

**குளகுளவெனல்** - நெகிழ்ந்திருத்தல்; ஈரடுக்கு ஒலிக்குறிப்பு

**குழப்படி** - தாறுமாறு; மனக்கலக்கம்; கலகம்; இராசகலகம்; கொந்தளிப்பு

**குழம்பு** - குழம்பான பொருள்; காய்கறிக்குழம்பு; குழைசேறு

**குழவி** - கைக் குழந்தை; ஒருசார்விலங்கின் இளமைப் பெயர்; புல்; மரம் முதலிய ஓரறிவுயிரியின் இளமைப் பெயர்; அம்மி; கல்லுரல்களில் அரைக்கும் கல்; பெருமை

**குழறுதல்** - பேச்சுத் தடுமாறுதல்; கூவுதல்; கலத்தல்; கேடுவிளைவித்தல்.

**குழறுபடை** - சொல்; தடுமாற்றம்; தாறுமாறு.

**குழித்தல்** - குழியாக்கல்; செதுக்குதல்.

**குழிப்பு** - குழிசெய்கை; தாழ்வு; செய்யுட் சந்தவகை

**குழியம்** - திரள்வடிவு; மண்உண்டை; வளைதடி.

**குழுவன்** - காண்க: குளுவன்

**கேழ்** - ஒளி; நிறம்; ஒப்பு

**கொந்தாழம்** - ஒரு மரம்; ஒரு மருந்து

**கொழுகொம்பு** - கொடியேறு கொம்பு; தஞ்சம்; நடுக்கொம்பு

**சிமிழ்** - சிமிழென்னேவல்; செப்பு

**குளப்படி** - குளம்புச் சுவடு; குளம்புச் சுவட்டில் தேங்கிய நீர்

**குளம்பு** - ஒருசார் விலங்குகளின் பாதம்

**குளவி** - கொட்டும் இயல்புள்ள வண்டு; காட்டுமல்லிகை; பச்சிலைமரம்

**குளறுதல்** - பேச்சுத் தடுமாறுதல்; உளறுதல்; நரி முதலியன ஊளையிடுதல்; கெடுத்தல்

**குளறுபடை (வி)** - குழப்பம்

**குளித்தல்** - நீராடுதல்; பெண்கள் தீட்டு மூழ்குதல்; தைத்தல்; அழுந்துதல்; வலிய உட்புகுதல்; மறைதல்; தோல்வியுறுதல்; முத்துகளை மூழ்கியெடுத்தல்

**குளிப்பு** - குளித்தல்

**குளியம்** - வேங்கைப் புலி; உருண்டை மருந்து

**குளுவன்** - குறவனுடைய பாங்கன்; பாம்பாட்டி

**கேள்** - உறவு; நட்பு; நண்பன்; கணவன்

**கொந்தாளம்** - ஒரு மருந்து

**கொளுகொம்பு** - ஆதரவுக் கோல்

**சிமிள்** - காண்க: **சமிழ்**

**சுழி** - உடற்சுழி; நீர்ச்சுழி; மயிர்ச்சுழி; எழுத்துச் சுழி; சுழலுகை; தலைவிதி; உச்சி; உச்சிப்பூ; சுழிப்புத்தி; மழையின் ஓரங்குல அளவு; கடல்

**சுழித்தல்** - சுழலுதல்; நீர்ச்சுழியுண்டாதல்; உடற்சுழி உண்டாதல்; வேறிடத்தின்றி ஒருங்கே திரண்டு நிற்றல்; கண் குழித்தல்; அடிபடாமல் ஒதுங்குதல்; தவறிப்போதல்; அலையச் செய்தல்; செலவு முதலியவற்றைச் சுருக்குதல்; முகத்தைச் சுருக்குதல்; கோபித்தல்; சுழியுண்டாக்குதல்; மறைத்தல்; தேர்வில் தேறாதபடி செய்தல்

**சுழிதல்** - சுழிபோல வளைதல்; முகஞ்சுருக்குதல்; கபடமாதல்; மனங்கலங்குதல்; இறத்தல்.

**சுழிப்பு** - சஞ்சலம்

**சுழிவு** - ஒளிவு

**சுழுந்து** - சுளுந்து

**செழுகம்** - அட்டை

**சோழகம்** - தென்காற்று

**சோழம்** - சோழநாடு; பார்ப்பனனைக் கொன்ற ஒரு சோழனைப் பற்றியிருந்த பேய்; விடாது துன்புறுத்துவோன்; சோம்பேறி; மூடன்

**சுளி** - புளியாரைக் கீரை

**சுளித்தல்** - கோபித்தல்; சினக் குறிப்பு; காலால் துகைத்தல்; முறித்தல்; வெறுத்தல்; வருந்துதல்

**சுளிதல்** - சினத்தல்

**சுளிப்பு** - சினக்குறிப்பு; சினம்

**சுளிவு** - சினக் குறிப்பு; சினம்

**சுளுந்து** - மரவகை; சுள்ளி முதலியவற்றாலான தீப்பந்தம்; சுளுந்து மரக்கழியில் எரிக்கும் தீப்பந்தம்; ஒருவகை ஆரத்திக் கலம்

**செளுகம்** - அட்டை

**சோளகம்** - குடுமி வைக்கும் சடங்கு

**சோளம்** - ஒரு தானிய வகை; சங்கச் செடி; சோழம்

**சோழன்** - சோழவரசன்

**சோளன்** - சோழன்; மக்காச்சோளம்; ஒரு தானியவகை

**ஞாழி** - வள்ளைக்கொடி

**ஞாளி** - நாய்; கள்

**தகழி** - அகல்; உண்கலம்

**தகளி** - காண்க: தகழி

**தலையழித்தல்** - அடியோடு கெடுத்தல்; தலைமை தீர்த்தல்

**தலையளித்தல்** - அருளோடு நோக்குதல்; வரிசை செய்தல்

**தழற்சி** - அழலுதல்

**தளர்ச்சி** - சோர்வு; நெகிழ்ச்சி; சோம்பல்; வறுமை

**தழைத்தல்** - செழித்தல்; பூரித்தல்; மிகுதல்; வளர்ச்சியடைதல்; சீட்டாட்டத்தில் எண்ணிக்கையில் சேராத சீட்டுகளை இறக்குதல்

**தளைத்தல்** - கட்டுதல்; கொதித்தல்; அடக்குதல்

**தாழுதல்** - தாழ்தல்

**தாளுதல்** - இயலுதல்; பொறுத்தல்

**துழவை** - துழாவிச் சமைத்த கூழ்; மூங்கிற்பற்றை

**துளவை** - துளை; மூங்கிற்பற்றை

**துழைதல்** - துடுப்பால் துழாவிச் செல்லுதல்

**துளைதல்** - நீரில் விளையாடுதல்; அழுந்திக் கிடத்தல்

**தெழ்கு** - இடையில் அணியும் அணிவகை

**தெள்கு** - தெள்ளுப்பூச்சி

**தெழி** - ஒளி

**தெளி** - தெளிவு; சாறு; ஒலி; விதைப்பு

**தெழித்தல்** - அதட்டுதல்; மிதித்து உழக்குதல்; முழக்குதல்; ஆரவாரித்தல்; ஒலித்தல்; அடக்குதல்; வருத்துதல்; நீக்குதல்; பிரித்தல்

**தெளித்தல்** - தெளிவித்தல்; வெளிப்படுத்துதல்; துப்புரவாக்குதல்; ஊடல்; உணர்த்துதல்; புடைத்தல்; கொழித்தல்; சாறுவடித்தல்; நிச்சயித்தல்; சூளுறுதல்; தூவுதல்; நீக்குதல்; உருக்கி ஓடவைத்தல்

**தெழிப்பு** - ஆரவாரம்

**தெளிப்பு** - தூய்மை செய்கை; தூவுகை; கொழிக்கை; வடிக்கை

**நீழல்** - சாயை; எதிரொளி; அச்சு; குளிர்ச்சி; அருள்; ஒளி; நீதி; புகலிடம்; கொடை; செல்வம்; மரக்கொம்பு; நோய்; பேய்; காற்று

**நீளல்** - ஓடுதல்; தூரம்; நீளுதல்

**நீழை** - ஒளி; காற்று

**நீளை** - காற்று; திருமால் தேவியரில் ஒருத்தி

**நுழை** - சிறுவழி; பலகணி; குகை; துளை; நுண்மை; புத்திதிட்பம்

**நுளை** - வலையர்சாதி; ஈனம்; குருடு

**நெகிழம்** - பாதச்சிலம்பு

**நெகிளம்** - நெகிளம்

**பவழம்** - மணிவகை ஒன்பதனுள் ஒன்று

**பவளம்** - காண்க: **பவழம்**

**பீழை** - துன்பம்

**பீளை** - கண்மலம்

**புழுகு** - ஒரு மணப்பண்டவகை; புழுகு பூனை; பெரிய புனுகுபூனை; நாவிப்புழுகு; அம்புத்தலை; புளுகு

**புளுகு** - கற்பனை; பொய்

**புழைத்தல்** - துளையிடுதல்

**புளைத்தல்** - அலங்கரிக்கப்படுதல்

**பூழை** - சிறுவாயில்; மலைக்கணவாய்; துளை

**பூளை** - இலவமரம்; செடிவகை வெற்றிப்பூ; பீளை

**பெரும்பூழை** - கதவிலிடும் வாயில்

**பெரும்பூளை** - ஒரு செடிவகை

**பேராழி** - பெருங்கடல்

**பேராளி** - ஒருவன் பெயரைக் கொண்டவர்; புகழ் வாய்ந்தவர்

**போழம்** - மாறுபடும் சொல்

**போளம்** - மணப்பண்டவகை; நிலக்கடம்புப் பூண்டு

**முக்குழி** - மூன்று வேதாக்கினிகளை வளர்க்கும் குழிகள்

**முக்குளி** - கோழிமுளையான் என்னும் பூண்டுவகை

**முகிழம்** - மலரும் பருவத்து அரும்பு

**முகிளம்** - அரும்பு

**முகிழிதம்** - அரும்பு, காய், பூ முதலியவற்றின் காம்படி; தேங்காய் முதலியவற்றின் மடல்; தயிர் முதலியவற்றின் கட்டி; இணையாவினைக்கை வகை

**முகிளிதம்** - அரும்பு; சிறதுகுவிகை

**முந்தூழ்** - பழவினை; மூங்கில்

**முந்தூள்** - மூங்கில்

**முழவு** - மத்தளம்; முரசு; குடமுழை; பால்கறத்தற்குரிய பாண்டம்; பாண்டம் முதலியன வார்ப்பதற்குரிய கரு

**முளவு** - முள்ளம்பன்றி; முட்கோல்

**முழா** - முரசு; குடமுழா; தம்பட்டம்

**முழி** - விழி; எலும்புப்பூட்டு

**முழித்தல்** - விழித்தல்

**முழிதல்** - உமிழ்தல்

**முழைத்தல்** - துளைத்தல்; எழுத்தில்லாவோசை; எழுத்தில்லா மொழி

**முழ்தல்** - பற்றிக்கொள்தல்

**வழப்பம்** பழக்கம்; தொன்றுதொட்டு நடைபெறுதல்; ஈகை; பொதுவானது; பயன்படுத்துகை

**வழுந்தல்** - காய்ப்பேறல்

**வழும்பு** - குற்றம்; தீங்கு; நிணம்; வழுவழுப்பான நீர்ப்பண்டம்; அழுக்கு

**வழுவழுத்தல்** - வழுக்குதல்; வழுவழுப்பாதல்; உறுதியளித்தல்

**வியாழம்** - தேவகுரு; ஒருகோள்; வியாழக்கிழமை

**விழ** - திருவிழா; திருமணக் கொண்டாட்டம்; மங்கலச்சடங்கு

**விழும்பு** - சோறு

**விழவு** - விழா; விளையாட்டு; அவா; மிதுனராசி

**முளா** - முள்ளம்பன்றி; செடிவகை

**முளி** - உலர்ச்சி; வாட்டம் வற்றிய பொருள்; உடல்மூட்டு; மரக்கணு; கணுக்கால்; மரவகை

**முளித்தல்** - உலர்தல்; வறளுதல்; காய்தல்

**முளிதல்** - வேதல்; உலர்தல்; கெடுதல்; முற்றுதல்; தோய்தல்

**முளைத்தல்** - முளை முதலியன தோன்றுதல்; உதித்தல்

**மூள்தல்** - நெருப்பு முதலியன பற்றுதல்; சினங்கிளம்புதல்; ஊக்கத்துடன் முயலுதல்

**வளப்பம்** - செழுமை; நன்மை; மாட்சிமை; வழக்கம்.

**வளுந்தல்** - தோல் வவ்வப்படல்

**வளும்பு** - நிணம் முதலியவற்றின் மேலுள்ள வழுவழுப்பான நீர்ப்பண்டம்; அழுக்கு

**வளுவளுத்தல்** - வழுக்குந் தன்மையாதல்; பேச்சில் தெளிவில்லாது இருத்தல்

**வியாளம்** - புலி; பாம்பு; கெட்ட குணமுள்ள யானை; ஒரு விலங்கு

**விள** - விளாமரம்; உழவில் வருஞ்சுற்று

**விளம்பு** - சொல்

**விளவு** - அகில்; விளாமரம்; நிலப்பிளவு; இளமை

**விழித்தல்** - கண்திறத்தல்; தூக்கம் தெளிதல்; எச்சரிக்கையாய் இருத்தல்; கவனித்து நோக்குதல்; மருண்டு நோக்குதல்; ஒளிர்தல்; தெளிவாதல்; உயரவாழுதல்

**விழைவு** - விருப்பம்; யாழின் உள்ளோசை; புணர்ச்சி

**விளித்தல்** - அழைத்தல்; சொல்லுதல்; பாடுதல்; அழித்தல்; கொல்லுதல்; பேராரவாரஞ் செய்தல்

**விளைவு** - நிகழ்ச்சி; விளைகை; முதுமை; விளைபொருள்; பழம்; பயன்; கைகூடுகை; ஆக்கம்; விளையுமிடம்; வயல்; மேகம்; நாடகச்சந்தி ஐந்தனுள் ஒன்று

## ஆசிரியர் குறிப்பு

இந்நூலாசிரியர் திருமதி. தவ. திரவிய ஹேமலதா தஞ்சை மாவட்டத்திலுள்ள கூட நாணல் கிராமத்தைச் சேர்ந்தவர். எம்.ஏ [தமிழ்] எம்.ஏ [தத்துவமும், சமயமும்] எம்.ஃபில் படித்து மன்னார் குடி செங்கமலத்தாயார் கல்வியறக் கட்டளை மகளிர் கல்லூரியிலும், தஞ்சாவூர் பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரியிலும், தற்போது ஒரத்தநாடு பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

இவர் சிற்றிதழ்களில் கவிதைகளும், தன் மானத் தமிழன் இரும்பொறை என்ற கவிதை நாடகமும் இவருடையப் படைப்புகளாகும்.

எனினும் மயங்கொலிச் சொற்பொருள் அகர முதலி என்னும் இந்நூல் தமது படைப்புகளில் முதன்முதலாக நூல்வடிவில் வெளியிடப்படுகிற து. இந்நூலை தன் அன்பு தாய், தந்தையான திருமதி. தி. தவமணி, திரு. தெ. திரவியம் மற்றும் தன் கணவன் திரு. இரா. கார்த்திகேயன் அவர் களுக்கு சமர்ப்பிக்கிறார் ஆசிரியர்.

Code No.: P0542

ISBN 817735539-2

9788177355390

பாவை பப்ளிகேஷன்ஸ்

விலை. ரூ. 95/-